www.padippakam.com

# தெலுங்கானா சொல்லும் கதைகள்



தமிழாக்கம்: சாந்தா தத்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தெலுங்கானா சொல்லும் கதைகள்

(தெலுங்கு சிறுகதைகள் தொகுப்பு)

தமிழாக்கம்

சாந்தா தத்

தாமரைச்செல்வி பதிப்பகம்
சென்னை- 600 078.

படிப்பகம்

www.padippakam.com

தெலுங்கானா சொல்லும் கதைகள்
(தெலுங்கு சிறுகதைகள் தொகுப்பு)
தமிழாக்கம் : சாந்தா தத்
தமிழாக்கவுரிமை (c) பதிப்பகத்திற்கு
முதல் பதிப்பு : 1995, அக்டோபர்
பக்கங்கள் : 288
விலை : ரூ. 45/-
வெளியீடு :
தாமரைச்செல்வி பதிப்பகம்,
31/48 இராணி அண்ணா நகர்,
கே. கே. நகர்,
சென்னை - 600 078.
முகப்போவியம் :
மக்கள் ஓவியர் : சிட்டப் பிரசாத்
அச்சு :
அலைகள் அச்சகம்,
36, தெற்குச் சிவன் கோவில் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

'தெலுங்கானா சொல்லும் கதை'களைத் தொகுத்து வெளியிட்டவர்கள் : 'பிரஜா சாஹிதி' இதழ் வெளியிட்டார்கள். இந்நூலை தெலுங்கில் அவர்கள் வெளியிட்ட போது பல்லாயிரக்கணக்கான பிரதிகள் மக்களை சென்றடைந்தது. ஓர் வரலாற்று நிகழ்வு நடக்கும்போதே வெளிவந்த சிறுகதைகள் இவைகள். கதைகள் பல தெலுங்கு சிற்றேடுகளிலும், நாளிதழ்களிலும் வெளிவந்த காலத்தில் பெரும் வரவேற்பை பெற்றதாம். இன்று படிக்கும்போது கூட அதன் சாரத்தை இழக்காமல் இருப்பதை உணர முடிகிறது.

தெலுங்கானா போராட்டம் முடிந்து இன்றைக்கு 44 ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்போராட்டம் வெற்றி அடைந்ததற்கு பொதுவுடமையர் மட்டும் அல்லாமல் ஆந்திர மகா சபைக்கும் பங்கு உண்டு என்பதை அறிய முடிகிறது. தமிழக பொதுவுடமையர் உணர்ந்து கொள்ள வேண்டிய முக்கியமான செய்தி இதுதான். போராட்டம் வெற்றி முகத்தில் இருந்த நேரங்களில் சாதிப் பேய் ஒழிந்து போனதை இன்றைக்கு சாதிய போராட்டக்காரர்கள் உணர வேண்டும். பெண்ணுரிமை தனியான போராட்டமல்ல என்பதை இக்கதைகள் உணர்த்தும்.

எங்கள் பதிப்பகம், இந்நூலை போன்று பல மொழிகளிலிருந்து தமிழர்களுக்கு வேண்டிய பல இலக்கியங்களை முன்பு வெளியிட்டதைப் போலவே இப்போதும் கொண்டு வந்துள்ளது. தமிழர்கள் ஆதரிக்க வேண்டும். தமிழ் கதை போலவே மொழிபெயர்ப்பை எளிமையாக்கி தந்திருக்கும் திருமதி. சாந்தா தத்திற்கு என் நன்றி!

என்றும் உங்கள் பணியில்,
ப. திருநாவுக்கரசு

# இதயம் உதிரம் உதிர்த்த போராட்டத்தின் எதிரொலியாய்...

நிலத்துக்காக சொத்துக்காக
நீளும் விவசாயப் போராட்டம்
முடிவற்ற வாழ்க்கையுத்தம்......

ஸ்ரீ.ஸ்ரீ

இந்த யுத்தத்தின் முதல் படிதான் தெலுங்கானா விவசாயப்போராட்டம். சிறைபட்டிருந்த நிலங்களை மீட்டுக் கொள்வதற்காக அநேக உயிர்களின் தியாகக் களத்தின் மீது நடந்த போராட்டம் இது. பாரதப் புரட்சிக்கே ஒரு விடிவெள்ளியாய் அமைந்த போராட்டம்.

அதே விதமாய்...

அன்றைய படைப்பிலக்கியத்திலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு அந்தப் போராட்டங்கள், தியாகங்கள், இன்னல்கள், அவல வாழ்க்கை முறைகள் ஆகிய மொத்த சரித்திரத்திற்கும் கண்ணாடியானது. நிஜாம்களின் குரூரமான நடவடிக்கைகள் முதற்கொண்டு ஜாகிர்தார்கள், தேஷ்முக்குகளின் அராஜகங்கள்...யூனியன் படைகள் செய்த அட்டூழியங்கள் வரை இந்த மறுமலர்ச்சி இலக்கியம் தொடாத அம்சமில்லை. ஒவ்வொரு சம்பவமும் ஒரு காவியமாயிற்று. போராட்டங்களுக்கு பூமி இருசாய் இருப்பது போல் படைப்பிலக்கியத்தின் இருசும் இந்தப் பூமிதான். அந்தப் பூமியைச்சுற்றி, அதற்காக நடந்த போராட்டங்களைச் சுற்றி சுற்றி வரும் இலக்கியம் இது, கதை, நாவல், கவிதை, பாடல் என அத்தனையும் மக்க

www.padippakam.com



ளுக்கு நெருக்கமாய்ச் சென்றன. அவர்கள் வாழ்க்கைப் பரிமாணங்களை அலசி ஆராய்ந்தன.

அந்த நாட்களில் பாடல்களுக்கு அடுத்தபடி அதிக மாய் வந்தவை கதைகள்தாம். சுமார் எண்பது கதைகள் வந்திருக்கலாம் எனக் கணக்கெடுக்கப்பட்டாலும் எழுபது கதைக்கு மேல் கிடைக்கவில்லை.

இக்கதைகளை பொழுது போக்குக் கதைகளுக்கான வாசிப்பின்றி ஆழ்ந்த கவனத்துடன் படித்தால் எதிர் காலத்துக்குப் பயனளிக்கும் விதமாய் பல விஷயங்கள் அறியலாம்.

1946க்கு முன்பிருந்த தெலுங்கானா நிலவரம்... 1946ல் குமரய்யா மரணத்திலிருந்து யூனியன் படைகளின் ஆக்கிரமிப்பு வரையிலான நிலவரம்... அதன் பின் போராட்ட நிறுத்தம் வரை நடந்த போராட்டம்... இவ் விதமாய் போராட்ட காலத்தை மூன்று காலகட்டங்க ளாய்ப் பிரித்துப் பார்க்கையில் படைப்புகள் கூட அதே வரிசையில் அந்தந்த திருப்பங்களுடன் விரிகின்றன. போராட்டமும் நடந்தது தெலுங்கானா பகுதியிலானா லும் சர்க்காராந்திரா எழுத்தாளர்கள் கூட அதிக அளவில்... மற்றவர்களை விட இன்னும் அதிகமாக என்றும் சொல்லலாம்... எழுதினார்கள்.

## 1

நிஜாம் ஆட்சியில் மக்கள் பேசக் கூடாது. படிக்கக் கூடாது. இதென்ன, ஏன் என்ற கேள்விகள் கூடாது. மக்கள் என்பவர் அடிமைகள். ஒவ்வொரு ஜாகிர்தார் மற்றும் தேஷ்முக்கிற்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்...பத்துக்கு மேற்பட்ட சொந்த கிராமங்கள் இருக்கும். அந்தக் கிராம மக்களின் ரத்தத்தை உறிஞ்சுவது வரிகள். ஏழைகளைப் பிழிந்து வசூலித்த வரிப்பணத்தை தேஷ்முக்குகள் தம் கஜானாவில் நிரப்பிக்கொள்ளலாம்.

www.padippakam.com

# 6

அதில் ஒரு பங்கு மட்டும் நிஜாமுக்குச் செலுத்தினால் போதும். தேஷ்முக் வீட்டில் நடக்கும் எந்தவொரு சிறிய விஷயமானாலும் சரி, அதற்காகும் செலவு மொத்தம் மக்களே ஏற்க வேண்டும். (உ-ம்) துரைகள் வீட்டில் கல்யாணம் நடந்தால் 'ஷாதிபட்டி' ('ஷாதி' என்றால் கல்யாணம்) என்ற கணக்கில் மக்களிடமிருந்து வசூல் செய்வார்கள். துரைகளின் (எஜமானர்கள்... கிராமப் பெரிய தனக்காரர்கள்) பண்ணை, ஜமீன் போன்றவை களில் நூற்றுக்கும் மேற்பட்ட கொத்தடிமைகள் இருப் பார்கள். அவர்கள் பயணம் செய்யும் கூண்டு வண்டிகள் முன்னால் ஒரு கொத்தடிமை மைல் கணக்கில் வண்டி வேகத்திற்கேற்ப ஓடவேண்டும். துரைகள் கண்வைத்த பெண்கள் அவர்கள் எந்த நிலையிலுள்ளவர்களானாலும் சரி, அன்றிரவே அவர்கள் பங்களாவுக்குச் சென்றாக வேண்டும். துரை வேலையின் நிமித்தம் (தணிக்கை... போன்றவை) அடிக்கடி வருகை தரும் மேலதிகாரிகளுக்கும் இவர்கள்தான் சேவகம் செய்ய வேண்டும். அவர்களுக் கான விருந்துசெலவை... கோழி, ஆடு வகையறாக்களுடன் ...தம் செலவில் ஏற்பாடு செய்ய வேண்டும். இதெல்லாம் போதாதென்று அவர்களுக்கு கன்னி கழியா இளசுகளை காணிக்கை வைக்க வேண்டும். விவசாயிகளும் கூலிகளாய் கொத்தடிமைகளாய் மாற எத்தனையோ காலமாகாது. அவர்கள் வாழ்க்கை துரைகள் நிலங்களிலேயே பழுத்து உதிர்ந்துவிடும். இதுதான் அன்றைய தெலுங்கானாவின் அப்பட்டமான நிலைமை.

தன்மானமுள்ள எந்த இனமும், சுதந்திர உணர் வுள்ள எந்த மனிதனும் என்ன செய்வார்களோ அதையே செய்தார்கள் தெலுங்கானா பிரஜைகள். உழுபவனுக்கே நிலம் என்ற லட்சியத்துடன் புரட்சிக்கொடி உயர்த்தினார் கள் ''மக்கள் புரட்சிச் சங்கம்'' அமைத்துக்கொண்டார் கள். பண்ணைகளை, ஜமீன்களைத் தரைமட்டமாக்கி னார்கள்.

படிப்பகம்

## 7

ஆனால் இதெல்லாம் ஒரு நாளிலோ, ஒரு வருடத்திலோ அல்லது ஓரிரு நிலச்சுவான்தார்களைக் கொன்று போட்டதன் மூலமோ சாதித்ததல்ல. மக்களின் மொழிப் பற்று, கல்வியறிவுக்குக் குறுக்குச்சுவராய் நின்ற நிஜாம் ஆட்சியில் தெலுங்குக் கலாசாரத்தை உரிமைகளை நிலை நாட்ட வேண்டுமென்ற கொள்கையுடன் 1930 ல் ஆந்திர மகாசபை நியமிக்கப்பட்டது. 1941ல் கம்யூனிஸ்டுகளுடன் பிணைப்பு. உத்வேகத்துடன் கொள்கைப் பிடிப்புடன் நேர்மையுடன் இணைந்து செயல்பட்ட இந்த இரு அமைப்புகளும் கிராமமக்களின் பிரச்னைகள்... கொத்தடிமைத்தனம்... அநியாய வரிகள் முதலிய அம்சங்கள் மீது தம் போராட்டத்தைத் துவங்கின. 1945ல் கடைசி முறையாய்க் கூடிய ஆந்திரமகாசபை பிறகு 'சங்கம்' என்ற பெயரில் மக்களுக்காக மக்கள் நடத்தும் அமைப்பாய் உருவெடுத்தது. மக்கள் விழிப்புணர்வு கொண்டார்கள். தைரியம் பெற்றார்கள். எஃகு போன்ற நெஞ்சுறுதி ஏற்பட்டலாயிற்று. துரைகளுக்கெதிராய் போர்க்கொடி உயர்த்தினார்கள். பரம்பரை பரம்பரையாக தானியம் விளைவித்த கரங்கள்... முஷ்டியை இறுக்கின. கொத்தடிமைத்தனம் ஒழிந்தது. வரிகள், அபராதங்கள், ஷாதி பட்டிகள் அத்தனையும் அடியோடு ஒழிந்தன.

'பூமிக்கோசம் போராட்டம்' (நிலத்துக்காகப் போராட்டம்) ஆரம்பமானது. வண்ணாத்தி அயிலம்மாவுடன் துவங்கிய போராட்டம் அது. கிராமம் கிராமமாய் புரட்சி வியாபித்துப் பரவியது. இது பொறுக்காத தேஷ்முக் விச்சூரு ராமச்சந்திரரெட்டி 'கடிவெண்டி' எனுமிடத்தில் ஊர்வலம் மீது துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டார். குமரய்யாவின் மரணம் சம்பவித்தது. ஜூலை 4 1947ல் இது நடந்தது. கொதித்தெழுந்த மக்கள் பயிற்சி பெற்று படை திரட்டி போராட்டத்திற்காயத்தமானார்கள்.

இக்கால கட்டத்தில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் கதைகளாய்ச் சித்தரிக்கப்பட்டன. துரைகளின் அராஜகத்தை எதிர்க்கவும் முடியாது சகித்துக்கொள்ளவும் முடியாது, தன்மானத்துடன் உயிர்நீத்த அடிமட்ட ஜீவிகளின் வாழ்க்கையை 'இஜ்ஜத்' (தன்மானம்) சொல்கிறது. இந்த அட்டூழியங்களை தனிமனிதனாய் நின்று போராடி பலியான அடிமை வாழ்க்கையை 'ரஹீம்பாய்' விவரிக்கிறது. இந்த வரிசையில் தொடர்ந்து பல கதைகள். ஆந்திரமகாசபையின் முயற்சியால் ஆலமரமாய்த்தழைத்த சங்கப்புரட்சியினப்படையில் பல கதைகள்... இப்புரட்சி எரிமலை வெடிப்பில் கருகிச்சாம்பலான துரைகள் அவர்கள் மேற்கொண்ட இன்னல்களைச் சித்தரிக்கும் கதைகள்... குமரய்யா மரணத்திற்கு அஞ்சலி தெரிவிக்கும், அனுதாபம் தெரிவிக்கும் விதமாய் சில கதைகள்...

இந்தக்காலகட்டத்தில் வந்த கதைகளைதெலுங்கானா பகுதி எழுத்தாளர்கள் எழுதினார்கள். கதைகள் மட்டுமின்றி நாடகங்கள், பாடல்கள்கூட எழுதினார்கள் இவர்கள். இக்கதைகளில் கற்பனை நயம், கலைநயம் அடியோடு தென்படாததற்குக் காரணம் இவர்களில் பெரும்பான்மையானவர்களுக்குப் போதிய அனுபவம் இல்லை.

## 2

குமரய்யா மரணத்திற்குப் பிறகு தெலுங்கானா போராட்டம் ஒரு திருப்பம் கண்டது. மக்களிடை விழிப்புணர்வு வெள்ளமெனப்பொங்கி எழுந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் துணையுடன் கெரில்லாப்படை தயாரானது. 1948 செப்டம்பர் வரை போராட்டம் நடந்தது. ஏறக்குறைய மூவாயிரம் கிராமங்கள் விமுக்தி பெற்றன. லட்சக்கணக்கான ஏக்ராக்கள் மக்களுக்குச்சொந்தமாயின. கிராம ராஜ்யங்கள், மக்கள் கோர்ட்டுகள் முதல் தடவை

www.padippakam.com



யாக நியமிக்கப்பட்டன. முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் பெண்களும் ஆண்களுக்குச் சமமாய் களத்தில் இறங்கினார்கள். இக்காலகட்டத்தில் வந்த பெரும்பான்மையான கதைகள் ஆந்திரப் பகுதிப் படைப் பாளர்களால் எழுதப்பட்டவை ஆகும். இவர்கள் எல்லோருமே நல்ல அனுபவம் பெற்றவர்கள். கதையை சுவராசிய மாய் நடத்திச்செல்பவர்கள். கற்பனை நயமும் கலையழகும் மிளிர எழுதக் கூடியவர்கள். ஆனால் ஒரு பெரிய குறைபாடு... கிராம வாழ்க்கையின் சூழல்... வாழ்க்கை முறை... இதெல்லாம் குறிப்பிட்ட அக்கதைகளில் தென் படாதது மட்டுமின்றி ஒரு செயற்கைத்தனமும் உணர முடிகிறது. இதற்கெல்லாம் முக்கியகாரணம் அவர்களுக்கு இந்த வாழ்க்கையுடன் நேரிடையாய் தொடர்பின்றிப் போனதுதான்.

தெலுங்கானா எழுத்தாளர்கள் கதை எழுத நேரமும் சந்தர்ப்பமும் கிடைக்காத அளவுக்கு போராட்டங்களில் சுயமாய் தீவிரமாய் ஐக்கியமாகியிருந்த சமயத்தில் ஆந்திர எழுத்தாளர்கள் தொடர்ந்து ஆக்கதைகளை எழுதி போராட்டம் குறித்து மற்ற பகுதி மக்கள் தெரிந்து கொள்ள வழிவகுத்ததுமட்டுமின்றி வரும் சந்ததியினருக்கு இவ்வகை இலக்கியத்தை விட்டுச்செல்வதில் பெரும்பங்கு வகித்தார்கள்.

## 3

1948 செப்டம்பர் வரை நிஜாம் ரஜாக்கர்களுடன் நடத்தி வந்த போராட்டம் பிறகு யூனியன் படைக்கெதிராய் ஆரம்பமானது. நிஜாம் பின்வாங்கியதும் காங்கிரஸ் படைகள் தெலுங்கானாவில் பிரவேசித்தது. ஒரு வாரம் முடிவதற்குள் நிஜாம் சரணடைந்தான். யூனியன் படை மற்றும் புதிய ஆட்சியின் மீது மக்களுக்குண்டான நம்பிக்கையும் நல்லெண்ணமும் குலைந்துபோக அதிக

www.padippakam.com



காலம் ஆகவில்லை. துரைகள் காங்கிரஸ் குல்லாக்கள் அணிந்துகொண்டு மிலிட்டரி சகாயத்துடன் மீண்டும் கிராமங்களில் பிரவேசிக்கலாயினர். நிலங்களைக் காப்பாற்றிக்கொள்வது மக்களின் ஜீவாதாரப் போராட்டமாயிற்று. யூனியன் படையும் மக்களைச்சித்ரவதை செய்வதில் நிஜாம்படைக்கு எந்த விதத்திலும் குறைந்து போகவில்லை. கண்ணில்பட்ட பெண்களை மானபங்கம் செய்தார்கள். குழந்தைகளையும் விட்டு வைக்காமல் பயனெட்டால் குத்திக்கொன்றார்கள். இப்படிப்பட்ட இம்சைகளை புறஉலகின் கண்களுக்குப் படாமல் அழித்துவிட மேல்வர்க்கம் எவ்வளவோ முயன்றும் முடியாமல் போனது. வரலாற்றில் ஒரு கரும்புள்ளி அவர்களின் அராஜகம். யூனியன் படையுடன் மூன்று வருடங்கள்... 1951 அக்டோபரில் தலைமை போராட்டத்தை ரத்து செய்த வரை நடந்தது. அநேக யுத்திகள்... மாற்றங்கள்... புது வழிகளுடன் கெரில்லாப்படைகள் ஒரு புது உத்வேகத்துடன் கிளர்ந்தெழுந்து மக்களுக்குத் துணை நின்றது. நிலங்களைத் தக்க வைத்துக் கொள்வதில், கிராம ராஜ்யங்களைக் காப்பாற்றிக்கொள்வதில், ரகசிய குடியிருப்புகள் அமைத்துக் கொள்வதில் போராட்டம் அநேக புது வழிகளைக் கடைப்பிடித்து வெற்றி கண்டன.

அச்சில் வராவிடினும் இந்தக் காலகட்ட போராட்டத்தின் மீது அநேக பாடல்கள் எழுதப்பட்டன... வெளிப்படையாய் மேடைகளில் பாடப்பட்டன. ஆனால் ஒரு கதை... ஒரே ஒரு கதை கூட வெளிவராதது வியப்புக்கும் வேதனைக்குமுரிய விஷயம். படைப்பிலக்கியத்தில் இது தீர்க்கமுடியாத குறைதான். போலீஸ் கெடுபிடிகளைச் சித்தரிக்கும் ஒரே ஒரு கதை மட்டும் எப்படியோ தப்பித் தவறி பின் வந்த நாட்களில் வெளியானது. அதன்பின் போராட்டம் குறித்தோ, கெரில்லாப்படைச் செயல்பாடுகள் குறித்தோ ஒரு கதை கூட வரவில்லை. அதுநாள் வரை உற்சாகத்துடன் கதைகள் எழுதி வந்த படைப்

பாளர்கள் ஏன் மௌனமாகிவிட்டார்களெனத் தெரியவில்லை. பிரசுர வாய்ப்பு குறைந்து போனது, 'அப்பூதயா' 'விசாலாந்திரா' போன்ற பத்திரிகைகள் நின்று போனது ஓரளவுக்குக் காரணமானாலும் கம்யூனிஸ்ட் கட்சியிடை போராட்ட நிறுத்தம் காரணமாய் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளும் ஒரு காரணமாய் இருக்கலாம். எதுவானாலும் தெலுங்கு படைப்பிலக்கியத்திற்கு இது ஒரு பெரிய இழப்புதான்.

## 4

போராட்டத்தின் ஒவ்வொருதிருப்பத்தையும்சித்தரித்த கதைகள் போராட்டம் நிறுத்தப்பட்டபிறகு இந்த முக்கிய திருப்பத்தை சித்தரிக்கத்தவறி எங்கோ ஓடிஒளிந்து கொண்டன. உத்வேகத்துடன்நடந்து கொண்டிருந்தபோராட்டம் மக்களின் விருப்பத்திற்கெதிராய் தலைமையால் பலவந்தமாய் நிறுத்தப்பட்ட பிறகு வரவிருக்கும் தேர்தலில் கட்சியின் கவனம் ஈர்க்கப்பட்டதுபோல் படைப்பாளர்களும் அந்த நினைவுகளை அசைபோடக்கூட விருப்பமில்லாதவர்கள் போல் சிலர் சினிமா உலகிற்குப் படையெடுக்க வேறு சிலரோ போகப்போக மேல்வர்க்கத்திற்கு தாளம்போடும் எழுத்தாளர்களாகி விட்டார்கள்.

ஒட்டுமொத்தமாய் கதைகளைப் பரிசீலித்துப் பார்த்தால் ஒரு நுணுக்கமான விஷயம் புலனாகிறது. போராட்டங்களுக்கும் அதன் விளைவாய் ஏற்படும் சமுதாய மாற்றங்களுக்கும் ஒரு ஆழ்ந்த தொடர்பிருந்து வந்தது. மூடநம்பிக்கைகள், விவாகச் சடங்குகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதுகூட போராட்டத்தின் ஒரு பாகமாகக் கருதப்பட்டது. இந்த விஷயத்தில் கம்யூனிஸ்ட் கட்சி கூட சிரத்தை எடுத்துக்கொண்டு மக்களுக்கு போதிக்கத் தொடங்கியது. கட்சியின் சில தீவிரத்தொண்டர்கள், முக்கிய பதவியிலிருந்தவர்களுக்குக்

www.padippakam.com



கூட சில விஷயங்களில் முக்கியமான திருமணம் போன்ற வைபவங்களில் புதிதாய் எட்டிப்பார்த்த மாற்றங்களை ஜீரணிக்க முடியாமல் போனது. இது இப்படி இருக்க... காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் நிலச்சுவான்தார்கள் நடத்தும் பத்திரிகைகள் இந்த நவீன மாற்றங்களை மக்களின் 'செண்டிமெண்ட்ஸ்' உடன் முடிச்சுபோட்டு கட்சியைக் குறித்து அவதூறாய் பிரசாரம் செய்ய ஆரம்பித்தன. அரசியல் ரீதியாய் எதிர்க்க முடியாது இழிவான பிரசாரங்களில் இறங்கினார்கள். 'காம்ரேட்' என்ற சொல்லை 'காமரேட்' ஆக மாற்றி அசிங்கமாய் எழுதியது ஒரு பத்திரிகை. இந்த துர்பிரசாரங்களைக் கண்டித்தும், வரும் மாற்றங்களை ஆதரித்தும் இந்த மாற்றங்களினால் விளையக்கூடிய பலாபலன்களைத் தக்கவிதத்தில் எடுத்துச் சொல்லி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாய் எவ்வளவோ இலக்கியப்படைப்புகள் வந்திருக்க வேண்டிய இவ்விஷயத்தைக் குறித்து... இதை மையப்படுத்தி மிகக் குறைந்த அளவிலான படைப்புகளே வந்திருக்கின்றன. கதைகளானால் அடியோடு இல்லை... ஒரே ஒரு கதை தவிர. போராட்டம் குறித்து முழுமூச்சாய் முனைந்து எழுதிய எழுத்தாளர்களுக்கு மேற்சொன்ன பரிமாணங்களினடிப்படையில் கதைகள் எழுத சிந்தனையோ அக்கறையோ இல்லாது போனது வருத்தத்திற்குரிய விஷயம்தான். இனி வரும் காலத்தில் இத்தவறு நேரக்கூடாது. மக்களின் உணர்வுகளோடு தொடர்பு கொண்ட கலாசாரமாற்றங்களும் கூட போராட்டங்களின் பிரதான அம்சம் என்பதை நினைவில் கொண்டு எழுத்தாளர்கள் செயல்பட வேண்டும்.

பின்வந்த நாட்களில் இரண்டு மூன்று கதைகள் வந்தன. அவ்வளவுதான். போராட்டங்களில் நேரில் பங்கு கொண்டவர்களாலும், அந்த அனுபவங்களைப் பிறர் சொல்லக் கேட்டுத் தெரிந்த மற்றவர்களானாலும் அவைகளைக் கதைகளாய்ச் சித்தரிக்க முயலவேண்டும். சரித்திரம்

www.padippakam.com



இன்னும் பின்னோக்கிச் செல்வதற்கு முன் இந்த முயற்சி நடைபெற்றாக வேண்டும். அந்த நினைவுகள், அனுபவங்களை வெளிப்படுத்தும் திறன் காலகர்ப்பத்தில் கலந்து கரைந்துபோன பின் வருத்தப்பட்டுப் பலனில்லை.

இறுதியாய் ஒரு வார்த்தை......

இக்கதையில் கலைநயம், கற்பனை வளம், அழகியல் வர்ணனைகள் போன்றவை இல்லாமல் போகலாம். ஆனால் இங்கு அந்த 'அழகியல்பு' முக்கியமில்லை. நடந்து முடிந்த, நடந்துகொண்டிருக்கும் அட்டூழியங்கள், அநியாயங்கள், அராஜகங்களுக்கு உதிரம் நீராகி, இதயங்கள் எரிமலையாகி கக்கிய போராட்டத் தீயில் நெருப்புத் துண்டங்கள்தாம் இக்கதைகள். இந்த உட்பொருளை, உணர்வுகளை கவனத்தில் இருத்தி இக்கதைகளைப் படிப்பது நல்லது. ஒரு வியாபார நோக்கின்றி சமூகப் பிரக்ஞையுடன் எழுதப்பட்ட கதைகள் இவை. வேதனைமயமான தெலுங்கானா வாழ்க்கையின் பிரதிபிம்பம் இத்தொகுப்பு.

— ***வாசிரெட்டி நவீன்***

படிப்பகம்

www.padippakam.com

# இத்தொகுப்பில்...

## இதயங்கள் உதிரம் வடித்த போராட்டத்தின் பிரதிபிம்பங்கள்:-


| | | |
|---|---|---|
| நியாயம் | — பொட்லபள்ளி ராமாராவ் | 17 |
| நம்மூரில் கூடவா | — காஞ்சனபள்ளி சின வெங்கட ராமாராவ் | 28 |
| விருந்து | ,, | 41 |
| சங்கச் சீட்டு | — பி. வெங்கடேஸ்வரராவ் | 46 |
| இளமையிலேயே... | — பி. ஆழ்வார் சுவாமி | 55 |
| ஊர்வலங்கள் | — ஆவுல பிச்சையா | 62 |
| வரி கொடோம் | — பி. துர்கா பிரசாத்ராவ் | 70 |
| நோட்டீஸ் | — சி. வி. கிருஷ்ணாராவ் | 76 |
| புதிய செய்தி | — சாரதா | 80 |
| விழிப்பு | — ப்ரயாக | 93 |
| கெரில்லா கோவிந்து | — சாரதா | 112 |
| தொடர்பில்லை | — தென்னேடி சூரி | 122 |
| நீங்க ஜெயிப்பீங்க | — தும்மல வெங்கடராமய்யா | 140 |
| கவண் கற்கள் | — பி. துர்கா பிரசாத்ராவ் | 150 |
| விமுக்தி | — அட்லூரி பிச்சேஸ்வரராவ் | 155 |
| மகா சக்தி | — லட்சுமிகாந்த மோகன் | 164 |
| மத்தானய்ய மரணம் | — ராம்ஷா | 175 |
| யல்லமந்தாப் பைத்தியம் | — கிரண் | 188 |
| ஜீவாதாரம் | — பி. என் ரெட்டி | 196 |
| ஜீவகாருண்யப் போராட்டம் | — எம். வெங்கடராவ் | 222 |
| கல்யாணம் செய்தார்கள் | — தும்மல வெங்கட ராமய்யா | 235 |
| கெரில்லா | — உப்பல லட்சுமணராவ் | 251 |


படிப்பகம்

www.padippakam.com

# உதிர எழுத்துக்கள்

இந்த மகத்தான போராட்டத்தில் பங்கேற்ற வர்களை எந்நாளும் மறக்காதீர்கள். நல்லது. கெட்டது — எல்லாவற்றையுமே நினைவில் கொள்ளுங்கள். உங்களுக்காகத் தங்களைப் பலி கொடுத்தவர்களைக் குறித்து இயன்றவரை செய்திகள், விஷயங்கள் சேகரியுங்கள். இன்றைய விசேச அம்சங்களே நாளைய சரித்திரமாய் நிலை நிற்கின்றன. தங்கள் அரிய தியாகங்களால் வரலாறு படைத்த எண்ணற்ற மகா வீரர்களின் மகோன்னத யுகமாய் அடையாளம் காட்டப் படும் சரித்திரம் அது. இவர்களனைவரையும் நீங்கள் உங்கள் நெஞ்சுக்கு நெருங்கியவர்களாய் பாவிக்க வேண்டும் என்பதுதான் என் விழைவு. வளமான எதிர்காலத்துக்காக குடும்பம் குடும்பங் களாய்ப் பலியாயின. கனவுகளில் வாழ்ந்து அதற் காகவே போராடி உயிர்களைப் பலி கொடுத்த வர்களின் உருவங்கள் நிரந்தர சிற்பங்களாய் உருவாக்கத் தகுந்தவை.

—ஜுலியஸ் ப்யூஜிக்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

*பொட்லபள்ளி ராமாராவ்*

# நியாயம்

பிள்ளைகுட்டி முதற்கொண்டு கீழ் ஜாதிக் காரர்கள் பிறவியெடுத்ததே சேவகம் செய்யத் தான் என்பதுபோல் விடிவதற்கு முன்பே கத்த ஆரம்பித்தான் ஜவான்.

விதிமுறைகளை ஒழுங்காய்க் கடைப்பிடிக் கும் உத்தியோகஸ்தர்கள் (வேலை வாங்கிக் கொண்டு கூலி தருவது) தம் கடமைகளினின்று வழுவினாலும் சேவகன் தன் பங்கை மறப்ப தில்லை. வயிற்றுப்பாட்டுக்காக காடோமேடோ போய்த்தான் ஆகவேண்டும். தலைமுறைகளாய்த் தம்முள் உறைந்துபோன பொறுமையுடன் சாவடிமுன் வந்து நின்றான்.

''என்னடா...பெண்டாட்டி பக்கத்துலேர்ந்து எழுந்து வரயா?''

''அத்தனை சொகமா தொரை... அவ போய் ரொம்ப நாளாச்சி...''

''ஏன்... நீயும் போறதுதான... கவர்ண் மெண்ட் வேலை நின்னு போய்ரும்னா?''

''என்னைக்கோ ஒருநாள் போறது தப்புதா... அதுவரைக்கும் செய்யறதும் தப்பாது தொரை...''

தெ—2

படிப்பகம்

www.padippakam.com



''அதெல்லாம் சரி... இன்னிக்கி மேலதிகாரி வரார். மளமளன்னு ஏற்பாடுகள் செய்யணும். கர்ணம் எங்கே படுத்திட்டிருக்காராம்...''

''இதோ அழைச்சிட்டு வரேன்.''

பீடி பற்ற வைத்துக் கொண்டுசாவடி வாசலில் அமர்ந் தான் ஜவான். அதிகாரி வருகையின் தீவிரத்தை கர்ணத் திற்கு எப்படி உணர்த்துவது, எப்படி பயம் ஏற்படுத்துவது என்ற கவலையுடன் இல்லாத அதிகாரத்தையும் கோபத் தையும் வலிய வரவழைப்பதில் தீவிரமாய் முனைந்தான்.

''இன்னும் தூக்கம் கலையலையா...'' கர்ணம் குரல் கேட்டு உலுக்கியெழுந்தான்.

''அங்க மட்டும் என்ன வாழுதாம்... தூங்கி வழியற கண்ணை நல்லாத் துடைச்சு விட்டுக்க. இன்னிக்கி தாசில்தார் வரார். ஜமாபந்தி. செட்டியாரைக் கூப்பிடு.''

கர்ணம் நிமிர்ந்து பார்ப்பதற்குள் சேவகன் ஓடினான்... செட்டியார் வீட்டுப் பக்கமாய். கர்ணம் லிஸ்ட் எழுதத் தொடங்கினார்.

''என்ன எழுதறே?''

''எப்பவும் எழுதறதுதான்... புதுசா என்ன?''

''நீ புது மனுஷனாத்தான் தெரியறே. குதிரைகூட பின்னாலேம்ப...''

''எனக்கென்ன போச்சு... காசா பணமா எழுதற துக்கு...'' அரிசி கடலை கோதுமை நெய் மசாலா உப்பு என்று வாய்விட்டு சொல்லியபடி லிஸ்ட் எழுதி அப்போது அங்கு வந்த செட்டியாரிடம் கொடுத்தார் கர்ணம்.

ஒரு முறைக்கு இரு முறையாகப் படித்தார் செட்டியார். ''நான் என்ன செய்யணுமாம்?''

''அவரைக் கேளு...'' ஜவான் பக்கம் பார்த்தார் கர்ணம்.

www.padippakam.com



''ஒவ்வொருத்தறா வந்து சும்மா தின்னுட்டுப் போறான். காசு இல்லேன்னா சாமான் வானத்துலேர்ந்து கொட்டுமா?''

''புதுசா என்ன வந்தது... இத்தனை நாளா நடக்கறது தானே?''

''அதனால...காலமெல்லாம் படியளுக்கணுங்கறயா?''

''மேல போய் முறையிடு.''

''மேலயா... சாமிகிட்டதான் போகணும். இங்க மேல இருக்கங்கறவ தான வந்து தின்னுட்டுப் போறாங்க...''

''இல்லன்னா... புகார் செய்யேன்.''

''லிஸ்ட் குடுத்ததும் சாமான் கெடைக்கறாப்பல புகார் குடுத்ததும் நியாயம் கெடைச்சிடப் போற தாக்கும்.''

''இப்படி பேசிட்டே நேரம் கடத்திடலாம்னா...''

''வர்ற அந்த ஆபீஸருக்கு என் வீட்டைக் காட்ட றேன். அங்க என்ன இருக்கோ எடுத்துக்கங்க எல்லோ ருமா சேர்ந்து...''

''கள்ள எடைக்கல்லும் கொறைச்சலா அளக்கற படியும் இருந்தா...?''

''ஊர் உலகத்து மோசம் அக்கிரமம் அத்தனையும் செட்டியார் வீட்லதான் நெறைஞ்சிருக்கும்கற நெனெப்பா?''

''என்னய்யா ரோதனை இது?'' எரிச்சலுடன் கர்ணத்தைப் பார்த்தான் ஜவான்.

''நாகய்யா... உனக்கு புண்ணியமா போகட்டும். இத்தனை நாளா இல்லாத தரித்திரம் இன்னிக்கி வந்

படிப்பகம்

www.padippakam.com



துட்டதா... எப்படியோ சமாளிச்சுக்க. உங்க வீட்ல மட்டும் கொட்டி வச்சிருக்கா என்ன...'' நைச்சியமாய்ச் சொன்னார் கர்ணம்.

''மனுஷங்கன்னா எப்படியோ ஒப்பேத்திடலாம். குதிரைக்கெல்லாம் எங்கேர்ந்து கொண்டாறதாம்? புல்லையும் வைக்கோலையும் திங்கறதுகூட வக்கணையா வக்கறவனைப் பாத்தா நாக்குல தண்ணி ஊறுயில்ல...''

''நாளைக்கே மோட்டார் வர்றதுன்னு வச்சிக்க. அப்ப?'' ஜவான் சொன்னான்.

''வெளக்கெண்ணெயில் நடக்கற வண்டின்னா பெருசா சிரமம் என்ன இருக்கப் போறது?''

''சரிதான்... பெட்ரோல் கொண்டு வந்து வக்கணும் அய்யா பெட்ரோல்...''

''நீங்களே வாங்கி என் வீட்ல கொண்டு வந்து வச்சிடுங்க...'' ஒவ்வொரு முறையும் மேலதிகாரிகள் வரும்போது முணுமுணுப்பதுபோல் இப்போதும்... இன்னும் கொஞ்சம் கூடுதலாகவே முணுமுணுத்தபடி சாமான் லிஸ்டுடன் சென்றார் செட்டியார்.

சாமான் வந்து சேர்ந்ததோ இல்லையோ, 'கோழி... கோழி...' என்று ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தான் ஜவான். அதிகாரிகளுக்கு முட்டை வேண்டுமென்றால் அதற்கும் கிராமம்தான் பொறுப்பு. ராஜா வேட்டைக்கு கிளம்பினாலும், மந்திரி வேலை நிமித்தம் பயணம் மேற்கொண்டாலும் விருந்தானாலும் வேடிக்கையானாலும் அத்தனையும் கிராமங்கள் தலைமீதுதான். கோழிக்கும் முட்டைக்கும் வெண்ணெய்க்கும் நெய்க்குமாய் வேளா வேளைக்கு கஜானாவிலிருந்து காசு வரும். ஆனால் பாலைவனத்தில் நீர் உறைந்தாற்போல் அது எந்த அதிகாரியின் பாக்கெட்டில் சென்று விழுந்திருக்கிறது என்னும் விஷயம் எங்குமறியாத ரகசியம்.

www.padippakam.com



இதுவரை யாரெல்லாம் கோழி கொடுத்தார்கள் என்று நினைவுபடுத்திக் கொள்ள முயன்ற கர்ணத்திற்கு பெயர்கள் பிடிபடாமல் நழுவின.

''யார் முறைடா இப்ப?'' சேவகனைக் கேட்க...

''யாருடையதும் இல்ல தொரை. எல்லோரும் குடுத் தாச்சு.''

''சரி... போய் அந்த பிச்சைக்கார கழுதைங்களை அழைச்சிட்டு வா...'' பதில் பேசாது தலைகுனிந்தபடி சென்றான் சேவகன். ஊருக்கு விஜயம் செய்யும் ஒவ்வொரு அதிகாரியும் தன் அதிகாரத்தை முதலில் காட்டுவது இந்தப் பிச்சைக்காரர்கள் மீதுதான். இவர்களில் பெரும்பாலோர் கிரிமினல் ஆதிவாசிகள். குற்றம் புரிந்தவர்கள் என்ற குறியீடு... அந்தச் சிறுமை அந்த அதிகாரிகளுக்கு எல்லாவிதங்களிலும் பயன் பட்டது... பயன் படுத்திக் கொண்டார்கள். எப்போதோ இவர்கள் பாட்டன்... முப்பாட்டன்கள் கொலைகாரர், கொள்ளைக்காரர்களாக இருந்த பாவத்தால் மீன்கள் விற்றுக் கொண்டும், கிணறுகள் தோண்டிக் கொண்டும், விவசாயம் பார்த்துக்கொண்டும் வயிறு வளர்த்த இவர்கள் சந்ததியர்கள்கூட 'கிரிமினல் ட்ரைப்ஸ்' ஆகவே பாவிக்கப் பட்டார்கள். இந்த சிரம ஜீவிகளைப் பிணையாக்கி சுய லாபம் தேடிக்கொள்ளும் உத்தியோகஸ்தர்கள் மட்டும் நியாயமூர்த்திகளாய் யோக்கியர்களாய் செலாவணி ஆகிக் கொண்டிருக்கிறார்கள்.

பிச்சைக்காரர்களெல்லோரும் வேலைக்குப் போய்விட் டார்கள் என்று சேவகன் வந்து சொன்னது கேட்டு ஜவான் முகம் கோபத்தால் சிவந்தது. கோழி கிடைக்காது என்ற ஏமாற்றத்தால் வந்த கோபம்.

''அவங்க வேலைக்குப் போய்ட்டா என்ன... கோழிங் களும் பின்னாலயே போயிருக்காமா... யார்கிட்ட கதை வுடறே?'' பளார் என கன்னத்தில் அறை விழ பொறி

www.padippakam.com



கலங்கிப் போனான் சேவகன். தலைசுற்றி கீழே விழப் போனவன் சமாளித்துக்கொண்டு அங்கிருந்து செல்ல எத்தனித்த போது...

''அங்கயே நில்லுடா... இருந்த இடம்விட்டு அசைஞ்சா கொன்னுடுவேன்'' ஜவான் கத்தினான். சிலை போல் உறைந்து நின்றான் சேவகன்.

''எங்க போய்த் தொலைச்சாங்கடா?'' அவன் முடியைக் கொத்தாய்ப் பிடித்தான்.

''இருக்காங்க...'' வெடவெடவென்று நடுங்கியது அவன் உடம்பு.

''பின்ன ஏன் இல்லன்னு சொன்னடா?''

'தப்பு செஞ்சுட்டேங்க'ன்னு முனகியபடி அவர் காலில் விழப் போனான்.

''சரி... போய் கோழி வாங்கிட்டு வர்றயா... அஞ்சு நிமிஷத்துல வரணும்... உம்...''

''சரிய்யா...'' உள்ளுக்குள் புகைந்த கோபத்தையும் துக்கத்தையும் இன்னும் அடியில் தள்ளியபடி திக்பிரமை பிடித்தவன்போல் பிச்சைக்காரர்களின் குடிசை இருக்கும் பகுதியை நோக்கி ஓடினான்.

கோழிகள் குப்பையைக் கிளறி கிடைத்ததைப்பொறுக் கிக் கொண்டிருந்தன. யாருடையதாகவாவது இருக் கட்டும் என்று தோராயமாய் கையிலிருந்த தடியை வீசினான். ஈனமாய்க் கத்தியபடி ஒரு குஞ்சு கீழே சாய்ந் தது. குடிசையருகே காவலுக்கிருந்த கிழவி சத்தம்கேட்டு ஓடி வந்தாள். கீழே கிடந்த குஞ்சைப் பார்த்து 'ஐயோ... ஐயோ' என்று கத்தியபடி சேவகன் காலில் விழுந்தாள்.

''மனுச உசிரைவிட பெரிசா கோழிது...'' என்று சொல்லியபடி கிழவியைப் பிடித்துத் தள்ளிவிட்டு கோழி யுடன் விரைந்தான்.

www.padippakam.com



சமையல் ஆகி விட்டது. தாசில்தார் வருகிறார் என்ற செய்தி அறிந்து தம் கஷ்டங்களை முறையிட விவசாயிகள் சாவடிமுன் குழுமினார்கள். பொழுது வேகமாய்க் கரைந்து சூரியன் மேற்கே சாயும் நேரமும் நெருங்கி விட்டது. சோறு தண்ணி கண்ணில் பார்க்காமல் வேலைக்கும் போகாமல் எப்போது வருவார் என்ற எதிர் பார்ப்பில் அங்கேயே பழியாய்க் கிடந்தார்கள். 'தொரை வந்ததும் எழுப்புடா...' என்று சிலர் அங்கிருந்த மரத்தடியில் சாய்ந்தார்கள். இருந்த இடத்திலேயே தூங்கி விழுந்தபடி சிலர். அலுப்பை மறக்க பேச்சில் ஈடுபட்டார்கள் மற்றவர்கள்.

''அடேய்...இந்த ஜவான் தூங்கறதைப் பார்த்தியா... திடீர்னு தொரை வந்திட்டா...''

''அவர் எங்க வரப்போறார். ஆக்கிவெச்சதெல்லாம் இவரே தின்னு தீர்த்திருப்பார்...''

''ஒருவேளை தொரை வந்துட்டா...''

''வரமாட்டார்னுதான் தின்னுட்டார்...''

''வரமாட்டார்னு சொல்லியிருக்கலாமில்ல...''

''சொன்னா வாய்க்கு ருசியா எவன் செஞ்சி வைப்பான்?''

''அப்ப... ஒருத்தன் வயித்துக்காக அத்தனை பேர் உசிரெடுக்கணுமா?''

''என்ன செய்யறது... நம்பிக்கை இல்லன்னாலும் நம்பித்தான் தீரணும். பொசுக்கற வெய்யில்ல இந்த சாவடி முன்ன எத்தனைநாள் கெடந்திருக்கோம்...''

''தலைக்குமேல வேலை கெடக்கு...'' ஒரு விவசாயி எழுந்திருக்க... பின்னாலேயே இன்னொருத்தர்... மாமூல் தான் இது என்பதுபோல் எல்லோரும் எழுந்து சோர்வுடன் நடை கட்டினார்கள்.

www.padippakam.com



மறுநாள் விடிந்ததுதான் தாமதம்... சமையலுக்கான ஆயத்தம் செய்யத் துவங்கி விட்டான் ஜவான்.

''டேய் வெறகு எங்கடா...''

''அதோ... அங்க இருக்கு.''

''உங்க அழுகையெல்லாம் எங்ககிட்டதான். அந்த ஆபீஸர் வரப்ப செட்டியார் மானியம் தர்றதில்லன்னு ஏன் சொல்றதில்ல... உதை விழுந்தா அழறிங்க. பசி எடுத்தா வாய்கூட திறக்கமாட்டிங்க. அழற புள்ளைக்கு தான் ஆத்தாகூட பால் குடுப்பா. சரி சரி... போய் செட்டியாரை அழைச்சிட்டு வா...''

தலையாட்டியபடி சென்றான் சேவகன். பொழுது ஏறிக்கொண்டே போயிற்று. ''ஆபீஸர் வரார்னு எனக்கு தண்டச் செலவு வச்சிங்க. அது இருந்தா இன்னிக்கு ஆயிருக்குமில்ல...'' சாமான் கொடுக்கமாட்டேன்னு பிடிவாதம் பிடித்தார் செட்டியார்.

''வரவேணாம் நாங்கதான் தடுத்து நிறுத்தினோம் கறீங்களா...இப்படிப் பேசறது நல்லா இல்ல. இந்த வேலைக்காரப் பயல்களெல்லாம் உங்கமீது ஏகத்துக்கு குறை சொல்லி புலம்பிட்டிருக்காங்க. தாசில்தார் காதுல விழுந்ததுன்னு வச்சுக்கங்க. உங்க...'' ஜவான் சொல்லிக் கொண்டிருந்த போது ஒரே சலசலப்பு...இரைச்சல். ''அதோ...தொரை வந்துட்டார்...'' விவசாயிகள் எழுந்து நின்றார்கள். தூரத்தில் உயரமான குதிரை பறப்பது போல் வந்துகொண்டிருந்தது. விவசாயிகள் பக்கமாய் ஒதுங்கி நின்றார்கள். கர்ணம் தன் மேல் அங்கவஸ்திரத்தைச் சரிசெய்து கொள்ளலானார். ஜவான் கோட்டு வில்லையைச் சரியாகப் பொருத்திக் கொண்டான். சாமான்களைக் கொண்டுவருவதற்காக செட்டியார் ஓட்டமும் நடையுமாய் விரைந்தார். குதிரை நுரை கக்கியபடி காவலருடன் வந்து நின்றது. 'அடேய்...நீயாடா

www.padippakam.com



தொரை...இறங்கு சொல்றேன்... 'சிப்பாயை குதிரையி னின்று கீழே இழுத்தான் ஜவான்.

''தொரையின் குதிரை மீது இருக்கும் வரை நானும் தொரைதான்...'' சிப்பாய் கித்தாய்ப்புடன் சொன்னான். கர்ணம்முகம் சவசவத்துப் போனது அங்கவஸ்திரம் சரி செய்ததற்கு தன்னை நொந்துகொண்டு பழையபடி அலட்சியமாய்க் கலைத்துக்கொண்டான் சிப்பாய் குதிரையை சேவகனிடம் நெட்டினான். ''தொரை வர்ர துக்குள் பளபளன்னு தொடைச்சிவை. இல்லேன்னா உன் கன்னம் பளபளக்கறாப்பல உதைகுடுப்பார் தொரை. டேய்...யாரது...தண்ணியெல்லாம் தயாரா இருக்கா... எனக்கென்ன போச்சு...தொரை வந்ததும் எல்லாத்துக்கும் நீதான் பொறுப்புன்னு உன்னை அவர் முன் தள்ளிட றேன்...'' ஜவானைப் பார்த்து இரைந்தான் சிப்பாய்.

'அப்படின்னா இன்னிக்கு வந்துடுவாரா...?'...ஒரு விவசாயி.

'அவங்களுக்கென்னடா... மோட்டார்ல உக்காந்தா நிமிஷத்துலகொண்டுவந்து சேர்த்துடறது...' இன்னொரு வரின் விரக்தியான பதில்.

சாமான் வந்து சேர்ந்ததும் மடமடவென சமையல் வேலை ஆரம்பமானது. இன்றையதினம் கூட எதிர்பார்ப் பும் காத்திருப்பதுமாய் கடந்துவிடுமோ என்று பயந்து கொண்டிருந்த விவசாயிகளுக்கு சிப்பாயின் வார்த்தைகள் கொஞ்சம் நம்பிக்கை தந்தது.

தங்கள் கஷ்டங்கள்...போராட்டங்கள்...பிரச்சினை களை வரும் அதிகாரி நன்கு புரிந்துகொண்டு நிச்சயம் அவைகளைத் தீர்த்துவைப்பார் என்ற ஆழ்மன நம்பிக்கை யுடன் ஆர்வமுடன் அவர் வருகைக்காகக் காத்துக் கொண் டிருந்தார்கள். ஜனங்களுக்கு ஆட்சியின் நல்லது கெட்டதைவிட ஆபீஸ் கட்டடங்கள் மீது...அதிகாரிகளின்

www.padippakam.com



நடை உடை பாவனைகள் மீது...அலமாரிகளில் நிரம்பி யிருக்கும் பைண்ட் புத்தகங்கள்,ஃபைல்கள் மீது நம்பிக்கை அதிகம். தங்களுக்கில்லாத சக்தி, நீதி நியாயங்கள் எல்லாம் அவைகளில் நிறைந்திருக்கின்றன என்ற பிரமை. மனிதர்களின் இந்த அஞ்ஞானமும் ஆதரவற்ற நிலையுமே ஒரு மனிதன் அடங்கிப் போவதற்கும் மற்றொருவன் அதிகாரம் செலுத்துவதற்கும் வழிவகுக்கிறது.

தெய்வம் வரமருளுவதற்காகக் காத்திருப்பது போல் எதிர்பார்த்து எதிர்பார்த்து... அசாத்தியப் பொறுமை யுடன் காத்திருந்த பிறகு ஒருவழியாக மோட்டார் வந்து சேர்ந்தது. 'ஒதுங்கு...ஒதுங்கு'...என்று அனை வரையும் நெட்டித் தள்ளினான் ஜவான்...அவர்கள் மூச்சு காற்று பட்டால் அதிகாரிக்கு வியாதி பற்றிக்கொண்டு விடும் என்பது போல். ஜவான் பிடித்துத் தள்ளினாலும் இடம்விட்டு அங்குலம்கூட நகராமல் பிடிவாதமாக அங்கேயே நின்றார்கள் அவர்கள். அதிகாரியிடம் பேசாமல் போகமாட்டோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டவர்கள் போல் உறைந்து நின்றார்கள். கர்ணத்தை அருகே அழைத்த அதிகாரி ஒரு காகிதத்தை நீட்டி கையெழுத்திடச்சொன்னார்.

முழுவதும் ஆற அமரப்படிக்க ஆரம்பித்தால் அதிகாரி மீது அவநம்பிக்கை கொள்வது போல் அவரை அவமானப் படுத்துவதுபோல் ஆகிவிடுமோ என்ற பயத்துடன் மேலோட்டமாய்ப் பார்வையை ஓடவிட்டு கைநடுங்கக் கையெழுத்திட்டு திருப்பிக்கொடுத்தார் கர்ணம். என்ன தான் ஆழ்ந்து படிக்காவிடினும் கண்ணில்பட்ட சில வரிகளும் வார்த்தைகளும் அவர் முகத்தை இருளடித்தன.

அவர் சற்றே சுதாரித்துக் கொள்வதற்குள் கார் ஸ்டார்ட் ஆயிற்று. கை கட்டி நின்றுகொண்டிருந்த விவசாயிகள் வரம்கொடுக்கவந்த தெய்வம் வந்தவழி திரும்புவது போன்ற பதைப்புடன் அவர் போய் விட்டார்.

www.padippakam.com



தங்கள் கஷ்டங்களுக்கு விடிவேது என்று நிலைகுலைந்து போனவர்களாய் பின்னாலேயே ஓடினார்கள்.

''அய்யா...எங்க கதி...எங்க...பொழைப்பு...எங்க கஷ்டம்...'' கோரஸாக வெளிப்பட்ட வார்த்தைகள் கார் சப்தத்தில் அடிபட்டுப் போயின. வார்த்தைகள் வெறும் ஒலிக் கோர்வையாக விழுந்து மடிய புழுதியை இறைத்த படி கார் பார்வையினின்று மறைந்தது. தன் தலை மீது பெரிய பாரம் விழுந்துவிட்ட விதிர்விதிர்ப்புடன் ஜவானிடம் ஓடினார் கர்ணம். அவனிடம் சுமையை இறக்கி ஆசுவாசம் பெறும் பரபரப்பு...

''என்னய்யா இது... மறுபடியும் கோழி, ஆடு, முட்டைன்னு எழுதிவாங்கிட்டுப் போயிருக்காரே... இன்னும் யார் வரப்போறாங்களாம்?''

''வரப்போறது யார்னு இன்னும் தெரியலையா உங்களுக்கு?''

''யார்...?''

''தொரையோட மக கல்யாணம்...தொரையோட மக கல்யாணம்...?''—கர்ணத்தைச் சுற்றிநின்ற முகம் வெளுத்துப்போயிருந்த விவசாயிகளெல்லோருமாய் ஒரு சேரச் சொன்னார்கள்.

('ஜெயில்' கதைத் தொகுப்பிலிருந்து 1945)

காஞ்சனபள்ளி சின வெங்கடராமாராவ்

# நம்மூரில் கூடவா...?

மத்தியான வெய்யில் கொளுத்திக்கொண்டிருந்தது நெல் போட்டால் அரிசியாய்ப் பொரியும் சூடு. தகிக்கும் சூடு. நல்ல கொண்டாஜில்லா சூடு. பிரசித்தமான சூடு. கேட்டமாத்திரத்திலேயே வியர்த்துக்கொட்டும் சூடு.

உள்ளூர் வரிசெலுத்தும் தலையெழுத்து மாறாத கிராமப்புறப்பாதை. வெய்யிலில் தளதளவென மின்னிக் கொண்டிருந்த மணல் நிறைந்த பாதை. கீழே பூமியும் மேலே வானமுமாய் பக்கென எரிந்துகொண்டிருக்கும் வைகாசி மாதம்.

குறைந்தபட்சம் மணிக்கு பத்துமைல் தூரமாவது கடக்க வேண்டும் என்ற பதைப்புடன் ஓடிக்கொண்டிருந்தது கூண்டுவண்டி. கழுத்து மணியின் கிணுகிணுப்புச் சத்தம் மாடுகளின் காலடியோசைக்கு தாளம் போடுவது போல் இருந்தது. வண்டிக்குப் பின்னால் எழுந்த புழுதி சின்னசின்ன மேகங்களைச் சிருஷ்டித்தது.

கண்களிலும் நாசித்துவாரங்களிலும் புழுதி நிறைந்தாலும் நிற்க முடியாது ஏதோ ராட்சச சக்தியொன்று துரத்திக்கொண்டு வருவதுபோல் கூண்டு வண்டியின் முன் ஓடிக்கொண்டிருந்தான்

www.padippakam.com



பாபய்யா. அவன் தோளில் தொங்கிய கழியில் மாட்டியிருந்த லாந்தர் விளக்கு அவன் அடிகளுக்குப் போட்டியாய் வேகமாக ஆடிக்கொண்டிருந்தது.

தலைமீது துரையின் உடுப்புகள் அடங்கிய மூட்டையுடன் வண்ணான் சர்வய்யா வண்டியின் பின்னால் ஓடிக்கொண்டிருந்தான். மெத்தென்ற பால்நுரை விரிப்பின் சுகத்தில் மெய்மறந்து உறங்கிக் கொண்டிருந்தார் பாப்பாராவ். பெரிய தலையணை மீது சொகுசாகச் சாய்ந்திருந்தார். மேடு பள்ளங்களில் வண்டி செல்லும்போது உடம்பு அலுங்காமல் குலுங்காமல் இருக்கத் தோதாய் சுற்றிலும் தலையணைகள்... ஆஜானு பாகுவாய் பெரிய சிற்பம் போன்ற உடலமைப்பு, உப்பிய கன்னங்கள்...இருபுறமும் எலுமிச்சம் பழங்களை நிறுத்திவைக்கலாம் போன்ற கறுத்த மீசை...அந்த உடம்பின் நிறம்கூட கறுப்புதான். எந்நேரமும் நிழலிலேயே இருப்பதால் நிகுநிகுக்கும் சருமம்...

''என்னடா ஆடி அசையறது வண்டி...உம்...வேகமா போகட்டும்...'' இந்த சின்ன உத்தரவுக்கே மாடுகளின் முதுகில் பளீர் பளீர் என விழுந்தது. வண்டியோட்டி வெங்கன்னாவின் சாட்டையடி.

வண்டி இன்னும் வேகமெடுத்தது. வண்டியின் முன்னும் பின்னுமான பாபய்யா, சர்வய்யாவின் ஓட்டமும் கூட தன்னியல்பாய் வேகம் கூட்டியது.

துரையின் குறட்டை மீண்டும் தொடர்ந்தபோது... பாபய்யாவும்,சர்வய்யாவும் வண்டியோட்டி வெங்கன்னாவுடன் (வெங்கன்னா போன்றவர்களுக்கு குடும்பப் பெயர் இருக்காதுங்க) ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்திற்கு கைமாறாய் வெங்கன்னாவிற்கு வயிறுமுட்ட கள் கிடைக்கும்.

அவன் செய்ய வேண்டியதெல்லாம் வண்டியில் வேகத்தைக் குறைப்பதுதான். அதனால் வியர்வை ஊற்றாகி

www.padippakam.com



விட்ட மற்ற இருவருக்கும் கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது ஓய்வு கிடைக்கும். வண்டிவேகத்திற்குச் சமமாக ஓடிமுடியாது தடுமாறும்போது துரையிடமிருந்து கிடைக்கும் வசவுகள், தசையடியிலிருந்து தற்காலிகமாவது தப்பித்துக்கொள்ளலாம். ஆனால்...தப்பு யாருடையதோ என்னவோ...ஒப்பந்தம் பிசுபிசுத்துவிட்டது. பொசுக்கும் வெப்பத்தில் வண்டி படுவேகத்தில் பறந்தது. பாபய்யாவும் சர்வய்யாவும் மேல் மூச்சு வாங்க ஓடலானார்கள், வரம்பு முறையற்ற அதிகார மமதை காரணமாய் துரைக்குக் கோபம் வந்தால் நரசிம்மாவதாரம் தான்...அந்த உக்கிரம் வெங்கன்னாவின் சாட்டைவழியே அவர்கள் முதுகிலும் தோள்களிலும் நிழல்கள்ாய் வடியும்.

வாழ வகையற்று வாத்தியாராகி துரையின் ஊரிலிருக்கும் சிநேகிதர் ஒருவரை பார்க்க வேண்டுமென்று பழைய வியாதிகள் வெளியேவருவது போல் வெய்யிலுக்கு பழைய சக்கரங்கள் பஞ்சராகிவிடுமோ என்ற நிலையில் இருந்த பழைய சைக்கிளில் பிரயாணமானேன்.

நகரத்திலிருந்து அந்தக் கிராமம் தூரம்தான். பயணம் செய்ய வண்டியாவது வேண்டும். அல்லது கால்களிலாவது வலுவிருக்க வேண்டும். இரண்டுமே இல்லாததால் பழைய சைக்கிள் தான் கதி என்று கிளம்பியாகிவிட்டது. குண்டும் குழியுமான சாலையில் வண்டியின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல்போனது. உடைகள் தொப்பையாக நனைந்து போயிற்று. வண்டியை விட்டு வெகுதூரம் பின் தங்கிவிட்டால் தன்மானத்திற்கு இழுக்கு என்று மூச்சிறைக்க இறைக்க சைக்கிளை வேகமாக மிதித்தேன்.

"ஒய்...உள்ளே தொரையிருக்கார் தெரியுமா... மாடுகள் பயப்படறது பார். விலகிப்போ." சிவப்பேறிய பயங்கரமான விழிகளை உருட்டி எச்சரித்தான் வெங்கன்னா. வண்டி ஜாடையே தெரியாமல் பின்னாலேயே இருந்தது எனதருமையான பத்துவருஷ பழைய

www.padippakam.com



சைக்கிள். சைக்கிளானாலும் மோட்டாரானாலும் சற்றே விலகி வண்டிகளுக்கு வழி விட வேண்டியதாயிற்று. அசல் சங்கதி பிற்பாடு தெரிந்தது... துரையின் கூண்டு வண்டி கண்ணில்பட்டால் சைக்கிளைவிட்டு இறங்கி தள்ளிக் கொண்டு போக வேண்டுமாம், சைக்கிளை மீது போகக் கூடாதாம்.

வெயிலைக் கிழித்துக்கொண்டு விரைந்த கூண்டு வண்டி ஒருவழியாக துரை ஊரான கடுபுரம் சேர்ந்தது. வண்டிக்கு முன்னாலும் பின்னாலும் இருந்த எங்கள் கஷ்டங்களும் கரைசேர்ந்த ஆசுவாசம்.

வண்ணான் துறைக்கருகே இருந்த என் சிநேகிதர் வீடு சென்றேன் பின்னாலேயே பாபய்யாவும் சர்வய்யா வும் குழிவிழுந்த வயிறுடனும் அரைச்சேர்சோளத்துடனும் தம் குடிசை நோக்கி சோர்வுடன் நடக்கலானார்கள்.

வெய்யிலில் அலைந்துவிட்டு வந்ததற்கு மூன்று பங்கு நீர், ஒரு பங்கு சோறு என்று சின்னவயதில் மனப்பாடம் செய்த ஆரோக்கிய சாஸ்திரப்படி சாப்பாடு எனும் சம்பிரதாயம் முடிந்தது. வெய்யிலுக்கு அறுந்து போன பஞ்சர்களை ஒட்டியபடி என் சிநேகிதர் வீட்டு வராந் தாவில் நின்றிருந்தபோது......

பூண் போட்ட தடியும் இடுப்பைச் சுற்றி வில்லைப் பதித்த பெல்ட்டுமாய் நடுவயதுக்காரன் ஒருவன் வந்து சர்வய்யாவைக் கூப்பிட்டான்.

''அடேய் சர்வா......ஏய்......உன்னைத்தான்...'?

''காசிமய்யாவா......என்ன விஷயம்...?'' சர்வய்யா வந்தான்.

''பட்வாரிசாப் ஜமாபந்திக்காக நல்லகொண்டா போகணுமாம். கௌம்பு சொல்றேன்......''

www.padippakam.com



''அட கர்மாந்திரமே...இப்பதானய்யா தொரை பின்னால நாய் கணக்கா ஓடி வந்துட்டு வூட்ல வந்து புகுந்திருக்கேன். இன்னும் சோறு கூட திங்கலெய்யா. நர்லிப்பய இல்லையா...எனக்கப்பால அவன் முறை தானேய்யா......''

''அவனா... இடையரிடம் வசூலித்த மாமூலைக் குடுத்துட்டு வர அமீனா கச்சேரிக்குப் போயிருக்கான்...''

''சின சர்வன், சீதி, நாரி...இவங்களுக்கெல்லாம் என்னாச்சாம்...''

''பல்லக்கு தூக்கறதுக்கு கொஞ்ச பேர். மத்தவங்க சின்ன தொரை வீட்டு விசேஷம்னு மாவரைக்கறது, வீடு கழுவறதுன்னு அவனவனுக்கு ஆயிரத்தெட்டு வேலை. நீதான் போயாகணும்...''

''காசிமய்யா...நேத்தி இந்நேரத்துக்குதான் எல்லோருடைய முறையும் சரசரன்னு மாறி எனக்கு வந்தது போலிருக்கு...''

''என்ன செய்யறதுடா... எல்லாம் ஒரு பிடி சோத்துக்காக. காலைலேர்ந்து திரிஞ்சிட்டிருக்கேன். ஆயுசு உள்ள வரை தீராது இது. தொரையில்லேன்னா. சின்ன தொரை. இவங்க ரெண்டு பேரும் இல்லைன்னா படேல், பட்வாரிங்க. பை நெரப்பிக்கவர்ற போலீஸ் இன்ஸ்பெக்டருங்க எல்லோருக்கும் நாமதான் ஓடணும். நாய்ப் பொளைப்பு...அக்கடான்னு உக்கார முடியுமா...?''

வேலையில் மும்முரமாயிருந்தாலும் இதெல்லாம் என் காதில் விழுந்தது. பஞ்சர் மீதே பஞ்சராகியிருந்தது. அதை அகற்றிவிடலாமா அல்லது அந்த ஒட்டு மேலேயே இன்னொரு ஒட்டு போடலாமா என்ற யோசனையிலாழ்ந்தேன்.

''அம்மா ......அய்யோ ......''......சர்வய்யா வீட்டிலிருந்துதான் அந்தஓலம் என்னஆயிற்றோ என்றபதற்றத்

www.padippakam.com



துடன் நானும் சினேகிதரும் ஓடினோம். எனக்கு இன்னும் கிராமத்துப்பழக்கம் விடவில்லையென்றும், நமக்கென்ன போயிற்று என்று பாராமுகமாய் இருந்துவிடும் நகர லட்சணங்கள் என்னுள் வேர்விடாதது குறித்தும் மிகவும் வியப்படைந்தார்.

நாங்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள... ஒருவரையொருவர் விமர்சித்துக்கொள்ள அவகாசம் ஏது...?

''இவ்வளவு நேரமாடா சோமாறிக்கழுதை... தேவடியா மகன்...'' வாய்க்கு வந்தபடி குட்டி சர்வய்யாவை கண்மண் தெரியாது அடித்துக்கொண்டிருந் தான் வராகவதார முகம் உடைய ஆள் ஒருவன். அடிகளி லிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அலமலந்து இங்கு மங்குமாய் சுற்றிச்சுற்றி ஓடினான் சர்வய்யா. காரம் அரைத்துச் சேர்க்கப்பட்டிருந்த தட்டிலிருந்த சோளக்கஞ்சி இந்தப் போராட்டத்தில் கீழே சிந்திவிடப்போகிறதே என்ற பதட்டம் கை அந்தத் தட்டைப் பிடித்த லாவகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

''நானா இருந்தால் இந்த காரத்தை அந்த வராகவதாரம் கண்ல தூவி இந்த தட்டால அவன் மண்டைல ஒரு போடுபோட்டு கீழே விழுந்தவன் எழுந் திருக்க முடியாதபடி புரட்டிப்புரட்டி அடிப்பேன். இந்த சர்வய்யா பொறுமை நாசமாய்ப்போக. இவன் ஏன் இப்படி சும்மா இருக்கான்...?'' சிநேகிதரைக் கேட்டேன்.

''இது கடபுரம். உங்க பட்டணம் இல்லே. இந்த வெவகாரம்மெல்லாம் நமக்குவேணாம். வாயே திறக்காத. எப்பவும் நடக்கற கதைதான் இது...''

எல்லய்யா, மல்லய்யா என்று அக்கம்பக்கத்து குடிசைக்காரர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

தெ—3

படிப்பகம்

www.padippakam.com



''வுட்டுடு அய்யா. உங்க கால்ல வுழறோம். அடிக்காத... தள்ளாத வயசுக்காரன் வுட்டுடு...'' கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இந்த மந்திரத்துக் கெல்லாம் மாங்காய் விழவில்லை. சர்வய்யா உடம்புமீது 'வர்...வர்' என்று பிரம்படி விழுந்துகொண்டே இருந்தது. யாருக்குமே நடுவில் புகுந்து அவனை விலக்கும் தைரியம் இல்லை.

பார்த்துப் பார்த்துப் பொறுமையிழந்த காசிம்சாப் இன்னொரு தடியால் அடிக்கும் தலையைப்பிடித்து நிறுத்தி...'' அவனைச்சாகடிக்கணும்னு நெனைக்கறயா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

இப்போது எங்களுக்கு தைரியம் வந்து விட்டிருந்தது. வராகவதார ஆளை குடிசைக்கப்பால் இழுத்துவந்தோம். அவன் உடம்பெல்லாம் வியர்த்திருந்தது. கோபாவேசத் தால் நடுங்கிக்கொண்டிருந்தது. அவிழ்ந்துவிட்ட வேஷ்டியை இறுகக் கட்டிக்கொண்டான். ஆயாசத்துடன் கீழே சரிந்தான்.

''சாமி வந்தாப்பல இவ்வளவு ஆவேசமாய்யா...?'' அங்கு குழுமியிருந்தவர்களுள் மூத்தவரான ஒரு விவசாயி கேட்டான்.

வராகவதாரம் கண்கள் சிவக்க காசிம்சாபை நோக்கிக் கத்தினான். ''இந்த ஜமாபந்தியில் உன் நெலத்தை ஜப்தி செய்ய ஏற்பாடு பண்ணலேன்னா நான் என் அப்பனுக்குப் பொறந்தவனில்லடா துலுக்கப்பயலே...'' பேயாட்டம் ஆடி அலுத்தவனாய் தம் வழி நடந்தான்.

''போய்யா போ... இந்த கையகல நெலத்தை நம்பித் தான் வாழ்ந்திட்டிருக்கனாக்கும். ஒடம்புல வலுவிருக்கு. நல்லகொண்டா போய் ஒத்தை மாட்டுவண்டி ஓட்டி பொளைச்சுக்குவேன்...'' காசிம் அவன் சென்ற திக்கை நோக்கி கத்தினான்.

www.padippakam.com



சர்வய்யா கையிலிருந்த கஞ்சிக் கலயத்தைக் கீழே வைத்து விட்டு உடம்பிலிருந்து வழியும் ரத்தத்தை துடைத்து ஆரம்பசிகிச்சைபோல் காயங்கள் மீது மண்ணைப் பூசினான். தலையின் காயம் மிகவும் பெரிதாக இருந்தது.

''அழறது தவிர திட்டக்கூட வராது போலிருக்கு இவனுக்கு...'' சிநேகிதரிடம் பரிதாபத்துடன் சொன்னேன்.

''அவங்களாகக்கொண்டு எப்படியோ நெட்டித் தள்ளிட்டு வராங்க. உன்னைப் போன்றவங்க எப்பவோ ஓடியிருப்பாங்க. அவ்வளவு கோழைங்க உங்கபட்டிணத்து ஜனங்க...'' ஏளனம் செய்தார் சிநேகிதர்.

இதற்குள் இளவயதுக்காரர்கள் சிலர் பெண்களும் ஆண்களுமாய் அங்கு வந்தார்கள். கட்டான உடலமைப்புடன் நெடுநெடுவென்ற வளர்ச்சியுடன் காணப்பட்ட அவர்களுக்கு மட்டும் சுதந்திரம் இருந்தால் தேசத்தையே பரிபாலிப்பார்கள் போலிருக்கிறது. அப்போது தேகம் போல் புத்தியும் வலுப்பெற்றிருக்கும். அவர்களுடைய உடம்பெல்லாம் கூட அடிவாங்கிய அடையாளங்கள் பூரி உப்புவது போன்ற வீக்கம்... தழும்புகள்.

''இதென்ன சர்வய்யா...?'' அவர்களில் ஒருவர் கேட்க... ''உங்க ஒடம்புல இத்தனை தழும்பு எப்படி... நீங்க கூட...'' சந்தேகமாய்க் கேட்டான் சர்வய்யா.

''சுண்ணாம்படிக்கறப்ப கண்ணாடிமேல தெரிச் சுட்டதுன்னு கையிலிருந்தபிரம்பால் தொரை வீசுவீசுன்னு விளாசிட்டார்...''

''மொளகா நைஸா அரைக்கலேன்னு தொரை சானியம்மா கண்ல அப்பிட்டாங்க...''

''சொன்ன நேரத்துல துணி துவெச்சிக்கொண்டாரலேன்னு ரூல்கட்டையால அடிச்சாங்க...''

www.padippakam.com



''மாவு கெட்டியாய்ட்டதுன்னு சின்ன தொரை செருப்பை வீச' எம் மார்மேல பட்டுதுங்க. கொளந்திக்கி எப்படி பால் குடுப்பேன்...''

ஆளாளுக்குச் சொல்ல... சர்வய்யாவிற்கு தலை சுற்றுவது போல் இருந்தது ''எல்லாம் நாம செய்த பாவம்...''

''நம்மளையெல்லாம் இப்படி அடிச்சு இம்சை செய்ய அந்த தொரைமார் செஞ்ச புண்ணியம்தான் என்னவாம்... நாம இப்படி பட்டுக்கிட்டே சும்மா கெடக்கறதால்தான் அவங்களுக்கு குளிருவுட்டுப் போச்சு...'' இளைஞனொருவன் ஆக்ரோஷமாய்ச் சொன்னான்.

''சொல்லி அழகூட நாதியில்ல. எல்லோருமே இப்படிப்பட்டவங்கதான். நாம் என்ன செய்ய முடியும்...'' விரக்தியாகச் சொன்னான் சர்வய்யா.

''இப்படி வாய் மூடிக்கெடந்தா பிரயோசனம் இல்ல தாத்தா—இதுக்கெல்லாம் ஒரு வழி செஞ்சாகனும்...''

அங்கிருந்த அனைவருடைய மனங்களிலும் காட்டாற்று வெள்ளமென ஆவேசம் பொங்கியது.

''அங்க எங்கயோ வேலை நடக்காம பந்த் நடத்தினாங்களாம்... ஊர் மொத்தமும் ஒரு கட்டாக இணைந்து போய்...பெரிய பெரிய தொரைங்கல்லாம் செய்வதறியாது தடுமாறிப் போய்ட்டாங்களாம்...''

''அடேய்.. நீங்களெல்லாம் எள ரத்தம்... பயமறியாதது. அதெல்லாம் என்னமோ சங்கங்களாம். பாட்டன்... முப்பாட்டன் காலத்துல இல்லாத கொள்ளிகெட்டையெல்லாம் நமக்கெதுக்குடா...'' சர்வய்யாவின் அனுபவம் பேசியது.

''என்ன ஆனாலும் சரி...அந்தக் கொள்ளிக்கட்டையை நாம் கொணர்ந்தாக வேணும்...'' எல்லோருமே ஒருமித்துச் சொன்னார்கள்.

www.padippakam.com



"போலீஸ்...கேஸ்...ஜெயில்னு இந்த கவர்ண்மெண்ட் நம்மள சும்மா வுடாது ஏதோ கெடைக்கிற கூழோ கஞ்சியோ குடிச்சி பொழைக்கலாம்டா..." என்றான் சர்வய்யா துரைகளின் பின்னாலிருக்கு அரசாங்க யந்திரங்கள் கண் முன்னாலிருந்தது போல் பயமுறுத்தியதோ அவனை?

"தாத்தா...வயசுல இருந்தப்ப கைத்தடியால்புலியைக் கொன்ற சூரனாம் நீ. இப்ப கோழயாயிட்டாயா... இதை விட மோசமா இருக்காது ஜெயில்..."

"ஆம்பளையாயிருந்தா மூணு நாள் வாழ்க்கை போதும்னு சொல்ற பழமொழி ஞாபகம் வர்றது. அப்பா...என்னவோ நெனைச்சேன். ஒவ்வொருத்தன் நெஞ்சுலயும் நெருப்பு மலையே இல்ல கொழுந்துவிட்டெரிஞ்சுகிட்டிருக்கு..." சிநேகிதரிடம் என் வியப்பைத் தெரிவித்தேன்.

சினேகிதர் முகத்தில் சிரிப்பு தெரிந்தது. 'இப்போதாவது புரிந்து கொண்டாயா முட்டாள்...' என்று கேட்கும் சிரிப்பு.

யோசனையுடன் தலை கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த சர்வய்யாவின் காயங்களினின்று மண் பொலபொலவென உதிர்ந்தது. பெரியவர்களும் இளைஞர்களுமாய் என்ன செய்யலாம் என்ற விவாதத்தில் ஈடுபட்டார்கள்.

"இனத்துக்கெல்லாம் பெரியவராச்சேன்னு கேட்டோம். இந்த யோசனை, பயம் எல்லாம் இந்த ஜென்மத்துல தீராது. இத்தனை காலமா நீங்க சொன்னபடி நடந்தது. இனிமே எங்க பேச்சுக்கு எங்க திட்டத்துக்கு நீங்க குறுக்க நிக்கக்கூடாது..." இளைஞர்களின் சார்பில் ஒரு குரல் தீர்மானமாய் ஒலித்தது.

இந்த அடிமைப் பிழைப்பு ஒழிய வேண்டும் ஒழிக்க வேண்டும், ஏதேனும் செய்ய வேண்டும். செய்தாக வேண்

www.padippakam.com



டும். இனியும் சும்மாயிருந்தால் வாழ்க்கையே தண்டம் என்ற பாவம்...தீர்மானம் அங்கிருந்தவர்கள் மனங்களில் அழுத்தமாய்ப் பதிந்தது.

''நாமெல்லாம் ஒண்ணு சேர்ந்து அவங்களை எதிர்ப் போம்...''

''ஆமா... ஆமா...'' குரல்கள் மூத்த விவசாயி சங்கரய்யாவுடன் சேர்ந்து கோரஸாக ஒலித்தது.

அப்போது துரையின் சேவகன் பின்னால் துரத்திக் கொண்டே வர பாபய்யா பயத்துடன் ஓடி வந்துகொண்டி ருந்தான்.

''குதிரையைத் தேய்த்து குளிப்பாட்டிட்டு வாடான்னா இல்லாத சால்ஜாப்பெல்லாம் சொல்லிட்டு ஓடுவாயாடா கழுதே...'' சேவகன் கத்திக்கொண்டே வர...கூடியிருந்த கூலிக்காரர்களிடையே வந்து நின்றான் பாபய்யா. அவர்கள் பேச்சுத்தோரணை ஒரு புது உற் சாகம் இதெல்லாம் பார்த்ததும் அவனுக்கும் இதுநாள் வரை இல்லாத தைரியம் வந்தது.

''அந்த வேலையெல்லாம் செய்யறதுக்கு நான் என்ன உங்க வேலைக்காரனா...?''

''ஏய்...என்னடா புதுசா நாக்கு நீளுது...''

''சும்மா கூவாத. இவங்களல்லாம் எங்க ஆளுங்க. மரியாதையை காப்பத்திக்க. இங்கேர்ந்து போய்டு...'' ஈயை, கொசுவை விரட்டுவது போல் விரட்டினான் பாபய்யா.

துரைகள் மற்றும் தனக்கு மேலிருக்கும் எஜமானர்கள் வாயினின்று வார்த்தை வெளிப்பட்டால் போதும் 'உத்தரவு அய்யா...' எனக் குழையும் சர்வய்யா குரலில் இப்போது தென்பட்ட அசாத்திய தைரியமும் துணிச்ச லும் மிகவும் ஆச்சரியமளித்தது.

www.padippakam.com



''சபாஷ்...!'' மனதில் வியப்பு வந்தபோதே வார்த்தை வெளிவந்துவிட்டது.

கலவரம் மேலிட வெளுத்த முகத்துடன் வந்தவழி சென்றான் சேவகன்.

ஒருபக்கம் தாசில்தாரின் பியூன். இன்னொரு புறம் போலீஸ் ஜவான் துரத்திக்கொண்டே வர நரசய்யாவும் காசிம் பாயும் நுரை தள்ள ஓடி வந்தார்கள். நரசய்யா போலீஸ் ஸ்டேஷனில் தண்ணீர் கொண்டுவந்து வைக்க வில்லையாம். காசிம் கோழி தயாராக வைக்கவில்லை யாம்.

''அங்கேயே நில்லுங்க. இவங்க மேல உங்க விரல் பட்டாக்கூட சும்மாவுடமாட்டோம் உங்களை...'' கூட்டத்திலிருந்து கூச்சல் எழுந்தது

''ஓஹோ... அப்படியா சங்கதி...பெரிய மனுசங்கள் லாம் இன்னிக்குத்தான் சீமைலேர்ந்து வந்து எறங்கியிருக்க போல, கழுதைங்களா...நடங்க தொரைகிட்ட. படேல், பட்வாரில்லாம் அங்கதான் இருக்காங்க. ஒடம்புல ஒரு எலும்பு பாக்கி வைக்காம உங்களை நல்லா கவனிச்சுப் பாங்க வாங்க...''

''அந்த வேலை இப்ப இங்கயே நடக்கப் போறது...'' கூட்டத்திலிருந்து ஒருவன் கடுங்கோபத்துடன் கத்த...

பியூனும் ஜவானும் தங்கள் அதிகாரத்தைப் பிர யோகிக்க முயன்றார்கள். இங்கு இவர்களின் உலகம் மாறி விட்டதென்று அவர்களுக்கு இன்னும் தெரியவில்லை. யானைகள் போல் வந்தவர்கள் பூனைகள் போல் திரும்பிப் போனார்கள். மல்யுத்தத்திற்குத் தயாரான பயில்வான்கள் போல் வந்தவர்கள் நலிந்து நசிந்து நோஞ் சானாய்த் திரும்பினார்கள்.

''நாங்க இனிமே சேவகம் செய்யமாட்டோம். வெட்டி வேலைக்குத் தயாரா இருக்கமாட்டோம்.

www.padippakam.com



அடிமைப் பொழைப்பு பொழைக்கமாட்டோம். தலையைச் சீவிடுவாங்களா, பார்க்கலாம். நடங்கடா... அந்தத் தொரைங்ககிட்ட போய்ச் சொல்லலாம்...'' சர்வய்யா, பாபய்யா, நரசய்யா, ரங்கய்யா, காசிம் ஆகியோர் முன்னோக்கிச் செல்ல...பின்னால் ஆண்களும், பெண்களுமாய் ஊரே திரண்டு போருக்குப் புறப்படுவது போல் அணிவகுத்தார்கள்.

''அடிமைச் சேவகம் ஒழிக...'' விண்ணை எட்டும் கோஷம்...! சமுத்திரமாய் ஜனப்பிரவாகம்...

எலுமிச்சம்பழ மீசை தொங்கிப் போய் ஊசலாட துரையவர்கள் பக்கத்திலிருந்த படேல், பட்வாரிகளிடம் சொன்னார். ''இந்தத் தீ... நம்மூரில் கூடவா இது...?''

**'நம்மூரில் கூடவா?' என்ற தொகுப்பிலிருந்து—1945**

படிப்பகம்

www.padippakam.com

காஞ்சனபள்ளி சினவெங்கடராமாராவ்

# விருந்து

புதிதாய் வந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் மோட்டார் ஊர் எல்லைக்குள் வந்து விட்டது என்ற சங்கதி தெரிந்ததுதான் தாமதம்... பட்டேல், பட்வாரி ஆகியோர் அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த இடத்தில் கூடி அவரை வரவேற்கச் சித்தமானார்கள். அவர் வந்து சேர்ந்த அரைமணிக்கெல்லாம் அவருடைய சமையல்காரனும் குதிரையில் வந்திறங்கினான். உடன் வந்த சாமான்களை வேலைக்காரர்கள் மளமளவென்று இறக்கினார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்த ஊருக்கு வருகை தரும் போதெல்லாம் உடனிருந்து அவர் தேவைகளைக் கவனித்துக் கொள்ளும் சந்தாவும் வந்து சேர்ந்தான். வரும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கெல்லாம் அவன் சம்பளமில்லாத சேவகன். அவனுக்குக் கிடைக்கும் ஒரே லாபம்... அவர்களுக்குப் படைக்கப்படும் ருசியான அசைவச் சாப்பாடு அவனுக்குக் கிடைக்கும். அவர்களின் வெளியூர் விஜயங்களில் அவன் பிரதான மந்திரியொத்த அங்கீகாரம் பெறுவான். சாப்பாடு போக தட்சிணை...அன்பளிப்பு என்று மாதத்திற்கு நூறு ரூபாய்க்குக் குறையாமல் கையில் விழும். அவன் உடன் இருந்தால் அவர்களுக்கு எந்தவிதத்திலும் குறை இருக்காது. கௌரவ பங்கம் ஏற்படாது. உரிய

www.padippakam.com



மரியாதைகளுக்கு இழுக்கு இருக்காது. பைக்காசு முதற் கொண்டு அவனால் அடைந்த சகல நன்மைகளினால் திருப்தியடைந்து மாற்றலாகிப் போகும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் புதிதாய் வருபவர்களுக்கு அவனை தத்துக் கொடுப்பது போன்ற பாவனையில் விட்டுச் செல் வார்கள்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் படேல், பட்வாரி ஆகி யோர் சுற்றிலுமிருக்க தன் வேலையில் மும்முரமாக இருந் தார். மணி பன்னிரண்டானது. வயிற்றில் எலி ஓடுவது போல் இருந்தது. ''சாப்பாடு கொண்டா...'' சமையல் காரனை விரட்டினார்.

''இன்னும் சாமான் வந்து சேரல எசமான்...''

''வேலைக்காரப் பயல்களெல்லாம் எங்க போய்த் தொலைஞ்சாங்க? அவங்களை செட்டியாரிடம் அனுப் பறது...''

''நானும் சந்தா சாபும் போய் கேட்டுட்டு வந்தோம். காசு குடுத்தாதான் சாமான்னு செட்டியார் பெரிய மனசங்க ஒருத்தன் பாக்கியில்லாம சொல்லிட்டாங்க...''

''நீ ஏன் போகணும்... கூலிக்கார நாய் மவன்களுக் கெல்லாம் என்னாச்சு. இந்த ஊரோட போக்கே விசித் திரமா இருக்கு.''

''அவங்ககூட காசு கையில விழுந்தாதான் வேலை செய்வாங்களாம்.''

''இந்த செட்டியார் பயல்களும் வேலைக்காரப் பனாதைகளும் லண்டன்லேர்ந்து வந்து எறங்கியிருக்காங் களாமா... நான் பொறந்ததலேர்ந்து இப்படி ஒரு ஊரைப் பார்த்ததே இல்ல...''

''சார்... தரித்திரம் பிடிச்ச ஊர் இது. ஜனங்க ரொம்பத்தான் கெட்டுப் போய்ட்டாங்க. யார் என்ன

www.padippakam.com



சொன்னாலும் லட்சியம் செய்யறதில்ல. அடியோடு பயம் இல்லாம போச்சு. உம்... இவங்க ஆட்டமெல்லாம் எங்கிட்ட செல்லாது...'' சந்தாசாப் கோபத்துடன் கத்த... படேல் அவனுக்குத் தாளம் போட்டான். ''இத்தனை நாள் இருந்த ஊர் இல்ல இது. ரொம்பவும் மாறிப் போச்சு. ஊர்ப் பெரிய மனுசங்க வீட்லயும் நெலத்துலயும் மாடா உழைச்சி சேவகம் செய்திட்டிருந்தவங்களுக்கு என்னாச்சோ... எந்த வேலை சொன்னாலும் செய்யற தில்ல. எங்களைப் போன்றவங்க ஊருக்கு வந்தால் எங்க வண்டி மாடுகளுக்கு வைக்கோல் கொண்டு வந்து போடு வாங்க. உங்களையொத்த பெரியவங்க வந்தால் குதிரை களுக்கு வஞ்சனை இல்லாம கொள்ளு தருவாங்க இந்த செட்டியாருங்க. எல்லாமே போச்சு. மகாராஜா போன்ற தொரைக்கே அடிமைச் சேவகம் செய்ய தைரியமா மறுக் கறாங்க. எங்களைப் போன்றவங்களைப் பத்தி என்ன சொல்ல... எல்லாம் தலைகீழாயிடுச்சி...''

பட்வாரி தன் முறையைத் துவங்கினார். ''மொதல்ல இருந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உங்களைப்போல ரொம்ப நல்லவர். இல்ல சந்தாசாப்...? அந்த இன்ஸ்பெக் டரிடம்கூட சண்டை போட்டாங்க இந்த ஆளுங்க. தப்புக் கணக்கு எழுதினார்னு இல்லாது பொல்லாதெல்லாம் சொல்லி ரகளை செய்தாங்க. லஞ்சம் வாங்கினவங்களைக் கண்டுக்காம விட்டுவிட்டு நேர்மையா நடந்துகிட்ட வங்களுக்கு தண்டனை குடுத்தார்னு கம்ப்ளெயிண்ட் குடுக் கற அளவுக்கு துணிஞ்சிட்டாங்கன்னா... இல்ல சந்தா சாப்...?''

''தாசில்தார் தர்மபிரபு சார். கிளார்க்கா இருந்து தாசில்தார் ஆனவர். அவருக்கு இந்த விஷயமெல்லாம் நல்லாத் தெரியும். நம்ம கஷ்ட நஷ்டங்களை புரிஞ்சு கிட்டவர் அவர். இல்லேன்னா இன்னும் அவஸ்தை தான்...'' வேறொருவரின் முறையீடு. இப்படியே பேச்சு தொடர்ந்தது.

www.padippakam.com



''எங்க பட்வாரியின் சித்தப்பா மகன்தான் சார் இந்த ஊரைக் கெடுக்கறது...'' படேல் சொல்ல...

''உங்க பிள்ளையையே உங்களால் கண்ட்ரோல்ல வைக்க முடியலியா? உம் எனக்குப் பசிக்கறது.''

''அவனுக்கும் எனக்கும் ஆகாதுங்க. என்னை சஸ்பெண்ட் செய்து என் வேலைக்கு உலை வைக்கணும்னு திட்டம் போட்டுக்கிட்டிருக்கான் பாவிப் பய...'' பரிதாபமாய்ச் சொன்னார் பட்வாரி.

''சரி சரி... அதெல்லாம் அப்புறம் சாவகாசமா பேசிக்கலாம். இப்ப சாப்பாடு சங்கதிக்கென்ன சொல்றிங்க... காசு குடுத்து வாங்கறது எங்க பரம்பரையில இதுவரை நடக்கல்லே. மானம் மரியாதை இல்லாதவன் செய்யற வேலை அது...''

''சரி... எங்க வீட்டுலேர்ந்து கொண்டு வரச் சொல்றேன். இல்லன்னா நீங்களே வாங்க... சாப்பிடலாம்...'' பவ்யமாய்க் கூறினார் பட்வாரி.

அப்போது பைஜாமா ஜிப்பாவும் தொப்பியுமாக பானைபோல் உப்பிய வயிறுடன் அங்கு வந்தார் ஒருவர்.

''இவர்தான் எங்க ஊர் தொரை. ரொம்ப நல்லவர். கொஞ்ச நாள் முன்வரை இவர் பேர் சொன்னால் பறவைங்ககூட பறப்பதை நிறுத்திடும். அவ்வளவு கட்டுப்பாட்ல வச்சிருந்தாரு இந்த ஊரை...''

பட்வாரி சொன்னதற்கு மறுப்பாய் தலையாட்டினார் துரை.

''உம்... அதெல்லாம் ஒரு கதை போலாயிட்டது. இந்த கலிகாலத்தில் துர்புத்திகள்தான் அதிகமாயிட்டது. இந்த ஊருக்கு அழிவு காலம் நெருங்கிட்டது. இந்த ஊர் மட்டுமில்லெ. மொத்த உலகமே நாசமாகப் போறது. ஜனங்க நடவடிக்கை விபரீதமாயிட்டிருக்கு... உம்... நீங்க

www.padippakam.com



எங்கேர்ந்து வர்றீங்க?'' பெருமூச்சுடன் மனத்தாங்கலைக் கொட்டிவிட்டு சம்பிரதாயமான கேள்விக்கு வந்தார்.

''உங்களைப் போன்றவங்க இருந்தும்கூட ஊர் இப்படி பாழாயிட்டு வர்றதுன்னா நீங்கல்லாம் சும்மா பார்த்துக்கிட்டிருக்கீங்களா? எல்லா ஊருமே இதே தினுசில் மாறிட்டா நம்ம ராஜ்யம் நடந்தாப்பலதான். இங்கேர்ந்து என் சாமான்களெல்லாம் எப்படி கொண்டு போய்ச் சேர்க்கறது... குடலைப் பிடுங்கற பசி வேற...'' ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கோபத்துடன் சிடுசிடுத்தார். மேற்கொண்டு என்ன ஆகப்போகிறதோ என்ற கவலை வேறு...

''அடடா... இத்தனை நேரமா ஏன் சொல்லலய்யா?'' பட்வாரியிடம் கடுகடுத்த துரை இன்ஸ்பெக்டரிடம் பணிவுடன் சொன்னார். ''நீங்க என் பங்களாவில் இறங்கியிருக்கலாம். சரி... வாங்க... எங்க வீட்ல சாப்பிடலாம்... அங்க போய் சாவகாசமா பேசலாம்... கௌம்புங்க...''

சனி விட்டது என்று தம் வழி நடந்தார்கள் பட்வாரியும் படேலும். சந்தா சாப் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பின்னாலேயே துரை வீட்டிற்கு சென்றார்... தனக்கும் விருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்...

**''நம்மூரில் கூடவா!'' என்ற தொகுப்பிலிருந்து—1948**

www.padippakam.com

பி. வெங்கடேஸ்வர ராவ்

# சங்கச் சீட்டு

அக்னி நட்சத்திரக் காலம் அது. கத்தி வீச்சாய் பளீரெனத் தாக்கும் வெய்யில். பூமிப் பரப்பில் வெப்பக் கிரணங்களை வீசி வீசி உக்கிரத் தாண்டவமாடிக் கொண்டிருந்தான் சூரியன். பெரிய பெரிய சுழற்காற்று எழுந்து குப்பை கூளங்களைத் தன்னோடு அடித்துச் சென்றது. நீர் குறைந்திருப்பதுபோல் ஆசை யூட்டி மோசம் செய்யும் கானல்நீர் வறட்சி எங்கும். திடீரென்று காற்றும் தன் போராட் டத்தை நிறுத்திக்கொள்ள... புவியின் சுழற்சி... அசைவு அப்படியே அடங்கி விட்டாற் போன்ற அடர்த்தியான நிசப்தம். மேற்கு திசையிலிருந்து நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு ஜிவ்வென்று எழுந்தது அந்த சத்தம். வேர்வை வெள்ளமென வழிந்து கொண்டிருக்க, நுரை கக்கியபடி... அரற்றியபடி ஓடி வந்து கொண்டிருந்தான் ஒரு கூலியாள். அவன் பின்னால் அவன் எஜமானனின் கூண்டு வண்டி.

பாதை நெடுக இரு பக்கமும் மரங்கள். அவற்றின் நிழலில் சற்று இளைப்பாறுவதென் பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இருபது மைல் ஒரே மூச்சில். மாடுகள் கூட நுரை கக்கிக் கொண்டிருந்தன. வண்டி ஓட்டும்

www.padippakam.com



துரையின் பெரிய குமாஸ்தா சினராமய்யா சாட்டையை வீசி வீசி வண்டி மேலும் வேகமெடுக்கச் செய்தான். இரண்டு நாள் முன்பு சூலாலி புச்சய்யாவின் சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டது. அது சம்பந்தமாய்த்தான் பட்டணம் சென்று திரும்பிக் கொண்டிருந்தார் ஊரின் துரை.

வண்டி முன்னால் ஓடிக்கொண்டிருந்த கூலியாளின் வயிறு உட்புறமாய் குவிந்து பள்ளம் விழுந்திருந்தது. களைத்துப் போன தேகம். அதீத பசியால் இன்னும் தள்ளாடியது. பொழுது விடிந்தபோது குடித்த கஞ்சி தான். துரை பட்டிணத்திலிருந்து கொண்டு வந்த பலகாரங்களையும் பழங்களையும் நினைத்துக்கொண்டு பசியாற முயன்றான்.

சேரவேண்டிய இடம் அடைந்தது கூண்டு வண்டி. அவர் பரிவாரங்கள் கொடுத்த ஆர்ப்பாட்டமான வரவேற்புக்குப் பிறகு உள்ளே சென்றார் துரை. இருபது மைல் தூரத்திற்குமேல் ஓடிவந்து களைத்துப் போன தனக்கும் சாப்பாடு போடுவார்கள் என்ற நப்பாசையில் வாசலிலேயே நின்றான் அந்தக் கூலியாள்... மைசன்னா. சுருட்டு புகைத்தபடி உள்ளிருந்து வந்த குமாஸ்தாவைப் பார்த்ததும் நெஞ்சில் திகில் பரவியது.

''மாடுகளைக் கொட்டடியில் கட்டிட்டு வா... ஏய் உன்னைத்தான்...''

உடம்பில் வலுவில்லை. ஆனாலும் எதிர்த்துப் பேச முடியாது. வாயினின்று ஒரு வார்த்தை விழுந்தால் உடம்பின் அத்தனை எலும்புகளும் கூடவே உதிர்ந்து விடும். பீறிட்டெழுந்த துக்கத்தை அடக்கிக்கொண்டு மாடுகளை ஓட்டிச் சென்று மைல் தூரத்திலிருக்கும் கொட்டடியில் கட்டிவிட்டு முரண்டுபிடிக்கும் கால்களைப் பலவந்தமாய் நகர்த்தி குற்றுயிரும் குலையுயிருமாய்த் திரும்பி வந்தான். வெறுங் கையுடன் வீடு திரும்பும்

www.padippakam.com



தன்னைக் கண்டு முகம் வாடும் பிள்ளைகளுக்கு என்ன பதில் சொல்வது என்ற பயம் வேறு.

முதல் நாள் அந்திப் பொழுதில் பக்கத்துவீட்டு காப்புக்காரன் வந்து மறுநாள் சோளக்கொல்லையில் வேலை இருப்பதாகச் சொன்னபோது அரைசேர் சோள மாவது கூலியாகக் கிடைக்கும் என்ற ஆசையில் சரி என்றான். ஆனால் தீர பொழுது விடிந்தபோது துரையின் குமாஸ்தா வந்து பட்டிணத்திலிருந்து துரை வரப்போவ தாகவும் கூண்டு வண்டியின் முன் ஓடவேண்டும் என்றதும் மறுப்பேச்சின்றி கிளம்பவேண்டியதாயிற்று.

மைசன்னாவின் பெண்டாட்டி லக்கி இருந்த பழைய சோற்றை பிள்ளைகளுக்கு வைத்துவிட்டு புருசனுக்காக காத்துக் கொண்டிருந்தாள். கண்கள் இருளடையத் தொடங்க உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வந்து சேர்ந்தான் மைசன்னா. அவனுக்காக ஆசையாக எதிர் பார்த்துக் கொண்டிருந்த லக்கி துடித்துப் போனாள். வயிற்றில் பயம் சுருண்டு பந்தாய்க் கிளம்பி நெஞ்சை அடைத்தது. அவனைப் படுக்கவைத்து ஆறாய் ஊற் றெடுத்த வியர்வையை புடவைத் தலைப்பால் துடைத்து விட்டாள். 'ஹும்...' என்று பெருமூச்சு தவிர அவள் வாயி னின்று வார்த்தை எழவில்லை. நிராசையுடன் அவளைப் பார்த்தான் மைசன்னா அந்தப் பார்வையில் தரித்திர தேவதை நிறைவாகக் காட்சிதந்தாள். நடந்த கதையை நினைத்தபோது இருவருக்குமே துக்கம் தாங்கமுடிய வில்லை. இரண்டு வருடம் முந்திய கதை...

அப்போது நடவுநேரம். ஊரெங்கும் அம்மை நோய் கண்டிருந்தது. அவர்களின் இளையமகள் சோமிக்குக்கூட அம்மை போட்டிருந்தது. லக்கி உணவு உறக்கம் மறந்து குழந்தையைக் கவனித்துக்கொண்டாள். மைசன்னா அப்போதும் இப்படித்தான், துரையின் கூண்டு வண்டி முன்னால் ஓடுவதற்காகச் சென்றிருந்தான். சுற்று வட்டாரத் தில் வைத்தியனும் கிடையாது.

www.padippakam.com



ஊரில் எல்லோரையும்விட முன்னதாகவே துரையின் நிலத்தில் நடவு...அடிமைக் கூலிகள் வந்து நிலத்தை உழுது சுத்தம் செய்துவிட்டுச் சென்றிருந்தார்கள். நாற்று நடுவ தற்காக துரையின் வேலையாட்கள் வீடுகளுக்கே வந்து பெண்கள் எல்லோரையும் விடாப்பிடியாக இழுத்துச் சென்றார்கள் குமாஸ்தா ராமய்யா பிரம்பும் கையுமாய் வீட்டுக்குமுன் வந்து நின்றபோதே லக்கிக்கு பாதி உயிர் போய்விட்டது

''அய்யா...புள்ளைக்கி ஒடம்பு சொகமில்ல. இன்னைக்கு வுட்டுடுய்யா...'' கையெடுத்துக் கும்பிட்டு தீனமாய்க் கெஞ்சினாள்.

விழிகள் தெறித்து விடும்போல் முறைத்துப் பார்த்தான் வந்தவன்.

''நடடி கழுதே. ஒன் புள்ளைக்கு சொகமில்லேன்னு தொரை வேலை நின்னுடணுமா...'' வாய்க்கு வந்தபடி ஏதேதோ கெட்ட வார்த்தைகள் சொல்லி ஏசினான். தைரியம் வரவழைத்துக் கொண்டு வரமுடியாதென லக்கி முரண்டு பிடித்தபோது அவள் முதுகிலும் கன்னத்திலும் பிரம்பால் அடித்து கூந்தலைக் கொத்தாய்ப் பிடித்து இழுத்துச் சென்றான்.

அம்மாவை அடித்து இழுத்துச் செல்வது கண்டு துடி துடித்த சோமிக்கு வாய்விட்டு அழக்கூட உடம்பில் திராணியில்லை. கண்களினின்று சரசரவென்று நீர் வழிந்தது. வாயினின்று வார்த்தை எழும்பாது நா உலர்ந்து போயிற்று. பக்கத்தில் யாருமில்லை. அக்கம் பக்கத்து வீட்டார்கூட அடிமைச் சேவகத்திற்குச் சென்றிருந்தார்கள்.

''தாகம்... தண்ணி... அம்மா...அம்மா ...தண்ணீர்...'' வாய்குழற, ஈனஸ்வரத்தில் வெளிப்பட்ட கேவல்......



படிப்பகம்

www.padippakam.com



விளையாடிக் கொண்டிருந்த தெருக் குழந்தைகள் ஓடி வந்தார்கள். விழிகள் திறந்திருக்க...வாய் திறந்திருக்க... சோமி போய்ச் சேர்ந்துவிட்டாள். அடிமை வாழ்வு தனக்கு வேண்டாம் என்பதுபோல போய்ச் சேர்ந்து விட்டாள். ஆணவத்தனமும் அநீதியும் நிறைந்த இந்த உலகத்தை விடுத்துச் சென்றுவிட்டாள். வேலை முடிந்து லக்கி வீடு திரும்பியபோது வழியிலேயே விஷயம் தெரிய, அங்கேயே சரிந்துவிட்டாள். விரக்தி கவ்வுகிற நேரங்களில் மைசன்னாவும் லக்கியும் ஒருவரையொருவர் தீர்க்கமாய்ப் பார்த்துக் கொள்கிற போதெல்லாம் அவர்கள் வாழ்வில் நடந்து முடிந்த அந்தத் துயர அத்தியாயம் கண்முன் காட்சிகளாய் ஓடும். இவர்களைப் போல் எத்தனைபேர் அந்த ஊரில்...?

பிள்ளைகளுக்கு வைத்த பழைய சோற்றில் இறுத்து வைதத நீரைக் குடித்துவிட்டு சுருக்குப் பையில் இருந்த உலர்ந்துபோன வெற்றிலையை எடுத்துக்கொண்டு யாரிடமாவது பாக்கு கேட்கலாம் என்று வெளியில் வந்தான். தெருமுனையில் ஒரு சிறு கூட்டம். அவனும் சேர்ந்து கொண்டான்.

''சங்கத் தலைவரு கொஞ்ச முன்னதாக கௌம்பி சென்றார். எங்கிட்ட சில சங்கதிங்க சொன்னார். நாமெல்லாரும் ஒரு கட்டா நிக்கணுமாம். நம்ம உழைப்பு சிரமம் பொழுது எல்லாம் வீணாயிட்டிருக்காம். இதெல்லாம் நாம நெனெச்சுக்கூடப் பார்க்காம சேவகம் செய்துகிட்டிருக்கோம். இனிமே தொரைக்கு எந்த வேலையும் காசு இல்லாம செய்யக்கூடாதாம். கவர்ண்மெண்ட்டுக்குக் கூடத்தானாம். வேலை செஞ்சா அதுக்குத் தகுந்த கூலி கேக்கணுமாம்...'' இடையன் சுக்கன் சொன்னது எல்லோர் காதுகளிலும் கிர்ரென்று பாணமாய் விழுந்தது.

''இப்ப இருக்கற சாவுக்கு இன்னொரு சாவா?'' சில குரல்கள் முணுமுணுத்தாலும் என்ன நடந்தாலும் சரி,

www.padippakam.com



சங்கம் அமைத்தே தீரவேண்டும் என முடிவு கட்டினார்கள். அடுத்த நாள் சங்கத்தலைவர் வருவதாகச் சொன்னாராம். சங்கச்சீட்டுகள் கொண்டுவருகிறாராம். அதுவரை இந்த சங்கதி வெளியில் யாருக்கும் முக்கியமாக துரையின் குமாஸ்தாக்களுக்குத் தெரியக் கூடாதென்று எச்சரிக்கப் பட்டார்கள். பிறகு கூட்டம் கலைந்து அவரவர் வழி சென்றனர். மறுநாள் விடியற்காலையிலேயே கூட வேண்டுமென்று சொன்னார்கள்.

விடிந்ததுதான் தாமதம்... குமாஸ்தா ராமய்யா மைசன்னா வீட்டுமுன் வந்து நின்றான். சங்க நடவடிக் கைகள் தெரிந்து கொள்ளவேண்டு மென்ற ஆர்வத்தில் அவன் குமாஸ்தா கண்ணில் படாமல் பின்னால் ஓடி மறைந்து நின்றான். வீடெல்லாம் தேடினான் குமாஸ்தா. எங்கும் அகப்படாததால் வாய்க்கு வந்தபடி ஏசிக் கொண்டே திரும்பிப் போனான்.

சங்கத் தலைவர் அனைவருக்கும் சங்கச்சீட்டுகள் கொடுத்தார் தலா வீசம் பைசா செலுத்தி எல்லோரும் அங்கத்தினரானார்கள். எல்லோருக்கும் சீட்டுகள் கொடுத் தானபின் அந்தக் கிராம பிரஜைகளுக்கு புரியும் விதத்தில் விஷயங்களை எடுத்துச் சொன்னார் சங்கத்தலைவர் வெங்கட்ராவ்...''நீங்கள்லாம் உறுதியா இருக்கவேண்டும். கட்டுப்பாடோட இருக்கவேண்டும். கஷ்ட சுகத்தில் ஒருத்தருக்கொருத்தர் துணையா இருக்கவேண்டும். எப்ப நீங்கள்லாம் இணைந்து ஒரே பாதையில் நடக்கறீங்களோ அப்பதான் உங்க கஷ்டத்துக்கெல்லாம் விடிவு ஏற்படும். நாளையிலேர்ந்து வெட்டிவேலை செய்வதை அடியோட நிறுத்திடணும். தெரிஞ்சதா...?'' அவர் பேசப்பேச அவர் கள் உற்சாகத்திற்கு எல்லையில்லாமலாயிற்று. சங்கத் தலைவரை வாயாரப்புகழ்ந்தார்கள்.

''சாமி...நீங்க நெஜம்மா சாமிதான். எங்க குருட்டுக் கண்ணைத் தொறந்திட்டிங்க. புள்ளை குட்டியோட நீங்க

www.padippakam.com



நல்லா இருக்கணும் சாமி...'' கள்ளங்கபடற்ற மனங்கள் வாழ்த்தின.

அன்றிலிருந்து அடிமைச் சேவகம் மறுக்கப்பட்டது. கூலியாட்கள் அனைவரும் ஒருங்கிணைந்து தைரியமாய் போர்க்கொடி உயர்த்தினார்கள்.

ஒரு நாள் அமீனாசாப் பணியின் நிமித்தம் அந்த ஊருக்கு வந்தார். அது தொடர்பான பணிகளுக்காகவும் மற்ற வேலைகளுக்காகவும் ஜவான் கூலியாட்கள் வசிக்கும் குப்பத்திற்குச் சென்றான். வேலைக்கு வரச்சொல்லி சத்தம் போட்டான்.

''காசு குடுக்காட்டி வேலை செய்யமாட்டோம் அய்யா. எங்களுக்கும் வயிறு இருக்கு. இப்படி சும்மா வேலை செஞ்சா எங்க பொளைப்புக்கு வழி என்ன அய்யா...?'' அனைவரும் ஒருமித்து வெட்டிவேலை செய்ய மறுத்தார்கள்.

ஜவான் அமீனாவிடம் சென்று நடந்ததைச் சொன்னான்.

''அவனுகளைக் கட்டிவச்சி அடிங்கடா...'' அமீனா கோபத்துடன் பூட்ஸ் காலால் தரையை உதைத்தான். தரை அதிரும் வண்ணம் ஆவேசத்துடன் நடந்து அவர்களிருப்பிடம் சென்றான்.

''கூப்பிடுங்கடா நாய்ப்பசங்களை...'' பரிவாரத்திற்கு உத்தரவு போட்டான்

படை திரள்வதுபோல் கூடி முன்னால் வந்து நின்றார்கள் கூலியாட்கள் ''தொரை...நாங்க இனிமே வெட்டியா வேலை செய்யமாட்டோம். எங்க கஷ்டத்துக்குத் தகுந்த கூலி குடுத்தாகணும். நாங்க எப்படி பொளைக்கறதாம்...?''

www.padippakam.com



திகைத்துப்போன அமீனா. சரமாரியாகத் திட்டத் தொடங்கினான். அவர்கள் பொருட்படுத்தாமல் தொடர்ந்து பேசினார்கள். ''இத்தனை காலமா இருந்த அடிமைங்க இல்ல நாங்கல்லாம். சங்கத்துல சேர்ந்துட் டோம். நீங்க இப்படி வாய்க்கு வந்தபடி திட்டினா நாங்க சும்மா இருக்கமாட்டோம். ஆமா...'' கோரஸாய்க் கூறி னார்கள். மைசன்னா தன்னிடமிருந்த சங்கச் சீட்டை எடுத்துக் கொடுக்க, அமீனாவின் முகம் பேயறைந்தது போலாயிற்று.

''அய்யா...சட்டம்னு ஒண்ணு இருக்கு தெரியுமா... இனிமே வெட்டிவேலை செய்யமாட்டோம்...'' ஆங்காரத் துடன் அவன் கர்ஜித்தபோது அமீனாவின் செவிகளில் இடிவிழுந்தது போலாயிற்று.

வெட்டிவேலை செய்யமாட்டார்கள். கூலி கொடுக்க வேண்டும்...? அரை குறையாய் அறிந்த தெலுங்கில் எழுத்து கூட்டி 'ஆந்திர சங்க அங்கத்தினர்' என்பதைப் படித்து திக்பிரமைப் பிடித்து நின்றான் அமீனா. கையி லிருந்த சீட்டு நழுவிக்கீழே விழுந்தது. அங்கு குழுமியிருந்த ஜனங்களெல்லாம் பெருங்குரலெடுத்து... 'போலோ ஆந்திர சனங்கானிகி... ஜே...! வெட்டி வேலை...ஒழிக...' என்று கூவி கும்மாளமிட்டார்கள். அந்த கோலாகலத்தில் ஆரவாரக் கூச்சலில் தன்னிலை மறந்து அவனும் 'ஜே' போட்டதாகக் கேள்வி...

(12-6-1946 'மீஜான்' இதழிலிருந்து)

[சமூகத்தில் நிலவும் அக்கிரமங்கள் அநியாயங்களைத் தம் விதியென ஏற்றுக் காலம் தள்ளிய மக்கள் அந்த விதிக்கு மூல காரணம் தங்கள் அடிமைத்தனமும் அவர்கள் ஆணவமும்தான் என்றுணர்ந்து தங்களுக்கான சங்கங்கள் என்று ஒரு சக்தியாய் உருமாறினால் அக்கிரமங்களும்

படிப்பகம்

www.padippakam.com



அநியாயங்களும் ஆணவப் போக்கும் தன்னால் மாறும் என்று பிரஜைகள் உணர்ந்து கொண்ட காலம். இக்கால கட்டத்தில் (1945) மிதவாதிகளை விடுத்து ஆந்திர மகா சபை பிரஜைகளின் பிரச்னைகளுடன் அவர்கள் முன் ஒரு தர்ம சங்கமாய்ச் சென்றபோது அந்த சங்கத்தின்பால் பிரஜைகளின் நம்பிக்கை, அதன்மூலம் பெற்ற தைரியம் ஆகியவற்றைச் சித்தரிக்கிறது இக்கதை. இக்கதையை ஆதாரமாக வைத்தே திருநகரி ராமாஞ்ஜனேயலு 'வெட்டிக் கூலி' என்ற நாடகம் எழுத... அது மேடையிலும் நடத்தப்பட்டது.]

படிப்பகம்

www.padippakam.com

பட்டுக்கோட்ட ஆழ்வார்சாமி

# இளமையிலேயே...

ஆந்திரமகாசபையின் காரியதரிசி வெங்கட்ராவ் தலைவர்களுடன் ரங்காபுரம் புறப்பட்டார்.

"நாம் நேரா ஊருக்குள்ள போகவேண்டாம். கிராமவாசிகளுக்கு ஏமாற்றம் ஏற்படும். மேளதாளத்தோடு நம்மை அழைத்துச்செல்ல அவர்கள் திட்டம் போட்டு வைத்திருக்கிறார்கள்..." வெங்கட்ராவின் கருத்தை மற்றவர்கள் ஆமோதிப்பதுபோல் தலையசைத்தார்கள்.

பிற்பகல் மணி பன்னிரண்டிருக்கும். அறுவடைச் சமயம். வயல்களில் யாருமே இல்லை. வெங்கட்ராவையும் தலைவர்களையும் வரவேற்பதாக ஒட்டுமொத்தமாகப் புறப்பட்டு விட்டார்கள் ஊருக்கு வெளியே இருந்த மொட்டைக் கிணற்றருகே தலைவர்கள் காத்திருந்தார்கள். அருகே மரத்தடியில் நிழலுக்காக நின்றிருந்த ஒரு இளைஞன் 'வணக்கமண்ணே...' என உற்சாகமாகக் கூவினான். கிராமவாசிகள் ஊரிலுள்ள மேட்டுக்குடி மக்களுக்கு ஒரு கடமைபோல் சொல்லும் வணக்கத்திற்கும் ஊர் துரைமார்களுக்கு பயபக்தியுடன் சொல்லும் வணக்கத்திற்கும் வெங்கட்ராவுக்குச்சொல்லும் வணக்கத்திற்கும் ஒன்றுக்கொன்று நிறைய வித்தியாசப்படும்.

www.padippakam.com



மலர்ந்த முகத்துடன் நெஞ்சுக்கொள்ளா சந்தோஷத்துடன் வெங்கட்ராவுக்கு சொல்லும் வணக்கத்தில் நன்றியுணர்வும் வினையமும் மரியாதையும் ஒரு சலுகையும் துல்லியமாய்த் தெரியும். ஆந்திர மகாசபையின் காரியதரிசியாக வெங்கட்ராவ் பணியேற்று இரண்டு மாதங்களாகின்றன. கிராமவாசிகளின் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதில் முழுமூச்சுடன் முனைந்து முதல்கட்டமாக அவர்கள் மனோபாவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றுவதில் வெற்றி கண்டார். தொண்ணூறு வயது வயோதிகர் முதல் ஒன்பது வயதுச்சிறுவன் வரை அவரை தங்களைக் கடைத்தேற்ற வந்த தெய்வமாகவே பாவிக்கலானார்கள். துரைமார்களின் நிந்தைகள்...ஏச்சு பேச்சுகள்... இல்லாத பழி சுமத்தி லஞ்சம் வாங்குவது போன்ற அட்டூழியங்களெல்லாம் சில கிராமங்களில் இப்போது அடியோடு ஒழிந்துவிட்டன. சிறியவர் பெரியவர் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அப்பாவி மக்களை அடித்து துன்புறுத்துவது... அதட்டிமிரட்டி பயமுறுத்துவது...இதெல்லாம் இருந்த சுவடே தெரியவில்லை. பிச்சைபோடுவதுபோல் வீசும் அற்ப கூலியைப்பெற்றுக் கொண்டு வாழ்நாளெல்லாம் அடிமையாகி உழைப்பது... உழைப்புக்கேற்ற உணவு இன்றி அரைபட்டினி கால் பட்டினி கிடப்பது...எல்லாமே முடிந்துபோன அத்தியாயங்களாகிவிட்டன.

வெங்கட்ராவுக்கு வணக்கம் சொன்ன இளைஞன் கடந்து சென்ற பாதசாரியிடம் அவரும் மற்ற தலைவர்களும் வந்திருக்கும் விஷயத்தை ஊராருக்குத் தெரிவிக்கும்படி சொன்னான். சிறிது நேரத்தில் சிறுவர்கள் திபுதிபுவென ஓடிவந்து சுற்றிக்கொண்டார்கள். அவர்களில் சிலர் அங்கிருந்த நெல்லி மரங்களில் ஏறி காய்களைப் பறித்து ஜேபியை நிறைத்துக் கொண்டார்கள்.

''உன் பேர் என்னைப்பா...?'' தலைவர்களுள் ஒருவர் ஒரு சிறுவனைக் கேட்டார்.

www.padippakam.com



''லிங்கய்யா...''

''லிங்கான்னுதான் அழைச்சிட்டிருந்தோம்...'' வெங்கட்ராவைப் பார்த்தபடி சொன்னான் இன்னொரு சிறுவன்... '' சங்கம் மாஸ்டர் பள்ளிக்கூடம் வச்சித் தந்தது லேர்ந்து லிங்கய்யான்னு கூப்பிடறோம்.''

தலைவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள... வெங்கட்ராவ் ஏதோ பலத்த யோசனையிலிருந்தார்.

''நீங்கள்லாம் யார்?''

''நாங்க துணி துவைக்கறவங்க...'' லிங்கய்யா சொல்ல...

''வண்ணான்னு சொல்லுடா...'' இன்னொரு சிறுவன்...

''லிங்கய்யா...எனக்கும் ஒரு நெல்லிக்காய் தரயா?'' ஒரு தலைவர் கை நீட்ட பரிகாசம் செய்கிறாரோ எனத் தயங்கிய லிங்கய்யா 'சரி...பார்த்துடுவோம்' என்பது போல் சந்தேகத்துடன் தன் ஜேபியிலிருந்து ஒரு நெல்லிக் காய் எடுத்துக்கொடுத்தான்.

தலைவர் நெல்லிக்காயைக் கடிக்கத் துவங்கியதுதான் தாமதம்... மற்ற சிறுவர்கள் தங்கள் ஜேபியிலிருந்து காய் களை அள்ளி அவர்முன் குவித்தார்கள்.

''போதும்...போதும்...எதுக்கு இத்தனை...!''

''இது நல்லாயிருக்கும்...இது நல்லாயிருக்கும்...'' என்று நல்ல காய்களாய்ப் பார்த்துப் பார்த்து பொறுக்கித் தந்தார்கள் பிள்ளைகள்.

அவர்களின் கள்ளங்கபடற்ற அன்பைக் கண்டு நெகிழ்ந்துபோன தலைவர் அவர்களை இழுத்து அணைத்துக்கொண்டார். அவர் அணைப்பில் பிள்ளைகள் மெய்மறந்து போனார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



அவர்களிடை முகிழ்ந்த அந்த அன்பிற்கு என்ன விலை கட்ட முடியும்? தங்கள் உடல் உழைப்பை உறிஞ்சி அதற்கான கூலியும் கொடுக்காமல் போவதுடன் தங்களிடம் எஞ்சியுள்ள அற்ப சொற்ப உடைமைகளையும் ஏதோ ஒரு சாக்குகாட்டி அபகரித்துக் கொள்ளும் ஊர்ப் பெரிய மனிதர்களின் அட்டூழியங்களைக்கண்டு சொல்லத் தெரியாத வேதனையில் குமைந்து கொண்டிருந்த அந்தப் பிஞ்சுகள் அப்போது தாமே மனமுவந்து கொடுத்த நெல்லிக்காய்களை மறுக்காமல் வாங்கிக்கொண்ட தலைவரின் பரிவுகண்டு அளவற்ற ஆனந்தமடைந்தார்கள். தம் ஊர்க்காரர்களானாலும் ஊரின் பெரிய மனிதர்கள் பெயரைச் சொன்னாலே திகிலால் உறைந்துபோகும் சிறுவர்கள் அயலூரிலிருந்து வந்து பத்து நிமிடங்கள் முன்புதான் பரிச்சயமான அத்தலைவரை எவ்வளவோ காலமாய்ப்பழகிய அந்நியோன்ய உணர்வுடன் நெருங்கிய உறவினராய் நினைக்கத்தலை பட்டார்கள்.

''இவர்களெல்லாம் யார்னு தெரியுமா?'' சிறுவர்களை நோக்கினார் வெங்கட்ராவ்.

''நாங்க எதுக்கு வந்திருக்கோம்னு சொல்லுங்க...'' வந்திருந்தவர்களுள் ஒருவர் கூற.........

ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு திருதிருவென விழித்தார்கள் சிறுவர்கள். திடீரென்று அந்த முகங்களில் ஒரு மலர்ச்சி பரவியது.

''எதுக்கு வந்திருக்காங்கன்னு தெரிஞ்சிபோச்சு. எங்களுக்கு நல்லது செய்யறதுக்குத்தானே?'' விழிகள் பளபளக்கக் கேட்டான் ஒரு சிறுவன்

''ஏன்...உங்களுக்கென்ன குறை...? கையில் வெள்ளிக் காப்பு போட்டிருக்கே நீ... அதோ அவன் காதுல கடுக்கன் உன் பக்கத்துல இருக்கறவன் சட்டையில் தங்கபொத்தான் இல்ல இருக்கு,.....''

www.padippakam.com



''இதெல்லாம் இருந்தா...? எங்க ஊர் தொரை எங்க மாடுகளைப் பிடிச்சிவச்சிருக்கார் தெரியுமா...?''

''எங்க கன்றுக்குட்டி தோப்புக்குள்ள பாய்ஞ்சிட்டதுன்னு எங்க ஊர் படேல் பத்துரூபா அபராதம் பிடுங்கிட்டார்...''

''எங்க எருமை 'புஸ்ஸு'ன்னு மொகத்தை வலிச்சுதாம். மூக்கணாங் கயிறுஏன் போட்லடான்னு எங்க அய்யாகிட்ட முப்பதுரூபா பிடுங்கிட்டாங்க...''

''வெங்கட்ராவ் சாப் கட்டிக்குடுத்த பள்ளிக்கூடத்துல நுழைஞ்சா காலை உடைச்சிடுவேன்னு மிரட்டராங்க துரையின் ஆளுங்க...''

''கொஞ்சநாள் முன்னே எங்கம்மா கூலி வேலை செஞ்சிட்டு திரும்பி வர்றப்ப தோப்புக்குள்ள கெடந்த குச்சிகளைப்பொறுக்கிட்டிருந்தப்ப ஏதுக்குடி பொறுக்கறேன்னு முடியைப் பிடிச்சிக்கிட்டு அடிச்சாங்க... எங்க அய்யா குறுக்கபோனா கையிலிருந்த பிரம்பு உடையற வரைக்கும் அவரை அடிச்சிட்டாங்க...''

ஒருவர் மாற்றி ஒருவராய் தங்கள் ஆழமான ஆதங்கங்களை வெளியே கொட்டலானார்கள்.

''அது சரி...அடுப்பெரிக்க விறகு இல்லாம அன்னிக்கு ராத்திரி எப்படி சமைப்பாங்க உங்கம்மா?''

ஆதரவாய் வந்த கேள்வியில் கரைந்து போனான் அந்தப்பையன்.

''ஐயோ...அதையேன் கேக்கறீங்க...வேலையிலேர்ந்து நான் திரும்பி வந்தப்ப எங்கம்மாவும் அய்யாவும் முனகிக்கிட்டு மூலையில் சுருண்டு படுத்திருந்தாங்க. ரொம்பப் பசியா இருந்ததால் சோறு இருக்கான்னு பானையைத் துழாவினப்ப எங்க அய்யா எழுந்துவந்து புதர்ல இருக்கற குச்சியை உடைச்சி கொளுத்தினார். பாதி வேகறப்ப

www.padippakam.com



தொரையோட ஆள் வந்து வேலை இருக்குன்னு கையோட கூட்டிட்டுப் போயிட்டார். அடுப்பில சோறு வேகாம திஞ்சுடுச்சி அதுலயே காரம் உப்பு சேர்த்து தண்ணி வுட்டு பிசைஞ்சிதுன்னேன்...'' சொல்லிக்கொண்டிருந்தபோதே அழுகை வெடித்துக்கொண்டு வந்தது அவனுக்கு.

''நீ யாருப்பா......?'' தலையில் வழியவழிய எண்ணெய்தடவிக் கொண்டிருந்த பையனை நோக்கிக் கேட்டார் ஒருவர்.

''நாங்க செட்டியாருங்க...''

''உங்களுக்கென்ன கஷ்டம் ...... உம்......தைரியமா சொல்லு......''

''எனக்கு தெரியாது சார். எங்க அய்யாவைத்தான் கேட்கணும்...''

''டேய்...மறந்திட்டயா...உங்கம்மா வேலை செய்யற மாட்டுத்தொழுவத்திலேர்ந்து சாணி எடுத்து வந்துட்டாங்கன்னு போலீஸ் படேல் அவங்க கையிலிருந்த இரும்பு போசியை அடிச்சுப்பிடுங்கிக்கல...?'' அருகிருந்த சிறுவன் நினைவூட்ட...

''ஆமா...ஆமா...அதை இன்னும் திருப்பித்தரலே...'' நா தழுதழுக்கக் கூறினான் செட்டியார் பையன்.

சுமார் அரையணிக்கும் மேலாக பிள்ளைகளுடன் கழித்தார்கள் தலைவர்கள்.

''பாவம் இவங்க...இந்த வயசிலேயே இவங்க மனசில இவ்வளவு வேதனை ஊறிப்போயிருக்குன்னா ஊரில் அதிகாரவர்க்கத்தின் அட்டூழியங்க எவ்வளவு தூரம் கொடிகட்டிப் பறக்குதுன்னு நல்லாத் தெரியுறது...'

''நம்ம பிள்ளைகளுக்கு நாம் விட்டுப்போகும் சொத்து இந்தக் கஷ்டங்கள் கடன் வியாதி தவிர வேறென்ன...'' இன்னொரு தலைவர் பெருமூச்செறிந்தார்.

www.padippakam.com



''இதுக்கெல்லாம் ஒரே தீர்வு சுயநலத்தை விட்டு நாமெல்லோரும் ஒண்ணுசேர்ந்து தைரியமா போராட ணும். அப்பத்தான இந்த கஷ்டங்களுக்கெல்லாம் விடிவு ஏற்படும், நாளைக்கு நம்ம பிள்ளைங்க சுகப்படுவாங்க...''

''தனிமனிதச் சுதந்திரம், மானம், மரியாதை, கௌரவம், சமூகத்தில் அங்கீகாரம் இதெல்லாம்தான் ஒரு மனிதனுக்கான வைரம்...வைடூரியம்...ஆடை அணிகலம்... வீடு பங்களா, நிலம் நீச்சுங்கற உணர்வு எல்லோருக்கும் வரணும்...''

கிராம எல்லையிலிருந்து மேளசத்தம் கேட்க...

''நாங்கல்லாம் அவங்களோட சேர்ந்து வரோம்'' என்று சொல்லிவிட்டு 'ஆந்திரச் சகோதரா...ஆந்திரச் சகோதரா...ஆந்திரமகாசபையில் சேரு சகோதரா... எனக் கூச்சலிட்டபடி ஓடினார்கள் சிறுவர்கள்.

**(18-2-45 'மீஜான்' இதழிலிருந்து)**

www.padippakam.com

ஆவுல பிச்சையா

# ஊர்வலங்கள்

வயற்காட்டையொட்டியுள்ள கிணற்றடியில் பல் தேய்த்துக் கொண்டிருந்தபோது ஜே...ஜே என ஏதோ இரைச்சல் கேட்டது. தொடர்ந்து சிகப்புக் கொடி ஏந்திய சிலர் ஊருக்குள் நுழைந்தார்கள். வாயிலிருந்த பல்குச்சியை எடுத்துக் கீழே வீசிவிட்டு அவசர அவசரமாய் முகம் கழுவிக்கொண்டு ஓடினேன். யார் அவர்கள், எதற்காக இப்படி கும்பலாக வந்திருக்கிறார்கள்...? தெரிந்துகொள்ளும் ஆவலுடன் வேகமாக ஓடினேன். ஊர்க்கோடியிலிருக்கும் வெங்கய்யா வீட்டை அடைந்ததும்தான் கால்கள் நின்றன. தொண்ணூறு வயதுக் கிழவி தவிர வேறு யாருமில்லை அந்த வீட்டில். அவள் கூட கம்பை ஊன்றியபடி எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தாள். இவளுக்குத் தெரிந்திருக்குமா...?''

''ஊர்ல என்ன விசேஷம் பாட்டி?''

''அட...உனக்குத் தெரியாதா...?'' கண்களை இடுக்கிக் கொண்டு என்னை ஏற இறங்கப் பார்த்தாள். ''தலைவர் குமரய்யாவின் வீர மரணத்துக்கு மரியாதையா ஊர் கோலம் ஏற்பாடு செஞ்சிருக்காங்க. நான் அங்கதான் போய்ட்டிருக்கேன். நீயும் வரயா...?'' பதில் எதிர்பார்க்காமல் நடந்தாள்.

www.padippakam.com



என் வயலில் நாற்று நட்டுக் கொண்டிருந்த பெண்கள் வேலையை அப்படியே விட்டு பிட்டு ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். திகைப்புடன் வயல் பக்கமாய்ச் சென்றேன். அங்கு யாரும் இல்லை. துவண்டு காய்ந்து கிடந்த நாற்றங்கால்களைப் பார்த்தபோது வயிற்றில் சங்கடம் எழுந்தது. இந்த நிலம் நீரெல்லாம் என்றும் வளமாக இருக்க வேண்டும் என்று அந்தப் போராட்டத்தில் உயிர் நீதத குமரய்யாவின் மரணத்திற்கு துக்கம் காப்பது போல் பயிர்கள் சரிந்து கிடந்தன. திடீரென்று பக்கத்திலிருக்கும் பட்வாரி நிலத்திலிருந்து கூச்சல் கேட்க... அப்பக்கமாய்ப் பார்த்தேன் சீக்கிரம் ஆகட்டும் என ஒருவரையொருவர் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார்கள் விவசாயக் கூலிகள். தங்கள் நலனுக்காக உயிர்த் தியாகம் செய்த தலைவர் இறப்புக்கு அனுதாபம் தெரிவிக்கும் விதமாய் நடத்தப்படும் ஊர்வலத்தில்கலந்துகொள்ள வேண்டுமென்ற துடிப்பும் பரபரப்பும் தெரிந்தது அவர்களிடம்.

சுற்றுவட்டார வயற்புறங்களில்... கிணற்றடியில்... எங்கும் மனித வாடையே தென்படவில்லை. அத்தனை பேரும் ஊருக்குள் சென்றுவிட்டிருந்தார்கள். அந்தக் கூலியாட்களின் அளவற்ற விசுவாசமும் வியப்பும் வேதனையும் ஏற்படுத்த... உடலில் சோர்வு குடிகொண்டது.

கால்கள் தள்ளாடி...நடக்கத் திரணியற்று வெல வெலக்க...எப்படியோ சமாளித்து ஊர்ப்பக்கமாய் நடந்தேன். வழியில் மந்தை மந்தையாக ஆடு மாடுகள்... அண்டையில் இருக்கும் வயல்களில் புகுந்து பயிர்களை மேயும் உத்தேசமே இன்றி தலை விரித்து நிசப்தமாக நின்று கொண்டிருந்தன. இத்தனைக்கும் காவல் கூட யாருமில்லை. இடையர்களெல்லோரும் கூட ஊர்வலத்தில் கலந்துகொள்ளச் சென்றுவிட்டார்கள் போலிருக்கிறது. அவசரத்தில் நான் சரியாய் முகம் கழுவவில்லை. வாய்க்-

www.padippakam.com



காலுக்குச் சென்று கழுவிக் கொள்ளலாம் என அங்கே சென்றால் சுத்தமாகத் தண்ணீர் இல்லை. அருகிலிருந்த கிணற்றடிக்குச் சென்றேன். அங்கு ஒரு காளை...எலும்பும் தோலுமாய் பரிதாபமாய்ப் படுத்துக்கிடந்தது. அதன்முன் நிறைய வைக்கோல் இருந்தாலும் மேயாமல் கிடந்த காட்சி பலத்த வியப்பளிக்க...என்றைக்குமில்லாத விதமாய் வேளைகெட்ட வேளையில் வேலையை நிறுத்திவிட்டு விவசாயக் கூலிகள் சென்றுவிட்டது அதற்கு வித்தியாசமாய்த் தெரிந்திருக்க வேண்டும். ஒருவித நிலை கொள்ளாத் தன்மையில் படுத்திருப்பது போல் இருந்தது.

'அம்மா...' என்ற கூவல்கள் ஒரு சேரக் கேட்க, சத்தம் வந்த திசையைப் பார்த்தேன். உடம்பெல்லாம் சேறாய், கழுத்தில் கலப்பையுடன் வயலில் முழங்காலளவு சேற்றில் நின்று கொண்டிருந்தன மாடுகள். ஓய்வெடுத் துகொள் வது போல் ஆடாது அசங்காது நின்றுகொண்டிருந்தன. பறவைகளின் கிறீச்சொலிகூட நீண்ட நேரமாய்க் கேட்க வில்லை. இலேசாய் பனி பெய்துகொண்டிருந்தது. உலகம் முழுக்க இன்று துக்கம் அனுஷ்டிப்பது போல் எங்கும் நிசபதம் சூழ்ந்திருந்தது வானில் கருமேகங்கள் சூழ்ந்தன சூரியன் மேகங்களிடையே தன்னை மறைத்துக் கொண் டான்.

ஊருக்குள்ளிருந்து ஏதேதோ கோஷங்கள் கலவை யாய்க் கேட்டன. ஊருக்கு வெளியே இந்த வயற் காட்டின் மௌனம்...சோகம் காக்கும் நிசப்தமாய் கலவரப்படுத்தி யது. அங்கிருந்து மெல்ல நகர்ந்து ஊரை நோக்கி நடந் தேன். முன்னே செல்லச் செல்ல கோஷங்கள் தெளிவாய்க் காதில் விழுந்தது என்னால் முடிந்தவரை வேகமாய் நடந்து ஊர் சேர்ந்தபோது ஊர் மக்கள் அனைவரும் ஆந்திர மகாசபை காரியாலயத்திற்குச் சென்றிருப்பது தெரிந்தது. வீட்டுக்குப போனால் அங்கும் யாருமில்லை பால் பொங்கி அடுப்பை அணைத்துக் கொண்டிருந்தது. சாப்பாட்டுத் தட்டில் சோறும் குழம்பும் கலந்து பிசையப்

www.padippakam.com



பட்டு சாப்பிடாமல் விடப்பட்டிருந்தது. செய்தி கேள்விப் பட்டிருந்ததும் பாதிச் சாப்பாட்டில் எழுந்து ஓடியிருக்கி றார்கள் எனத் தெரிந்தது. பக்கத்து வீட்டில் ஏதோ தீயும் வாசனை. சென்று பார்த்தால் எரியும் அடுப்பில் சோற்றுப் பானை...பெண்கள் பாதி சமையலில் ஓடியிருக்கிறார் கள். பானையைக் கீழே இறக்கி விறகை இழுத்து நெருப்பைத் தணித்தேன்.

ஆர்வம் பெருகிக்கொண்டே போக... ஊர்வலத்தில் கலந்துகொள்ளத் தீர்மானித்தேன். வயலில் யாருமில்லாத தால் என் கூலியாட்களை அனுப்பிவிட்டு ஊர்வலத்தில் சேர்ந்து கொள்ளலாமென அவர்கள் இருப்பிடம் நோக்கி நடந்தேன். அந்த ஹரிஜனக் குடியிருப்பில் முதலாவ தாக இருக்கும் சக்கிலியன் முத்தண்ணாவின் குடிசை அருகே நின்று கூலிக்காரர்களைக் கூவியழைத்தேன். பதி லில்லை. அந்தக் குடிசையின் முன் செருப்பு தைக்கும் உப கரணங்களும் தோல் துண்டங்களும் போட்டது போட்ட படி இறைந்து கிடந்தன. வேலையைப் பாதியில் விட்டு விட்டு இந்த முத்தண்ணாவும் போயிருக்கிறான். என் கூலி யாட்களைக் கூடப் போய்விட்டார்களா...? என் வயல் வரப்பு வேலைகள் என்னாவது? ஒவ்வொரு குடிசையாய்ச் சென்று பார்த்தேன். யாருமே தென்படவில்லை... பாத்தி ரம், பண்டங்கள் தவிர. உரலில் கேழ்வரகு இருக்க உலக்கை தரையில் கிடந்தது ஒரு குடிசையில்.

இதற்குள் குமரய்யா பெயரில் பாட்டுப் பாடி குலவை யிடும் சத்தம் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கி ஓடியபோது கிராம அதிகாரி எதிர்ப்பட்டார்.

''ஊர் மொத்தம் அங்க கூடியிருக்கு. நீங்க எங்க போறிங்க...''

''நான் அங்க இருக்க முடியாது...''

தெ—5

www.padippakam.com



''எதுக்கு...? நானாவது போகலாமா...?''

''ஆஹா...தாராளமா போகலாம்...''

''நீங்க எதுக்கு போகக்கூடாதுன்னு தெரியல்லே... எனக்கு சொல்லக்கூடாதா...?''

''சொல்றதுக்கு என்ன இருக்கு...நான் சர்க்கார் ஊழியன். அது அரசியல் ஊர்வலம். அங்க இருந்தா... ரிப்போர்ட் எழுதவேண்டி வரும். குமரய்யாவின் தியாகம் எவ்வளவு பெரிய விஷயம்...? ரிப்போர்ட் எழுத மனசில வலுவில்ல. உடம்பெல்லாம் நடுங்கிட்டிருக்கு...எழுத கை ஓடுமா...என்னால் முடியாது. அங்க இருந்தா கட்டாயம் ரிப்போர்ட் எழுதியே தீரணும். இல்லேன்னா மேலதி காரிங்க வாய்க்கு வந்தபடி ஏசுவாங்க. இங்க இருந்தாத் தானே தொல்லைன்னு பக்கத்து கிராமம் போய்ட்டி ருக்கேன். நாளைக்குத் திரும்பிடுவேன்...'' இவ்வளவு நேரம் தாமதம் செய்ததே அதிகம் என்பது போல எதிர்த் திசையில் விரைவாய் நடக்கலானார் கிராம அதிகாரி.

ஆந்திர மகாசபைக் காரியாலயம் சென்று ஊர்வலக் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டேன். அங்கிருந்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக் கொடி பிடித்திருந்தது கண்டு முதலில் குழப்பமாக இருந்தது. ஆந்திர மகாசபைக்கென இன்னும் கொடி நியமிக்கப்படவில்லையா? பிறகு தெரிந்தது ஆந்திர மகாசபையும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து ஊர்வலம் ஏற்பாடு செய்திருக்கிறது என்று. 'மாவீரன் குமரய்யா வுக்கு...ஜே!...' என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன. திரண்டிருந்த மக்கள் அனைவரையும் பார்க்க வேண்டு மென்ற ஆசை...பார்வை எட்டவில்லை. அருகிலிருந்த மரத்தில் ஏறினேன். தலையை ஏதோ வருடுவது போல் உணர்ந்து மேலே பார்க்க... அங்கே செருகியிருந்த கம்யூ னிஸ்ட் கட்சிக் கொடி காற்றில் அசைந்தபோது என்னை உராசியிருக்கிறதென அறிந்தேன். 'கம்யூனிஸ்ட் பார்ட்டி... ஜிந்தாபாத்...' என்ற கோஷமும் மீஜான் பத்திரிகையில்

www.padippakam.com



வெளிவந்திருந்த குமரய்யாவின் பாடல்களும் ஒருங்கிணைந்து இடியென முழங்க ஊர்வலம் கிளம்பியது.

மேல் சட்டையற்ற வெற்றுடம்பும் சேற்றுக் கால்களுமாய் வேலையைப் பாதியில் விட்டுவந்த கோலத்தில் காணப்பட்ட விவசாயக் கூலிகள் ஜெய் கோஷமிட்டபடி சென்றார்கள். பனியில் உடல் வெடவெடக்க கம்பை ஊன்றி தள்ளாடி நடந்த தொண்ணூறு வயது வயோதிகர்கள்...ஹரிஜனங்கள்... ரெட்டிகள்... காப்புக்காரர்கள்... துணி வெளுப்பவர்கள்... முடி திருத்துபவர்கள்... தச்சு வேலை செய்பவர்கள்... குயவர்கள்... முஸ்லீம்கள்கூட இருந்தார்கள். சமூகத்தில் எத்தனைப் பிரிவுகள் உண்டோ அத்தனை பேரும் பங்குகொண்டிருந்தார்கள். மடமட வென இறங்கி அவர்களுடன் சேர்நது கொண்டேன். குமரய்யாவின் பாடல்களைப் பாடியபோது உடம்பெல்லாம் நீரானது போலிருந்தது. பாட்டு முடிந்ததும் மக்கள் ஆவேசத்துடன் ‘குமரய்யாவுக்கு... ஜே...! மக்களாட்சி வேண்டும். போலீசின் அட்டூழியம்... ஒழிக...! சுதந்திர பாரதத்திற்கு...ஜே! கம்யூனிஸ்ட் பார்ட்டிக்கு ...ஜே...!’ என்று முழக்கமிட்டார்கள.

ஊர்வலம் முடிவு பெற்றதும் குமரய்யாவைப் பற்றி பேசியபடி ஜனங்கள் வீடு திரும்பினார்கள். வீடடைந்ததும் முதல் காரியமாய் வீட்டின் மீது சிகப்புக் கொடி ஏற்றினார்கள். ஒரு குமரய்யாவின் மரணத்துக்குப் பின் இத்தனை குமரய்யாக்கள் ஆவேசமாய்க் கிளம்பியிருக்கிறார்கள்.. நிச்சயம் நம் கனவுகள் நனவாகும் என்ற நம்பிக்கை முகிழ்த்தது என்னுள். என் வீட்டிலும் சிகப்புக் கொடி பறந்தது. எங்கள் குடியிருப்பு முழுக்க சிகப்புச் சுடர் மின்னியது. எந்த லட்சியத்திற்காக குமரய்யா உயிர்த் தியாகம் செய்தாரோ அதற்காக இறுதி மூச்சடங்கும் வரை போராடுவது என்று அனைவரும் ஒருங்கிணைந்து உறுதிமொழி கொடுத்தோம்.

**(11-8-48 ‘மீஜான்’ இதழிலிருந்து)**

www.padippakam.com



[1946 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான்காம் தேதியன்று விஸ்னூறு தேஷ்முக் குண்டர்கள் மிஷ்கிஷ் அலி தலைமையில் 'கடிவெண்டி' எனும் கிராமத்தில் புகுந்து அராஜகம் செய்தபோது துப்பாக்கிக்குப் பலியானார் குமரய்யா. சில நாட்களில் கெரில்லா போராட்டம் துவங்கியது. தெலுங்கானா போராட்டத்தை முற்றிலும் வேறு கோணத்தில் மாற்றிவிட்டது குமரய்யாவின் மரணம்.

இந்த அமரவீரர் மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் விதமாய் 1946 ஜூலை இருபத்தாறாந்தேதி 'கடிவெண்டி தினம்' எனக் கொண்டாடவேண்டும் என்று ஆந்திர மகாசபையும் கம்யூனிஸ்ட்கட்சியும் இணைந்து கோரிக்கை விடுத்தது. இதையொட்டி தெலுங்கானாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் கிளர்ந்தெழுந்தது. புரட்சி நடத்தியது. எங்கு பார்த்தாலும் கூட்டங்கள்... ஊர் வலங்கள். எந்த லட்சியங்களுக்காக குமரய்யா தன் உயிரைத் தியாகம் செய்தாரோ அவைகளுக்காகத் தொடர்ந்து போராடுவது என தெலுங்கான மக்கள் அனைவரும் உறுதி பூண்டார்கள். 'கடிவெண்டி தினம்' அனுசரிக்க முடியாதபடிக்கு அநேக தடைகள், முட்டுக் கட்டைகள் போடப்பட்டன.

அன்று சூறாவளியெனப் பொங்கி எழுந்து மக்களின் வீராவேசத்தை, புரட்சிக்கனலை விவரிக்கிறது இக்கதை.

'அடவி' பாப்பிராஜு மேற்பார்வையில் ஹைதராபாத்திலிருந்து வெளிவரும் 'மீஜான்' நாளிதழ் ஜூலை இருபத்தைந்தில் சிறப்பிதழ் வெளியிட்டது. குமரய்யா புகைப்படம்... அதற்குக் கீழே 'ஒளிருகிறது... ஒளிருகிறது ஒரு அமரஜோதி...' என்ற பாடலைப் பிரசுரித்தது. அந்த இதழில் நிஜாம் குறித்து நையாண்டி தொனிக்கும் விதத்தில் விமர்சனமும் வெளியாகியிருந்தது.

இக்கதையை எழுதிய ஆவுல பிச்சய்யா எழுதியதே மொத்தம் மூன்று நான்கு கதைகள்தாம். இவர்

www.padippakam.com



கம்யூனிஸ்ட் கட்சியின் தாலூக்காத் தலைவர். அதிகமாய்ப் படிக்கவில்லை என்றாலும் நிறைய விமர்சனம் செய்வார். 'அடவி' பாப்பிராஜு அவருக்கு நிறைய ஊக்கம் கொடுத் தார். அவர் முதல் கதை 'ஈச்சம்பழம் கொடுத்து பனம்பழம் பிடுங்கிய ஜமீந்தார் கதை'க்கு பாப்பிராஜு எழுதிய முன்னுரையில் 'கிராம வாழ்க்கையின் பின்னணியில் பிரச்னைகளை போராட்டங்களை எளிமை யாய் இயல்பாய் விளக்கும் கதைகளுக்கு இவர் கதைகள் முன்னுதாரணமாய் இருக்கும் எனச் சிலாகித்து எழுதி னார்.]

படிப்பகம்

www.padippakam.com

பி. துர்கா பிரசாத்ராவ்

# வரிகொடோம்

நேற்றைய தினம் விடிந்ததிலிருந்து கவலையுடன் சோர்ந்துஉட்கார்ந்திருந்தான் வெங்கய்யா. பொழுதுசாய்வதற்கு சற்று முன்பாக யாரோ வந்து அவனை அழைத்துச்சென்றார்கள். ராத்திரி முழுக்க வீடு திரும்பவில்லை. பொழுது புலர்ந்த பிறகுதான் வந்தான். பெரும் உற்சாகத்துடன் வந்தான். சொல்லப் போனால் இன்று தான் வருத்தப்படவேண்டிய தினம்.

கூழ்குடித்து சுருட்டு புகைத்தபடி கடைவீதி பக்கமாய்ச் சென்றான். ஊர் சந்தடியாக பரபரப்பாக இருந்தது. சாவடியில் இறங்கியிருக்கும் போலீஸ்காரர்களையும் ரெவின்யூ இன்ஸ்பெக்டரையும் ஒரு தடவை பார்த்துவிட்டு வரவேண்டும் போல் தோன்ற... ஒரு மிதப்புடன் அவர்களைப் பார்த்தபடி சாவடியைக் கடந்தான், பொங்கிய சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான்.

'தடிப்பசங்க...' முணுமுணுத்தபடி 'விவசாயிகள் சங்கம்' அலுவலகத்தில் நுழைந்தான்.

''என்னாச்சு வெங்கய்யா...?'' சங்க ஊழியன் சூரி...

''என்ன இருக்கு... வந்துட்டாங்க விருந்தாளிங்க...''

www.padippakam.com



''ஜாக்கிரதை...!''

''அட... பயமா...?''

''உங்க தெருக்காரங்கள்லாம் தைரியமாக இருக்காங்கில்ல?''

''இல்லாம என்ன செய்வாங்க...;''

''சரி... போய் ஆகவேண்டியதைப் பார்...'' வெங்கய்யாவை அனுப்பிவைத்தான் சூரி.

வரிவசூல் செய்வதற்காக அன்று முழுக்க வரவில்லை அதிகாரிகள். மாலை மங்கும் வேளையில் இன்றும் சில போலீஸ்காரர்கள் வந்திறங்கினார்கள். வெங்கய்யா அன்று ராத்திரியும் எங்கோ சென்றான். தெருவிலுள்ள மற்ற விவசாயிகளையும் உடன் அழைத்துச் சென்றான்.

ஃ ஃ ஃ

''வெங்கய்யா இருக்கானா?''... போலீஸ்காரன் வந்தான்.

''இல்ல...'' அவன் பெண்டாட்டி அங்கம்மா சொல்ல...

''எங்க போயிருக்காப்பல...?''

''தெரியாது...''

''எப்ப வருவான்?''

''தெரியாது...''

''எத்தனை நாள் தப்பிச்சுக்கப் போறான்? மறுபடி வர்றோம். இருக்கச்சொல்லு...'' போலீஸ்காரன் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் வெங்கய்யா வந்தான். குளித்து சாப்பிட்டு படுத்த நேரத்தில் போலீஸ்காரன் திரும்ப வந்தான்.

''வெங்கய்யா...?''

www.padippakam.com



''என்ன...?''

''தொரை வரச்சொல்றார்...''

''அவரையே வரச்சொல்லு...'' போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டான். கொஞ்சநேரத்தில் இரு போலீஸ்காரர்கள் வந்தார்கள்.

''வெங்கய்யா...?''

''வெங்கய்யா இல்ல'

''ஏய்... நீதான் வெங்கய்யா?''

''ஆமா... அதுக்கென்ன இப்ப...?''

''எழுந்து வா...''

''வரமாட்டேன்... என்ன செய்வே...''

போலீஸ்காரர்கள் திரும்பிச்சென்றார்கள். ஒரு பத்து நிமிடம் கழித்து கூட்டமாய் வந்து கதவுவைத் தட்டினார்கள்.

''யாரது?''

''கதவைத்தொற...''

''யார்னு சொல்லு மொதல்ல''

''ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வந்திருக்கார்... எழுந்து வரயா இல்லையா?

''என்ன குடிமுழுகிப் போச்சாம்?''

''வரிகட்டணும்கறது மறந்து போச்சா?''

''வரி இல்ல ஒண்ணுமில்ல...போய்ட்டு வாங்க...''

''எங்க...கதவு தொறந்து சொல்லு பார்க்கலாம்...''

''தொறக்கமாட்டேன்னு நெனைக்கறீங்களா?'' ஆத்திரத்துடன் வெளியே வந்த வெங்கய்யா பத்துக்கும் மேலான போலீஸ்காரர்களையும் ரெவின்யூ இன்ஸ்பெக்ட

www.padippakam.com



ரையும் பார்த்ததும் கொஞ்சம் பின் வாங்கினான். இரண்டு ராத்திரிகள் ரகசியகூட்டங்களில் கலந்துகொண்ட பின்பும் அதைரியம் எட்டிப்பார்த்தது. சில கணங்கள்தாம்... சட்டென சுதாரித்துக்கொண்டான்.

நாங்க வரிசெலுத்தமாட்டோம். என்ன செய்யறீங்களோ செஞ்சுக்கங்க...'' சிறிதும் தயக்கமின்றி பளீரெனச் சொன்னான்.

''என்ன சொன்னடா... இன்னொருதடவை சொல்லு பார்க்கலாம். வரி செலுத்தமாட்டியா?'' கோபமாய்க் கேட்டார் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்.

''நான் மட்டுமில்ல. ஊர் மொத்தம்... தேசம் மொத்தம்...''

''என்ன...?''

''இத்தனை காலமா குடுத்த தல்லாம் என்னாச்சு?''

''ஏன்... செலவில்லையா?''

''உங்க கையும் பையும் நெறையற செலவா?''

''ஏய்...என்னடா வாய் நீளுது...?''

''நீளாம என்ன செய்யும்... எங்க ஊர் ஜனங்க கிட்டேருந்து வருஷாவருஷம் வசூலிக்கிற எட்டாயிர ரூபாய்க்கு கணக்கு காட்ட முடியுமா உங்களால... போகட்டும்... அதுல பாதிக்காவது சொல்லுங்க. ஏரி வத்திப்போனா கண்டுக்கறதில்ல. விவசாயத்துக்கு தேவைப்படறது எதையும் சப்ளை செய்யறதில்ல. நல்ல எருவுக்கு நாதியில்ல. நோயாளிங்களுக்கு மருந்து இல்லாம செத்துக்கிட்டிருக்கோம். இருக்கற ஒண்ணு அரை தானியத்தைக்கூட அபகரிச்சிடறீங்க...'' பயமென்ற பேச்சே இன்றி மடமடவெனப்பொரிந்து தள்ளினான் வெங்கய்யா.

''இப்ப என்னதான் செய்யணும்கற...?'' பலவந்தமாய் வரவழைத்துக் கொண்ட பொறுமையுடன்கேட்டார் ரெவின்யூ அதிகாரி.

www.padippakam.com



''அதான் சொல்லிட்டனே. வரிகட்ட'மாட்டோம்...''

''யாருக்காக கட்டறீங்க... எங்களுக்காகவா?''

''இந்த உதவாக்கரை கவர்ண்மெண்ட் எங்களுக்கு வேணாம். போய்ட்டு வாங்க...'' உரக்கக் கத்தினான் வெங்கய்யா.

அத்தனையும் பார்த்துக்கொண்டிருந்த போலீசிற்கு கோபம் தலைக்கேறியது.

''டேய்... பேசறது யார்கிட்டன்னு தெரியுமா?'' கையை ஓங்கியபடி வந்தான் ஒரு போலீஸ்காரன்.

''அட போய்யா... இந்த மிரட்டலுக்கெல்லாம் இனி பயப்படமாட்டோம். நாங்க...''

''கொலைவிழும், ஜாக்கிரதை...''

''எங்களைக்கொன்னுட்டு வயல்ல இறங்கி நீ உழறயா ரத்தம் கக்கி செத்துப்போவே. துப்பாக்கியைத் தோள்ல மாட்டிட்டு திரிஞ்சா சரியா போச்சா?''

வெங்கய்யாவின் கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விட்டார் போலீஸ்காரர். பின்னாலிருந்த இன்னொரு ஜவான் அவன் மண்டையைக் குறிவைத்து அடித்தான். பொறிகலங்கி விழுந்தவனை விடாது அடித்தார்கள். குறுக்கே வந்த அங்கம்மாவையும் அடித்து கீழே தள்ளி அவள் சேலையை உருவினார்கள்.

இதற்குள் ஊர் மொத்தம் கூடிவிட்டது. ஆத்திர மடைந்த ஜனங்கள் கற்களை வீச... போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் துவங்கியது. ஜனங்களும் விடாது தாக்கி னார்கள். இரு தரப்பிலும் சில மரணங்கள். ரத்தத்தில் நனைந்த கொடிகளை ஏந்தியபடி ஜனங்கள் வீதிகளில் ஓடினார்கள். ஊர்வலம் நடத்தினார்கள்.

மறுநாள் காலை ராணுவம் வந்தது. ஐந்நூறுபேர் கைது செய்யப்பட்டார்கள், பெண்களைக் கேவலமாய்

www.padippakam.com



நடத்தினார்கள். வீடுகளைக் கொளுத்தினார்கள். இத்தனை நடந்தும் பைசா வரிகூட வசூலாகவில்லை. மாறாக ஆயிரமாயிரம் செலவுதான் மிச்சம்.

**('வெற்றி எமதே' எனும் தொகுப்பிலிருந்து)**

[1946இல் குமரய்யா மரணத்திற்குப்பிறகு போராட்டங்கள் வலுத்துப்போனது. சொந்தப்பகைகள் விடுத்து ஜனங்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் போராடினார்கள். இதில் ஒரு பகுதிதான் வரிகொடா இயக்கம். இக்கால கட்டத்தில் குறிப்பாக நல்லகொண்டா ஜில்லாவில் ஆயிரமாயிரமாய் செலவு செய்தும் ஒரு பைசா கூட வரியாய் வசூலிக்க முடியாமப் போனது நிஜாம் அரசால். அரசு, மிலிட்டரி, போலீஸ் எல்லாமாய் வரிக்காக மக்களை நானாவிதமாய் சித்திரவதை செய்தும் பலனில்லாமல் போனது. 'சங்கம்' இருக்கும் தைரியமும் சுய மன உறுதியும் மக்களைத் திடமாக நிற்கச்செய்தது. இப்போராட்டத்தில் நல்லகொண்டா ஜில்லாவில் மட்டும் சுமார் இருபது பேருக்குமேல் மரணமடைந்தார்கள். இந்த சம்பவங்களுக்குப் பிறகு 1946 நவம்பரில் கட்சிக்கு தடை உத்தரவு போட்டது நிஜாம் அரசு. கொதித்தெழுந்த கம்யூனிஸ்ட்கட்சி பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து ஆதரவு கொடுத்து அவர்கள் மனதில் ஆழப்பதியும்படி விஷயங்களை எடுத்துச்சொல்லி அவர்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுக்கத் துவங்கியது. தெலுங்கானாவில் கெரில்லாப் போராட்டம் ஆரம்பமானது.]

www.padippakam.com

சி. வி. கிருஷ்ணாராவ்

# நோட்டீஸ்

'இந்தப் பிரதேசத்தில் பட்டேல்கள், பட்வாரிகள் மற்றும் தாசில்தார்கள் போலீசுடன் சேர்ந்து கொண்டு மக்கள் மீது வரம்புமீறிய அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இன்றிலிருந்து எந்த போலீஸ் அதிகாரியானாலும் அரசு அதிகாரியானாலும் வேறு யாராயிருந்தாலும் சரி... மக்கள் மீது அராஜகம் நடத்தினால் தகுந்த தண்டனை பெறுவார்'

(பி.கு)—இந்த நோட்டீஸைக் கிழிப்பவர்கள் மீது பெயர் எழுதிவைத்துக் கொண்டு, கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஜாக்கிரதை!

இப்படிக்கு

மக்கள் நலச் சங்கம்'

'வைரா' எனும் நிஜாம் கிராமத்தில் ஒரு சுவரில் ஒட்டியிருந்த இந்த நோட்டீஸ் பொழுது விடிந்ததும் அவ்வழியாய்ச் சென்ற ஒரு போலீஸ்காரர் பார்வையில் பட்டது.

''ஏய்...இங்க வா...'' சுவரையொட்டியிருந்த வீட்டுக்கதவைத் தடியால் தட்டி உள்ளிருந்த ஆளைக் கூப்பிட்டார் போலீஸ்காரர்.

www.padippakam.com



வேட்டியைச் சரிசெய்தபடி கதவருகே வந்துநின்றார் அந்த வீட்டுக்காரர்.

''இந்த காகிதத்தை யார் ஒட்டினாங்க...?''

வாசற்படி தாண்டி வெளியே வந்து நோட்டீஸ் படித்துவிட்டு 'எனக்குத் தெரியாது...' என்றார் அந்த ஆள்.

''அதைக் கிழிச்சிப் போடு...''

''நீதான் கிழிக்கிறது...நான் மாட்டேன். உசிருக்கு உலை வச்சிக்க எனக்கென்ன பைத்தியமா?''

''அயோக்கிய ராஸ்கல்...'' முணுமுணுத்தபடி சென்று விட்டார் போலீஸ்காரர்.

''என்ன வெங்கய்யா...என்ன நடந்தது...''வழியோடு போய்க்கொண்டிருந்தவர்கள் அந்தச் சுவரருகே கும்பலாய் நின்றார்கள். எல்லோருக்கும் ஆச்சரியம்...இலேசான கலவரம் கூட...!

''யாரா இருக்கும்.''

''யாரோ...''

அதிகம் பேசினால் அமீனாவிடம் யார் என்ன கோள் மூட்டுவார்களோ என்ற பயத்தில் அவர்கள் தத்தம் வழிநடந்தார்கள்.

இதற்குள் மூன்று கான்ஸ்டபிள்களுடன் ஹெட் கான்ஸ்டபிள் வந்து சேர்ந்தார்.

''ஏய்...வாடா இங்க...''!

''எதுக்கு...''

''அந்த காகிதத்தைக் கிழிச்சிடு...''

''ஐயோ...என்னால் முடியாது. கதை கதையா சொல்றாங்க, கேக்கறப்பவே ஒடம்பெல்லாம் நடுங்குது...''

www.padippakam.com



எவ்வளவு மிரட்டியும் யாருமே நோட்டீஸைக் கிழித்துப்போட முன்வரவில்லை. மறுப்பு தெரிவிக்க அஞ்சவும் இல்லை. போலீஸ்காரர்கள் தலைகுனிந்தபடி வந்தவழியே சென்றார்கள்.

''நம்மளை இவ்வளவு வெரட்டுறாங்களே...அவங்க தான் கிழிச்சுப் போடறது...'' ஏளனமாய்ச் சொன்னான் எல்லப்பா.

''துப்பாக்கியும் தொப்பியும் இருந்தா சரியாப் போய்டுமா? தைரியம் இல்லாத பேடிப்பசங்க...'' வீரப்பா பரிகாசமாய்ப் பேசினான்.

தூரத்தில் அமீனாசாப் வந்துகொண்டிருப்பது தெரிய...வீட்டைப் பூட்டிவிட்டு பின்னால் ஒளிந்து கொண்டான் வீட்டுக்காரன்.

பயந்து ஓடியவர்கள்போக சுமார் இருபது பேர் அங்கிருந்தார்கள். தடி ஆட்டியபடி வந்த அமீனா அந்தக் காகிதத்தைக் கிழிக்கும்படி ஒருவனிடம் சொல்ல...

''சாப்...அதை ஒரு தடவை உரக்கப் படிங்க...''

''எனக்கு புத்தி சொல்றயாடா...''

''பேசாம நீங்களே கிழிச்சிடுங்களேன்...'' துணிச்சலுடன் சொன்னார் ஒரு கிழவர்.

''தாத்தா...நீயாவது சொல்றதைக் கேள். அதைக் கிழிச்சுடு.''

''என்னால் முடியாதுப்பா...''

புலி சிங்கத்தைப் பார்த்து மிரள்வதைப் போல் அந்த காகிதத்தின் மீது இன்னொரு தடவை பார்வையை ஓட விட்டு வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டு அங்கிருந்து சென்றார் அமீனா.

'கம்மம்' கலெக்டர் உடன் வர இரண்டு லாரிகள் வீட்டு முன் வந்து நின்றன. அமீனா வந்து கலெக்டரிடம் விஷயத்தை விவரித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



''அப்ப உன்னால் யாரையும் நோட்டீஸைக் கிழிக்க வைக்க முடியல?''

''கவர்ண்மெண்டை எச்சரிக்கற நோட்டீஸ் சார் அது...''

''நீயே கிழிச்சிருக்கலாமே...''

''அப்புறம் தொடர்ந்து என்னால் இங்க வேலை பார்க்க முடியுமா?''

''அதுவும் சரிதான்...'' என்ன செய்வதென்று தோன்றாமல் யோசனையிலாழ்ந்தார்கள் கலெக்டரும் அமீனாவும்.

''சரி...வரங்கல்லேர்ந்து ரஜாக்கர் (நிஜாம் ஆள்) ஒருவரை அனுப்பிவைக்கறேன். அவர் இந்துவைப்போல் தலைப்பாகை சுற்றி வேஷ்டி கட்டிக்கிட்டு நீங்க சொன்னவுடனே மறுபேச்சு சொல்லாம கிழிச்சுப் போடறாப்பல ஏற்பாடு செய்யறேன். ஆனா நீங்க ஒரு வேலை செய்யணுமே...''

''சொல்லுங்க சார்...''

''வேடிக்கை பார்க்கற ஜனங்ககிட்ட பேப்பரும் பேனாவும் இல்லாம பார்த்துக்கங்க...''

**(ஜூன்'48 'விசாலாந்திரா' மாதப்பத்திரிகையிலிருந்து)**

*சாரதா*

# புதிய செய்தி

கொத்தகுடா கிராமத்தில் கோடய்யாவுக்கு நல்ல செல்வாக்கும் மதிப்பும் உண்டு. நாணயமும் நல்வாக்கும் உடையவர். தெலுங்கானா போராட்டம் ஆரம்பமான பிறகு அவர் வீடும் கிராமத்திலுள்ள வேறுசிலர் வீடுகளும் நிஜாம் படையைச் சேர்ந்த 'இத்தைஹதூல்' குண்டர்களால் அபகரிக்கப்பட்டன. செலுத்த வேண்டிய வரியை எதிர்ப்பின்றி செலுத்திவிட்டு பொறுமையைக் கடைப்பிடித்துக் காத்திருப்போம் என்று கோடய்யா கிராமஜனங்களுக்கு அறிவுரை வழங்கினார் வரிகட்டத் தவறினால் மொத்த கிராமத்தையும் அழித்து விடுவார்கள் என்ற கவலை அவருக்கு. கிராம படேல் வசூலைத் துவங்கிவிட்டார். கோடய்யாவின் மகன் நாகப்பா கட்ட மறுத்தான். எத்தனை முறை கட்டுவது...ஏற்கெனவே கட்டியாகிவிட்டது என வாதிட்டான். ஊரில் பெரும்பான்மையோருக்கு அதே எண்ணம் தான். எல்லோருமாய் கூடிப்பேசினார்கள். ரசீது கொடுக்காமல் வயோதிகர்களை மிரட்டி மறுபடி வசூலிக்கிறானா இந்த படேல்...? நிஜாம் வாசலில் கிடக்கும் நாய்...' கோபத்துடன் கத்தினான் நாகப்பா. நிஜாமுக்கும் அந்த மிலிட்டிரிகாரர்களுக்கும் ராட்சச வயிறு, சாராயத்தால் முட்டை

www.padippakam.com



களால் அந்தப்பானை வயிறுகளை நிரப்பத்தானே இப்படி வசூல் செய்கிறார்கள்...! நாகப்பா வாதத்தை இளைஞர் களெல்லாம் அங்கீகரித்தார்கள். அத்தனை பேரும் ஆந்திர மகாசபையின் அங்கத்தினரானார்கள்.

கிராம படேலால் வரி வசூலிக்க முடியாமல் போனது. என்ன செய்வதெனத் தெரியவில்லை. கோபம் தலைக் கேறியது. உனக்குக் கோபம் வந்தால் எங்களுக்கென்ன என்பது போல் அசட்டையாக இருந்தார்கள் ஜனங்கள். வசூலான வரியை மறுபடி வசூலிக்க எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்? அதிகம் பேசினால் உதைத்து அனுப்பு வோம் என மிரட்டினார்கள்.

அடுத்த நாள்...ராத்திரி பதினோரு மணி இருக்கும் ஊர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தது. நிலவின் மங்கிய ஒளியில் நிஜாமின் திருட்டுப்படை சத்தம் செய்யாமல் கிராமத்துள் நுழைந்தது. கிராம எல்லையிலேயே தற்செயலாய் படையைப் பார்த்துவிட்ட ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன் அவர்கள் கண்ணில்படாமல் பதுங்கிப் பதுங்கி கிராமத்துள் மறைந்தான். பெருங் குரலெடுத்துக் குரைத்த நாய்களை துப்பாக்கிக் கட்டை யால் அடித்து வீழ்த்தியபடி முன்னேறியது நிஜாம் படை.

## 2

நிஜாமின் கள்ளப்படைக்கு கஷ்டகாலம் ஆரம்பித்து விட்டது போலும். 1930க்கும் 1948க்கும் உள்ள வித்தியாசம் உணராமல் புறப்பட்டிருக்கிறது. கொள்ளையடிப்பவர் களுக்கு காலத்தின் மாறுதல் புரியாதோ என்னவோ கிராம படேல் ஒவ்வொரு வீட்டையும் பற்றி விவரமாகச் சொன்னபடி லாந்த்ரைப் பிடித்தபடி முன்னே சென்றார்.



படிப்பகம்

www.padippakam.com



ஊருக்குள் படை நுழைந்து பத்து நிமிடங்களுள் ஜனங்கள் மனதில் ஒரு புரட்சி உணர்வும் ஆவேசமும் புயலாய்ப் புறப்பட்டது இந்த சங்கதி நிஜாம்படைக்குத் தெரியாமல் போனதன் காரணம் அவர்கள் முட்டாள் தனம் மட்டுமின்றி கெரில்லாதளத்தின் புத்திசாலித்தன மும் சாதுர்யமும் கூட முக்கிய காரணம்.

''மொஹித்தீன்...? வரி கட்ட மறுக்கும் இவங்களோட நெஞ்சழுத்தும் தைரியத்துக்கெல்லாம் யார் காரணம்னு நான் சொல்றேன். அவனை...'' மொஹித்தீன் படைத் தளபதி இத்தைஹாதூல் முகலியவர்களிடம் படேல் சொல்லிக்கொண்டிருந்தபோது இடைவெட்டிச் சிரித் தான் மொஹித்தீன். நள்ளிரவின் கடும் நிசப்தமான வீதிகள் அதிரும்படி உரக்கச் சிரித்தான். ''அவனை நட்ட நடு பஜாரில் வச்சு துண்டு துண்டாய் நறுக்குவோம்...'' கட்டைக்குரலில் முழக்கமிட்டான்.

படேலும் பதிலுக்குச் சிரித்து ' நல்லாச் சொன்னீங்க. ஆனா... அவன் தனியா இல்ல. நெறைய பேர் கூட இருக்காங்க தெரியுமா...'' என்று நெஞ்சினடியில் பரவி யிருந்த பயத்தை தைரியம் தொனிக்கும் குரலில் வெளிப் படுத்தினான்.

மொஹித்தீனின் குரூர விழிகள் அஷ்டமி நிலவொளி யில் பயங்கரமாய் மின்னின. துப்பாக்கி நுனியால் தரை அதிரும்படி அடித்தான். ''எத்தனை பேர் இருந்தா நமக் கென்ன... நாம்பளும் நூறு பேருக்குமேல் இருக்கோம்...'' அண்டை அயல் கிராமங்கள் சிலவற்றில் இரவோடிரவாய் இப்படித் திருட்டுத்தனமாய் படையெடுத்து கெரில்லாக் கள் கையில் நானாவித சித்திரவதைகள் அனுபவித்து செத்துப் போனவர்களின் ஞாபகம்வர... பயந்து நடுங்கிய படி அன்ன நடை நடந்தபடி பின்னால் வந்து கொண்டி ருந்த படைவீரர்களை இறுமாப்புடன் பார்த்தான்.

படிப்பகம்

www.padippakam.com



படேலின் நடை தடைப்பட்டது. ஒரு பெரிய வீட்டின் முன் லாந்தரைப் பிடித்து "இது யார் வீடு?" எனக் கேட்டபடி திறந்த வீட்டில் நாய் நுழைவதுபோல் உள்ளே செல்ல... படையும் தொடர்ந்தது. கோடய்யா வீடு அது.

உள்ளே யாருமில்லாததுபோல் வெறிச்சோடிக் கிடந்தது வீடு. கூடத்தில் லாந்தர் மெலிதாய் எரிந்துகொண்டு இருந்தது. காண்டாமிருகம்போல் கர்ஜித்தான் மொஹிதீன்.

படை வீரர்களிடையே தைரியம் குறைந்துவிட்டிருந்தது. புறப்படும்போதிருந்த டிப்டாப் நடை மாறி தளர்ச்சி புகுந்திருந்தது. தங்களுக்குள் ஏதோ குசுகுசு எனப் பேசிக் கொண்டார்கள்.

முன்னைவிட உரக்கக் கத்தினான் மொஹிதீன். லாந்தர் அதிர்ந்து டப்டப் என எகிறியது. படையில் மொத்தம் எண்பது பேர் இருந்தார்கள். ஒருவருரையொருவர் நெட்டித் தள்ளியபடி அந்தப் பெரிய வீட்டை சோதனையிடலானார்கள். அங்கிருந்த பெரிய கள்ளிப் பெட்டியைத் திறந்து கையைவிட்டுத் துழாவியபடி துணி மணிகள், பத்திரிகைகள் முதலியவற்றை வெளியே எடுத்து கண்டபடி இறைத்தார்கள். பூட்டியிருந்த அறைகளை உடைத்துத் திறந்தார்கள். எல்லாமே காலியாக இருந்தன. மனிதர்கள் இருக்கும் சுவடே இல்லை.

மொஹித்தீனின் உக்கிரம் ஏறிக்கொண்டே போனது. அணைந்துகொண்டிருக்கும் லாந்தர்போல் பயனற்ற படையெடுப்பு. கையில் துப்பாக்கி இருந்தது. யாரைச் சுடுவது? கொள்ளையிடத்தான் என்ன இருக்கிறது? ஆத்திரம் கண்ணை மறைக்க செய்வதறியாது படைவீரர்களை அடித்தான். இண்டு இடுக்கெல்லாம் தேடிப் பார்க்கும்படி அதட்டி மிரட்டினான்.

www.padippakam.com



## 3

நள்ளிரவும் நழுவிக் கொண்டிருந்தது. கோடய்யா வீட்டிலிருந்து சுமார் பத்து கஜ தூரத்திலிருக்கும் ஒரு சத்திரத்தில் கிராம இளைஞர்களின் ஆலோசனைக் கூட்டம் சத்தமின்றி நடந்துகொண்டிருந்தது. அங்கு என்ன தீர்மானிக்கப்பட்டதென்று மெலிதாய் வீசிய காற்றுக்குக்கூடத் தெரியாது. பத்து நிமிடங்கள் கடந்திருக்கும்... சத்திரத்தினின்று ஒவ்வொரு நிழலாய் வெளிப்பட்டு கோடய்யாவின் வீட்டுப் பக்கமாய் மெல்ல மெல்ல நகர்ந்தது. அவர்கள் காலடியோசைகூடச் கேட்காதபடி காற்று 'ஜில்'வென வீசி உதவி செய்தது.

கொள்ளைக்காரர்கள் சோதனை செய்வது இன்னும் தொடர்ந்து கொண்டிருந்தது. மொஹித்தீனின் கூச்சல்... வசவுகள்... படைவீரர்களின் பயம் நிறைந்த குரல்கள்... துப்பாக்கிகளின் உரசல்கள் எனக் கலவையான சத்தம் உள்ளிருந்து கேட்டது.

வீட்டுக்கு வெளியே இருநூறு நிழல்கள் கம்பும் அரிவாளும் துப்பாக்கியுமாய் திரிந்து கொண்டிருந்தன. ஒரு நிழல் மெல்ல நகர்ந்து வீட்டின் பிரதான கதவை வெளிப்புறமாய்த் தாளிட்டது. கொல்லைப்புறக் கதவுகள் கூடத் தாளிடப்படும் சத்தம் கொள்ளைக்காரர்களுக்குக் கேட்டது. உள்ளூரப் புகைந்துகொண்டிருந்த அச்சம் கப்பென கொழுந்துவிட்டெரிய, என்ன செய்வதெனத் தோன்றவில்லை படைவீரர்களுக்கு. மிரண்டு போன படேல் ''மொஹித்தீன்... மொஹித்தீன்... கதவு... தாழ்ப்பாள்...'' என்று பேச்சு வராமல் குழறினான். பிராண பயத்தால் அவன் உடம்பு நடுங்க கையிலிருந்த அணைந்துபோன லாந்தர் தரையில் விழுந்து சுக்கு நூறானது.

படிப்பகம்

www.padippakam.com



படைவீரர்களின் நெஞ்சுகளில் நிஜாம் எக்ஸ்பிரஸ் வண்டிகள் ஓடின. கூட்டு மரணம் தப்பாது போலிருக்கிறது...

தீவட்டி வெளிச்சத்தில் வெளி நிழல்கள் பளிச்செனத் தெரிந்தது. ஏறக்குறைய மொத்த கிராமமும் அங்கிருந்தது அவ்வளவு நேரமாய் நிலவிய நிசப்தம் கோஷங்களாய் உருமாறிற்று. உள்ளிருந்த படைக்கு அந்த கோஷங்கள் பழைய நிகழ்ச்சிகளின் நினைவுகளைக் கிளப்ப, நிராசை நிறைய... பீதி கவ்வ... திக்பிரமை பிடித்து நின்றார்கள்.

''அந்தப் புழுக்களை ஜன்னலேர்ந்து சுட்டுத் தள்ளுங்க...'' மக்களிடையே ஒரு ஆவேசக் குரல்...

''வேணாம்... இந்த துஷ்டமிருகங்களுக்காக விலையுயர்ந்த துப்பாக்கி மருந்தைச் செலவழிக்க வேணாம். நாலாபக்கமும் தீவைப்போம். உள்ளயே வெந்து சாவட்டும்... இவங்களுக்கு நேர்ந்த கதியைப் பார்த்தாவது இன்னும் இருக்கறப் பயல்களுக்கு புத்தி வரட்டும்...'' நாகப்பன் கூறினான்.

மொஹித்தீன் கட்டளையின் பேரில் கதவுகளை உடைக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார்கள் படைவீரர்கள். அவை சாதாரணக் கதவுகள் அல்லவே அவ்வளவு சுலபமாய்ப் பெயர்ந்துவிடுவதற்கு? தெலுங்கானா மக்களின் வீரப் போராட்டத்திற்கான கோட்டைக் கதவுகள் அவை. தெலுங்கு மக்களின் ஜன்ம விரோதிகளுக்கு வழி பிறப்பது அவ்வளவு சுலபமான காரியமாகத் தெரியவில்லை. ஜே ஜே கோஷங்களுடன் தெலுங்கானா விமுக்தி மக்கள் படை வெளியில் அரணாய்ச் சுற்றிவிட்ட பிறகு அவர்கள் தப்புவதேது?

''மண்ணெண்ணெய் கொட்டி குச்சி பத்தவச்சி போடுங்க. விஷ நாகங்களை விட்டு வைக்கக்கூடாது...''

www.padippakam.com



கோபக்குரல்கள் எதிரொலித்து நள்ளிரவு நடுங்கியது. நிஜாம் சிம்மாசனம் ஒரு அங்குலம்போல் நகர்ந்து சற்றே ஆட்டம் கண்டது.

''உம்... ஆகட்டும்... ஆந்திர மகாசபை ஜிந்தாபாத்! தெலுங்கானா ஜிந்தாபாத்!''—நூற்றுக்கு மேற்பட்ட குரல்களிலிருந்து இடியொலியாய் வெளிப்பட்ட ஒரே பேச்சு... ஒரே கோஷம்...

அந்த கோஷம் உள்ளே இருந்த கொள்ளைக்காரர்களின் கோர மரணத்திற்கு, நிஜாம் ராஜ்ஜியத்தின் அவல அழிவுக்கு கட்டியம் கோருவதுபோல் திக்கெட்டும் எதிரொலித்தது.

உள்ளே மொஹித்தீன் எகிறி குதித்துக் கொண்டிருந்தான். வீரர்களை அடித்து உதைத்து துவம்சம் செய்து கொண்டிருந்தான். கிராம படேலையும் விட்டுவைக்காமல் கண்டபடி ஏசினான். வீரர்களின் விடாமுயற்சியில் கொல்லைக் கதவு மயிரிழையளவு திறந்து கொண்டது.

## 4

வீட்டின் நாக்கு பக்கங்களிலும் தீ பற்றிக்கொண்டது. கண்ணிமைக்கும் நேரத்தில் அக்னி நாக்குகள் ஆகாயத்தைத் தொட்டு விடும்போல் மேலே கிளம்பி கொழுந்து விட்டெரிந்தது. வெளியே வெற்றி கோஷங்கள்... உள்ளே மரண ஓலங்கள்...

1930க்கும் 1948க்கும் இடையே உள்ள வித்தியாசம்... காலம் விளைவித்த முரண்பாடு நிஜாம் நரமாமிசக்காரர்களுக்கு உள்ளங்கை வாழைப்பழமென தெரிந்து போயிற்று. வாயிற் கதவை திறக்கும் முயற்சிகள் விடுத்து கொல்லைக் கதவுகளை தகர்க்க முழு மூச்சுடன் முனைந்து கொண்டிருந்தார்கள். படை வீரர்கள் தாக்குதல்...

www.padippakam.com



மொஹித்தின் அடி உதைகள்... மக்களின் கோபக் கனல் அத்தனையும் ஒருங்கிணைந்து விடுத்த மரண அழைப்பில் கருகி சாம்பலாய் உதிர்ந்தான் கிராம படேல்.

ஒரு மணி நேரம் கடந்திருக்கும். கொல்லைக் கதவு பெயர்ந்து விழ... என்பது நரமாமிசக்காரர்களுள் இருபது பேர் குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்த மொஹித்தினை புழக்கடை ஓரமாய் தூசிபோல் தள்ளி விட்டு சாலைக்கு வந்து சக்தியெல்லாம் திரட்டி ஓடலானார்கள். கிராம எல்லையைக் கடந்து வெகுதூரம் சென்ற பின்பும்கூட மக்கள் படையின் ஜய கோஷங்கள் அவர்களைத் துரத்திக்கொண்டே இருந்தன. மரண தேவனின் மடியில் உதிர்ந்த கூட வந்தவர்களின் நினைவு கூட இன்றி தட்டுத்தடுமாறிக்கொண்டு ஓடி இருளில் மறைந்தார்கள்.

விடிந்தது. ராத்திரி சூறாவளியாய்க் கொந்தளித்தவர்களா இவர்கள் என்ற வியப்பு எழும் விதத்தில் அளவற்ற அமைதியும் நிதானமும் கடைப்பிடித்து கோடய்யா வீட்டைச் சுற்றி இன்னும் மந்தமாய் கனன்றுகொண்டு இருந்த தீயை அணைத்து வீட்டைச் சுத்தப்படுத்தி விஷ சர்ப்பங்கள் விழுந்து கிடந்த, நச்சுச் சூழலைத் தூய்மைப் படுத்தினார்கள் கிராம ஜனங்கள்.

மறுநாள்... நிஜாம் கள்ளப்படை முகாமில் மரணத் தினின்று தப்பிய பிசாசுகள் தீப்புண்களுக்கு மருந்திட்டு கட்டு கட்டியபடி முக்கலும் முனகலுமாய் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

## 5

"அடேய்... இன்னிக்கு ராத்திரி மறுபடியும் கொத்தகுடா போகணுமாம். உத்தரவு வந்திருக்கு... ஈனஸ்வரமாய்ச் சொன்னான் ஒருவன்.

www.padippakam.com



சார்மினார் சிகரெட் துண்டைப் பற்ற வைத்தபடி விரக்தியுடன் பதில் சொன்னான் பக்கத்திலிருந்தவன். ''எதுக்கு தெரியுமா... செத்தவங்களுக்கு துணை வேணு மாம்...''

கொஞ்சம் புத்திசாலியான ஒருவன் நிதானமான குரலில் சொல்லலானான். ''எதுக்கு பயப்படறிங்க...அங்க தப்பிக்க ஒரு வழி இருக்கு...''

மற்றவர்கள் ஆர்வமாய் பார்த்தார்கள் அவனை ''அது என்ன எங்களுக்குத் தெரியாம... சீக்கிரம் சொல்லு...''

''ஐயோ...இங்கயா...வேணாம்...அந்த செம்பட்டைத் தலை தொரை காதுல விழுந்தா சுட்டுத் தள்ளிடுவான். போற வழியில் சொல்றேனே...''

பத்து நிமிஷத்திற்கெல்லாம் செம்பட்டைத் தலை சர்தார் சீட்டியடித்தபடி உள்ளே நுழைந்தான்.

''நான்ஸென்ஸ்...! அந்த விவசாயக் கழுதைங்க... ஐந்நூறு பேர்கூட தேறமாட்டாங்க... எண்பது பேர் படையில் இருந்தும் எதுவும் செய்ய முடியலையா? ச்சே சே...எவ்வளவு அவமானம்... போங்க... கொளுத்துங்க... கொள்ளையிடுங்க.'

ஐயய்யோ...மறுபடியும்...அதுவும் இப்போதேவா...? வெடவெடவென நடுங்க ஆரம்பித்தார்கள் படை வீரர் கள்.

''ச்சீ...ஏண்டா இப்படி நடுங்கறிங்க கோழைப் பசங்களா...நானும் வரேன், நடங்க. இன்னிக்கு இரு நூறு பேரா போவோம்...''

எத்தனை பேர் வந்தால் என்ன? அந்த கொரில்லாக்கள் சாதாரண மனிதர்களாய்த் தோன்றவில்லை அவர்களுக்கு. படை திரட்டி அணி வகுத்து சென்றபோது வழக்கமான

www.padippakam.com



மிடுக்கு அடியோடு தொலைந்துபோய் மாறாக ஒரு தொய்வு...சோர்வு.

''உம்...அதோ மிலிட்டரி லாரி...நடங்க...''

'இவனுக்கென்ன...எங்கயோ தூரமாய் உட்கார்ந்து கொண்டு...அந்த கெரில்லா எமன்களிடம் நம்மைத் தள்ளி விட்டு... கொண்டாட்டமாய் இருக்கு இவனுக்கு... ஆனாலும் உரலில் தலையை கொடுக்காமல்...! படை வீரர்கள் தங்களுக்குள் குசுகுசுவெனப் பேசிக் கொண்டார்கள். அவர்கள் நடையில் வேகம் கூடவில்லை அன்ன நடைதான். கிராமம் நெருங்க நெருங்க மிலிட்டரி லாரிகள் சத்தத்திற்கிணையாய் அவர்கள் நெஞ்சு படபட வென அடித்துக் கொண்டது.

கிராமத்திற்கு மைல் தூரத்தில் மிகவும் பாதுகாப்பான இடத்தில் கூடாரம் அமைத்துக் கொண்ட செம் பட்டைத்துரை படை வீரர்களை லாரிகளின்று இறங்கிப் ''போங்க. கிராமத்தைக் கொள்ளையடிங்க. கொளுத்துங்க. குறுக்கே புகுந்து தடுக்கிறவங்க தலையைச் சீவி விடுங்க...'' என உத்தரவிட்டு அவன் அங்கேயே தங்கி விட்டான்.

படை கிராமத்தை நோக்கி ஆமை போல் மந்த நடை நடந்தது. ஒரு அரை மைல் தூரம் சென்றதும் சற்று முன் ஏதோ வழி இருப்பதாகச் சொன்னவன் சுற்றிலும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் பேசலானான். ''நான் ஒரு திட்டம் வச்சிருக்கேன்...''

''என்ன திட்டம்...நாம அல்லாவிடம் போற திட்டம் தானே?''

தோளினின்று சரிந்த துப்பாக்கியைச் சரி செய்து கொண்ட இன்னொரு படைவீரன்...''ச்சீ... நம்மை விட துப்பாக்கி பயப்படறாப்பல இருக்கு...'' என எரிச்சலுடன் சொன்னான்.

படிப்பகம்

www.padippakam.com



''இந்த கிராமத்தை நாம ஏன் கொளுத்தணும்?'' சந்தேகமாய்க் கேட்டான் வேறொருவன். இப்படியொரு சந்தேகம் வந்தது ஆச்சரியமாக இருந்தாலும் அது கெரில்லாக்களிடம் கொண்ட பயம் காரணமாய் எழுந்த சந்தேகமாய்த்தான் இருக்க வேண்டும்.

''மேலிடத்து உத்தரவு... கொளுத்தித்தான் ஆகணும்...''

''இவங்களைக் கொல்றது முஸ்லீம் நாகரிகத்தை நிலைநிறுத்துவதற்காம்...'' அவனும் முஸ்லீம்தான் ஆனாலும் மேலதிகாரிகளின் வசவுகளும் உதைகளுமாய் சுய மதப்பற்றை மிதித்து நசுக்கிவிட்டது.

அத்தனையும் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த அந்த புத்திசாலி வீரன் கிசுகிசுப்பான குரலில் சொன்னான். ''நான் சொல்றதை நல்லா கேட்டுக்குங்க. இந்தத் துப்பாக்கி, காக்கி டிரஸ் எல்லாத்தையும் அந்த கெரில்லாக்களுக்கு குடுத்துட்டு நாமும் அவங்களோட சேர்ந்துடுவோம். அப்புறம் பயப்படவேண்டிய அவசியமே இருக்காது என்ன சொல்றீங்க...?''

''ஐயோ...நான் மாட்டேன்...சர்தார் கொன்னு போட்டுடுவான்...''

என்ன செய்யலாம் எனத் தீவிரமாக ஆலோசித்தார்கள். திடீரென்று உற்சாகம் பொங்கச் சொன்னான் ஒருவன். ''பேசாம அவனைத் தீர்த்துக்கட்டிட்டா என்ன...? நாம இத்தனை பேர் இருக்கோம். அவன் ஒருத்தன் தானே?'

கிராமத்தையடைந்த நிஜாம் படை துப்பாக்கிகளைக் கீழே வைத்து உடுப்புகளைக் கழற்றுவதை செடி மறைவினின்று பார்த்துக் கொண்டிருந்த மக்கள் படைக்கு குழப்பமாக இருந்தது. வருவது வரட்டும் என தம் ஆட்களுள்

www.padippakam.com



ஒருவனை விஷயம் இன்னதென்று தெரிந்துகொள்வதற்காக துணிச்சலுடன் அனுப்பியது.

பயப்பட வேண்டாம் என்பது போல் அவனை ஆதரவுடன் வரவேற்ற புத்திசாலி நிஜாம் வீரன், ''பாய் சாப்... கெடைக்கிற அற்ப கூலிக்காக உயிரைப் 'பணயம் வைக்க விருப்பமில்லே எங்களுக்கு. யாரையும் சாகடிக்கவும் இஷ்டமில்லே. இந்தத் துப்பாக்கி, காக்கி டிரஸ்ஸெல்லாம் எடுத்துக்கங்க. நாங்கள்லாம் உங்களோட சேர்ந்துடறோம்...''

சந்தோஷத்துடன் விசிலடித்த கெரில்லா வீரன் 'ஆந்திர மகாசபை ...ஜிந்தாபாத்...!' எனக் கோஷமிட்டான். வெளியில் இருந்த மக்கள் படை வீரர்கள் திபுதிபுவென்று ஓடி வந்து அவனுடன் சேர்ந்து விண் அதிரும் வண்ணம் கோஷமிட்டார்கள். நிஜாமின் கள்ளப் படை வீரர்களின் குரல்களும் அவர்களுடன் இணைந்து கொள்ள...திக்கெட்டும் எதிரொலித்தது.

'...தெலுங்கானா...ஜிந்தாபாத்...!'

'...நிஜாமின் அக்கிரம ஆட்சி...ஒழிக...!'...

கொத்தகுடா கிராமப் பஞ்சாயத்திற்கு இருநூறு துப்பாக்கிகளும் இருநூறு தேர்ச்சி பெற்ற வீரர்களும் அதிகப்படியாய்க் கிடைக்க, நிஜாம் நவாபு படையில்கூட மக்கள் புரட்சி ஊடுருவிவிடடது.

**(ஜூலை 1948 'அப் யூதய' என்ற இதழிலிருந்து)**

www.padippakam.com

'ப்ரயாக'

# விழிப்பு

''ராமிரெட்டி...ஒரு நிமிஷம்...தேஷ்முக் ரூம் சாவி கூட இல்ல. பூட்டிட்டுப் போயிருக்கார். போலீஸ் வர்றதாம். நம்ம வீட்ல எறக்கலாமா?'' என்றைக்குமில்லாத நெருக்கத்துடன் பட்வாரி அருகழைத்துப் பேசியபோது கொஞ்சம் எரிச்சல் தான் ராமிரெட்டிக்கு. இந்த அருகாமையும் இதமான பேச்சும் எதற்காக என்று தெளிவாய்த் தெரிந்தது. கூடவே தேஷ்முக் ரூமைப் பூட்டிக் கொண்டு சென்ற காரணமும் புரிந்துவிட்டது.

''ரூமை எதுக்குப் பூட்டணும் மாமா?'' தெரியாதது போல் கேட்க...''என்ன செய்வது...தலையெழுத்து. ஊர் ஜனங்க உங்க பேச்சுக்கு எதிர் சொல்றவங்கில்ல. அவர் மட்டும் இப்படி இழுத்துப் பூட்டிட்டுப் போயிருக்கார். சுற்று வட்டாரத்துல ஒரு கிராமத்துலயாவது எறக்கற யோக்கியதை இருக்கா...?'' இரக்கத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்காகவோ என்னவோ, குழைவாகப் பேசினார் பட்வாரி.

ராமிரெட்டி மனதில் நூறு யுகங்கள் ஓடுவது போலிருந்தது. ஏதேதோ நினைவுகள் கிர்ரெனச் சுழன்றெழுந்தது. பத்தொன்பதாம்வயதில் படிப்பு துவங்கியபோது ''இந்த வயசுல படிப்பென்ன

www.padippakam.com



வேண்டிக் கிடக்குடா சோமாறிக் கழுதை'' என்று அந்த தேஷ்முக் ஏளனம் செய்ததை எப்படி மறக்க முடியும்? நாட்கள் நகர... அக்கம்பக்கத்தார்க்கு கடிதங்கள்... அது இதுன்னு எழுதி உதவியபோது 'கலிகாலம்... ராஜா ரெட்டியாகிறான் ரெட்டி ராஜாவாகிறான். பிரம்மம் சாமி சும்மாவா சொல்லிட்டுப் போயிருக்கார்...' என இந்த பட்வாரி வேதாந்தம் பேசியது மறக்க முடியுமா?

''என்ன ராமிரெட்டி... பெண்டாட்டியை அழைச்சிட்டு வந்திருக்கயாமே...கண்லயே பட றதில்லையே...? கோஷாவில் வச்சிருக்கயா?'' இதுபோல் இன்னும் எத்தனையோ பரிகாசங்கள்... ஏளனங்கள்... இழி சொற்கள்...கொஞ்ச நஞ்சமா தேஷ்முக் செய்தது...!

இப்போது அதெல்லாம் வரிசையாக ஞாபகம் வந்தாலும் செய்வதற்கெதுவுமில்லை. என்ன செய்ய முடியும்? ஆனாலும் எத்தனை என்று நினைவு படுத்திக்கொள்ள முடியும்? தன் அத்தை சங்கதி? ஒன்றா... இரண்டா? இந்த தேஷ்முக் செய்யாமல்விட்ட அட்டூழியம்தான் என்ன? மூதாதையர் நிலங்களில் இப்போது பாதிகூட இல்லையே? அவரிடமே நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கி மீட்க முடியாது. வட்டி மேல் வட்டி என குட்டிபோட்டு கடைசியில் அவற்றை அவருக்கே தாரை வார்த்து... சாகிறவரை இதெல்லாம் நினைத்து நினைத்து எவ்வளவு குமுறிக் கொண்டிருந்தார் அப்பா!

தன் குடும்பம் மட்டுமல்ல? ஊரில் யார் தப்பினார்கள் அந்த விஷக்கடியிலிருந்து?

விஷயம் கொன்னதும் 'அப்படியே' எனச் சம்மதம் தெரிவிப்பார் இந்த ராமிரெட்டி என எதிர்பார்த்து வந்த பட்வாரிக்கு அவர் முகத்தில் ஓடிய சஞ்சல ரேகைகளைக் கண்டு 'இதென்ன புதுக் கதை' என்ற குழப்பம் உண்டாயிற்று.

www.padippakam.com



வந்தான். ஆண்களும் பெண்களுமாய் ஆயிரமாயிரத் திற்குமேல் ஒருசேர எழுப்பிய உற்சாகத் தொனி! சிறுவர் கள்கூட பாட்டும் ஆட்டமுமாய் எகிறிக் கொண்டிருந் தார்கள். 'ஆந்திர மகாசபைக்கு ஜே' என்ற ஆரவார கோஷங்கள் இடையிடையே...

இதுவரை அறியாத ஏதோ ஒரு சொர்க்கத்திலோ நரகத்திலோ இருப்பது போன்ற பிரமையில் நடப்பதை யெல்லாம் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார் ராமிரெட்டி. ஆகாயம் எட்டும் ஏணிப்படி ஏறுவது போலவும் அதல பாதாளத்தில் சரிவது போலவும் முன் னுக்குப்பின் முரணாக அர்த்தமற்ற ஊகங்கள்.

கோடானு கோடி குரல்களாய் மலைகளிலும் பள்ளத் தாக்கிலும் எதிரொலிக்கும் அந்த பேரார்வக் கோஷத்தில் தன் குரலும் மெலிதாய்க் கேட்பதுபோல் உணர்ந்தார் ராமிரெட்டி கொஞ்சம் கொஞ்சமாய் குரல் ஓங்கி ஒவ்வொரு குரலும் தன் குரலையே பிரதிபலிப்பதுபோல் இருந்தது. இன்றுவரை இந்தக் கிராமம் மொத்தமும் தன் சொற்படியே நடந்திருக்கிறது. இக்கிராமம் தன்னுடை யது. இது தன் உலகம். இவர்களெல்லாம் தன்னவர்கள். இவர்களை பெற்ற தகப்பனைப் போல் பாதுகாக்க வேண்டிய கடமை தனக்கிருக்கிறது...

கோஷங்கள் நெருங்க நெருங்க... ஒரு விந்தையான லயத்துடன் அந்த அடிகள் தடதடத்து பூதேவிக்கு உதய தாளம் வாசித்தது.

உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்த அவருடைய சின்னப் பெண் துள்ளிக் குதித்தபடி தெருவில் இறங்க... மனைவி ரங்கம்மாகூட சின்னக் குழந்தையாக அவளைத் தொடர்ந்து ஓடினாள்.

ஒரே எட்டில் வீட்டு வாசற்படியருகே வந்து நின்றார் ராமிரெட்டி. ஒரு ஊர்வலம்போல் திரண்டு வந்த ஊர்

www.padippakam.com



மக்கள் அவரைப் பார்த்ததும் அப்படியே அசைவற்று நின்றார்கள் ராமிரெட்டி மனதில் அதே போராட்டம். ஆழ்ந்த தூக்கத்திடை தட்டியெழுப்பப் பட்டவன்போல் தலையை உலுக்கியபடி சொன்னார்.

''இந்தக் கிராமம் என்னுடையது. இங்க என் பேச்சு படித்தான் நடக்கணும். யாரும் எதிர்த்துப் பேசக் கூடாது. இந்த ஊரில் ஒருத்தர் பாக்கியில்லாம சங்கத்தில் சேர்ந்தே தீரணும். இது சங்கம் ஊர்...'' ராமிரெட்டி என்ன சொல்வாரோ ஏது சொல்வாரோ என அவர் வாய் வார்த்தைக்காக உத்தரவுக்காகக் காத்து நின்ற ஜனங்கள் அந்தச் சொற்கள் செவியில் விழுந்ததுதான் தாமதம் ஒரு புதுச் சக்தி பெற்றவர்களாய்ச் சிலிர்த்தெழுந்தார்கள்.

'ஆந்திர மகாசபைக்கு...ஜே...!'

ஆகாயமும்கூடச் குரல் கொடுத்தது.

## 3

வழக்குப் பாறையருகே ஊர் திரண்டது. பக்கத்து ஊர்களின் சங்கதிகளையெல்லாம் பிட்டுப்பிட்டு வைத் தான் வீரப்பா. ஒரு பஞ்சாயத்துத் தலைவரின் தோரணை யுடன். அசல் எந்த இடையனாவது இதுவரை இவ்வளவு தைரியமாக இங்கு வந்து நின்றதுண்டா? ராமிரெட்டிக்கு வியப்பாகத்தான் இருந்தது. ஆனால் தனக்குக்கூடத் தெரியாத சங்கதிகளையெல்லாம் சொல்கிறானே இவன்.

தேஷ்முக் கொள்ளையடித்த நிலங்களைத் திருப்பிக் கொடுத்தாகி விட்டதாம். அடைத்து வைத்த மாடுகள், எருமைகள் உரியவர்களிடம் சேர்ந்து விட்டது. ரெட்டி, காப்பு, பறையன் என்ற வித்தியாசமின்றி எல்லோரும் ஒருங்கிணைந்து வாழ்கிறார்கள்.

தெ—7

www.padippakam.com



வீரப்பா சொன்ன விஷயங்கள் ராமிரெட்டிக்கு அவ்வளவாய்ப் புரியவில்லை, ஆனால மிகவும் குழப்ப மாக இருந்தது. விருப்பு வெறுப்பு என குறிப்பாக எதுவு மில்லை. இந்த ஊர் அவருடையது. ஒவ்வொருவரும் தன் சொற்படிதான் நடக்க வேண்டும். தன் பேச்சுக்கு மறு பேச்சிருக்கக் கூடாது. அவ்வளவுதான்.

கோபால்ராவ் வயதில் சின்னவனாக இருந்தபோதும் தேஷ்முக் யார் யார் நிலங்களை அபகரித்திருக்கிறான்... எத்தனை ஏக்கராக்கள் என்ற கணக்கெல்லாம் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான். கால்நடை சங்கதிகள் வீரப்பா அறிவான். இது தவிர வீடுகளில் கொள்ளையடித்த விபரங்கள் பொருள் பறிகொடுத்த சொந்தக்காரர்கள் ஒவ்வொருத்தராய்ச் சொன்னார்கள். ஒரு நடுத்தர வயதுப் பெண் தனக்கு நேர்ந்த அநியாயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தபோதே விசித்து விசித்து அழ ஆரம்பித் தாள். இன்னொரு பெண்மணி தேஷ்முக்கின் அடியாட் கள் தன் பெண்ணை அலங்கோலப்படுத்திய கயமையையும் அதன்பின் அந்தப் பெண் சந்தோஷம் மறந்து பேச்சிழந்து மூலையோடு மூலையாய் ஒடுங்கிக் கிடக்கும் சோகக் கதையைச் சொல்லிக் கதறினாள். இப்படியே வரிசையாக...

''இனிமே இந்த ஊரில் இந்த அக்கிரமங்கள் நடக் காது. நடக்க விடமாட்டேன். தேஷ்முக்கின் ஆளுங்க, போலீசுங்க இந்த ஊருக்குள்ள அடி வச்சா நடக்கற சங்கதியே வேற...'' சிங்கம்போல் கர்ஜித்தார் ராமி ரெட்டி.

மறுபடியும் எல்லோருமாய் முதல் சர்ச்சைக்கே வந் தார்கள்.

கொள்ளையடித்த நிலங்களையும் ஆடு மாடு எருமை களையும் தேஷ்முக் உடனே திருப்பிக்கொடுக்க வேண்டும். அதனால் நஷ்டப்பட்டவர்களுக்கெல்லாம் பரிகாரம்

www.padippakam.com



செய்யவேண்டும். குத்தகைக்கு விட்ட நிலங்கள் குத்தகை தாரர்களுக்கே சேரவேண்டும். ஆனால் அவர் நள் நிலச் சொந்தக்காரர்களுக்கு நியாயமாய்ச் சேரவேண்டிய தானியங்களைக் கொடுத்துவிடவேண்டும். அப்படியென் றால் இதற்குமுன் நடந்தது போல் பெண்டாட்டியின் தாலியை விற்று அல்ல, கண்ட விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு மட்டும் கொடுத்தாக வேண்டும்.

எல்லாம் நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் இதெல்லாம் செய்வது யார்? பக்கத்து ஊரில் பஞ்சாயத்து அமைத்திருப்பதாகச் சொன்னான் வீரப்பா. அவனுக்கு இந்த விவரங்களெல்லாம் நன்றாய் அத்துப்படி ஆகியிருந் தது. அமைக்கப் போகும் பஞ்சாயத்தில் வீரப்பா கட்டாயம் இருக்கவேண்டும் என்றார் ராமிரெட்டி. எல்லோருக்கும் சம்மதமே. கோபால்ராவ் பெயரைச் சொன்னார்கள் ஒரு சிலர். பட்டிணத்தில் படித்துக் கொண்டு விடுமுறைக்காக ஊர்வந்திருந்த சீதம்மா... கோபால்ராவின் தங்கை...தானும் பஞ்சாயத்தில் இருப்ப தாக விருப்பம் தெரிவித்தாள். யாரும் பதில் பேசவில்லை. அவள் விருப்பம் ராமிரெட்டிக்கு வினோதமாய்ப்பட்டது. ''பெண்களுக்கு எதுக்கும்மா கஷ்டம்... நாங்க இத்தனை பேர் இருக்கோமில்ல...'' பஞ்சாயத்தில் பெண்களும் இருந்தாக வேண்டும் என பக்கத்து ஊர் சங்கதியைத் தொடங்கினான் வீரப்பா....ராமிரெட்டி எதுவும் சொல்ல வில்லை. பிறகு ஏதோ நினைத்துக்கொண்டவராய் ''சரிம்மா... உன் இஷ்டம்'' என்றார். ராமிரெட்டியின் சின்னப்பெண் 'சீதம்மக்காவுக்கு...ஜே...' என்று கீச்சுக் குரலில் கத்தினாள். சற்று தூரத்தில் நின்றுகொண்டு அத்தனையும் கவனித்துக் கொண்டிருந்த ரங்கம்மா முகம் என்ன காரணத்தாலோ இறுகிக் காணப்பட்டது.

பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் கள். எப்போதும்போல் ஊர் தன் பேச்சுக்குக்கட்டுப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டு நடக்கவேண்டும் என அடுக்கடுக்காய் வந்த இருமலி னூடே சொன்னார் ராமிரெட்டி.

''நீங்க குத்தகைக்கு விட்டிருக்கீங்கில்ல...கொஞ்ச நிலம் அதன் சங்கதி என்ன?'' கொஞ்சம் தைரியமாகவே கேட்டாள் சீதம்மா அங்கிருந்தவர்களிடம் மெல்லிய சல சலப்பு...கிசுகிசுவென சத்தம் கிளம்பாமல் பேச்சு. ராமி ரெட்டி என்றால் எல்லோருக்கும் கொஞ்சம் பயபக்தி உண்டு. அதுவுமின்றி வசதிபடைத்தவராக இருந்தும் இப்போது தங்களுடன் சேர்ந்துவிட்டவர் வேற...

எதிர்கேள்விகள் என்பது அவரால் சகிக்க முடியாத விஷயம். தன்மானம் தாக்கப்பட்ட நிலையில் செய்வதறி யாது திணறி, பின் சட்டென சுதாரித்துக்கொண்டார். ''என்னுடையதென்ன ... ஆண்டவனுடையதானாலும் அப்படித்தான். ராமாயணம் மொத்தம் கேட்டுட்டு சீதைக்கு ராமன் என்ன வேணும்னு கேட்டானாம் எவனோ ஒருத்தன். இவ்வளவு நேரமா சொன்னதெல் லாம் எங்க போச்சு?'' சற்றே கோபத்துடன் சொன்னார். இந்த பஞ்சாயத்துக்கு பிரஸிடெண்டாக இருந்து கிரா மத்தை நடத்திச் செல்ல வேண்டுமே...!

கவலை, குழப்பம் எல்லாம் மறைந்து ஆனந்தம் பரவியது ஊர்ஜனங்கள் மனங்களில். ரங்கம்மா ஏதோ தீவிரயோசனையில் ஆழ்ந்திருப்பவள் போல் எங்கோ வெறித்துக்கொண்டிருந்தாள். சின்னப்பெண் கண்களில் பரவசம் பூத்திருந்தது. எல்லாமே தானாகி, தன்னுடைய தென்று எதுவுமில்லாதது போல் பெருமிதத்துடன் பார் வையைச் சுழலவிட்டார் ராமிரெட்டி.

''அவங்கவங்க நிலங்களை அவங்கவங்களுக்கு கொடுத் துடறேன் போய் உழுதுக்கங்க...'' என்று சொல்லியபடி வீரப்பாவை பார்த்து, 'அடேய்...வீரப்பா' என்று என்னவோ சொல்ல முனைய...சங்கத்திலதுச் சேர்ந்தவர்கள் தாழ்ந்த குலத்தார் என்பதால் 'டேய்...அடேய்' என்றெல்

www.padippakam.com



லாம் சொல்லக்கூடாது என கோபால்ராவ் ஆட்சேபம் தெரிவித்தான். ''பரவாயில்லங்க...பெரியவர் அவர்...'' என்றான் வீரப்பா.

''அப்படி இல்ல...ஏதோ பழக்க தோஷத்தில் சொல் லிட்டேன். என்னய்யா வீரப்பா...நீ கொட்டடிக்குப் போய் ஆடு மாடுகளை அவங்கவங்களிடம் சேர்த்துடு...'' என்று உத்தரவிட்டார் ராமிரெட்டி. பாதிக்கப்பட்டவர் களுக்கு நஷ்டபரிகாரமாய் தேஷ்முக் எவ்வளவு தர வேண்டும் என்ற காரியத்தில் ஈடுபட்டான் கோபால்ராவ். பெண்களின் நல்லது கெட்டதைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு சீதம்மாவுக்கு கொடுக்கப்பட்டது. வயல் வேலைகள் கவனிக்க நேரமாகி விட்டதால் மற்ற சங்கதி களை ராத்திரி பேசிக்கொள்ளலாம் என்ற தீர்மானப்படி புகையிலை மென்றபடி, சுருட்டுப் பற்றவைத்தபடி எழுந்தார்கள்.

பொழுது விடிந்ததோ இல்லையோ...ரஜாக்கர் களும் போலீஸ் காரர்களும் வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவ சோற்றுமூட்டை, கஞ்சிக் கலயங்களுடன் எல்லோரும் வயற்புறங்களுக்கு விரையலானார்கள். ஒருவர் சங்கதி மற்றவர்களுக்குத் தெரியாத நிலைமை. வீரப்பா வந்து சொல்கிறவரை ராமிரெட்டிக்கு விஷயம் தெரியாது, கொல்லைப்புறத்தில் ஏதோ மராமத்து வேலை நடக்க...மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். எல்லோரும் பயந்து ஓடிக்கொண்டி ருக்கிறார்கள் என்றறிந்தபோது உடம்பெங்கும் நூற்றுக் கணக்கான தேள்களும் பூரான்களும் ஊர்வது போலி ருந்தது.

''யாரும் வெளியே போகக்கூடாது...அந்த ரஜாக்கள் எப்படி நுழையறான்னு பார்க்கறேன்...'' சத்தம் போட்ட படி தெருப்பக்கம் வந்தார் ராமிரெட்டி 'நடக்கமாட் டேன்...தூக்கிக்க'ன்னு அழுது அடம்பிடிக்கும் குழந்தை

www.padippakam.com



களைத் தரதரவென இழுத்துக்கொண்டு மூட்டையும் முடிச்சுகளுமாய் இலக்கறியாது சென்றுகொண்டிருந்தார்கள் பெண்கள். கைத்தடி மீது உடல் பாரம் முழுவதும் அழுத்தி இன்னும் வாழ்க்கை மீது ஆசைவிடாது தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தார்கள் வயது முதிர்ந்தவர்கள். இந்த வயசுப் பயல்களெல்லாம் கூடவா ஓடிவிட்டார்கள்...வீரப்பாவும் வேறு சிலரும் தவிர யாருமே கண்ணில் படவில்லையே...''

ஆனாலும் அவர் அதைரியப்படவில்லை. கோழைத்தனம் அவர் நிழலில் கூடப் படியாத விஷயம்.

''நட வீரப்பா நாம ரெண்டு பேர் போதும்...'' மொட்டைமாடிப் பக்கமாய் நடந்தார். ஏதோ சொல்ல வேண்டுமென்று நினைத்த வீரப்பாவுக்கு தைரியம் போதவில்லை. அவருடன் செல்வது தவிர அப்போதைக்கு செய்யக்கூடியது வேறெதுவுமில்லாததாகத் தோன்றியது.

ஏதோ முணுமுணுத்தபடி உள்ளே சென்ற ராமிரெட்டி திரும்பி வந்தபோது கையில் பிஸ்டல் இருந்தது. ''என்ன செய்யறேன் பார் அவங்களை...'' சொல்லி வாய் மூடுவதற்குள் சுமார் இருபத்தைந்து பேர்களடங்கிய இளைஞர் குழு வந்துநின்றது. ''இவ்வளவு நேரம் எங்க போய்த் தொலைச்சீங்க...'' புலி போல் உறுமினார்.

கோபால்ராவும் சீதம்மாவும் முன்னால் வந்தனர். பெண்கள், குழந்தைகள் முதியோர்களையெல்லாம் தோப்புக்குள்ளும் மலையடிவாரத்திலும் சேர்த்துவிட்டு வந்த விவரம் சொன்னான் கோபால்ராவ்.

''இதைவிட வளையல்காரனுக்கு சொல்லியனுப்பியிருக்கலாமில்ல...? ஏன்யா இப்படி பயந்து சாவறீங்க... இந்த பிரதேசம் முழுக்க உன்னுடையதா என்ன? அவங்களை ஏன் அங்கெல்லாம் அனுப்பிவைக்கணும்?''

www.padippakam.com



''அதில்ல மாமா, ஏழெட்டு லாரி வந்திட்டிருக்கு. முன்னூறு பேர் வரை இருக்காங்களாம். நம்மகிட்ட என்ன இருக்கு... துப்பாக்கியா மண்ணா... அதான்...''

''இங்க பார் சீதம்மா... இதெல்லாம் பொம்பளைங்க பேசற விஷயம் இல்ல. மீசை வச்சிருக்கவனுங்கல்லாம் தொடை நடுங்கி ஓடாம இருந்தா சரி. எத்தனை பேர் வந்தா என்ன... எத்தனை லாரிங்க இருந்தா என்ன... என் கடைசி மூச்சு இருக்க வரைக்கும் இந்த மண்ணுமேல எவனும் அடிவைக்கவிட மாட்டேன். இங்கேர்ந்து பூச்சி புழு கூட வெளியே போகக்கூடாது...'' இடிபோல் முழங்கி னார் ராமிரெட்டி. சீதாம்மாவும் கோபால்ராவும் சிறிதும் அலுக்காது அவரை சமாதானம் செய்வதில் தொடர்ந்து முயற்சித்தது அவருக்கு எரிச்சல் தந்தது. கையிலிருந்த பிஸ்டலை உயர்த்தி அந்த இளைஞர் கும்பலை நோக்கி நீட்டினார். துப்பாக்கி முனையிலேயே எல்லோரையும் நடத்திச் சென்று மாடி அறைக்குள் தள்ளினார். ''நீங்கள் லாம் நான் சொல்றவரைக்கும் இங்கயே இருக்கணும். தெரிஞ்சதா...?'' என்று உறுமிவிட்டு நாலடி நடந்தவர் சட்டென திரும்பிவந்து அறைக்கதவைத் தாளிட்டுக் கொண்டு சென்றார்.

அருகிருந்த இன்னொரு அறைக்குச் சென்று அங்கு மறைத்துவைத்திருந்த துப்பாக்கி மருந்து கொண்டுவந்து வராந்தாவில் குவித்துவிட்டு அவர்களை அடைத்து வைத்திருந்த அறையைத் திறந்து வீரப்பா, கோபால்ராவ் மற்றும் ஐந்து இளைஞர்களையும் வெளியே வருமாறு பணித்தார். அவர் சொல்லாவிடினும் சீதம்மாவும் அவர்க ளுடன் வந்தாள்.

''பொம்பளைக்கு...'' என ஏதோ சொல்லப்போய் சட்டென பேச்சை மாற்றி ''சரி... நீ துப்பாக்கிகளில் மருந்து அடைச்சுக்கொடு. இவங்க அதை மேல்மாடிக்கு அனுப்பிட்டே இருக்கட்டும்...'' என அவரவர்க்கான

www.padippakam.com



வேலைகளைச் சொல்லிவிட்டு துப்பாக்கி எடுத்துக் கொண்டு ஆட்டம் கண்டிருந்த ஏணி மீதேறி மொட்டை மாடியை அடைந்து கைப்பிடிச்சுவரில் சரிந்து வயற் காட்டுப் பக்கமாய் பார்வையைச் செலுத்தினார்.

தூரத்தில் புழுதி எழுப்பிக்கொண்டு உர்ரென்று சத்தம் செய்தபடி லாரிகள் ஊரை நெருங்கிக்கொண்டிருந்தன.

ராமிரெட்டி கையிலிருந்த துப்பாக்கி அண்டம் அதிரும் வண்ணம் கர்ஜித்தது. முதலில் வந்த லாரி பக்க வாட்டில் சரிய... அதிலிருந்த போலீஸ்காரர்கள் சரசர வென குதித்து விட்டார்கள். உடனே மூன்று இரண்டல்ல நூறு துப்பாக்கிகளுக்குமேல் நெருப்பு கக்க... லாரிகள் எழுப்பிய புழுதியெல்லாம் நிமிடமாய் சிகப்பு வண்ணம் பூசிக்கொண்டது. போலீஸ் துப்பாக்கிகளினின்று சீறிக் கொண்டு கிளம்பிய ஆயிரக்கணக்கான குண்டுகள் காற்றில் கலந்துபோயின. சில குண்டுகள் மொட்டை மாடிக் கட்டைச்சுவர் மீதும் வீட்டின் பக்கச்சுவர்கள் மீதும் மோதி சுவர்ப்பந்தாய் திரும்பி விழுந்தன.

இங்கே துப்பாக்கிகளில் மருந்து நிரப்பி சரசரவென மேலே அனுப்பப்பட்டன. ஒவ்வொருவரும் பத்து ஆள் பலத்துடன் இயங்கிக்கொண்டிருந்தனர். மருந்து அடைக்கப்பட்ட துப்பாக்கி... மொட்டைமாடிக்குச் சென்று கொண்டிருக்கும் துப்பாக்கி... எதிரிகள் மீது எமனை ஏவும் துப்பாக்கி... ஒன்றுதான் ஆனாலும்ஆயிரம் துப்பாக்கிகளுக்குச் சமமாய் இயங்கிக்கொண்டிருந்தது.

ஓலமிட்டபடி மண்ணைக்கவ்வினான் ஒரு ரஜாக்கன். இன்னொருவர் கிறுகிறுவென சுழன்று மரத்தில்மோதி கீழே விழுந்தான். வேறொருவன் குன்றின்மீதிருந்து உருண்டு உருண்டு அருகிருந்த குளத்தில்போய் விழுந்தான்.

www.padippakam.com



எதிரிகளின் ஆள்பலத்தை, மருந்து பலத்தை சிதைத்து சின்னாபின்னமாக்கிவிட்டது நாட்டுத்துப்பாக்கி. ரஜாக்கர்களின் குடிபோதை முழுக்கமுழுக்க தெளிந்து விட்டது. இந்த ஊரில் எத்தனை கம்யூனிஸ்டுகள்... மக்கள் நலப் படையினர் இருக்கிறார்கள் என்ற விஷயம் சர்ஜெண்டுக்கு இப்போதுதான் கொஞ்சம்கொஞ்சமாய் நினைவுக்கு வரலாயிற்று.

யந்திரத்துப்பாக்கியுடன் போராடிக்கொண்டிருந்த ஒரு முஸ்லீம் இளைஞன் ஏதோ கோளாறாகி சட்டென்று அது அவனையே பதம்பார்க்க அந்த இளைஞன் கையும் காலும் உதறிக்கொண்டு நிலத்தில் சரிந்தான். ஒருத்தனா இரண்டுபேரா...? ஒரு ரஜாக்கன் கூட தனியே போய்ச் சேர்ந்ததாய் சரித்திரமே கிடையாது. அந்தப் பழக்கமே இல்லை அவர்களுக்கு. போகும் உலகத்தில் மக்கள் நலப் படையினர் இருக்கமாட்டார்களென்று என்ன நிச்சயம்? அந்த பயத்தில்தான் துணைசேர்த்துக்கொண்டு போகிறார்கள்.

ஒன்றிரண்டுபேர் அல்ல. எழுபத்தி மூன்று ரஜாக்கர்களும் ராஜ பந்துக்களும் தெலுங்கு மண்ணில் உடல் சாய்த்தார்கள்.

ராமிரெட்டியின் துப்பாக்கி இன்னும் சீறிக்கொண்டே இருந்தது. ஐயோ பாவம் என்று கணம் கூடத் தயங்காமல் ராஜபந்துக்களைச்சாய்த்துக்கொண்டே இருந்தது.

சிந்திக்கும் திறனிழந்தான் சர்ஜெண்ட். புத்தி சற்றே தடுமாற்றம் கண்டது. ஆனாலும் யுத்தநீதியாகட்டும் ராஜநீதியாகட்டும் அந்த மதப்பிசாசு அத்தனை நுணுக்கங்களையும் நன்கறிந்திருந்தால் எப்படியாவது சறுக்கிய காலை சமனப்படுத்தி ஊன்றி நிற்கச் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தான். ஆனால் இந்த ஊர்க்காரர்கள் சாமான்யப்பட்டவர்களாய்த் தெரியவில்லையே...? வெறி நாய் நாக்கைத் தொங்கப் போட்டுக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு உறுமுவதுபோல்போலீசின் தோல்வி நோக்கு அல்லவா ஆவேசத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது... ராஜபந்துக்கள் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் கூடாரங்கள் அமைத்துக்கொண்டு தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

கொழுந்து விட்டெரிந்த நெருப்பில் எரிந்து மண்ணில் உதிர்ந்த இரண்டு லாரிகளின் பாகங்கள் அவைகளினடியில் கிடக்கும் ரஜக்கர் சவங்களுக்கு தெலுங்கு சம்பிரதாயப்படி தீயிட்டு இறுதிச்சடங்கு நடத்தின. பாவம்...அவர்களுடைய சமாதிகளுக்குக்கூட இடமில்லாது போய் விட்டது இந்த விசாலாந்திராவில்.

ராமிரெட்டியின் துப்பாக்கி எரிமலையாய் வெடித்து தொடர்ந்து தீக்கங்குகள் கக்கிக்கொண்டிருந்தது. அவர் பார்வைக்கும் துப்பாக்கி சீறலுக்கும் அவ்வளவாய் வித்தியாசம் தெரியவில்லை. பார்வையில் பட்டவர்களையெல்லாம் பொசுக்கிக் கொண்டிருந்தது.

தன் வெற்றியைக் கண்முன் கண்டாலும் இதோடு அவர் பொறுப்பு தீர்ந்துவிடவில்லை. இந்த ஊர் தன்னுடையது ஊர்மக்களெல்லாம் தன்னுடையவர்கள். தான் சொன்னபடி நடக்க வேண்டியவர்கள் இவர்கள். இவர்களின் உயிருக்கு உடமைக்கெல்லாம் உத்திரவாதம் கொடுக்க வேண்டியது தன் கடமை.

நெஞ்சில் இத்தனை எண்ணங்கள் ஓயாது ஓடினாலும் கைமாத்திரம் விடாமல் துப்பாக்கியைப் பிரயோகித்துக் கொண்டே இருந்தது. திடீரென்று அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு 'அம்மா' என்று அலறினார். தீனமாய் முனகியபடி சுற்றுமுற்றும் பார்த்தபோது அருகிருந்த மரத்தின் மீது ராகவரெட்டி இருப்பதைக் கண்டார். ஓடை போல் அடி வயிற்றிலிருந்து ரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்

www.padippakam.com



தாலும் உடம்பிலுள்ள நரம்புகளெல்லாம் புத்துணர்ச்சி பெற்றது போல் சுறுசுறுப்பாய்ச் செயல்பட... கீழிருந்து கட்டைச்சுவர்மீது சேர்ந்த துப்பாக்கியை எடுத்தார். சக்தி யெல்லாம் திரட்டி ஒரே போடு... 'ஓ'வென்ற அலறலுடன் சுழன்று சுழன்று கீழே உதிர்ந்தான் ராகவரெட்டி. குபீ ரென்று பொங்கிய விழிநீர் ராமிரெட்டியின் பார்வைக்குத் திரையிட்டது.

கோபால்ராவ், சீதம்மா இருவருக்குமே துப்பாக்கி உபயோகிக்கத் தெரியாது. மற்றவர்களுக்கு அதைக் கண்டாலே பயம். சரி... முயன்றுதான் பார்ப்போமே என்று கோபால்ராவ் அதைத் தூக்கி எசகுபிசகாய்க் கையாள, அது விர்ரென்று சீறிய வேகத்தில் பயந்து கீழே போட. குவித்து வைத்திருந்த மருந்து கொஞ்சம் எரிந்து போனதுதான் மிச்சம்.

கொஞ்ச நேரமாய் துப்பாக்கி சத்தம் கேட்காம லிருந்தது ரஜாக்கர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் கொஞசம் தெம்பு உண்டாக... முன்னேறிச்செல்லலாமா என சர்ஜெண்ட் நினைத்தானே தவிர உடனே செயல் படவில்லை. முன்பின் யோசித்து காரியத்தில் இறங்கும் பக்குவம் நிறைந்தவன். கெரில்லாக்களுடன் நேரடி அனுபவம் இல்லாவிடினும் அவர்களைக் குறித்து நிறைய கேள்விப்பட்டிருக்கிறான். தன் படையில் நூற்றுக்கு மேற் பட்ட வீரர்கள் மரணத்தைத் தழுவியிருக்கிறார் களென்றால் அவர்கள் பக்கம் எத்தனை பேர் இருக்க வேண்டும் என்று சுலபமாய் ஊகிக்கக்கூடியவன். ஆனால் எதிர்பக்கத்திலிருந்து குண்டு பாயுமோ என எத்தனை நேரம் தான் சும்மா இருப்பது? தன் உடம்பு முழுக்க ஒரு தடவை தடவிப்பார்த்துக்கொண்டான். எங்கும் காயம் பட்டதாகத் தெரியவில்லை இந்த கெரில்லாக்கள் எத்தனை பேர் இருந்தாலும் தன்னை எதுவும் செய்ய முடியாது என நன்கறிவான்.

www.padippakam.com



முன்னேறிச்செல்லுமாறு போலீசுக்கும் ரஜாக்கர்களுக்கும் உத்தரவிட்டான். மெல்ல மெல்ல ஆக்கிரமித்தபடி ஊருக்குள் வந்தார்கள். மொட்டை மாடியைச்சுற்றி இருந்த இருபத்தைந்து பேர்களையும் பிடித்து சுவரில் சாய்த்தபடி வரிசையாய் நிறுத்தினார்கள்.

போலீஸை முன்னால் போகவிட்டு பின்தொடர்ந்த சர்ஜெண்ட் முன்பக்கம் வந்து கம்பீரமாய் நின்றான். ரிவால்வரை கிர்ரென்று சுழற்றியபடி சுற்றுமுற்றும் பார்த்தான். சுமார் நூறு இந்துக்களாவது இங்கு இருந்திருக்கவேண்டும் என ஊகித்தான். இப்போது இருபத்தைந்து பேர்மட்டுமே இருக்கிறார்கள் மற்றவர்கள் எங்கோ ஒளிந்திருக்கிறார்கள்...

நடக்கும் தரைமீதுகூட நம்பிக்கை இல்லாதவன்போல் மிகவும் நிதானமாய் ஜாக்கிரதையாய் அடியெடுத்து வைத்து சீதம்மாவினருகே வந்து ரிவால்வரால் அவள் மார்பைக் குத்தினான்.

''சிறுக்கி... மத்தவங்க எங்கடி?''

அவள் முகம் ஜிவுஜிவென்று சிவக்க தணல் கக்கும் விழிகளால் அவனை முறைத்துப் பார்த்தாள். வீரப்பாவுக்கு ஆத்திரம் தலைக்கேற தன்னைப் பிடித்திருந்த போலீசை வெடுக்கென உதறித் தள்ளிவிட்டு சர்ஜெண்ட் கழுத்தைப் பிடித்து இறுக்கினான். கால்கள் வெடவெடக்க தள்ளாடினான் சர்ஜெண்ட். திடீரென்று நூறு துப்பாக்கிகள் ஒருசேர வெடித்த சத்தம். சர்ஜெண்டுடன் வீரப்பாவும் சரிந்து விழுந்தான்.

சவமாகி தரையில் விழுந்த சர்ஜெண்டைப் பார்த்ததும் அடியோடு தைரியம் இழந்தார்கள் போலீசும் ரஜாக்கர்களும். இனியும் இந்த கெரில்லாக்களை அலட்சியம் செய்தபடி முன்னேறுவது அசட்டுத்தனம் என நினைத்தார்கள்.

www.padippakam.com



''இவங்களை வரிசையா சுட்டுத் தள்ளுங்க...'' ஒரு போலீஸ்காரன் கத்தினான்.

''இருங்க... சுட்டுடாதீங்க. மத்தவங்க எங்கன்னு தெரிய வேண்டாமா...'' சற்று எட்ட நின்று சொன்ன இன்னொரு போலீஸ்காரன் கீழே கிடந்த சர்ஜெண்ட் கையிலிருந்த ரிவால்வரை எடுத்து சீதம்மாவை நோக்கிக் குறி வைத்தான்.

''வாடி தேவுடியா... இப்படி முன்ன வந்து நில்லு...'' போலீஸ் அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயப்படவில்லை சீதம்மா. இருந்த இடம்விட்டு அங்குலம்கூட நகரவில்லை.

''இப்ப வரப் போறயா இல்லையா?'' மறுபடியும் போலீஸ் கத்த... அவள் அசையவில்லை. ரிவால்வர் பயங்கரமாய் ஒலமிட்டது. 'ஆந்திர மகாசபைக்கு ஜே...' என்று கோஷமிட்டபடி பூமாலையாய்ச் சரிந்தாள் சீதம்மா.

கோபால்ராவின் கண்களில் நீருக்கு பதில் நெருப்பு நிறைந்தது.

சாவுக்கு இரண்டு சாவா? ஒரே எட்டில் அங்கிருந்த போலீஸ்காரனின் துப்பாக்கியைப் பிடுங்கி அதன் மறு முனையால் எட்டியவர்களையெல்லாம் போடுபோடு என்று போட்டான். மற்ற இருபத்து மூன்று பேருக்கும் நல்ல உபாயம் கிடைத்தது போலிருந்தது. துப்பாக்கிகளை இழந்த போலீஸ்காரர்கள் தொப்பிகள் கீழே விழுவதைக் கூட பொருட்படுத்தாது கண்மண் தெரியாது ஓட்டம் பிடித்தார்கள். எஞ்சியவர்கள் கொஞ்சம் தைரியம் பெற்று துப்பாக்கியால் குறிபார்த்துக்கொண்டு இருந்தார்கள். ஒன்றிரண்டு வெடித்தன. ஓரிரு 'கெரில்லா'க்கள் வீழ்ந்தனர்.

www.padippakam.com



கெரில்லாக்களின் துப்பாக்கி அடி பெற்ற போலீஸ்காரர்கள் மீண்டும் வந்து பலமெல்லாம் திரட்டி மீண்டும் சுட ஆரம்பித்தார்கள்... கெரில்லாக்கள் மண்ணில் சாய்ந்தார்கள்.

'கம்யூனிஸ்ட் பார்ட்டி... ஜிந்தாபாத்...!'— எங்கோ மலையடிவாரத்தினின்று ஒலித்த கோஷத்தை காற்று சுமந்து வந்தது. துப்பாக்கியைத் திருப்பிப் பிடித்துக் கொண்டு நின்ற கெரில்லாக்களுக்கு போன உயிர் திரும்பி வந்தாற் போன்ற பலம் பெற்றார்கள்.

'கம்யூனிஸ்ட் பார்ட்டி... ஜிந்தாபாத்...!'— ரஜாக்கன் ஒருவன் கீழே சரிந்து மண்ணைச் சிவப்பாக்கினான். போலீஸ்காரன் ஒருவனின் கழுத்தெலும்பு முறிந்து வலி தாங்காது ஓலமிட்டான்.

''கம்யூனிஸ்ட் பார்ட்டி... ஜிந்தாபாத்...! ஆந்திர மகா சபை ஜிந்தாபாத்...!''— மீண்டும் மலைகளும் குன்றுகளும் இன்னும் உரக்க முழங்கின. விசில் சத்தங்கள் ராகங்களுடன் ஒலித்தன.

இத்தகைய சம்பவங்கள் பல கண்டிருக்கிறார்கள் போலீஸ்காரர்களும் ரஜாக்கர்களும். இப்படிப்பட்ட ஆபத்தான தருணங்களில் தத்தம் விதியை தாமே நிர்ணயித்துக் கொள்வது அவர்கள் நீதி. அதன்படி தன் வழியைதாம் பார்த்துக்கொள்வதில் பரபரப்பாய் முனைந்தார்கள். போலீஸ்காரர்கள் காக்கி உடுப்புகளை அவிழ்த்தெறிந்துவிட்டு உள்ளாடைகளுடன் கூட்டம் கூட்டமாய்த் தப்பியோடினார்கள்... பச்சைச் சட்டைகளைக் கழற்றி விசிவிட்டு போலீஸைப் பின்பற்றினார்கள் ரஜாக்கர்கள்.

வழிநெடுக கெரில்லா துப்பாக்கிகள் குண்டு பாயும் சத்தம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திற்கு நிசப்தம்... மீண்டும் ஆங்காங்கே சின்னச் சின்ன ஓசைகள்...

www.padippakam.com



திடீரென்று கடல் கொந்தளிப்பது போன்ற கோஷம்.

''கம்யூனிஸ்ட் பார்ட்டி... ஜிந்தாபாத்...!''

''மக்கள் படை வெல்க...!''

ஆயிரமாயிரம் குரல்கள் ஒரே குரலாய்க் கேட்டது. அவ்வளவு நேரமாய் ஆளரவமற்றுக் காணப்பட்ட கிராமம் திடீரென்று விழித்துக்கொண்டாற் போலிருந்தது. ஒரு ஒளி வட்டம் ஊரை அணைத்தாற் போன்ற பிரகாசம். மயானச் சூழல் மறைந்து ஜீவச்சுடரில் மின்னியது கிராமம்.

மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மறைந்த இந்த மக்கள், கெரில்லாப் படையுடன் சேர்ந்து திரும்பி வந்து கொண்டு இருந்தார்கள். ரஜாக்கர்களும் போலீஸ்காரர்களும் தப்பித்துக்கொள்ள வழியில்லாது போயிற்று. வீதிகள்... வளைவுகள்... சந்துபொந்துகள்... மலைகள்... வயற்புரங்கள்... எங்கெங்கும் மக்கள் படையினர்! ரஜாக்கர்களும் போலீஸ்காரர்களும் கைகளை கட்டியபடி முன்னே நடந்தார்கள்.

மக்கள் படையினர் அத்தனை பேரும் ஒரு சமுத்திரமெனத் திரண்டு ராமிரெட்டி பங்களாமுன் வந்து நின்றனர். கெரில்லா படைத்தலைவன் ஜகந்நாதரெட்டி அடிபட்டு வீழ்ந்து கிடந்த தெலுங்கு வீரர்களுக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து தைரியம் சொல்லிவிட்டு கோபால்ராவ் அருகே வந்தார்.

பயனெட் தாக்கியதில் கோபால்ராவ் முதுகில் பலமான காயம். முகம் முழுக்க ரத்தக் கீற்று... ரத்தத்தில் நனைந்த நாக்கு பேச முடியாது சுருண்டு போனது. தலை சுற்றி... கண்கள் இருளடைந்தன. எழுந்து நிற்க சக்தியில்லாது போனாலும் தளபதி மீதுள்ள மரியாதை, சௌரவம் அதற்கெல்லாம் அப்பாற்பட்டது. தன்

www.padippakam.com



இதயத்தையே அவர் பாதங்களில் வைப்பதுபோல் விழிகள் கூரக்க தலைவனைப் பார்த்தான்.

''கம்யூனிஸ்ட் பார்ட்டி... ஜிந்தாபாத்...!' முஷ்டியை இறுக்கிக்கொண்டு பலமெல்லாம் திரட்டி தளபதிக்கு தன் இறுதி வணக்கம் செலுத்தினான். அது அவன் முதல் வணக்கம்கூட...!

**(மே 1948 'அப்யூதயா' இதழிலிருந்து)**

[தெலுங்கானா ஜில்லாக்களில் இன்னும் கதைகளாய் பாடல்களாய் நாடகங்களாய் சொல்லப்படும் அநேக போராட்டங்களுள் முக்கியமானது ரேணிகுண்டா போராட்டம். அதன் துவக்கம்தான் இக்கதை.

இந்த ரேணிகுண்டா போராட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றவர் ராமிரெட்டி. இவர் போங்கீர் தாலூக்கா ரேணிகுண்டாவில் பெரிய விவசாயி. ஊரில் மிகுந்த செல்வாக்குடையவர். கிராமப் பகுதிகளில் நிஜாம் மிலிட்டரிக்கு எதிராக கெரில்லாப் போராட்டம் ஆரம்பித்த புதிது. கிராமப் பாதுகாப்புப் படை நியமித்து தன் வீட்டை ஆயுதக் கிடங்காக உபயோகித்து கிராமத்தை ஒரு புரட்சிக் கோட்டையாய் மாற்றினார். தன் கடைசி மூச்சு அடங்கும்வரை எதிரிப் படை வீரன் ஒருவனைக்கூட கிராமத்தில் நுழையவிடவில்லை. நூற்றுக்கணக்கான மிலிட்டரி வீரர்கள், ரஜாக்கர்கள் படையெடுத்து வந்த அன்றைய யுத்தத்தில் பாதுகாப்புப் படை தன் விலைமதிப்பற்ற உயிர்களைத் தியாகம் செய்தது. (இதில் கதையாசிரியர் கதையில் சில மாற்றங்கள் செய்திருக்கிறார்) இப்போராட்டம் மக்களை நெகிழ்வித்து நிறைய விழிப்புணர்வு ஏற்படுத்தியது. கவிஞர்கள் உள்ளங்களில் கடலாய்ப் பொங்கியது உத்வேகம். திருநகரி ராமாஞ்ஜனேயலு ரேணிகுண்டா போராட்டத்தை அடிப்படையாய்வைத்து 'தெலுங்கானா வீரயோது' என்ற 'புர்ர கத' (ஏறக்குறைய வில்லுப் பாட்டு போன்றது) எழுதினார். ராமிரெட்டிமீது அநேக வீரப் பாடல்கள் எழுதப்பட்டு அக்காலத்திலும் பிற்காலத்திலும் பரவலாகப் பாடப்பட்டன. பாடல்கள் மூலமே மக்கள் உத்வேகம் பெற்ற நிகழ்ச்சிகளும் உண்டு.] ☐

www.padippakam.com

*சாரதா*

# கொில்லா கோவிந்து

சுவரில் ஊசலாடிக் கொண்டிருந்த காலண்டர் 22 மார்ச் '48 எனச் சொல்லியது. நிஜாம் ராஜ்ய எல்லையில் புதிதாய் முகாம் போட்டிருந்த ரஜாக் கர்கள் சிகரெட்டும் சாராயமுமாய் அறைக்குள் கும்மாளமிட்டுக்கொண்டு இருந்தார்கள். மிஷின் கன்களும் துப்பாக்கிகளும் அறையெங்கும் நிறைந்து ஒரு பீதியான சூழல் உருவாகியிருந் தது. மெல்ல மெல்ல இருள் படர்ந்தது. அறைக்கு வெளியே 'ஹோ'வென்று பெரிய மைதானம் நீளமும் அகலமுமாய் விரிந்து கிடந்தது. எதிரி களின் நினைவு கிளப்பிய பயத்தால் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ரஜாக்கர்கள் புஸ்புஸ் என்று வெளியேற்றிய மூச்சுக் காற்று காரணமாய் அந்தப் பிரதேசம் முழுக்க ஒரு வெப்பம் சூழ்ந் திருந்தது. மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த அந்த எட்டு பேருள் கரடுமுரடான குரலும் சிவந்த விழிகளுமாய் முரட்டுத்தனமான தோற்ற முடையஒருவன் உரையாடலைத் துவக்கி வைத் தான். அந்த ஆகிருதியே சொன்னது அவன் நரமாமிசக்காரன் என்று. மேஜை மீதிருந்த சாராய கிளாஸை எடுத்தபடி, ''அந்த கம்யூ னிஸ்டுகாரன் மட்டும் முன்னால் வரட்டும்... ஒரே அடியில் கொன்னுருவேன்...'' என்று கர்ஜித்தான்.

தெ—8

www.padippakam.com



கட்டையாய் குள்ளமாய் நல்ல நிறத்துடனிருந்த இன்னொருவன், ''நான் மட்டும் அவனைப் பார்த்தா...'' பற்களைக் கடித்தபடி சிகரெட் கொளுத்தலானான்.

முதலில் பேசியவன் பெயர் ரஹ்மான். மனம் ஏதோ தீவிர யோசனையில் ஆழ்ந்திருக்க, வெளிக்காட்டாது இலேசாய் முறுவலித்தபடி மற்றவர்களைத் தீர்க்கமாய்ப் பார்த்தான். ''அவன் இங்கதான் எங்கயோ சுத்திட்டிருக்கான் பாய். கெடைச்சுடுவான். ரெண்டுநாள் முன்ன நாராய பாலத்தில் கண்ல பட்டானாம்...''

மற்ற ஏழு பேரும் பயம் நிறைந்த விழிகளால் ரஹ்மானையே பார்த்துக்கொண்டு இருந்தார்கள் எவ்வளவு குடித்தாலும் போதையும் ஏறவில்லை... பயமும் தெளியவில்லை.

குள்ளமாக இருந்தவன் பெயர் அப்துல். வைத்த கண் வாங்காது ரஹ்மானை உறுத்துப் பார்த்தவாறு சொன்னான். ''அப்ப அவன் நிச்சயமா இங்க இருக்கான்னு தானே அர்த்தம்? சொல்லு பாய்... அவன் பேரென்ன? மறந்துட்டேன்...''

பயங்கரமாய்ச் சிரித்தான் ரஹ்மான். அறையிலிருந்த காலண்டர் கடகடவென்று ஆடியது. இருட்டு நடுங்கியது அந்த பேய்ச் சிரிப்புக்கு. அட பயந்தாங்கொள்ளிகளா என்பதுபோல் ஏளனமாய்ப் பார்த்தான் தன் சகாக்களை. ''அவன் பெயர் கோவிந்து. மிகவும் பொல்லாதவன். அவனைப் பிடிக்க முடியலேன்னா நமக்கு அது பெரிய அவமானம்...'' தீவிர யோசனையில் அவன் நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன. கண்கள் ஜிவுஜிவென சிவந்து காணப்பட்டது. இந்தப் பெயரை ஏற்கெனவே கேள்விப்பட்டது போலிருந்தது. ஒருவரையொருவர் வெறித்தபடி பத்து நிமிடங்களை மௌனத்தில் கரைத்தார்கள். அந்த நிசப்தத்தைக் கலைக்கவேண்டாம் என்பதுபோல் காற்றுகூட ஒரு நிமிஷம் நின்று விட்டது. ரஹ்மான் கையில்

படிப்பகம்

www.padippakam.com



இருந்த சாராய கிளாஸ் நழுவி மேஜைமீது விழ, நிசப்தம் கலைந்தது. காரிருள் உலுக்கி விழுந்தது. பயந்துபோன அப்துல் நடுங்கும் குரலில் கேட்டான். ''அரே பாய்... வெளக்கு ஏத்தட்டுமா?'' பதில் வருமுன்பே அந்த வேலையில் முனைந்தான்.

போதை ஏறிய விழிகளால் அப்துலை உறுத்துப் பார்த்த ரஹ்மான்... ''அடேய் நம்ம புது சர்தார் இந் நேரம் வந்திருக்கணுமில்ல. வந்திட்டிருக்காரோ என்னமோ...'' அங்கு நிலவிய பீதியைக் கலைப்பதற்காகவே அக்கேள்வியை அவன் கேட்டது போலிருந்தது. அப்துல் ஏற்றிய லாந்தர் கொஞ்சத்திற்குக் கொஞ்சம் இருளையும் பயத்தையும் விரட்டியது. லாந்தரை மேஜை மீது வைத்து தன் நாற்காலியில் உட்கார்ந்தான் அப்துல்.

''ஆமா...இந்த நேரத்துக்கெல்லாம் வந்திருக்கணும்...''

அவனுக்கு இடது புறமாய் உட்கார்ந்திருந்த முப்பது வயதுக்காரனொருவன் தன் முகத்து சுருக்கங்களை அதிகப்படுத்தியபடி கஷ்டப்பட்டு அப்துல் பக்கம் திரும்பினான். ''சர்தார் வந்து சேர்ந்த உடனே கோவிந்துவைத் தேடிப் போகணுமா நாம்?''

கிளாஸில் சாராயத்தை நிரப்பிக்கொண்டான் அப்துல். ''ஆமா...ஹுசேன்பாய். நம்ம பிளான் அதானே...'' ரஹ்மானைப்பார்த்து சந்தேகம் நிவர்த்தி செய்து கொள்வதுபோல் கேட்டான். ''என்ன பாய்... நான் சொல்றது சரிதானே...?'' ஆம் என்பது போல் தலையசைத்தான் ரஹ்மான்.

ஒரே முழுங்கில் பாதி கிளாஸ் சாராயம் காலி செய்த ஹுசேன் ''அவன் எப்படி இருப்பான்? எப்படி அடையாளம் காண்பது அவனை?'' என்று ரஹ்மானைக் கேட்

www.padippakam.com



டான். இதற்கான பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தபடி அனைவரும் ரஹ்மானைப் பார்த்தார்கள்.

வரவிருக்கும் சர்தாருக்காக வாசற்பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான் ரஹ்மான். ''எப்படி இருப்பான்னு எனக்கே சரியா தெரியாது. அரைகுறையா ஏதோ கொஞ்சம் தெரியும். நேத்துதான் அவன் 'ஐடெண்டி ஃபை' நோட்டீஸ் வந்ததாச் சொன்னாங்க...'' தன் ஜேபியிலிருந்து ஒரு காகிதம் எடுத்து லாந்தர் அருகில் மேஜைமீது விரித்தான். காகிதத்தின் மேற்புறத்தில் நிஜாம் முத்திரை இருந்தது. ரஹ்மான் அதைப் படிக்க ஆரம்பித்தான்.

''பெயர்: கோவிந்து. கிராமம்: நல்லகொண்டா ஜில்லாவிலுள்ள ஒரு கிராமம். தொழில்: விவசாயம். வயது: 22, சிகப்பாய் ஆறடி உயரமிருப்பான். இடது பக்க முகவாயில் சமீபமாய் ஏற்பட்ட துப்பாக்கி காயம் இருக்கும். வெட்டரிவாளாய் வளைந்த மீசை. சுருள் கிராப்பு; நீளமுகம். இவன் காரணமாய் ஹிஸ் எக்ஸலன்ஸி படைக்கு நிறைய நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத்தெரிகிறது. கெரில்லாக்களின் தலைவன் இந்த கோவிந்து என்பவன். இவனைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு கணிசமான அளவு வெகுமதிகிடைப்பதுடன் பெரிய உத்தியோகமும் கொடுக்கப்படும்...'—

காகிதத்தில் இருந்த அடையாளங்களைத் தொகுத்துப் பார்த்ததில் இப்போது ஒரு தோராயமான உருவம் அவர்கள் மனதில் வந்தது.

திடீரென்று சந்தோஷத்துடன் கூவினான் அப்துல். ''எப்படியாவது அவனைக் கண்டுபிடித்து இழுத்துட்டு வர்றேன். கை நெறையகாசு இன்னும் பெரிய உத்யோகம் கூடன்னா சும்மாவா? கெடைக்கற காசை நாம் எல்லோருமா பங்கு போட்டுக்கலாம்...''

www.padippakam.com



அவன் கூச்சல் சுவரில் தொங்கிய துப்பாக்கிகளில் மோதி எதிரொலித்தது. சில நிமிடங்கள் கழித்து மிலிட்டரி உடையில் இருந்த ஒரு புது மனிதன் டக்டக் என ஷூக்கள் ஒலிக்க உள்ளே வந்தான். அவன் பின்னால் ஒரு இந்து சேவகனும் டிரைவரும் வந்தார்கள்.

ரஹ்மானும் மற்றவர்களும் உடல் வளைத்து 'சலாம் ஜிசர்தார்' என்று வணக்கம் தெரிவித்தார்கள். சுற்றிலும் நோட்டமிட்டவாறு பதிலுக்கு 'சலாம்' சொன்னான் சர்தார்.

அவனுடன் வேறு யாரும் வராதது கண்டு ரஹ்மானுக்கு பலத்த வியப்பேற்பட்டது. ஒரு ஐம்பது வீரர்களாவது வருவார்களென எதிர்பார்த்திருந்தான். அவனை உட்காரச் சொல்லவில்லையே என்ற எண்ணம் எழுந்து ஆச்சரியத்தைக் கலைக்க ''இப்படி உட்காருங்க சர்தார்ஜி...'' தன் நாற்காலியைக் காண்பித்தான்.

மேஜைமுன் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்ட சர்தார் கையிலிருந்த ரிவால்வர் பையை மேஜை மீது வைத்துவிட்டு தன் கையிலிருந்த கடிகாரத்தில் மணி பார்த்தான். ஏழரை ஆகியிருந்தது. பரபரப்புடன் ரஹ்மான் பக்கம் திரும்பி ''இங்க எத்தனை பேர் இருக்காங்க?'' எனக் கேட்டான்.

''இருபது பேர் இருக்கோம்...'' ஒரு கணம் நிதானித்து பிறகு கேட்டான். ''உங்களுடன் வேற யாரும் வரலையா?''

சர்தார் தோரணையில் மிகவும் கம்பீரம் கூடியது.

''இவங்க போதும். டைம் ஆயிட்டிருக்கு இன்னைக்கே அந்த கோவிந்துவை பிடிச்சாகணும். மேலிடத்து உத்தரவு இங்கதான் எங்கயோ நாராய பாலத்துகிட்ட இருக்கானாம் அவன்...''

www.padippakam.com



அவன் சொன்னதில் ரஹ்மானுக்கு உடன்பாடில்லை யானாலும் மேலுக்கு சிரித்தான். ''பாய்...எல்லோரும் எங்க போய்ட்டாங்க? போய் அழைச்சிட்டு வா...'' அப்துலை நோக்கி ஆணையிட்டான்.

அப்துல் தன் சகாக்கள் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கிப் போக...ரஹ்மான் அறையிலிருந்தவர்களைப் பார்த்து ''உம்...எழுந்திருங்க. துப்பாக்கி, மிஷின் கன்னெல்லாம் ரெடியா வச்சுக்கங்க எல்லோருமே லாரி யில் ஏறிக்கங்க...'' என மடமடவென உத்தரவுகள் போட...அனைவரும் தத்தம் வேலைகளில் மும்மரமானார் கள்.

''நீங்கள்லாம் மிகவும் உஷாரா இருக்கணும். சுறு சுறுப்பா நடந்துக்கணும்...என்ன...தெரிந்ததா...?'' நீண்ட தாடியை நீவிவிட்டபடி சர்தார் சொல்ல, சரி என்னும் பாவனையில் தலையசைத்த ரஹ்மான் தன் துப்பாக்கி யைச் சரிசெய்து கொள்ளலானான்.

எட்டுக்கு இன்னும் பத்து நிமிஷங்கள் இருக்கும் போது ரஜாக்கர்கள் லாரி நாராயபாலம் நோக்கிப் புறப் பட்டது. இருபது பேர் அடங்கிய லாரி முன்னால் செல்ல சர்தார், ரஹ்மான், சர்தாருடன் வந்த சேவகன் மற்றும் டிரைவர் இருந்த ஜீப் பின் தொடர்ந்தது. பழுதுபட்டு வருடக் கணக்காகியும் ரிப்பேர் செய்யப்படாததால் மேடும் பள்ளமுமாய் இருந்தது ரோடு. மங்கலான நட்சத்திர ஒளி தவிர வேறு வெளிச்சமில்லை. காரின் முன் விளக்குகளை ஏற்றவேண்டாமென சர்தார் சொல்லிவிட் டான் அடர்த்தியான இருள். ஜீப்பில் முன் சீட்டில் உட்கார்ந்து நிராசையுடன் ரோட்டைப் பார்த்துக் கொண்டிருந்த ரஹ்மான் சர்தாரிடம் கூறினான். ''சர்தார்ஜி...எதுக்காக அவனுக்காக இவ்வளவு மெனக் கெடணும்? காகிதத்தில் என்னென்னவோ எழுதியிருக் கறதே அவனைப்பதி... அவ்வளவு ஆபத்தான மனுஷனா அவன்?''

www.padippakam.com



சிகரெட் கொளுத்திக்கொண்ட சர்தார் அலட்சியமாகச் சிரித்தான். "அவன்...அப்படின்னா...? ஓ... கோவிந்து சங்கதியா...? அவன் அபாயமானவன் தான். சந்தேகத்துக்கிடமில்லாம கொள்ளைக்காரன்தான். அவன் இதுவரைக்கும் நம்மவங்கள்ல நூறுபேரையாவது கொன்னுருக்கான்..."

"ச்சே...அவனை யாராலயும் பிடிக்க முடியலயே... உம்...அவன் மட்டும் என் கையில கெடைக்கட்டும்... அடுத்த நிமிஷம் அவன் அல்லாவிடம் போய்ச்சேர்றது நிச்சயம்..." சவால் விடுவது போல் சொன்னான் ரஹ்மான்.

அந்தக் காரிருளில் சர்தாரின் விழிகள் நட்சத்திரங்கள் போல் ஒளிர்ந்தன. "அவ்வளவு சுலபமா கெடைச்சிடுவானா அவன்... அப்படி கெடைச்சிட்டா..." ஆத்திரத்துடன் சிகரெட்டை வெளியே வீசினான்.

"இவனைவிடப் பெரிய பெரிய போக்கிரிங்கல்லாம் என் கையில சிக்கி படாதபாடு பட்டிருக்காங்க. அவங்க முன்னால இவன் எந்த மூலைக்கு? எறும்பாட்டம் நசுக்கிடமாட்டேன்...?" நெஞ்சமெங்கும் வியாபித்திருந்த பயத்தை மறைத்துக் கொள்ள படாதபாடு படுவது போலிருந்தது ரஹ்மானைப் பார்த்தால்.

சர்தார் சிரிக்க... ரஹ்மானும் பெரிதாய்ச் சிரித்தான். டிரைவரும் அவர்களுடன் சிரிக்க முயன்றபோது தற்செயலாய் அவன் கை பிரேக்கில் பட்டுவிட ஜீப் நின்று விட... சரேலென பின்னால் சரிந்தான். சட்டென நினைவு வந்து முன்னால் பார்த்த போது லாரி தென்படவில்லை. எங்கிருந்தோ முனகல்கள் கேட்டன...மெலிதாக...சற்று உரக்க...

ஜீப்பில் இருந்த நால்வரும் வெளியே குதித்தார்கள். ஹெட்லைட் போடப்பட்டது. ரோட்டில் கொரில்லாக்கள்

www.padippakam.com



தோண்டிவைத்திருந்த குழியில் ரஜாக்கர்கள் சென்ற லாரி குப்புறக்கவிழ்ந்திருந்தது. பலத்த அதிர்ச்சிக் காளானவர்கள் மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது நூற்றுக்கு மேற்பட்ட கெரிலாக்கள் திபுதிபுவென அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். முக்கியமான ஆளும் அந்தக் கும்பலில் இருந்தான். தேக்குமரம் போல் திண்ணென்றிருந்த தோளில் பனியனும் டவலும் அலட்சியமாய்க் கிடந்தன. கையில் ரிவால்வர். அவன் ரஹ்மானை நெருங்கியபோது தெளிவாகத் தெரிந்துவிட்டது என்ன நடந்தது நடக்கிறது. நடக்கப் போகிறது என்பது. தங்கள் நிலைமை புரிந்து ஒரு முடிவுக்கு வருவதற்குள் கெரில்லா வீரன் அவனை தரதரவென இழுத்துச் சென்று அங்கிருந்த மரத்தோடு சேர்த்துக் கட்டி விட்டான்.

டிரைவரும் சர்தாருடன் வந்த சேவகனும் செய்வதறியாது நடப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். எவ்விதமான உணர்ச்சியும் வெளிப்படுத்தாது இதெல்லாம் எதிர்பார்த்ததுதான் என்பது போல சர்தார் அசைவற்று நின்றுகொண்டிருந்தான் கெரில்லா வீரனொருவன் சர்தார் அருகே வந்து அவன் கைபிடித்து ரஹ்மான் அருகே கூட்டிச் சென்றான்.

பைத்தியக்காரன்போல் சர்தாரை வெறித்தான் ரஹ்மான். பைத்தியங்கள் ஞானிகள் போல் என்பார்களே? என் கதி உனக்கும் தப்பாது என்கிறதோ அந்த பார்வை? தீவட்டி வெளிச்சம் அந்தப் பகுதியை மற்ற இடத்திலிருந்து தனித்துக் காட்டியது.

சர்தார் ரஹ்மானை ஏளனமாய்ப் பார்த்தபடி "ரஹ்மான்... உன்னை ஒன்றும் செய்யமாட்டோம். உனக்கு இன்னிக்கி எந்த கண்டனையும் கிடையாது. ஏன் தெரியுமா? நீதான் போய் நிஜாமிடம் சொல்லணும்... கோவிந்து எப்படிப்பட்டவன்னு. கோவிந்து ரஜாக்க

www.padippakam.com



னுக்கு ரஜாக்கன்... நிஜாமுக்கு நிஜாம்னு எடுத்துச் சொல்லி உன் ராஜலை எச்சரிக்கணும் நீ. உன் புது சர்தார் அதோ அந்தக் குழியிலிருந்து அல்லாவிடம் போகப் போறான். போய்ப் பேசறதா இருந்தா பேசு..." என்று தன் நீண்ட தாடியைப் பிய்த்து வீசியெறிந்தான்.

கடும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் தாக்க மரத்தோடு மரமாய் உறைந்து நின்றான் ரஹ்மான். அவன் எதிரில் இருந்தது...கெரில்லா கோவிந்து!

**(ஆகஸ்ட் 1948 'விசாலாந்திரா' மாத இதழிலிருந்து)**

www.padippakam.com

தென்னேடி சூரி

# தொடர்பில்லை

கூடாரங்களில் இடமின்றி வெளியே படுத்துக் கொண்டிருந்த சிப்பாய்கள் குளிர் தாங்காது வெடவெடத்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள். வாடைக் காற்று சிலீரென்று உடம்பைக் குத்த முக்கலும் முனகலுமாய் தூக்கம் வராது புரண்டு கொண்டிருந்தார்கள். விரிசல் கண்டிருந்த கட்டாந்தரை முள்படுக்கை போல் உறுத்தியது. துப்பாக்கிகள் ஒன்றுடன் ஒன்று உரசும் சத்தம் தெளிவாய்க் கேட்கும் நிசப்தம்.

சேனாவரத்தில் இருக்குமிடமெல்லாம்'விட்டு, 'மோதேமீம்' இந்தக் கரும்புத் தோட்டத்தை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சிப்பாய்களுக்கு புரியவில்லை. ஒரு மாத காலமாக இங்குதான் முகாம். சுற்று வட்டாரத்துக் கிராமப் பிரஜைகளெல்லோரும் நிஜாம் மீது கடும் சினத்துடன் கொந்தளிக்கும் கடலாய்ப் பொங்கிக்கொண்டிருக் கிறார்கள். அதனால் இந்த நிஜாம் சிப்பாய் களுக்குப் போதிய ஆகார தானியங்கள் சரிவர சப்ளை செய்யப்படவில்லை. வயிறாரச் சாப் பாடின்றி...நல்ல தூக்கமின்றி...இதே அவஸ்தை தான் தினமும்.

மற்ற கேம்ப்களில் சிப்பாய்கள் ஊருக்குள் நுழைந்து கொள்ளையடித்து வயிறு நிரப்பிக்

www.padippakam.com



கொண்டிருக்கிறார்கள். மாமிசமும் முட்டையுமாய் பகாசுரனாட்டம் விழுங்கி பயில்வான் போல் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணில் பட்ட பெண்களையெல்லாம் நாசம் செய்து குஷியாகக் காலம் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த கேடுகெட்ட, மோதேமீம் நடுக்காட்டில் பகலிலேயே புலி, சிறுத்தை நடமாடும் இந்த மலைகளில் இருத்தி சித்திரவதை செய்கிறானே என்ற எரிச்சல் ஏற்பட்டது சிப்பாய்களுக்கு இப்படி எத்தனை நாள் அவதிப்பட வேண்டும் என்றுகூடத் தெரியவில்லை.

'ருத்ரா' என்ற வார்த்தை அந்தப் படையினுள் அவ்வப்போது பஞ்சுப் பொதியில் விழுந்த நெருப்புத் துண்டு போல் கனகனவெனக் கனன்று வந்த வேகத்தில் தானாய் அணைந்துவிடும். அதன் அர்த்தம் என்னவென்று அவர்கள் யாருக்குமே தெரியாது. ஒருவேளை தெரிந்தாலும் அடுத்தவனுக்குச் சொல்லமாட்டான். ஆனால் சேனாவரத்தில் அந்த வார்த்தை கலந்து வந்தால்கூடப் போதும்... எல்லோரும் பயம் மேலிட கஜகஜவென நடுங்குவார்கள்.

விட்டுவிட்டு ஒலித்த 'பாரா உஷார்...!' தவிர வேறு சப்தமின்றி செத்து விழுந்து கிடப்பது போல் நிசப்தமாக இருந்தது சேனாவரம்.

மோதேமீமுக்கு தூக்கம் வரவில்லை. கூடாரம் முன்பு கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த தீக்கங்குகளைப் பார்த்தபடி தீவிரமாய் ஆலோசித்துக் கொண்டிருந்தான். தூரத்தில் இருக்கும் ஒரு பெரிய மலைப் பக்கம்கூட அவ்வப்போது பார்வை சென்றது. அங்கு இருட்டு தவிர எதுவும் தென்படவில்லை.

www.padippakam.com



## 2

நல்லகொண்டா ஜில்லாவில் நடுக்காட்டில் இருக்கிறது அந்த மலை. அமாவாசையோ என்னவோ காடெல்லாம் காரிருளின் ஆதிக்கம். விர்விர்ரென்று வீசிய ஊதக்காற்றின் ஓலம் பயமூட்டுவதாய் இருந்தது.

தோளில் துப்பாக்கி மாட்டிய இருவர் குசுகுசுவெனப் பேசியபடி மலைப் பாதை வழியே மேலேறிக் கொண்டிருந்தார்கள். பின்னாலிருந்தவன் முதலில் செல்பவனைக் கேட்டான்.

''அவங்க உங்க ஊருக்கு வந்து எத்தனை நாளாச்சு லம்பாடி?''

''மூணு மாசமிருக்கும்னு நெனைக்கறேன் சாப்...''

''சிவப்பா உயரமா இருப்பாங்களா?''

''ஆமா சாப்...நல்ல நெறத்தோட ஒசரமா அச்சா ஒங்களைப் போலவே இருப்பாங்க...''

''ஆமா...உறவுதானே...அதான்...''

மேற்கொண்டு எதுவும் பேசாமல் நடந்தார்கள்.

''லம்பாடி...!''

''உம்...''

''இன்னும் எவ்வளவு உயரம் இருக்கு...?''

''கொஞ்ச தூரந்தான். கிட்டக்க வந்துட்டம்...''

''நல்லதனமா சொல்லி உங்க கூட தங்க வச்சிருக்கலாமில்ல...துணைக்கு யாருமில்லாம தன்னந் தனியா அந்த மலைக் குகையில் இருக்கணுமா?''

www.padippakam.com



'கால்ல வுளுந்து கெஞ்சினோம் சாப். அந்தம்மா கேட்டாத்தான...பயமா இருக்காதான்னு கேட்டா, இதுக்கெல்லாம் பயப்பட்டா நவாப் ராட்சசங்களோட போராடறது எப்படின்னு ஆம்பிளைங்களைக் குத்திக் காட்டறாப்பல பேசிட்டாங்க. என்ன சொல்றது நாங்க?''

இருவரும் வேகமாய் நடந்து குகையை அடைந்தார்கள். பிரம்மாண்டமாய் வளர்ந்திருந்த புளிய மரங்கள் கோட்டைச் சுவர்கள் போல நின்றிருந்தன. மரங்களுக்கும் குகைக்குமிடையே வெளிப் பார்வைக் கெட்டாத வகையில் அமைந்திருந்த இடைவெளி வழியே குகை முகப்பை நோக்கி நடந்தார்கள்.

சின்ன மண்ணெண்ணெய் விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது. அந்த பழுப்பு வெளிச்சத்தை ஆதாரமாகக் கொண்டு உள்ளே நுழைய முற்பட்டபோது ராமிரெட்டியின் காலில் ஏதோ இடற... குனிந்து உற்றுப் பார்த்தபோது பூட்ஸ் கால் எனத் தெரிந்தது.

''இங்க படுத்திருக்கா. லம்பாடி...நில்லு...''

ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். ஆண்கள் அணியும் மிலிட்டரி உடுப்பு. காலில் பூட்ஸ் கூட அவிழ்க்க முடியாத அளவுக்குக் களைத்து போயிருக்கிறாள் போலும். அவள் இடுப்பில் குத்துவாளின் பிடி இருட்டில் மின்னியது. பக்கத்தில் துப்பாக்கி மருந்தின் நெடி குப்பென்று வீசி தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. அருகே கிடந்த துப்பாக்கியைப் பார்த்ததும் சற்று எட்டி நின்றான் லம்பாடி. நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருக்கும் அந்தத் தியாக மூர்த்தியின் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டான் ராமிரெட்டி. மலைப் பாறை மீதிருந்து அவள் தலையை எடுத்து தன் மடி மீது வைத்துக் கொண்டான். நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வை முத்துக்களை தம் மேல் துண்டால் ஒற்றியெடுத்து முன் கேசத்தை லேசாய் நீவி

www.padippakam.com



விட்டான். அவன் கண்களினின்று ஆறாய்ப் பெருகி வழிந்த நீர் இருட்டில் தெரியவில்லையாயினும் நெஞ்சுள் அலை அலையாய்ப் பொங்கும் துக்கத்தை அடக்க முயன்று தோல்வியுற்று வெளிக் கிளம்பிய கேவல் லம்பாடியின் காதில் விழுந்தது.

''அழாதீங்க சாப். அவங்க தூங்கட்டும் பாவம் அடிச்சுப் போட்டாப்ல தூங்கறாங்க. எத்தனை நாளாச்சோ கண்ண மூடி?''

வாடிப் போயிருந்த அவள் கன்னங்களை ஆதுரத்துடன் வருடிக் கொடுத்தான் கன்னம் கொதித்துக் கொண்டிருந்தது. அத்தொடுகை கொஞ்சம் விழிப்பு கொடுக்க பாம்பு ஏதாவது தீண்டுகிறதோ என்று பயந்தவளாய் சட்டென்று அக்கையை உதறிவிட்டு விதிர்விதிர்த்து எழுந்து நின்றாள். பக்கத்தில் மிலிட்டரி உடையில் இருந்த மனிதனைப் பார்த்து திகைப்படைந்தாள்.

''பயப்படாதே ருத்ரா... நான்தான்...'' அன்புடன் கையைப் பற்றினான் ராமிரெட்டி.

''...நீங்களா...?''

அடி வயிற்றினின்று துக்கம் பீறிட்டெழ...வாய் விட்டு அழுத அந்தப் பெண் ஆவேசத்துடன் புருஷனை அணைக்கப் போனவள் சூடுபட்டாற்போல் சரேலென கைகளைப் பின்னுக்கிழுத்துக் கொண்டாள். தூரத்தில் சென்று நின்று கொண்டு மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

ராமிரெட்டி அருகே சென்று அன்புடன் அவள் தோள் தொட்டு தன்னோடு சேர்த்து அணைத்துக் கொள்ள முற்பட்டபோது, ''வேண்டாம்...தொட வேண்டாம்'' என்று அரற்றியபடி அவன் கைகளை விலக்கி எட்டி நின்றாள்.

''நாய் நக்கிய எச்சில் இலை நான். உங்கள் கை என் மேல் பட அருகதை இல்லாதது. நான் செத்துப் போனலு

www.padippakam.com



நெனைச்சுக்குங்க. உங்க முகத்துல விழிக்கக்கூட எனக்குத் தகுதி இல்லை. போய்டுங்க மாமா. இந்த இடத்தை விட்டுப் போய்டுங்க...'' கைகளால் முகம் பொத்திக் கேவினாள்.

''என்ன ருத்ரா இது...பைத்தியமா உனக்கு?''

''அன்னிக்கே செத்துட்டேன் நான். இந்த உடம்பு நானில்லே. இப்ப நான் பிசாசு. பேய் பிடிச்சு திரிஞ்சிட்டி ருக்கேன். அவன் தலையைச் சீவி உன் காலடியில போட்டு பழி தீர்த்துக்கறேன். அப்புறம் நிம்மதியா செத்துப் போவேன். அதுவரை இந்த மலைக் காட்டில் இருட்டில் பிசாசாட்டம் திரிஞ்சிட்டிருப்பேன். என் வாழ்க்கை நாச மாயிட்டது. இப்படித்தான் காலம் தள்ளணும்னு என் தலையில் எழுதி வச்சிருக்கு. நீங்க திரும்பிப் போங்க. கையெடுத்துக் கும்பிடறேன். என்னை மறந்துடுங்க. இனிமே நாம்...'' மேலே பேச முடியாது நெஞ்சு வெடித்து விடுவது போல் அழுதாள்.

''சின்னி...''...

''என் தெய்வம் என்னை ஆதரிக்கும்னு தெரியும் எனக்கு. என்னால் முடியாதே! அந்தப் பிசாசு... அந்த நாய் எச்சில்படுத்திய இந்தக் கன்னங்களை... இந்த மார்பை...இந்த உடம்பை உங்களுக்கு எப்படி... இந்த எச்சில் உடம்பு உங்களுக்கு வேண்டாம். மாமா... இந்த சதைக் கூளம்...இந்த மாமிசப் பிண்டம்...ச்சீ...ச்சீ...''

மை அப்பியது போன்ற இருள்...அவள் முகம் தெரிய வில்லை. அவள் பேசிய ஒவ்வொரு சொல்லும் தீக்கங்கு கள் போல் தெறித்து விழும் வேகம் கண்டு பதறிப் போன வனாய் அருகே சென்றான் ராமிரெட்டி.

கையிலிருந்த குறுவாளினால் தன் கன்னங்களை சதை சதையாக கிழித்துக் கொண்டிருந்தாள்.

www.padippakam.com



''ஆ...சின்னி...சின்னி...ஐயோ'' அலறிக் கொண்டே அவள் கையிலிருந்த குறுவாளைப் பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டான். ஒருகணம்...ஒரே ஒரு கணம் அவன் பக்கம் பார்வையை ஓடவிட்டு சரேலென ஓடி இருளில் மறைந்தாள்.

மரங்கள்... மலைகள்... குன்றுகள்... புதர்கள் எனப் புகுந்து புகுந்து தேடினார்கள். அவள் ஜாடையே தெரிய வில்லை.

தீக்குச்சி உரசி கையிலிருந்த தீவட்டியை ஏற்றினான். லம்பாடி. அக்னிப் பிசாசு போல் பகபகவென்று கொழுந்துவிட்டெரிந்த தீவட்டி இருள் மலைகளுக்கு ரத்தத்தில் தோய்த்தெடுத்தது போல் சிகப்புச் சாயம் பூசியது

## 3

கூடாரம் முன்பு நின்றுகொண்டு பைனாகுலர்ஸ் வழியே அந்த மலைப் பக்கமே நீண்ட நேரமாய் பார்த்துக் கொண்டிருந்தான் மோதேமீம்.

செக்கச்செவேலென்ற தீப்பிழம்பு!... அதிர்ந்து போனான்.

உடம்பின் உதிரமனைத்தும் உறைந்துபோன நிலையடைந்தான். கலவரத்துடன் கூச்சலிட்டான். ''ஜீ...!!''—

கூடாரத்தினுள் பாட்டில் பாட்டிலாய் விழுங்கிக் கொண்டிருந்த வெள்ளைக்கார சார்ஜெண்ட் மிஸ்டர் உல்ஃப் வெளியே வந்தான். (கூலி வாங்கிக் கொண்டு மனிதர்களைக் கொன்று குவிக்கும் இப்படிப்பட்ட வெள்ளைக்கார பெரிய மனிதர்கள் இன்னும் நிறைய பேர் இருக்கிறார்கள் நிஜாம் படையில்) அவன் கையிலிருந்த

www.padippakam.com



பாட்டிலை வாங்கிக் கொண்டு பைனாகுலர்ஸைக் கொடுத்தான் மோதேமீம்.

அவன் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்த வெள்ளைக்காரன் ''வாட்...?'' என அலறினான். பைனா குலர்ஸை மோதேமீம் மீது எறிந்துவிட்டு உள்ளே ஓடி ரைபிள் எடுத்துக் கொண்டு பாய்ந்து சென்று குதிரை மீது ஏறிக்கொண்டு காது செவிடாகும்வண்ணம் விசிலை ஊதினான்.

குதிரைப்படை மலையை நோக்கி விரைந்தது. குதிரை களின் குளம்பொலிகள் எதிர்ப்பட்ட சின்னச்சின்ன குன்று களிலும் மலைகளிலும் மோதி எதிரொலித்தது. காற்றில் மிதப்பது போல் நாலு கால் பாய்ச்சலில் பறந்தது. மலைச் சரிவினின்று காட்டுப் பிரதேசத்திற்குள் காட்டாற்றுச் சீற்றத்துடன் பிரவேசித்தது.

கொஞ்சம் வயதேறிய ரசூல் தன் மருமகன் அருகே சென்று அவன் குதிரையின் கடிவாளத்தை லாவகமாய்ப் பிடித்திழுத்து பாதை விலகச் செய்தான்.

''மாமா...''

''உஷ்...''

இரண்டு செகண்டு நேரத்தில் மற்ற குதிரைகள் ரிவ் வென்று முன்னுக்குச் சென்றுவிட்டன. இரண்டு குதிரை களையும் புளியந்தோப்புக்குள் மெல்ல நடத்திச் சென் றான் ரசூல். தோப்பின் அடர்த்தியான பகுதிக்குச் சென்றதும் இறங்கி, இளைஞனையும் இறங்கச் சொன் னான். இரண்டு குதிரைகளையும் ஒரு மரத்தில் கட்டி விட்டு ஒரு பெரிய பாறைமீது 'அல்லா...' என்றபடி மல்லாக்கப் படுத்துக் கொண்டான்.

''இதெல்லாம்... மாமா...'' ஒன்றும் புரியாமல் திகைத்துப் போயிருந்தான் காசிம்.



படிப்பகம்

www.padippakam.com



''ஒண்ணுமில்ல... உக்காரு.''

''ஏன்... போகவேணாமா?''

''எங்க... சாவறதுக்கா... அதான் அவங்க போறாங்களே.''

''சாவறதா?''

''வந்து... அந்த ருத்ரா...''

''ஆ...'' வெலவெலத்துப் போனான் காசிம்.

''மொதல்ல உக்காரு சொல்றேன்.''

மருண்ட பூனைக் குட்டியாய் மாமனருகே உட்கார்ந்துக் கொண்டான் காசிம். அந்த வார்த்தை கேட்ட மாத்திரத்தில் அவன் உடம்பெல்லாம் நடுங்கி ரோமக் கால்கள் குத்திட்டு நின்றன. காரணம் அறியாத பீதி அது. 'ருத்ரா' என்ற சொல் காதில் விழுந்ததுதான் தாமதம், படைவீரர்கள் சரேலென முகம் மாறி தங்களுக்குள் குசுகுசுவெனப் பேசிக்கொள்வதை பலதடவை கவனித்திருக்கிறான். என்ன விஷயமென யாரைக் கேட்டாலும் 'ஒண்ணுமில்ல'ன்னு மழுப்பிவிட்டு நழுவிவிடுவார்களே தவிர யாருமே விஷயம் இன்னதென்று சொல்ல முன் வந்ததில்லை. ஆனால் அந்த வார்த்தை காதில் விழ நேர்ந்தால் காம்பிலுள்ள ஒவ்வொரு வீரனும் கடும் அதிர்ச்சி தாக்க உலுக்கி விழுவது தப்பாது. ஐந்தாறு நாட்களுக்கு முன் வரங்கல் பட்டணத்திலிருந்து தருவித்த 'ஸ்பெஷல்' குதிரைப் படை வீரர்களுள் அவனும் ஒருவன். தாய் மாமன் இந்த காம்பில் இருப்பதால் உற்சாகத்துடனே வந்தான். வந்து கொஞ்ச நேரத்திலேயே தெரிந்துவிட்டது இங்குள்ள படை ஒரு பயங்கரமான சூழ்நிலையல் இருப்பது. எதிரே எருமை வாகனத்தின்மீது எமன் நின்று கொண்டிருப்பதுபோலவும் எந்த நிமிஷமும் கயிற்றை கழுத்தில்வீசலாம் என்பதுபோலும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

www.padippakam.com



''மாமா.''

''... ... ...''

''ருத்ரான்னா என்ன மாமா?''

''சாவுடா... கொழுப்பேறி விஷ சர்ப்பத்தின் ஜோலிக்குப் போனான். இப்ப நடுங்கிச் சாவறான். அவ கையாலதான் அவனுக்கு சாவு''

''யார் மாமா அந்த விஷ சர்ப்பம்?''

''ருத்ரா...''

''ருத்ரான்னா?''

''சொல்றேன். எங்க ஊர் தேஷ்முக் அந்த நாகி ரெட்டி நாயைத் தெரியுமா?''

''தெரியாம என்ன... நம்ம காம்பிலேயே இருக்கானே?''

''திருட்டுப் பய. என் மூணு ஏக்கரா நெலத்தை கொள்ளையடிச்சிட்டான்.''

''உன் நெலத்த அவன் ஏன் கொள்ளையடிக்கணும்?''

''உங்காத்தா கல்யாணத்துக்காக உங்கப்பன் அவன் கிட்ட நூறு ரூபாய் கடன் வாங்கினான். எவ்வளவு நூறு கட்டினாலும் இன்னும் அந்தக் கடன் தீரல. கை நீட்டி காசுவாங்கிட்டு கணக்குல வைக்கறதில்ல. கடன் தீர்ந்த பாடில்ல. குடுத்த பணமெல்லாம் தண்டமாச்சு. கடன் வட்டிமேல் வட்டியா ஏறி பதினஞ்சு நூறுக்கு கணக்கு காட்டறான்.''

''தாவா போடக்கூடாதா மாமா?''

''ஹஹ்ஹா...'' பெரிதாகச் சிரித்தான் ரசூல். ''தாவா போட்டா அவன்தான் விசாரிக்கணும். அவ்வளவு எதுக்கு? கடைசி காலத்தில் கட்டின காசுக்கு ரசீது தர

www.padippakam.com



மாட்டேன்னு சொன்னானே தவிர தன்னுடைய கலப்பை கள் அனுப்பி என் நெலத்தை உழச் செய்தான்.'

''முஸ்லிம் ராஜ்யத்தில் இவன் அதிகாரம் எதுக்கு மாமா?''

''இதெல்லாம் பார்த்துட்டுதான் இந்த நிஜாம் நவாபு... ஜாகிர்தாருங்க... போலீஸ்காரங்க இவங்கல்லாம் ஒண்ணா சேர்ந்துகிட்டு நம்ம ரத்தத்தை உறிஞ்சிட்டிருக்காங்க.''

''என்ன மாமா இது. முஸ்லிம் நவாவைப் பத்தி இவ்வளவு மரியாதைக் குறைவா பேசறிங்களே... நல்லால்ல இது.''

''எள ரத்தம்... ஒனக்கு இதெல்லாம் புரியாது. வரங்கல் காம்பில் நவாபின் ஏஜெண்டான அந்த 'இத்திஹ்தூல்' நிஜாம் மரியாதையெல்லாம் நல்லா கரைச்சிக் கொட்டியிருக்கான் ஒனக்கு.''

''மாமா...''

''கத்தாத. நான் சொல்றதையெல்லாம் கவனமா கேட்டுக்க. அப்புறம் தலைகீழா மாறிடுவே நீ. எங்க ஊர்ல ஷரீத்னு ஒருத்தன். நம்ம ஆள்தான். அரைவயிறு சோத்துக்குக்கூட கதியில்லாதவன் பாவம். அவனுக்கு இமாம்பீன்னு ஒரு பொண்ணு. வயசுக்குவந்த பொண்ணு. அவமேல ஒரு கண்ணு இந்த தேஷ்முக்குக்கு. அவளை வழிக்குக் கொண்டுவர எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டான். அந்தப் பொண்ணு மசியல. கடத்திட்டு வரச் சொல்லி குண்டர்களை அனுப்பி வச்சான். அவர்கள் கத்தியும் கம்புமாய் அந்த ஷரீத் குடிசையை நோக்கி பெரிய ஊர்வலம் போல் புறப்பட்டார்கள். எங்க ஊர்ல ராமிரெட்டின்னு ஒரு பெரிய மனுசன்... படிச்சவர். இந்த அக்கிரமத்தைக் கண்டு கொதித்தெழுந்து ஊர்ப் பெரிய மனுசங்களை ஒன்னு சேர்த்தார். ''பார்த்துக்கிட்டு

www.padippakam.com



சும்மா இருக்கீங்களே. இன்னிக்கு அந்த பொண்ணை குறிவச்சாங்க. நாளைக்கு உங்க பொண்ணு... எம் பொண்ணு... வேற பொண்ணுங்க. இந்த அக்கிரமம் நடந்திட்டிருக்க வேண்டியதுதானா... தட்டிக்கேட்க யாரு மில்லேங்கற தைரியம் அவனுங்களுக்கு.''

ஊர் திரண்டு அந்தக் குண்டர்களைப் பிடித்து மரத் தில் கட்டி அடிச்சாங்க. இனி இப்படியெல்லாம் நடந்தா நடக்கற கதையே வேறுதானு தேஷ்முக்கை பலமாய் எச் சரிச்சாங்க.

அவன் என்ன செஞ்சான் தெரியுமா? உடனே வரங்கல் போய் இந்த மோதேமீமுடன் பேசி கொஞ்சம் லஞ்சம் குடுத்து அவனையும் இன்னும் கொஞ்சம் சிப்பாய்களை யும் ஊருக்கு அழைச்சிட்டு வந்தான். ஊர்ல இவங்க செய்யாத அக்கிரமம் இல்ல. வீடுகளில் புகுந்து கொள்ளை யடிச்சாங்க. ஊர்ப் பெண்ணுங்களை கதறக் கதற நாசப் படுத்தினாங்க. ஒன் தங்கச்சிய கூடத்தான். என்ன கேட் டுட்டிருக்கயா? உன் தங்கச்சியகூட...''

''ஆஹ்... எனக்கு ஏன் சொல்லியனுப்பல மாமா?''

''எதுக்கு? அவமானத்தால நெஞ்சு வெந்து நாங்க செத்தது போதாதாக்கும், அது அவமானம் தாங்காம எந்நேரமும் குமுறிக்குமுறி அழுதிட்டிருக்கு. இல்லேன்னா பைத்தியம் பிடிச்சாப்பல வானத்தை வெறிச்சிட்டிருக்கும். நாங்கள்லாம் எவ்வளவு சமாதானப்படுத்தியும் புண்ணிய மில்ல. அவ புருசனை தொடவுட மாட்டேங்கறா. அவன பார்த்தால் ஓடி ஒளிஞ்சிக்கிறா. அவ ஒடம்புமேல அவளுக்கே அருவெறுப்பு வந்துடுச்சி. எப்ப பார்த்தாலும் ஆறு கொளம் கெணறுன்னு ஓடறா. ஒங்க அத்தைக்கு அவளைக் காப்பாத்தி வக்கறது பெரும் பாடாயிருக்கு.''

''அவ புருஷன் எங்க மாமா? அதான் மச்சான்...''

www.padippakam.com



''எங்க ஊர்க்காரங்கள்லாம் எங்க இருக்காங்களோ அவனும் அங்கதான் இருக்கான்.''

''அதென்ன மாமா?''

''அவங்க ஊரெல்லாம் கொள்ளையடிச்சதில்லாம கொளுத்திட்டாங்க பாவிங்க. ஜனங்கள்லாம் காட்டுக்கு ஓடிட்டாங்க. ராமிரெட்டி சாபின் தலைமைல இந்த தேஷ்முக் படுபாவியையும் மோதேமீமையும் துண்டுத் துண்டாய் நறுக்கிப் போட உறுதி எடுத்திட்டு தயாரா இருக்காங்க. இன்னியோ நாளைக்கே முடிஞ்சிடும் இந்த சம்ஹாரம்.''

''ஆமாம் இத்தனை சொல்லிவிட்டு அந்த ருத்ரா யாருன்னு சொல்லலியே?''

''ராமிரெட்டி சாபின் பெண்சாதி, அந்த புண்ணிய வதியைக்கூட மோதேமீம் ராட்சசன் வுட்டுவைக்கலே. அவங்க என்னானாங்கன்னுகூட யாருக்கும் தெரியாது. இப்ப இந்த பிரதேசமெல்லாம் அவங்க பேர்தான் எதிர் ஒலிக்கிறது. இந்த காட்ல இருக்கற லம்பாடிங்கள்லாம் அவங்களை ஒரு தேவதையா கொண்டாடறாங்களாம். பாவம் ராமிரெட்டி சாப். ராத்திரி பகலா தேடிட்டிருக் காரு. கெடச்சுட்டா எவ்வளவு நல்லா இருக்கும். ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ற நாளுக்காக நாங்கள் லாம்..'' ரசூல் முடிக்குமுன் காசிம் வியப்புடன் கேட்டான்.

''உங்க ஊர்க்காரங்கள்லாம் ஒண்ணா சேர்ந்து அவங்களை சித்திரவதை செய்து கொல்லணும்னு துடிச் சிட்டிருக்கறப்ப நீ மட்டும் இன்னும் இந்தப் படையிலயே ஏன் இருக்க மாமா?''

''துப்பாக்கி கொள்ளையடிக்கத்தான்...'' காசிமுக்கு புரியவில்லை கேசத்தில் விரல்விட்டு அளைந்தபடி குழப் பத்துடன் உட்கார்ந்திருந்தான்.

www.padippakam.com



ரசூல் எழுந்து தன் குதிரையை நடத்திவந்து காசிம் முன் நிறுத்தினான்.

"இப்படி வா... இத பார்த்தயா?" குதிரை மீதிருந்து தொங்கிக் கொண்டிருந்த ஒரு மூட்டையைக் காண்பித்தான். அதில் அரை டஜன் துப்பாக்கிகள் இருந்தன.

"இத எங்களாளுங்ககிட்ட சேர்த்துட்டு வரேன். நீ இங்கேயே இரு."

"இரு நம்ம ரெண்டு துப்பாக்கியைக்கூட எடுத்திட்டுப் போ மாமா..."

"அது நம்மகிட்டதான் இருக்கணும். நம்ம கையில துப்பாக்கி இல்லேன்னா அவங்களுக்கு சந்தேகம் வரும்."

"நாம மறுபடியும் படையில போய்ச் சேர்ந்துக்கணும் கறயா? நம்மாளுங்ககிட்ட போய்ட்டா என்ன?"

"நாம அங்க போய்ச் சேரலன்னா துப்பாக்கி எப்படி கெடைக்குமாம்?"

காசிம் பதில் சொல்லவில்லை.

"ஒன் பையில் இருக்கற தோட்டாக்களை என் பையில் போடு. நாளைலேர்ந்து கெடைக்கற துப்பாக்கியெல்லாம் நதிக்கரை ஓரமாய் இருக்கற ஆலமரத்தடில குழிதோண்டி புதைச்சி வச்சா சமயம் கெடைக்கறப்ப நம்ம ஆளுங்களிடம் சேர்த்துடலாம். நீ இங்கேயே இரு. அரைமணி நேரத்தில் வந்துடறேன்..."

"நானும் வர்றேன் மாமா. தங்கச்சியைப் பார்க்கணும்."

"வேணாம். ஒம்மேல எனக்கு நம்பிக்கை வரணும்."

"தங்கச்சிய கெடுத்த படுபாவிங்களுக்காக நம்மாளுங்கள மோசம் செய்வனா மாமா..."

www.padippakam.com



''காசிம்... சொன்னா கேக்கணும். எந்த விஷயத்துலயும் அவசரப்படறது என் வழக்கமில்ல. கொஞ்சம் நிதானம் காட்டினா வரப்போற நஷ்டம் எதுவுமில்ல.''

குதிரையில் ஏறி காற்றை கிழித்துக்கொண்டு விரைந்தான்.

தன் குதிரையை மரத்தில் கட்டிவிட்டு பாறையில் சாய்ந்து உட்கார்ந்து மாமன் சென்ற திக்கைப் பார்த்தபடி யோசனையிலாழ்ந்தான் காசிம்.

தொலைவில் நடுக்காட்டில் இருந்த அந்த மலைப் பக்கமிருந்து கிளம்பிய துப்பாக்கி சத்தம் இடிமுழக்கம் போல் கேட்டது.

மோதேமீம் காம்பில் கூடாரத்தைச் சுற்றியிருக்கும் உபகரணங்களும் கலப்பைகளும் பொசுங்கிச் சாம்பலானது. சிறிது நேரம் தெரிந்த அந்த நெருப்பு வெளிச்சத்திற்குப் பிறகு மீண்டும் இருள் படர்ந்தது,

உல்ஃப் தலைமையில் கிளம்பிச் சென்ற படைவீரர்கள் போக எஞ்சியிருந்தவர்கள் 'சாவு நெருங்கிக் கொண்டிருக்கிறதோ' என்ற பீதியுடன் இருப்புக் கொள்ளாது புரண்டு கொண்டு இருந்தார்கள். ஓரிருவர் எழுந்து பீடித் துண்டு கொளுத்தி இரண்டு இழுப்பு இழுத்து அணைத்துவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டார்கள்.

செய்வதறியாது கூடாரத்திலிருந்து வெளியே... மறுபடி கூடாரம்... மீண்டும் வெளியே... என குட்டிபோட்ட பூனையாய் அலைந்து கொண்டிருந்தான் மோதேமீம்.

விடிந்து கொண்டிருந்தது. தொலைவில் மலைப்பக்கத்திலின்று துப்பாக்கி வெடிச்சத்தம் இன்னும் தீவிரமாய்க் கேட்டது.

டேபிள் மீதிருந்த கிளாஸை கையிலெடுத்துக் கொண்டான்... பாட்டிலிலிருந்த சாராயத்தை எடுத்து

படிப்பகம்

www.padippakam.com



கிளாஸை நிரப்பினான் பணியாள். கடகடவென்று ஒரே விழுங்கில் காலிசெய்து சிகரெட் கொளுத்திக் கொண்டு நாற்காலியில் விழுந்தான்.

திடீரென்று கூடாரங்களிடையே 'தன்...தன்'என துப்பாக்கி அடிகள் கேட்டன.

''ருத்ரா...!'' சிங்கத்தைப் பார்த்து மிரண்டு போன யானை துதிக்கையை உயர்த்திப் பிளிறிடுவதுபோல் ஒரு வீரன் ஆகாயம் அதிருமாறு அலறினான்.

தூக்கிவாரிப் போட விலுக்கென்று எழுந்தான் மோதேமீம்.

கூடாரங்களைச் சுற்றி படுத்திருந்த வீரர்கள் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து அங்குமிங்குமாய் ஓட... களேபரமாக இருந்தது. இருட்டில் என்ன நடந்தது என சரிவரத் தெரியவராமல் குழப்பமும் பயமும் மிரட்சியும் ஒருசேரத் தாக்கியதில் நிலைகுலைந்து போன வீரர்கள் ஒருவரையொருவர் சுட்டுக்கொண்டு வீழ்ந்தனர்.

மேஜைமீதிருந்த மிஷின்கன்னை எடுத்துக்கொண்டு கூடாரத்தின் முகப்பு பக்கமாய் இரண்டடி வைத்திருக்க மாட்டான்... கூடாரம் பின்பாகம் டர்ரென்று கிழியும் சத்தம்... பின்னால் திரும்பிப்பார்ப்பதற்குள் அவன் தலை தரையில் விழுந்து உருண்டது.

தரையில் விலுக் விலுக்கென துடித்துக்கொண்டிருந்த அந்த மோதேமீம் நெஞ்சுக் கூட்டின்மேல் உட்கார்ந்து குறுவாளால் பாளம் பாளமாய்க் கிழித்தாள் ருத்ரா. பீறிட்ட ரத்தத்தை தலை, முகம், கழுத்து என உடம்பு முழுக்க வெறிவந்தவளைபோல் அப்பிக்கொண்டாள். அவன் தலையைக் கையிலேந்தி உயர்த்திப் பிடித்து சூன்யத்தை வெறித்தபடி 'ஹஹ்ஹ்ஹா...' என பேய் பிடித்தவளைப் போல் உரக்கச்சிரித்தாள். 'ஓ' வென ஓலமிட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



ரத்தம் சொட்டும் கத்தி வலது கையிலும் அவன் தலை இடது கையிலுமாய் பயங்கரமாய்க் கூச்சலிட்டபடி வெளியே வந்தாள். கூடாரம் முன்னிருந்து புகைந்து கொண்டிருந்த அணைந்தும் அணையாததுமான நெருப் புக்கட்டைகளில் சிப்பாய்களின் தலைகள் வெந்துகொண் டிருந்தன.

உதிரத்தை உறையவைக்கும் இந்தக் கொடூரமான காட்சிகளையெல்லாம் கண்டு நெஞ்சடைத்துவிடும் போன்ற பீதிக்காளாகி மேஜைக்கடியில் ஒளிந்துகொண்ட பணியாள் மூச்சுவிடக்கூடப் பயந்து செத்த பிணமாய் விறைத்துப் போனான்.

தொலைவில் நடுக்காட்டில் மலையைச் சுற்றி நடந்து கொண்டிருந்த போராட்டம் தொடர்ந்து கொண்டி ருந்தது நெருப்பு மலைகள் போல் தீவட்டிகள் ஏற்றியபடி வந்த மற்றொரு பெரிய மக்கள் படை கூடாரங்களைக் கொளுத்தி துவம்சம் செய்யலாயிற்று.

நிஜாம் படையில் செத்தவர்கள் போக எஞ்சியவர்கள் பின்னங்கால் பிடரியில்பட ஓட்டம் பிடித்தார்கள். கோடாரியைப் பிடித்துக்கொண்டு மோதேமீம் கூடாரத்தை நோக்கி ஓடிவந்தான் ராமிரெட்டி. யாரு மில்லை அங்கு.

''என்ன தேடறீங்க? இதோ...'' மோதேமீம் தலை அவன் காலடியில் உருண்டு வந்தது.

ரத்தத்தில் நனைந்த குறுவாள் ருத்ரா கையிலிருந்து நழுவி விழுந்தது. தள்ளாடியபடி வந்தவள் புருஷன் பாதங்க ளருகே விழுந்துவிட்டாள். சல்லடைக் கண்களாய் உடம் பெங்கும் காயங்கள்...ரத்தம் வழிந்துகொண்டிருக்கும்... ரணங்கள்...புண்கள்...

''ருத்...ரா...?'' அழுதுகொண்டே அவள் தலையை தன் மடிமீது இருத்திக் கொண்டான் ராமிரெட்டி.

www.padippakam.com



''என் காலம் முடிஞ்சிட்டது. இதோ...இதோ...கிட்ட வந்துட்டது. அந்த நிஜாம் ராட்சசன் ஆட்களைவிட்டு நடுத்தெருவில் சேலையை உருவி மானபங்கம் செய்...'' முடிக்காமல் விழிகள் மூடிக்கொண்டன.

ஆவேசம் வந்தவனாய்ப் பொங்கிப் புறப்பட்டான் ராமிரெட்டி. கையில் ருத்ரா நழுவவிட்ட குறுவாள். ''அவனையும் அவன் அட்டூழிய ஆட்சியையும் ராஜ்யத்தையும் இந்த பட்டாக் கத்திக்கு பலியாக்குகிறேன். அவனுடன் நமக்கு இனிமே சம்பந்தம் இல்லை...'' விண் எட்டக் கோஷமிட்டான்.

''சம்பந்தம் இல்லை...''—என்று சுற்றியிருந்த மக்கள் படை சமுத்திர கோஷமாய் கர்ஜனை செய்தது.

**(ஏப்ரல் 48 'அப்பூதயா'விலிருந்து)**

படிப்பகம்

www.padippakam.com

தும்மல வெங்கடராமய்யா

# நீங்க ஜெயிப்பீங்க..!

கிழக்கு வெளுக்கவில்லை. இருளின் ஆதிக்கம் இன்னும் மிச்சமிருந்தது. மல்லாரெட்டி குடியிருப்புப் பகுதியில் போலீஸ்காரர்களும் சிப்பாய்களும் வந்திறங்கினார்கள். அவர்கள் ஊருக்குள் அடிவைத்ததுதான் தாமதம். ஊர் மக்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்தார்கள். உடம்பில் கொஞ்சம் வலுவுள்ளவர்கள் ஆண் பெண் வித்தியாசமின்றி முன்னால் ஓடினார்கள். ஆக்ரோஷமாய் தாக்கிக் கொண்டார்கள் ஒருவரையொருவர் வெறி பிடித்தவர்கள் போல் அடித்துக்கொண்டார்கள். கடைசி மூச்சைக்கையில் பிடித்துக்கொண்டிருந்த வயோதிகர்கள் மட்டும் வீட்டுக்குள் முடங்கி யிருந்தார்கள்.

டாம் டாம் என்று துப்பாக்கி வெடிக்கும் சத்தம்...

*அடிகள்...உதைகள்...மானபங்கங்கள்...!!*

*அழுகை ... கூக்குரல் ... ஓலங்கள் ... அலறல் கள்...!!!*

இத்தனை அமர்க்களத்தில் ரங்கம்மாவின் பிரச்சனை குறித்து யாருக்கு அக்கறை? அவ

www.padippakam.com



பெண்ணுக்கு வியாதி வந்தால் என்ன, வலி வந்தால் என்ன...? யாருக்கென்னபோயிற்று?

டக்...டக்...டக்...

போலீஸின் பூட்ஸ் சப்தம் கேட்க...ரங்கம்மா பயத்துடன் தன் பெண் படுத்திருந்த கட்டிலருகே ஓடினாள்.

டக்...டக்...டக்...

இம்முறை அடிகள் இன்னும் உரக்கக் கேட்டது. தன் வீட்டை நெருங்கிவிட்டது போலீஸ்.

விசில்கள்—கூச்சல்கள்...

''பிடி...பிடி...பிடிங்க...பிடித்துக் கொள்ளுங்க...''

வெடவெடவென நடுங்கிக்கொண்டிருந்த பெண்ணின் நடுக்கம் நின்றது. அவள் தலை முதல் கால் வரை இழுத்துப் போர்த்திவிட்டு 'ஓ' வென அழ ஆரம்பித்தாள் ரங்கம்மா.

போலீஸ் வீட்டிற்குள் வந்தேவிட்டது.

''ஐயோ...மவளே...என் தங்கமே...நான் என்ன செய்வேன்...'' வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதாள் ரங்கம்மா.

''ஏய் கிழவி...எந்தக் கழுதையாவது இந்தப் பக்கம் வந்தானா...? அதிகாரமாய்க் கேட்டான் ஒரு போலீஸ்காரன்.

''அநியாயம் செஞ்சிட்டுப் போய்ட்டியேடி...நான் எங்க போவேன் என் தங்கமே...ஐயோ...எனக்கு வரக்கூடாதா இந்தச்சாவு...'' பொங்கிப் பொங்கிக் கத்தினாள் ரங்கம்மா.

''ஏய் கிழவி...ஒன்னதான்...எவனாவது வந்தானா இங்க?'' கைத்தடியை தரை மீது ஓங்கியடித்தான் இன்னொருவன்.

www.padippakam.com



''எனக்குத் தெரியாதய்யா. தெய்வமே...என்னை எடுத்திட்டுப் போகக் கூடாதா? என் தெய்வமே...அவ அப்பன் வந்து என் மக எங்கன்னு கேட்டா என்ன சொல்ல தெய்வமே...?'' ரங்கம்மா ஒப்பாரி வைத்தாள்.

இண்டு இடுக்கு விடாமல் வீடெங்கும் தேடினார்கள். தரித்திரம் பிடித்த கிழவி வீட்டில் கொள்ளையடிக்கக்கூட எதுவுமில்லே...' முணுமுணுத்தார்கள்.

''கொக்கரக்கோ ... ?'—கூடையின் கீழ் கோழி கூவிற்று.

போலீஸ்காரன் படீரென கூடையை ஒரு உதைவிட்டு கோழியை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டான்.

''ஐயோ...பெத்த குழந்தையாட்டம் வளர்த்தனே இந்தக்கோழிய...அதுகூட இல்லாம போச்சே...ஐயோ... அம்மா...'' மகள் முகம் மீது முகம் வைத்து அழுதாள் ரங்கம்மா.

''கோழி வேணும்...பொண்ணும் வேணும்... ஐயோ...'' ஒரு போலீஸ்காரன் கேலி செய்தான்...கிண்டலடித்து பொய்யாய் அழுதான்.

''நெஞ்சுல நெருப்பைக் கொட்டிட்டு போய்ட்டயே... நான் என்ன செய்வேன்...செல்வமே...!' மகள் மீது புரண்டு புரண்டு அழுதாள் ரங்கம்மா.

''விட்டுடுங்க சனியன...'' கமாண்டர் ஆணையிட... மீண்டும் கேலியாய்ச் சிரித்தபடி சென்றுவிட்டார்கள் போலீஸ்காரர்கள்.

ரங்கம்மா அழுதுகொண்டேயிருந்தாள்.

டக்...டக்...டக்...

பூட்ஸ் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகத் தூரமாகி ஊராரின் அழுகை, அலறல்...கூக்குரல்...ஓலங்களிடை அடியோடு அடங்கிவிட்டது.

www.padippakam.com



பொழுது புலர்ந்தது.பளிச்சென வெளிச்சம்பரவியது. ராஜாரெட்டிக்கு தெளிவு வந்தது. நினைவுத்திரையில் ஒவ்வொரு விஷயமும் இலேசாய் எட்டிப்பார்த்தது. மக்களுக்கும் போலீஸ் மற்றும் சிப்பாய்களுக்குமிடை யுத்தம் நடந்தது... வீராவேசமாம் தன்னைச் சேர்ந்தவர் வர்கள் எதிரிகளுடன் மோதியது... எல்லாம் நினைவுக்கு வந்தது. ஆனால் என்ன லாபம்? ஆயுதம் தாங்கியவர்கள் அவர்கள் நிராயுதபாணிகள் இவர்கள்.ஆயுதங்கள் மட்டும் இருந்திருந்தால்...

துப்பாக்கி குண்டு துளைத்துச் சென்ற முழங்கையைப் பார்த்துக்கொண்டான் ராஜாரெட்டி.இந்த காயம் மட்டும் ஏற்படாதிருந்தால் இந்தக் கைபலத்திற்கு இன்னும் எத்தனை பட்சிகள் வீழ்ந்திருக்குமோ? கண்கள் மூடியபடி யோசனையிலாழ்ந்தான்.

''அய்யா... இதகுடி...''

கண்திறந்த ராஜாரெட்டி நன்றியுடன் அவளைப் பார்த்தபடி இடது கையால் பாலை வாங்கிக் குடிக்கலா னான். ஏதேதோ பச்சிலையெல்லாம் கொண்டுவந்து தாயத்தில் வைத்து கட்டிவிட்டு அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

இருந்தாற்போலிருந்து ராஜாரெட்டிக்கு உடம்பெல் சிலிர்த்தது. நெஞ்சில் இனம் புரியாத கலவரம் மூண்டது.

''அம்மா...!''

இதயத்தைத் துளைத்துக் கொண்டு போன அந்த அழைப்பில் மெய் மறந்தாள் ரங்கம்மா. அப்போது அந்த இளைஞன் அவள் பார்வை ஒரு சின்ன குழந்தையாய்த் தெரிந்தான். கசிந்த விழிகளைத் துடைத்துக் கொண்ட படி ஆதுரத்துடன் கேட்டாள். ''என்னப்பா...?''

''நம்மவங்க எத்தனை பேர் செத்துப் போனாங்க? எத்தனை பேருக்கு காயம் பட்டிருக்கு?''

www.padippakam.com



ரங்கம்மா அதற்குப் பதில் கூறாமல் யோசனை செய்து கொண்டிருந்தாள்.

''அவுங்க பக்கம் எத்தனை பேர் செத்திருப்பாங்க?''

''தெரியாதுப்பா. சவங்களை அவங்களே லாரில ஏத்திட்டுப் போனாங்களாம். எத்தனை பேருன்னு சரியா தெரியாது. நம்மவங்க விஷயமும் அப்படித்தான்...''

ரங்கம்மா திடீரென பேச்சை நிறுத்திவிட்டாள். ஏதோ சொல்ல வேண்டும் போல் ஒரு துடிப்பும் பதட்டமும் வேதனையும் தெரிந்தது அவள் முகத்தில்.

வைத்த விழி வாங்காது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜாரெட்டி. தாய் மடியில் படுத்திருக்கும் குழந்தைப்பருவம் ஞாபகம்வந்தது, அவளுக்கு எப்படி நன்றி தெரிவிப்பதெனத் தெரியவில்லை. வார்த்தைகள் எழவில்லை. பொங்கும் நன்றியுணர்வையும் பாசத்தையும் விழிகளில் தேக்கி அவளைப் பார்த்தான்

''என்னைப் பிழைக்க வைத்து உன் கடனை எப்படித் தீர்க்கப் போறம்மா?''

''பெரிய வார்த்தையெல்லாம் பேசாதப்பா. அப்படி நான் என்ன செஞ்சிட்டேன்?''

''அவங்களுக்குத் தெரிஞ்சா உன்னை சித்ரவதை செய்வாங்க...பாவிங்க...''

''என்ன செஞ்சாலும் பயமில்லை. நாலு பேரோட நான். கடைசி மூச்சுல நிக்கற என்னைப் பத்தி என்னப்பா... நீங்கள்லாம் நல்லா இருக்கணும். எங்களைப் போன்ற ஏழை பாழைகளுக்கோசம் எவ்வளவு க்ஷ்டப்படறீங்க நீங்கள்லாம்... ஒரு ஜில்லா ஒரு ஊர்னு இல்லாம ராத்திரி பகல் பார்க்காம போராடறிங்க. எந்த நேரத்துல அந்தப் பாவிங்க கையில் சிக்கிடப் போறிங்களோங்கற பயம்தான் பெரிசா இருக்கு...''

www.padippakam.com



ரங்கம்மாவின் குரல் நடுங்கிற்று. கண்களைத் துடைத்துக் கொண்டு வாசல் பக்கம் பார்த்தாள். மடியில் இருந்த ராஜாரெட்டி நெற்றியை ஆதுரமாய் வருடிவிட அவன் தன்னையுமறியாது உறக்கத்திலாழ்ந்தான்.

ஃ ஃ ஃ

எத்தனை பேர் மடிந்தார்களோ, இதுபோல் எத்தனை தாய்மார்கள் பலியானார்களோ... அந்த ராட்சசன் கையில் சிக்கி எத்தனை பேர் எப்படிப்பட்ட அவமானங்களுக்கெல்லாம் பலியானார்களோ...? யுத்தம் முடிந்து விட்டது. ஏராளமான மரணக் கணக்குடன் எதிரிகள் தாற்காலிக வெற்றி அடைந்துள்ளார்கள். தன்னைப் போலவே தன் சகாக்கள்காயங்களுடன் தப்பித்திருக்கிறார்கள். மக்கள் பயத்துடன் சிதறி ஓடியிருக்கிறார்கள். தோல்வியை தழுவியிருந்தாலும் அவர்களுக்குள் எத்தனை தன்மானம்...எவ்வளவு வீராவேசம்...! இந்தப் பெண்கள் தம்மை வீழ்த்த முனைந்த பிசாசுகளுடன் எவ்வளவு தைரியமாய்ப் போராடினாள். ஒருத்தனுக்கு கன்னம் வீங்கியது. இன்னொருவனுக்கு பார்வையே போய்விட்டது. அந்தக் கயவர்கள் பிடியிலிருந்து தப்பி ஓடி... ஓடி... ஓட முடியாது பலவீனமடைந்து... கடைசியில் நடக்கக் கூட சக்தியற்று... பாவம்...கீழே விழுந்தால் பலமாய் அடிபட்டிருக்கும். அவள் நிலைமை எப்படி இருக்கிறதோ? எதுவுமே தெரியவில்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற் போலிருக்கிறது. எவ்வளவு சாகசத்துடன் போராடினாள் அந்தப் பெண்! உம்... தன் துப்பாக்கியில் தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன. கை எதற்கும் உதவாததாகிவிட்டது. இல்லையென்றால் அந்தப் பாவிகளை......

ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டான் ராஜாரெட்டி. மெல்ல கண் திறந்து பார்த்தான். ரங்கம்மா



படிப்பகம்

www.padippakam.com



இன்னும் தன் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பது மங்கலாய்த் தெரிய மறுபடி கண் மூடி... சில கணங்கள் கழித்து மீண்டும் திறந்தான்.

''என்னாச்சுப்பா...என் ஒரு மாதிரி இருக்க...?''... ஆமாம்... ரங்கம்மா இன்னும் அங்குதான் இருக்கிறாள்.

''அம்மா... உனக்கு குழந்தைகள் இருக்காங்களா?''

''இருக்கு...''

''ஆணா, பெண்ணா? எத்தனை பேர்?''

நெஞ்சு படபடவென அடித்துக்கொள்ள ஆவலுடன் பதிலுக்காக அவள் முகம் பார்த்தான் ராஜாரெட்டி.

''ஒரே பொண்ணு...'' பொங்கியெழுந்த துக்கத்தை சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள் ரங்கம்மா. விழிகள் பனிக்க வாசற்பக்கம் பார்த்தபடி பதுமையாய் உட்கார்ந் திருந்தாள்.

ஏதோ இனம் புரியாத வேதனையிலாழ்ந்திருந்தான் ராஜாரெட்டி. திரும்பத் திரும்ப அதே உருவம் அவன் கண் முன் நிழலாடியது. நெருப்புக்கோளம் போன்ற கண் கள்... பற்களை அழுத்திக் கடித்துக்கொண்டாளோ என்னவோ, ரத்தம் கசியும் இதழ்கள்... சினம் கொந்தளிக் கும் அந்த முகம்... அச்சாக இந்த அன்னையைப் போலவே...

''அவங்க உன் மகளா...?'' வந்த வேகத்தில் அந்தக் கேள்வி வாய்க்குள்ளேயே சென்றுவிட்டது. அதற்கான துணிச்சலின்றி ''அவங்க உன் மக இல்லையே!'' என்று கேள்வியும் பதிலுமாய்ச் சொன்னான். அதுகூட முணு முணுப்பாக இருந்ததே தவிர நிச்சயம் ரங்கம்மா காது வரை சென்றிருக்காது.

''சரி... உன் வேலையைக் கவனிச்சுக்க அம்மா. இதோ எங்காளுங்க வந்துடுவாங்க...''

www.padippakam.com



''என்ன வேலை கொட்டி வச்சிருக்கய்யா. சரி... இருக்குன்னே வச்சுக்குவம். நீங்க நல்லா இருந்தாத்தான எங்க பொழப்பு நடக்கும். பாட்டன் முப்பாட்டன் காலத்திலேருந்து படற அவஸ்தை இதோடு தீர்ந்துடுமா அய்யா. நீங்க ஜெயிப்பீங்க. என்னிக்காவது ஒரு நாள் நீங்க ஜெயிப்பது நிச்சயம். அத எதிர்ப்பார்க்கறத விட்டா எனக்கு வேற வேலை என்ன இருக்குப்பா...?''

நெஞ்சின் அடியினின்று வந்த அந்த சொற்கள் அவனுக்கு ஏராளமான உத்வேகத்தையும் உற்சாகத்தை யும் தந்தது.

ஃ ஃ ஃ

ரங்கம்மா இன்னும் வாசற் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். ஊர் ஜனங்கள் ஒவ்வொருவராய் வந்து கொண்டிருந்தனர். சோகத்தாலும் அவமானத் தாலும் தலை குனிந்தபடி வந்தார்கள். மடிந்து போன குழந்தைகளையும் காயம்பட்டு வீழ்ந்த பிள்ளைகளையும் நினைத்துக் குமுறும் முகங்கள்... நடந்து முடிந்த அதர்மப் போரை நினைத்து ஆவேசத்துடன் பற்கள் நெறித்தபடி சிலர்...

ரங்கம்மா வீட்டு முன் நின்றார்கள் ஜனங்கள். சவத்தைக் கீழே இறக்கினார்கள். அக்கம்பக்கத்து வீட்டா ரெல்லாம் சூழ்ந்து கொண்டார்கள். அழுதார்கள். ஒரே எட்டில் தன் மகளின் உடலருகே சென்றாள் ரங்கம்மா. விழுந்தும் எழுந்தும் தள்ளாடியபடி அங்கு சென்றான் ராஜாரெட்டி.

''அந்தப் பொண்ணுதான் இது...'' பேச்சு குழறியது ராஜாரெட்டிக்கு

''நீங்க இங்க வரதுக்கு முன்னதான் நோயாளிப்பெண் களை படுக்கையிலிருந்து எழுப்பி வெளியே அனுப்பி

www.padippakam.com



வச்சா ரங்கம்மா. இதுக்குள்ள போலீஸ் வந்துட்டது. நெனவு தப்பி விழுந்துட்ட ஓங்களை நல்லா போர்த்திட்டு அவங்க முன்னால அழுதாங்க...''

நடந்ததையெல்லாம் யாரோ சொல்லிக்கொண்டிருந் தார்கள்.

''அந்தப் பொண்ணு ரொம்பவும் பலஹீனமா இருந்தது. எங்கேருந்து வந்ததோ அவ்வளவு பலம். ஒரே அடில அந்த நாசகாரப்பாவியின் கன்னம் வீங்கி கண்ல குழி விழுந்துட்டது. மூணாவது தடவையா அடிக்க கை ஓங்கினப்ப துப்பாக்கி குண்டுபட்டு விழுந்துட்டாங்க..., பாவம்...ரங்கம்மாவுக்கு எப்படித் தெரியும் தன்னோட மக நெஜமாகவே செத்துட்டான்னு...''

அவள் வீரபிரதாபங்களை ஒருவர் பின் ஒருவராய் போட்டி போட்டுக்கொண்டு சொல்லலானார்கள்.

''நிஜம்மா நீ வீரமாதா தாயி... உன் கடன்...'' ராஜா ரெட்டியால் தொடர்ந்து பேசமுடியவில்லை. இவ்வளவு நேரமாய் தான் உருவகித்திருந்த...தன் கண்ணில் விடாது நிழலாடிய பெண் ரங்கம்மாவின் மகள்தான் என்று அறிந்ததும் வேதனையும் பெருமிதமும் ஒரு சேர ஏற் பட்டது.

''தெரியாம என்ன... நல்லாத் தெரியும்... இப்படி நடப்பது தப்பாதென நல்லாத் தெரியும். நம்ம பொழைப் புக்கு வேறவழி இல்லேன்னு தெரியும்...'' ரங்கம்மா திரும்பத் திரும்ப அரற்றிக் கொண்டிருந்தாள்.

சவத்தின் முகத்தை மறைத்திருந்த துணியை விலக்கி நடுங்கும் கையால் மெல்லத் தொட்டான். ரத்தம் காய்ந்து உறைந்ததால் கருமை படர்ந்திருந்த இதழ்களை பரிவுடன் துடைத்துவிட்டான்.

www.padippakam.com



''எனக்கு தெரியும் இப்படி நடக்கும்னு...''

அவள் விழிகளில் பாதாள ஆழம் தெரிந்தது.

ரங்கம்மா இப்போது அழவில்லை. அரற்றவில்லை.

எரிந்து எரிந்து சாம்பலாகி உதிர்ந்த கதிர்க் குப்பையெனச் சரிந்து கிடந்தாள்.

**(ஜனவரி 1948 'அப்பூதயா'விலிருந்து)**

www.padippakam.com

பி. துர்கா பிரசாத்ராவ்

# கவண் கற்கள்

கிழக்கு வானில் எட்டிப்பார்த்தது பிறை நிலா. துவாதசி ராத்திரியின் மூன்றாம் ஜாமம். ஊசியாய்க்குத்தும் குளிர். கடும் நிசப்தம்.

ஊருக்கு வெளியே மலை உச்சியில் மரத்தடியில் தூங்கி விழுந்துகொண்டிருந்த வெங்கம்மா உலுக்கிவிழுந்து எழுந்தாள். கண்களை கசக்கியபடி நாலாப்பக்கமும் பார்த்துவிட்டு மறுபடி தூங்க ஆரம்பித்தாள். கிழிசல் கம்பளி குளிருக்குப் போதவில்லை.

எங்க ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஒருவார காலமாக மிலிட்டரி தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. எந்த நிமிடம் எங்க ஊருல வந்து விழுமோ, தெரியாது. மலையிலிருந்து மிலிட்டரி வருகையைக் கவனித்துச் சொல்ல வெங்கம்மாவை நியமித்திருந்தோம். ஒரு எருமைக் கொம்பு, கிர்ரென சுழலும் கவண். கூடை நிறைய கூழாங்கற்கள் அவளிடம் தயாராக இருந்தன. ஒரு வாரமாக தூக்கமில்லாததால் கண்கள் சிவப்பேறி இமைச்சிப்பிகள் மூடி மூடித் திறந்தன.

திடீரென்று ஏதோ சலசலப்பு கேட்டு தூக்கிவாரிப்போட கண்திறந்து பார்த்தாள் வெங்கம்மா. மலையடி வாரத்தில் யாரோ பதுங்கிப்

www.padippakam.com



பதுங்கி ஊரை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். மிலிடரி போலிருக்கிறதே...? ஆமாம்; கொம்பெடுத்து பூம்... பூம்...பூம் என ஊத ஆரம்பித்தாள். வயற்புறத்தில் ஒளிந்திருந்த வாலண்டியர் படை விழித்தெழுந்தது. கிராமம் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. ஆயிரத்துக்கு மேற்பட்ட மிலிட்டரிக்காரர்கள் கிராமத்தை முற்றுகையிட்டார்கள். துப்பாக்கிகளின் வெடிச்சத்தத்தால் ஆகாயத்தில் ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் துளைகள் விழுந்து விடும் போலிருந்தது. வெங்கம்மா கொம்பு ஊதிக் கொண்டே இருந்தாள். கிராமங்களிலிருந்து வாலண்டியர் படைகள் தடதடவென ஓடிவந்தன. மிலிட்டரிக்காரர்களின் டார்ச்லைட்டுகள் கொம்பு ஊதும் வெங்கம்மாவுக்காக மலை முழுக்க ஒளிக்கதிர்கள் வீசி தேடிக்கொண்டிருந்தன. பெரிய பாறைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, விடாது ஊதினாள் வெங்கம்மா.

''ஆந்திரமகா சபைக்கு...ஜே...!''

பெரிய மக்கள் சமுத்திரம் மிலிட்டரி மீது பாய்ந்தது. வெங்கம்மா கொம்பு ஊதுவதைவிட்டு மடி நிறைய கற்களும் கையில் கவணும் எடுத்துக்கொண்டு விறுவிறுவென மலையைவிட்டு இறங்கினாள். பாதையில் அழுத்தமாய்க் காலூன்றி கல்மழை பொழியலானாள். விர்ரென அம்பாய்ப் பாய்ந்த கற்கள் மிலிட்டரிக்காரர்களின் தலைகளைத் துளைத்தன. கற்களின் உக்கிரத்துக்கு முன் துப்பாக்கி குண்டுகள் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

வீதிகளில் இலக்கின்றி சுட ஆரம்பித்தார்கள் சிப்பாய்கள். ஜனங்கள் வீட்டின் பக்கத்திலும் வயற்புறங்களிலும் ஒளிந்தபடி கவண்கற்கள் வீசினார்கள். துப்பாக்கிகள் குறிதவறலாயிற்று. 'மிஷின்கன்' பிரயோகிக்குமாறு உத்தரவிட்டான் சர்ஜெண்ட். மலையடிவாரத்திலின்று சோளக்கொல்லையை அடைந்தாள் வெங்கம்மா.

www.padippakam.com



துப்பாக்கி வீச்சுக்குப் பலியான சோளக்கதிர்கள் பொல பொலவென கீழே உதிர்ந்தன.

மெல்ல மெல்ல முன்னேறிக்கொண்டிருந்தவள் சட்டென நின்றாள்.

''யாரது?''

''நான் தான் வெங்கம்மா... ராகவய்யா...'' கிசுகிசுப் பாய்ச் சொன்னார். ஆந்திர மகா சபையின் கிராமக் கமிட்டித் தலைவர்.

''அய்யா... நீங்க அவங்க கைல சிக்கிட்டா...அவ்வளவு தான்...நம்ம கஷ்டமெல்லாம் வீணாயிடும். மெல்ல மலை யைத் தாண்டிடுங்க.''

''அப்ப நீ...?''

''நான் ஊருக்குள்ள போறேன்...''

''ஐயோ...வேணாம்... பாம் கூட வீசிட்டிருக்காங்க...''

''ஊர்ல பொம்பளைங்க என்னானாங்களோ?''

''எனக்கென்னவோ நீ ஊருக்குள்ளே போறது சரியாப்படல''

''சரி...போகல...'' ராகவய்யாவைத் தாண்டிச் சென்ற வெங்கம்மா ஊர் எல்லையில் மறைவாய் நின்று கவண் கற்கள் வீசலானாள்.

''ஐயோ...அம்மா!'' திடீரென்று அலறியபடி கீழே சாய்ந்தாள். வலது கணுக்காலை துப்பாக்கி குண்டு பதம் பார்த்திருந்தது.வலியால் முனகியபடி எட்டிப்பார்த்தாள். நான்கு மிலிட்டரிக்காரர்கள்...

''யாருடி நீ...?'' சர்ஜெண்ட் உறும... அவள் மௌன மாய் இருந்தாள்.

www.padippakam.com



''ஆந்திர சங்கத்தைச் சேர்ந்தவடா...'' இன்னொருவன் கூற...

''உங்க ராகவய்யா எங்க ஒளிஞ்சிருக்கான்?''

''.............''

''உன்னைத்தாண்டி...கேக்கறது காதுல விழல... சொல்லுடி முண்டம்...''

''தெரியாது...''

''தெரியாது...அவன் இந்தப் பக்கமா வரல?''

''இல்லியே...?''

''நல்ல தனமா கேட்டா சொல்லமாட்டே நீ...'' ஒரு சிப்பாய் அவளைக் கீழே தள்ளினான்.

''டேய்...இங்க வேணாம்டா. கெரில்லாக்காரங்க வருவாங்க...'.

''சரி...தூக்கி கார்ல போட்டுட்டுப் போவோம்...''

கணுக்காலினின்று வழிந்த ரத்தத்தில் நனைந்து போனாள் வெங்கம்மா. அவர்கள் கார் நகர்ந்தது.

பொழுது விடிந்துகொண்டிருந்தது. இன்னும் முழு வெளிச்சம் வரவில்லை. ஒரு பனைமரத்தின் கீழ் நின்றது கார். வெங்கம்மாவை இழுத்து கீழே தள்ளினார்கள். ரத்தம் வடிந்து கொண்டிருந்த இடத்தை உள்ளங்கை வைத்து அழுத்திக் கொண்டாள்.

''ஏய்...மரியாதையா சொல்லிடு. அந்த ராகவய்யா எங்க?''

''.............''

''சொல்லுடி...''

''மிலிட்டரி அட்டூழியம்... ஒழுக...'' கோஷமிட்டாள் வெங்கம்மா. ஆத்திரமடைந்த மிலிட்டரிக்காரர்கள் வெறி

www.padippakam.com



பிடித்தாற்போல் அவள் மீது பாய்ந்து அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள்.

''எதுக்கு அந்நியாயமா சாவப்பாக்கற...அவன் எங்கன்னு சொல்லிடு...''

' எங்க சங்கத்துக்காகத்தான சாகப்போறேன்...''

''செத்தாலும் சாவ தவிர சொல்ல மாட்ட...?''

''எனக்கு தெரிஞ்சாத்தான?''

அவள் சேலையைப் பிடித்திழுத்தான் சர்ஜெண்ட்.

''அம்மா...ஐயோ...'' ஓலமிட்டாள் வெங்கம்மா. சர்ஜெண்ட கத்தி அவள் வயிற்றில் இறங்கியது.

சரசரவென கல்மழை பொழிய அவளை விட்டுவிட்டு மிலிட்டரிக்காரர்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தார்கள். அவள் காலிலிருந்து வழிந்த ரத்தக் கோட்டைத் தடயமாய்க் கொண்டு அவ்வழியே வந்த நாற்பது வாலண்டியர்கள் சுற்று முற்றும் தேடினார்கள்.

''ஆந்திர மகா சபைக்கு...ஜே...!'' பெரிதாய்க் கோஷமிட்டார்கள். வெங்கம்மா விழுந்துகிடப்பதைப் பார்த்த ராகவய்யா விசில் ஊத... வாலாண்டியர்கள் ஓடி வந்தார்கள். வெங்கம்மா உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

''வெங்கம்மா...'' அழுகை வெடிக்கும் குரலில் அழைத்தார் ராகவய்யா.

''ஆந்திரமகாசபைக்கு...'' வெங்கம்மா ஈனஸ்வரத்தில் கூற... ''ஜே...'' என்றார்கள் மற்றவர்கள்.

சில்லிட்டிருந்த அவள் உடல்மீது அவர்கள் வெப்பமான கண்ணீர்த்துளிகள் மலர்களாய் விழுந்தன.

**('கெலுபு மனதே' (வெற்றி நமதே) எனும் சிறுகதை தொகுப்பிலிருந்து. கதைக்காலம்—1947)**

படிப்பகம்

www.padippakam.com

## அட்லூரி பிச்சேஸ்வரராவ்

# விமுக்தி

சுப்பம்மாவை ஊரில் எல்லோருக்கும் தெரியும். சமீபமாய் குடிசையை விட்டு வெளியே வருவதே இல்லை அவள். எந்நேரமும் கயிற்றுக் கட்டிலேகதி எனக் கிடக்கிறாள். அவளுக்குத் துணையாய் கோழிக்குஞ்சு...

கொஞ்சகாலம் முன்புவரை ஊர்ஜனங்களுக்கு எதற்கெடுத்தாலும் சுப்பம்மா வேண்டும். புதிதாய் வீடு கட்டினால், புதுமருமகள் வீட்டில் அடிவைக்கும் போது... ஊர்ப்பெண்கள் பிரசவிக்கும்போது... கல்யாண காரியங்களை துவங்கும்போது... இப்படி எல்லா சந்தர்ப்பங்களிலும் ரூபாயளவு குங்குமப்பொட்டுடன் மகாலட்சுமிபோல் ஆஜராகிவிடுவாள். சுபநிகழ்ச்சிகள் மட்டுமல்ல... யாருக்கு எந்தத் துன்பம் வந்தாலும் உடன் சென்று ஆறுதல் சொல்வாள். அவர்கள் கஷ்டங்களில் பங்கேற்பாள். ஊர் அவளுக்கு 'பெரிய மனுஷி' அந்தஸ்து கொடுத்திருந்தது.

அப்படிப்பட்டவள் இப்போதெல்லாம் வெளியே வருவதையே அடியோடு நிறுத்தி விட்டாள். தானுண்டு... தன் குடிசையுண்டு என இருக்கிறாள். ஓட்டைக் கட்டில்... வாசலில் கோழிக்குஞ்சு...

www.padippakam.com



கட்டிலில் படுத்துக் கண்ணை மூடியபடி கிடப்பாள். தூங்குகிறாள் என்றல்ல அர்த்தம். அவள் தூக்கம்மறந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. கண்மூடினால் போதும் கெரடய்யா வந்து நிற்பான். அந்த மனிதனுடன் முப்பது வருஷம் குடும்பம் நடத்தியிருக்கிறாள். காரிருளிலும் காலடி சத்தம் கேட்டே அவனை இனங்கண்டு விடுவாள். அந்த அரிவாள் மீசை... கையில் தடி... அவன் நினைவு வரும்போதெல்லாம் இதயம் இரண்டாய்ப் பிளந்து விடுவதுபோல் துக்கம் பீறிட்டுக் கிளம்பும். அவன் பின்னாலேயே ஓடி ஓடி அவன் முகவாய் பிடித்துக் கெஞ்சுவாள். "இங்க பாரு... நம்ம விதி இப்படி இருக்கறப்ப யாரைச்சொல்லி என்னலாபம்? எல்லாத்துக்கும் அந்த சாமி இருக்கு..." மேலே கை காட்டி இறைவனைத் துணைக்கழைத்துக்கொண்டு அவனிடம் இறைஞ்சி அவன் கோபாவேசத்துடன் புறப்படும்போதெல்லாம் தடுத்து நிறுத்திவைப்பாள். சுப்பாரெட்டியின் ஆட்கள் வந்து அதிகாரம் காட்டும்போதெல்லாம், அவனை அதட்டி மிரட்டி அழைத்துக்கொண்டு போகும்போதெல்லாம் கண்கள் சிவக்க தடியை வீசியபடி பொங்கியெழுவான். சுப்பம்மா இப்படித்தான் படாதபாடு படுவாள் அவனைச் சமாதானம் செய்ய.

இதெல்லாம் நினைவு வரும்போது அவள் விழிகள் ஆறாகும். உடம்பெல்லாம் நடுங்கும். பகல் இருட்டாகத் தெரியும். அந்த இருட்டிலும் கண் முன் வந்து நிற்பான். கண்ணை மூடினால்தானே இந்த அவஸ்தை என இமைகளை இழுத்துப்பிடித்து திறந்து வைப்பாள். மூலையில் இருக்கும் உறியும் மொந்தையும் கண்ணில்படும். அந்த மொந்தை கெரடய்யாவின் அம்மா அவளுக்குக் கொடுத்தது. "சுப்பம்மா... இது ரொம்ப ஆகி வந்த மொந்தை. பத்திரமா வச்சுக்க..."

குடித்தனத்திற்கு வந்த புதிதில் மணமணக்க வெண்ணெய் காய்ச்சிய நெய்யை அந்த மொந்தையில்

படிப்பகம்

www.padippakam.com



ஊற்றிவைத்து கெரடய்யா தட்டில் தாராளமாய்க்கொட்டுவாள். சுப்பாரெட்டி அவர்கள் கடையை 'ஸ்வாஹா' செய்தபிறகு வெந்தயம் போட்ட மோர்தான் அந்த மொந்தைக்குக் கதி. தலைவிதியை நொந்தபடி புருசன் தட்டில் வெந்தய மோரைக் கொட்டுவாள். நாள் செல்லச் செல்ல ஆக்கிச்சாப்பிட அந்த மொந்தையளவு அரிசி கூட கதியில்லாமலாயிற்று.

இதெல்லாம் பார்த்துதானோ என்னவோ... கெரடய்யாவின் மனம் கல்லானது. ''அடி பைத்தியமே... இன்னு மாடி சாமி... பொறந்தப்ப வளைச்ச இடுப்ப இன்னும் நிமிர்த்தலயேடி. ராத்திரியில்லாம பகலில்லாம ஒழைக்கறதுக்கு அரைவயித்துக் கஞ்சிக்குக்கூட வழியில்லாம இருக்கு. சாமியாம் சாமி...'' விரக்தியுடன் சொல்லிவிட்டு மேல் துண்டை உதறித் தோளில் போடடுக்கொண்டு சுருட்டு புகைத்தபடி கடைவீதி பக்கமாய்ச் சென்றவன் மறுபடி வாசற்படி மிதிக்கவில்லை. அதுதான் அவள் அவனைக் கடைசியாகப் பார்த்தது.

அவனுடனே அவள் ஜீவனும் போய்விட்டது. அவள் உலகம் இருண்டு விட்டது. குடிசையும் கட்டிலுமே கதி எனக் கிடந்தாள்.

''சுப்பம்மா...ஏ!''

''.............''

''சுப்பய்மா அத்தை!''

'உம்' கொட்டக்கூடப் பிடிக்காது கண் திறந்து பார்த்தாள். கதவில்லாத குடிசை வாயிலில் நிழல்போல் நின்றுகொண்டிருந்தான் ஒருவன்.

''சுப்பம்மா...''

''யாரு...?''

www.padippakam.com



''நான்தான் மல்லி. நம்ம ஆளுங்கல்லாம் ஏரிக் கரையில கூடியிருக்காங்க... ஒன்னை வரச்சொன் னாங்க...''

''ஏரிக்கரைக்கா...'' முணுமுணுத்தாள் சுப்பம்மா. எந்த முகத்துடன் அங்கு செல்ல? சொம்பு குடிநீர் எடுத்து வருவதுகூட நிறுத்தியாகிவிட்டது. ஏரிக்கரை என்ற சொல் காதில் விழுந்தால் போதும், வெலவெலத்துப் போகிறது உடம்பு. ஏரிக்கரையில் உள்ள ஆலமரத்தடியின் கீழ் இருக்கும் மண்மேட்டில் சரஸ்வதி... அவளைச் சுற்றிலும் ரஜாக்கர்கள். நடு நாயகமாக சுப்பாரெட்டி. ஊரில் ஆண்களெல்லோரும் வேலைக்குச்சென்றிருந்த போது என்ன செய்தார்கள் அந்தப்பாவிகள்! எப்படிச் சிரித்தான் அந்த சுப்பாரெட்டி! கதறக் கதற சரஸ்வதியை எப்படி இழுத்துக்கொண்டு போனான்? தன்னால் என்ன செய்ய முடிந்தது? 'டேய்...நாய்களா...' என கத்தியபடி வெறிபிடித்தவள் போல் சரஸ்வதியருகே ஓடினாள். பிறகு என்ன நடந்ததோ...? நினைவு தெளிந்தபோதோ உடம் பெல்லாம் முறுக்கியெடுத்தாற்போல் வலி உணர்ந்தாள்.

''வா...சுப்பம்மா...''— மல்லி...

கட்டில் கால்கள் மீது கையூன்றியபடி மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். ஊர் ஜனங்கள் கூடியிருக்காங்களாம். எழுந்து தெருப்பக்கம் வந்தாள். பட்டப்பகல் வேளை. கோடை வெய்யில் கொதித்துக்கொண்டிருந்தது. அவள் கண்கள் கூசின.

வெளியில் அடி வைத்தபோது பாதங்கள் எரிந்தன. உச்சந்தலை சுட்டது. சேலைத் தலைப்பை தலைமீது இழுத்துப்போர்த்தி நுனியை பற்களிடை இறுக்கிக் கொண்டாள். வெறித்துப்பார்த்தபடி நின்றவளுக்கு பாதங்கள் சுடுவதுகூட உறைக்கவில்லை. பார்க்கும் திசை யெல்லாம் இடிந்த சுவர்கள். காய்ந்து கருகிய வீட்டு

www.padippakam.com



முகப்புகள். கருமை படர்ந்திருந்த அலங்கோலக்காட்சி யைப் பார்க்கையில்—

மனிதர்கள் வாழும் ஊராகவே தெரியவில்லை. சுடுகாடுபோல் சாம்பல் குவியல்கள்... கரிக்கட்டையான சாமான்கள். காக்கைகளின் அசைவுகூட இல்லை. குருவி களின் 'கீச்...கீச்'கூட இல்லை.

''நடய்யா...''— சுப்பம்மா.

வழிநெடுக விரவிக்கிடக்கும் அவலங்களை, சோகங் களைப் பார்க்கத் திராணியற்று குனிந்த தலை நிமிராது நடந்தார்கள். முன்னால் மல்லி... தொடர்ந்து சுப்பம்மா.

நினைவு தெரிந்த பருவம் முதல் திரிந்த வீதிகள். மழைக்காலங்களில் முழங்காலளவு நீரில் இரு கைகளிலும் குடங்கள் ஏந்தியபடி நீர் ததும்பத் ததும்ப நடந்தது... பூச்சாறலாய் விழும் தூறலில் சொட்டச்சொட்ட நனைந்த படி ஓடியது... 'ஏண்டி... மருமவளே...நல்லா இருக்கயா புல்ல...கொழந்தைக்கு காய்ச்சல் விட்டிருக்கா...? நரசம்மா... உன் புருசன் வந்துட்டானா?' என ஆளாளை விசாரித்தபடி வீதிமுழுக்க தன் வீடாய். தன் சுற்றங்களாய் பாவித்து நடைபோட்டது... எல்லாம் நினைவுக்கு வந்தது ஊர்க்குழந்தைகள் எல்லாம் தன் குழந்தை களென்றே கொண்டாடுவாள்.

எத்தனை மழைகாலங்கள் சென்றிருக்கும்! வீதி களில் கோலமற்ற வாசற்படி கண்டதுண்டா? 'சுப்பம்மா அத்தே...' என உரிமையுடன் அழைப்பவர்களிடம் நின்று பேசாமல் சென்றதுண்டா?

ஊரெங்கும் — வெறுமை. வயிற்றைக் கலக்கும் வெறுமை. எங்கும் எதிலும் சூன்யம். நடக்க முடியாமல் கால்கள் தள்ளாடின. கைத்தாங்கலாய் நடத்திச் சென் றான் மல்லி. சுப்பாரெட்டியின் மாடி வீடு எதிர்பட்

www.padippakam.com



டது. சாம்பலும் புகையுமான சுடுகாட்டிடையே இருக்கும் பேய் மாளிகை போல் தோன்றியது. வீட்டின் முகப்புக் கதவுக்கு பெரிய பூட்டு போடப்பட்டிருந்தது. மாடியில் சிகப்புக் கொடி பறந்து கொண்டிருந்தது.

ஒரு தடவை பின்னால் திரும்பிப் பார்த்தாள் சுப்பம்மா. சுடுகாட்டில் கல்யாணப் பந்தல் போட்டாற் போல் தெரிந்தது ஊர். இடிந்த சுவர்கள், சாம்பல் குவியல்கள் மீது சிகப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. பிள்ளை பருவத்திலேயே புருஷனிழந்த இளம்— பெண் முகத்தின் குங்குமப் பொட்டு போல் களை சொட்டிக் கொண்டிருந்தது ஊர். அரிவாள் மீசையிடை குறுஞ் சிரிப்பு எட்டிப் பார்க்க கொரடய்யா ஆசையுடன் அழைப் பது போலிருந்தது.

ஏரிக்கரையை அடைந்தார்கள். கலகலப்பாய் இருந்த அந்த இடத்தில் எங்கு நோக்கினும் ஜனங்கள்...ஜனங்கள். அவர்கள் அத்தனை பேரையும் அறிவாள் சுப்பம்மா. அவர் களில் சிலருடைய தொப்புள் கொடி அறுத்தவள். பல ருக்கு கல்யாணம் செய்து வைத்தவள். அநேகப் பெண் களுக்கு பிரசவம் பார்த்தவள். இப்படி ஒவ்வொருவருட னும் ஜன்மாந்திரத் தொடர்புடையவள் போன்ற உணர் வேற்படுத்தியவள். அத்தனை பேரும் ஒருசேரத் திரண்டி ருந்தனர். எல்லோரும் சேர்ந்து ஒரு குரலில் 'சங்கத்திற்கு... ஜே...!' எனக் கோஷமிட்டனர். ஏரிக்கரையில் இருந்த ஆலமரத்தில் சிகப்புக் கொடி பறந்து கொண்டிருந்தது. மரத்தினடியில் இருக்கும் மணல் மேட்டின் மீது பிரகாச ராவ், புருஷோத்தம், பிரபாகரன் ஆகியோர் உட்கார்ந்தி ருந்தனர்.

பிரபாகரனைப் பார்த்தவுடன் புருசன் நினைவு வந்தது சுப்பம்மாவிற்கு. பத்து பன்னிரெண்டு களவாணிப் பயல்கள் கொரடய்யாவை அடித்துப் புரட்டிக் கொண்டி ருந்தபோது இந்த பிரபாகரன் இடைப் புகுந்து ஒரே அடி

www.padippakam.com



யில் இரண்டு பேர் மண்டையைப் பிளந்தான் எனச் சொன்னான் பிரகாசராவ். ஊரெல்லாம் வியந்து பாராட்டியது. 'பாவம்... கொழந்த... எவ்வளவு அடி வாங்கினானோ என் மனுசனுக்கோசம்...' என்று பரிவும் பரிதாபமுமாய் நினைத்தாள் சுப்பம்மா.

மண்மேட்டிலிருந்தவர்களையும் சுற்றி குழுமியிருந்த ஜனங்களையும் வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்த போது சுப்பாரெட்டியும் மேட்டின் மீதேறினான்.

''இங்க ஏன்டா வந்த...?''

''அவன் எலும்பை முறிச்சிப் போடுங்கடா...''

புளியம் விளாறால் அடிச்சுக் கொல்லுங்கடா...''

ஆளாளுக்கு வெறியுடன் கத்த சுப்பாரெட்டி பயப் பட்டவராய்த் தெரியவில்லை. ஆடாது அசங்காது நின்றான்.

''அவனைத் தூக்குல போடுங்க...'' ராமண்ணா கூச்சல் போட... ''ஆமா...தூக்குல போடுங்க...'' ஊரே சேர்ந்து கத்தியது.

''வுட்டுடுங்க...அவனை ஒண்ணும் செய்ய வேணாம். வுட்டுடுங்க... அந்தப் பாவம் நமக்கெதுக்கு?'' அவள் சொன்னது மல்லிக்கு மட்டுமே கேட்டது.

''சும்மா இரு சுப்பம்மா. போன தடவை இப்படி வுட்டுட்டு பட்ட கஷ்டம் போறும். இவன் என்ன செஞ் சான்? போய் போலீஸ்காரனையும், ரஜாக்கர்களையும் கூட்டுட்டு வந்து ஊரை மசானமா நாசமாக்கல...? ஊர் அழிஞ்சு வீடுங்க எரிஞ்சது போறாதா?'' கோபமாய்க் கேட்டான் மல்லி.



படிப்பகம்

www.padippakam.com



''சரி... இவனைக்கூட அப்படியே கொளுத்திடுங்க'' என்றாள் சுப்பம்மா.

மண்மேட்டை நோக்கி ஆவேசமாய்ப் பாய்ந்தார்கள் ஜனங்கள் சுப்பாரெட்டி செய்த அட்டூழியங்களை ஒருவர் மாற்றி ஒருவர் முறையிட்டார்கள். சுப்பம்மாவுக்கு எல்லாம் தெரியும். அத்தனையும் கண்ணால் பார்த்தவள் அவள். வளமாய் வாழ்ந்த குடும்பங்கள் எத்தனை எத்தனை சின்னாபின்னமாயின இவன் கைங்கரியத்தால்! சரஸ்வதியின் அலங்கோலமான கோலம் கண்முன் நிழலாட கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

''சுப்பம்மா...சுப்பம்மா அத்தை...'' மல்லி அழைக்க... என்ன என்பதுபோல் பார்த்தாள். பின்னால் நின்று கொண்டிருந்த கறுப்புப் பசுவை கட்டி இழுத்து வந்த கயிறு அவன் கையில். அந்தப் பசு யாருடையதென்று சுப்பம்மாவுக்குத் தெரியும். சுப்பாரெட்டி வீட்டுப் புழக் கடையின் லட்சுமி தேவி அது. நாலு கன்றுகள் போட்டது அது. அந்தக் காளை மாடுகள் வண்டி இழுப்பது முதற் கொண்டு எல்லா வேலைகளிலும் ஊரின் மற்ற மாடுகளை விடப் பெயர் பெற்றவை. வலிமை பொருந்தியவை. வண்டி இழுத்தபடி வீட்டின் முன் செல்லும்போதெல்லாம் நின்று கவனிப்பாள் சுப்பம்மாள்.

ஒருசமயம் சேற்றில் புதைந்துவிட்ட வண்டிச் சக்கரங் களை வெளியே இழுக்க முடியாமல் ஆனானப்பட்ட எருதுகளே திணறியபோது இந்தக் காளைக் கன்று மிகவும் லகுவாய் இழுத்துப் போட்ட சங்கதி ஊரில் பல நாள் பேசப்பட்டது. ஏலம் விட்டால் எங்கோ சென்று நிறகும் என்று ஊரார் பேசிக் கொள்வதுண்டு. சுப்பா ரெட்டி புழக்கடையில் இருக்கும் அந்தக் கன்றுகள் சுப்பம்மாவினுடையது என்று மாய்ந்து போவார்கள்.

''எங்க இருந்தால் என்ன... என் லட்சுமி தேவியின் சம்சாரம் அது...'' என உவகையுடன பதில் சொல்வாள்.

www.padippakam.com



இப்போது அந்தக் கறுப்புப் பசுவின் பின்னால் நான்கு கன்றுகள் கூட இருந்தன.

''சுப்பம்மா...சுப்பம்மா... அத்தை...! பசு, கன்றுங்க, கடை எல்லாத்தையும் உனக்கு குடுத்துட்டாங்க...'' உற்சாகத்துடன் சொன்னாள் மல்லி.

''என்ன...?''

''ஆமா... கிராம பஞ்சாயத்து அவங்கவங்க சொத்தை அவங்கவங்களுக்கு திருப்பிக் குடுத்திட்டிருக்காங்க...''

''அப்ப சுப்பாரெட்டி...?''

''அவனுடையதென்ன பாழாப்போச்சு? அத்தனையும் நம்ம வாயைக் கட்டி சேகரிச்சதுதான...''

சுப்பம்மாவை தீனமாய்ப் பார்த்தது கறுப்புப் பசு, நெஞ்சு கொள்ளா சந்தோஷத்துடன் இரு கைகளையும் பிரித்தபடி ஓடிச் சென்று பசுவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். கன்றுகளின் கழுத்தைப் பாசத்துடன் வருடிக் கொடுத்தாள். பசுவின் கண்களினின்று வழிந்த நீரைத் துடைத்தபடி, ''என் செல்லம்... என் லட்சுமி தேவி...'' என்று கொஞ்சிக் கொண்டிருந்தவள் குரல் குழறியது.

''சங்கத்திற்கு ...ஜே...!'' என ஊர் உற்சாகமாய் கோஷமிட்டபோது ''சங்கத்திற்கு...ஜே...!'' என்றபடி சொர்க்கத்தில் கலந்தாள் சுப்பம்மா.

**(கதா சாகரம் தொடர்—பிச்சேஸ்வரராவின் கதைத் தொகுப்பினின்று)**

www.padippakam.com

லட்சுமிகாந்த மோகன்

# மகா சக்தி

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. மேற்கு திசையில் படர்ந்திருந்த செம்மை கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து கொண்டிருந்தது. இருள் மெல்ல மெல்லத் தலை காட்டத் துவங்கியது. பகல் தூக்கத்தினின்று எழுந்த மந்தத் தன்மையுடன் அழுது வடியும் நட்சத்திரங்கள். சோர்வுற்றதுபோல் சலனமின்றி நின்று கொண்டிருந்தன மரங்கள். ஆனால் ஏதோ தீராத சந்தோஷத்துடன் குதித்துக் கும்மாள மிட்டுக் கொண்டிருந்தன ஏரியின் அலைகள் மட்டும்.

அது ஒரு பாறைப் பிரதேசம். பாறையில் சரிந்தபடி வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான் ஒருவன். அவன் தலை மீது இறக்கைகள் படபடக்க வட்டமிட்ட குருவியொன்று சலித்துப் போனது போல் உயரப் பறந்து மறைந்து விட்டது. அவன் இதயம் படபடவென துடித்துக் கொண்டிருந்தது.

சட்டென்று எழுந்து கண்களைக் கசக்கி விட்டபடி சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். யாருமில்லை. தொலைவில் ஒரு மலை கம்பீரமாய் மௌனமாய் நின்று கொண்டிருந்தது. எவ்வளவு நேரமாய் அவன் அங்கே உட்-

www.padippakam.com



கார்ந்திருக்கிறானோ, யாரை எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறானோ...முகத்தில் எதிர்பார்ப்பும் கூடவே சலிப்பும் நிறைந்திருந்தது. ஏதோ தீர்மானத்திற்கு வந்தவனாய் எழுந்து இரண்டடி நடந்து... கழுத்தைச் சொரிந்தபடி யோசனையிலாழ்ந்தான். கொஞ்சம் தயங்கி நின்று மீண்டும் அங்குமிங்குமாய் உலாவத் தொடங்கினான். எத்தனை நேரம்தான் உலாவுவது என்று அதிலும் அலுப்பேற்பட எரிச்சலும் கோபமும் அடைந்து பெருமூச்சுடன் மீண்டும் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் தூரத்தில் யாரோ வருவதுபோல் தெரிய பரபரப்புடன் எழுந்து நின்று உற்றுப் பார்த்தான். அந்த ஆள் சமீபித்ததும் அருகே ஓடினான். ''ரெட்டி சாப்...சலாம் ஆலேகும்...ஏன் இவ்வளவு லேட்?''

வந்தவன் உடைகளிலிருந்து சென்ட் மணம் வீசியது. வளமான ஆள். கறுகறுவென்ற அடர்த்தியான மீசை. சிவப்பேறிய விழிகள்... தனக்காகக் காத்திருந்தவனிடம் கேட்டான். ''என்ன நடந்தது நர்ஸிரெட்டி?''

படபடப்பை அடக்கிக்கொண்டு சொன்னான் நர்ஸி ரெட்டி. ''உசிர கையில் பிடிச்சிட்டு திரிஞ்சிட்டிருக்கேன். ஆனா...''

''ஆனா ...என்ன...சொல்லு...''

''ராம்ரெட்டி கண்ல பட்டாத்தான...அவன் மட்டும் கெடைக்கட்டும், ஒண்ணுல ரெண்டு பார்த்துடறேன்...''

''பெரிய வீரன்தான் போ...'' ஏளனமாய்ச் சொன் னார் ரெட்டி சாப். அந்தப் பரிகாசம் மனதைத் தைத்தது. அவன் முகம் வாடிப் போனது கண்டு...

''அடடா...வெளையாட்டுக்குச் சொன்னேன். உன் சங்கதி எனக்குத் தெரியாதா என்ன... சரி... பின்ன... எப்ப...?'' ரெட்டி கேட்க...

www.padippakam.com



''கெடைக்கணுமே... நாய்மவன். கெடச்சா ஒரு அடி... ஒரே அடில பரலோகம் போய்டமாட்டான்...?''

''கெடைக்கலன்னா...?''

''அதெப்படி... என் ஒடம்புல உசிரு இருக்கறவரைக்கும் அவன் தப்பிக்க முடியாது...''

''நீ மனசு வச்சா ராம்ரெட்டி ஒரு கணக்கா? நவாபு கூட நீ 'ஹூம்...'னு சொன்னா நடுநடுங்கிச் சாவானே...? சரி...சீக்கிரமா முடிச்சிடு. மறந்துட்டேனே... இந்தா நீ கேட்ட பிஸ்டல்...''

பிஸ்டலை வாங்கி இப்படியும் அப்படியுமாய் திருப்பிப் பார்த்துவிட்டு இடுப்பில் செருகிக் கொண்டான்.

''சரி...அது...?''

''இந்தா...நானூறு ரூபாய்...மீதி அவனைத் தீர்த்துக் கட்டினப்புறம். இங்க பாரு எதுக்கும் பயப்படாத. ஒரு வேளை நீ செத்துப் போனா பெரிய ஸ்டேட் காங்கிரஸ் காரனை கம்யூனிஸ்ட்காரன் கொன்னுட்டான்னு மதறாஸ் பேப்பர்களில் நியூஸ் வரும். ஹி... ஹி... ஹி...''

சாவு சங்கதியை எடுத்தவுடன் நர்ஸிரெட்டியின் உடம்பு நடுங்கியது. தன் பயத்தை வெளிக் காட்டாமல் ''சாக போறது நானா... அவனா?'' என்றான்.

''இங்க பாரு. நமக்கு நெறைய பேர் துணையிருக்காங்க. நவாபு, ரஜாக்கர்கள்...; நம்ம செய்யறது வெளில யாருக்கும் தெரியாது...''

''ஏன் ...எதுக்காகவாம்?''

''கம்யூனிஸ்ட்காரங்கன்னா மதறாஸ் அதிகாரிகளுக்குக்கூட ஆத்திரம்தான். இந்த நியூஸ் பேப்பருங்கெல்லாம் அவங்களுடையதுதான். அதனால் அவங்க செய்தி

www.padippakam.com



யெல்லாம் போடமாட்டாங்க. இன்னொரு விஷயம் கூட...சில இடங்கள்ல கம்யூனிஸ்டுகாரங்களும் ரஜாக்கர் களும் ஒண்ணா சேர்ந்துட்டாங்களாம்... ரெண்டு நாள் முன்ன மதறாஸில் நேரு கூட இதப்பத்தி பேசினாராம்...

''இதெல்லாம் நம்ப முடியுமா?''

அடப் பையித்தியமே... இன்னுமா சந்தேகம் தீரல? இப்ப நமக்கு எவ்வளவு நல்ல சான்ஸ் தெரியுமா? உன் இஷ்டம் வந்தாப்பல பொம்பிளைங்கள ஒரு கை பார்த்துக்க. ஊருக்கு நெருப்பு வை. ஜனங்களை தீ வச்சுக் கொளுத்து. தட்டிக் கேட்க நாதியில்ல. கம்யூ னிஸ்ட் என்றால் பயம்...யாரும் வாயைத் தொறக்கமாட் டாங்க நல்ல சான்ஸ்...''

''என்னமோ, எல்லாமே விந்தையா இருக்கு. ஆனா... நவாபோட மறுபடி யுத்தம்னாங்களே?'',

''அதெல்லாம் வெத்துவேட்டு சமாச்சாரங்க. யுத்தமா மண்ணா? இந்த யுத்தமெல்லாம் யூனியன் பத்திரிகைங் கள்லதான். பார்த்துட்டே இரு... இன்னிக்கோ நாளைக்கோ நம்ம நவாபும் காங்கிரஸ்காரங்களும் சமாதானமாயிடப் போறாங்க. இல்ல... யுத்தம் வரும்னே வச்சுக்க...ஒண்ணும் கவலையில்ல. எப்படிப் பார்த்தாலும் சாகப் போறது இந்த கம்யூனிஸ்டுகாரங்கதான். புரிஞ்சதா? சரி... நான் கௌம்பறேன். ராம்ரெட்டி கண்ல பட்டா சுட்டுத் தள்ளிடு. என்ன?''

மேலும் கொஞ்ச நேரம் குசுகுசுவென பேசிவிட்டுப் பிரிந்தார்கள் இருவரும்.

ஃ ஃ ஃ

நர்ஸிரெட்டி ஊருக்குள் வந்தபோது வீட்டில் விளக் கெண்ணெய் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

www.padippakam.com



வீட்டு முற்றத்தில் யாராரோ உட்கார்ந்து கொண்டு நவாபிடமிருந்து தங்கள் ஊர் விமுக்தி பெற்றதற்கும், கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் குறித்தும் குஷியாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். கட்டிலிருந்து விடுபட்ட கன்றுக் குட்டிகள் போல் சிறுவர்கள் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தார்கள். நாட்டுப் புகையிலை மென்றபடி தம்பிள்ளைகள் பேசுவதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த முதியோர்கள் நடுநடுவே நவாபை, ஸ்டேட் காங்கிரஸ் குண்டர்களை, ரஜாக்கர்களை விமரிசித்தும், வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டிருந்தார்கள் பச்சிளம் குழந்தைகள் எந்தக் கவலையுமின்றி அம்மாவிடம் பால் குடித்துக் கொண்டிருந்தன.

இதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நர்ஸிரெட்டியின் முகம் இருண்டது. ''உம்... நானும் இவங்களில் ஒருத்தன்னு நெனச்சிட்டிருக்காங்க இவங்க. இது புலிக்குப் பொறந்த புள்ளி. இவங்க கொண்டாட்ட..மெல்லாம் அடங்கப் போற நாள் வந்துவிட்டது. இவங்களை சர்வ நாசம் செஞ்சி காட்டறன்...' மனுஷன் கறுவியபடி கொஞ்ச தூரம் சென்று ஒரு குடிசையில் நுழைந்தான்.

நடுவயதுப் பெண்ணொருத்தி வெற்றிலைப் பாக்கு மென்றபடி எதிர்ப்பட்டாள்.

''என்ன சுங்கி... ராம்ரெட்டி சங்கதி...''

''அய்ய... தெரியாதது போல கேக்கறது பாரேன். இன்னிக்கு ராத்திரி வர்ரானாம். ஏதோ மீட்டிங்காம்...''

''ஆ...''

''என்ன அப்படிப் பாக்கற... சும்மா கதை வுடறேன்னு நெனைக்கறயா... ஒகப்பாரணை...''

ராம்ரெட்டியின் பெயரக் கேட்டதும் கற்சிலையென உறைந்து போனான் நர்ஸிரெட்டி. ஜன்னி கண்டது

www.padippakam.com



போல் உடம்பு வெடவெடத்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''சுங்கி... காயிதம் எழுதித் தரேன். பத்திரமா கொண்டுபோய் அங்க சேர்த்துடு. இன்னிக்கு ராத்திரி காரியம் முடிஞ்சிடனும். ஒனக்குச் சேர வேண்டியதைக் குடுத்துடறேன். கவலைப்படாதே...'' ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி சுங்குலுவிடம் கொடுக்க... அவள் அதைத் தன் ரவிக்கைக்குள் மறைத்துக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

நட்சத்திர ஒளியினடியில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது ஊர். தூங்கிக் கொண்டிருந்த வீடுகளி னின்று வெப்பமான காற்று வெளி வந்தது. ஊர் எல்லை யிலுள்ள மலைகள் மீதிருந்து 'ஹூம்...' என்று காற்றின் ரீங்காரம் கேட்டது. ஏரித் தண்ணீர் சலசலத்துக்கொண் டிருந்தது.

திடீரென்று தெற்குப் புறமாக இருந்த பெரிய மரத்தி லிருந்து வினோதமான சத்தம் கேட்டது. மறுகணம் எல்லாக் குடிசைகளின் கதவுகளும் திறந்தன. கறுப்பு உருவங்கள் சந்தடியின்றி அங்குமிங்குமாய்த் திரிந்தன. சில உருவங்கள் வேறு திசை நோக்கி போகத் துவங்கின.

ஒரு குடிசையின் பின்பக்கம் ஒளிந்த இரு உருவங்கள் குசுகுசுவெனப் பேசிக் கொண்டன.

''ராம்ரெட்டிய கடத்திட்டியா?''

''கோடம்மா அந்தப் பக்கமாகூட்டிட்டுப் போனா...''

''சரி...நட...''

ஊருக்குள் சந்தடி அடங்கியது. கொஞ்சநேரத்தில் போலீசும், ரஜாக்கர்களும் பெரிதாய் கோஷமிட்டபடி... துப்பாக்கியால் சுட்டபடி ஊருக்குள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் முன்னால் நர்ஸிரெட்டி இருந்தான். நாய்கள்

www.padippakam.com



கணம் விடாது குரைத்தன. வந்தவர்கள் வீடு வீடாய் நுழைந்தார்கள். குடிசைகள் காலியாக இருந்தன. ஒரு குடிசையில் மட்டும் ஆள் இருந்தான்... கொண்டய்யா...! கிழவன் முகம் மீது டார்ச்லைட் ஒளி படர்ந்தது. ஊர் காலி செய்து கொண்டு போனபோது 'போலாம் வா தாத்தா' என அவரையும் அழைத்தார்கள்.

ஆனால் கொண்டய்யா ஒளியிழந்த கண்களால் அலட்சியமாய்ப் பார்த்தபடி, ''மாட்டேன். வீட்டை வுட்டுட்டு எங்க வரச் சொல்றிங்க என்னை? நான் வர மாட்டேன். காட்டுக்குப் போற வயசு எனக்கு. செத்தா லும் பரவாயில்ல. நீங்க போங்க நம்ம ராஜ்யத்தைக் காப்பாத்தப் போறவங்க போங்க. எனக்கொண்ணும் பயமில்ல...'' என்று மறுத்துவிட்டான்.

அவரை வெளியே இழுத்துவந்த போலீஸ் ராம்ரெட்டி எங்கே என அடித்து இம்சை செய்தார்கள். வழக்கமான அலட்சியத்துடன் 'என்னமோ' என்றான்.

இன்னொரு குடிசையில் முப்பது வயதான கோடம்மா இருந்தாள்...ராத்திரி பகலாய் உழைப்பவள். ஊராருக்கு இவளிடம் கொள்ளை பயம்... பீதி. ஏனென் றால் இவள் ஆணானாலும் பெண்ணானாலும் எவரையும் இலட்சியம் செய்யமாட்டாள். என்ன இப்படி என்று யாராவது கேட்டால் 'ஏன்... இவங்கல்லாம் எனக்கு சோறு போடறாங்களா...இவங்களுக்கு அடங்கிப் போற தலையெழுத்து எனக்கில்ல... கஷ்டப்பட்டு உழைக்கி றேன்... சாப்பிடறேன். மத்தவங்களுக்கு பயப்படற ஜாதி யில்ல நான்...'' அடிக்க வருவதுபோல் ஆங்காரமாய்ப் பேசுவாள். ஊரார் இவளுக்கு 'அடங்காப்பிடாரி... வாயாடி... ராக்காசி... அகம்பாவம் பிடித்தவள்... என பல பட்டங்கள் சூட்டியிருந்தார்கள்.

கிராமப் பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு ஒரு விந்தை யான சம்பவம் நடைபெற்றது. ராம்ரெட்டியைத் தலைவ

www.padippakam.com



னாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஊரின் நவாபின் 'தோஸ்த்' தும் பெருந்தலைவரான சுப்பாரெட்டியின் நிலம், அதில் கண்ட விளைச்சலையெல்லாம் பஞ்சாயத்து வசப்படுத்திக் கொண்டு ரஜாக்கர்கள் நடத்திய யுத்தம், அவர்கள் செய்த அட்டூழியங்கள் காரணமாய் வெகுவாய் நஷ்டப் பட்ட குடும்பங்களுக்கு பங்கு பிரித்துக் கொடுத்தது. கவனக் குறைவால் கோடம்மா பங்கை மறந்து போனார்கள். அவ்வளவுதான். ராம்ரெட்டி வீட்டில் புயலாய் நுழைந்து கலாட்டா செய்தாள், கடைசியில் நடந்த தவறுக்கீடாக ராம்ரெட்டி தன் சொந்த ஆஸ்தியில் கொஞ்சம் கொடுக்கும்வரை விடவில்லை அவள். கிராம வாசிகள் சந்தா வசூலித்து அந்த ஆஸ்தியை விடுவித்துக் கொடுத்தார்கள். அப்படிப்பட்டவள் இந்த கோடம்மா.

போலீஸ் அவளை வெளியே இழுத்து வந்தது. அவர்க ளிருவரையும் நடுத்தெருவில் நிறுத்தி ராம்ரெட்டியைக் குறித்து விசாரிக்குமாறு நர்ஸிரெட்டியை முன்னாள் தள்ளிற்று போலீஸ்.

அங்கு...ரகசியமான இடத்தில் ராம்ரெட்டி எப்படி யிருக்கிறார்? ஊர்சுற்றி ப்போலீஸ். சில காரணங்களால் ஊர்விட்டுச் செல்ல முடியாது போயிற்று. கோடம்மா தன்னை ஒளித்து வைத்திருக்கிறாள். அவள் தவிர தன் ரகசியம் வேறு யாருக்கும் தெரியாது. இந்த விஷயம் நினைவுக்கு வந்தபோது நெஞ்சு படபடத்தது. போலீஸ் அவளை சித்திரவதை செய்தால் பயப்பட்டு சொல்லிவிடு வாளோ? கலவரம், பயம், சந்தேகம், வருத்தம் எல்லாம் ஒன்று சேர்ந்து பாதிக்க நடக்கப்போவதை நடுக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

நர்ஸிரெட்டி கொண்டய்யாவை அதட்டிக் கேட்க... அவன் அலட்சியமாய் தனக்குத் தெரியாதென்றான். கோடம்மா அருகே வந்தான் நர்ஸிரெட்டி. இவ்வளவு நேரமாய் வாயே திறக்காதவன் ஆவேசத்துடன் ''அடப்

www.padippakam.com



பாவி...நீயா நர்ஸிரெட்டி...?'' எனக் கூச்சலிட்டாள். காளிபோன்ற அவள் கோபாவேசத்தைக் கண்டு மிரண்டு போனான் நர்ஸிரெட்டி. பயத்துடன் பின் வாங்கினான்.

'த்தூ' வென அவன் முகத்தில் காறி உமிழ்ந்தாள். புலிக்கூண்டில் இருந்தாலும் இயல்பான கோழைத்தனத்துடன் வெடவெட வென நடுங்கினான் நர்ஸிரெட்டி.

''இவ்வளவு தானா உன் பிரதாபம்...நான் சொல்ல வக்கறேன் பார்...'' சப்-இன்ஸ்பெக்டர் ஆணவத்துடன் மீசையை முறுக்கிவிட்டபடி போலீஸ்காரர்களைப் பார்த்துக் கண்ணடித்தார். அவர்கள் அவளைத் தரதர வென மறைவிடத்திற்கு இழுத்துச் சென்று மானபங்கப் படுத்தினார்கள். ஊஹூம்...அவள் வாயே திறக்கவில்லை. இதழ்கள் அசையவில்லை. பீற்றிக்கொண்ட சப்-இன்ஸ் பெக்டர் முகம் வெளிறிப்போயிற்று. அவளை நையப் புடைத்தார்கள். இந்த அடிகள் எல்லாம் எங்கோ இருந்த ராம்ரெட்டி நெஞ்சு மீது பளீர் பளீரென விழுந்தன. வேதனையுடனும், பரிவுடனும் அவர் கண்கள் கசிந்தன.

அத்தனை அடிகளையும் உடம்பை இறுக்கிக்கொண்டு பற்களை கடித்தபடி பொறுத்துக்கொண்டாள். திடீ ரென்று மகிஷாசுரமர்த்தனி போல் விசுவரூபமெடுத்தாள். ஒரு போலீஸ்காரன் கழுத்தைப் பிடித்து நகங்கள் பதியப் பதிய இறுக்கினாள். பதிலாய் இன்னும் பலமான அடிகள் வாங்கினாள். ஒவ்வொரு அடிக்கும் தோல் உரிந்து கொண்டு வந்தது. சிறிது நேரத்தில் அவர்களின் பிரம்பு கள் ரத்தத்தில் நனைந்தன. போதாக்குறைக்கு சிலீர்சிலீ ரென குளிர்காற்று வேறு. அவள் நாடி நரம்புகளெல்லாம் ஜிவ்வென துடிதுடித்தன. வாயினின்று ரத்தம் கொட்டி யது. சேலை ரத்தத்தில் நனைந்து தோலுடன் ஒட்டிக் கொண்டு பகபகவென எரிந்தது. இத்தனையும் போதா தென்று நகக்கணுக்களில் ஊசியால் குத்தினார்கள். மார்பு

www.padippakam.com



கள்மீது துப்பாக்கிக் கட்டையால் குத்தினார்கள். தன் குழந்தைகளுக்கு பாலூட்டிய அந்த மார்புகளினின்று இப்போது ரத்தம் கசிந்து வழிந்தது,

இவ்வளவு கொடூரமான யம உபாதைகளை அந்த தெலுங்குத்தாய் சகித்துக்கொண்டாள். அடங்கியிருந்த... அடக்கப்பட்டிருந்த ஆக்ரோஷம் மீண்டும் சிலிர்த் தெழுந்தது. 'உங்க ரத்தம் குடிக்கறேன்டா...' என்றுகாளி போல் கர்ஜித்தபடி விழுந்துவிட்டாள். கெரில்லாக்கள் வந்துகொண்டிருக்சிறார்கள் என்ற செய்தி வர, நர்ஸி ரெட்டி உட்பட அத்தனைபேரும் ஓட்டம் பிடித்தார்கள்.

கொஞ்சநேரத்திற்கெல்லாம் கோடம்மாவுக்கு நினைவு தெளிந்தது. உடம்பெல்லாம் கயிற்றினால் கட்டியதுபோல் குறுகிக்கிடந்தது. விரல் அசைக்கும் சக்திகூட இல்லாமல்... மறுபடி மூர்ச்சையானாள்.

யாரோ அவள் தலையை தன் மடிமீது எடுத்து வைத்துக்கொள்வது போல் அரைகுறை நினைவில் உணர்ந்து சிரமத்துடன் கண் திறந்தாள். நிழல் போன்ற உருவமொன்று தென்பட்டது.

"நான்தான்...ராம்ரெட்டி..." வேதனை பொங்கக் கூறினான் ராம்ரெட்டி,

"ரத்தம் குடிக்கறேன் பார்..."ஈனஸ்வரத்திலும் பகையுணர்வு தெரிந்தது.

"ஆமாம் தாயீ... உன்னைப்போன்ற வீரப் பெண்களை மானபங்கப்படுத்தி அடிக்கச் சொல்ற துரோகிகள் ரத்தத்தைக் குடிப்போம். அவங்களைச் சும்மா விடமாட்டோம்..." உறுதிமொழி கூறுவதுபோல் அவர் உரக்கச் சொல்ல...மலைகள் எதிரொலித்தன. ஏரி ஒரு நிமிடம் நின்று கேட்டது.

www.padippakam.com



அவள் அவர் மடியில் மரணவேதனை பட்டுக்கொண்டிருந்தாள். மிகுந்த சிரமத்தின் பேரில் கைகள் இரண்டையும் இணைத்துச் சக்தியையெல்லாம் திரட்டி 'ஆந்திர மஹா... சபை... ஜிந்தாபாத்... என திக்கித்திணறி முணகினாள். அவர் மடியில் நிரந்தரமாய் கண்களை மூடினாள்.

**(நவம்பர் 1948 'விசாலாந்திரா' இதழிலிருந்து)**

படிப்பகம்

*ராம்ஷா*

# மத்தானய்யா மரணம்

பகலெல்லாம் வீட்டு ஓடுகள் பறப்பது போல் வீசிய காற்று வெய்யில் மறைந்து அந்தி நெருங்கும் சமயத்திலும் வெப்பத்தை வாரி இறைத்தது. இந்த வெய்யிலில் எப்படிப் போவது என்ற தயக்கமே எழாது எல்லோரும் குறிப்பிட்ட இடத்தில் கூடினார்கள்.

வீராரெட்டி... ராமிரெட்டி... சுபாஷ்... யல்லமந்தா... கமலா... இன்னும் பலர். கமலா அவ்வளவு பெரிய கவி இல்லாவிடினும் சுவரொட்டிகள், நோட்டீஸ்கள் வீராவேசம் தெறிக்கும் கோஷங்கள் என ஆந்திரமகாசபை பிரசாரம் குறித்த விஷயங்களை எழுதிக்கொடுப்பது அவள் வேலை. அச்சுவேலையும் பார்த்துக்கொள்வாள். ராமிரெட்டி, சுபாஷ் ஆகியோருக்கு கெரில்லா பயிற்சி கொடுக்கும் பொறுப்பு...

எல்லோரும் வந்து சேர்ந்த பின் கொஞ்ச நேரம் மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இருந்தாற்போலிருந்து உலுக்கிவிழுந்து எழுந்தான்யல்லமந்தா. தன் தலைப்பாகையையும் கம்பளியையும் எடுத்துக் கீழே வைத்து "இப்பவே ஒண்ணுல ரெண்டு முடிவு செஞ்சாகணும்..." என்று சொன்னான். விழிகளை உருட்டி தீர்க்க

www.padippakam.com



மாய் அவன் பார்த்தவிதம்...குடுமி ஆடிய வேகம்... அந்தக் குரலின் உறுதி எல்லாம் அவன் பரபரப்பைத் துல்லியமாய் வெளிப்படுத்தின.

''ராமிரெட்டி... என்னய்யா அப்படிப் பார்க்கறே... நான் சொல்றது புரியலையா... நம்ப முடியலையா... அந்த நாய்மவன் மத்தானய்யா இருக்கானே... அவனை ஒரு கை பாக்கணும். அவன் வசமா மாட்டிக்கிட்டப்ப சீனிவாசராவ்சாப் அகிம்சை அதுஇதுன்னு தடுத்துட்டார். அவன் இப்ப ரொம்பத்தான் துளுத்துப்போய் ஆட்டம் போட்டிருக்கான்...'' யல்லமந்தா தொடர்ந்து பேசினான்.

''இந்த எருமைக் கத்தலை இன்னும் நீ விடலயா யல்லமந்தா...?'' சிரித்தபடி கேட்டார் ராமிரெட்டி.

நெருப்புத்துண்டாய் சிவந்தது அவன் முகம்.

''ஆமா...கத்தறேன்னே வச்சுக்கங்க. அந்தப் பாவிங்க ஊர்ல எல்லோரையும் எருமை மந்தைகளாக்கிட்டு குஷாலா திரியறாங்க. ஒங்களுக்கு எறும்பு கடிச்சாப்பல கூடத் தெரியலே. பார்த்தியா கமலம்மா... கிண்டல் செய்யறதுக்குக்கூட ஒருநேரம் காலம் வேணும். அன்னிக்கி அந்தத் திருட்டுப் பயலை இழுத்திட்டு வந்து அறுத்து எறிங்கடா இவன் நரம்புகளன்னா அந்தப் பெரிய மனுசன் சீனிவாசராவ்சாப் வேணாம்னார். அவர் பேச்சுக்கு மரியாதை குடுக்கணும்னுதான் அந்தப்பயல விட்டாச்சு. இப்ப அவன் தலைல கொம்பு முளைத்தாப்பல அட்டகாசமா திரியறான். அந்த ரஜாக்கள்களோட சேர்ந்திட்டு அட்டூழியம் செஞ்சிட்டிருக்கான். இந்த ராமிரெட்டி யாமாவுக்கென்ன... ஊர் நாசமாப்போனா...

அவனை இடைமறித்துக் கூறினான் சுபாஷ். ''இதென்ன யல்லமந்தா இப்படிப் பேசற...? சும்மா ஒரு தமாஷ் செஞ்சா இவ்வளவு கோவமா? இப்படி யோசிக்காம வார்த்தையைக் கொட்டலாமா? நீ சொல்றது

www.padippakam.com



தப்புன்னு யார் சொல்றாங்க...நமக்காக...நம்மளவங்களுக்காகத்தான சொல்ற...'' அவனைச் சமாதானம் செய்தான் சுபாஷ்.

''தப்புதாய்யா. மனசுல வச்சுக்காதிங்க. என்ன வானாலும் சரி... அந்த மத்தானய்யா ரத்தம் கண்ணால பார்க்கறவரை தூக்கம் பிடிக்காது எனக்கு. இன்னும் எத்தனை பேரை விழுங்கி ஏப்பம் விடணும்னு நெனைச்சிட்டிருக்கானோ... தெலுங்கானா சீதம்மாக்கள் தெலுங்கானா அண்ணன்மார்கள் மேல ஆணையா சொல்றேன். அந்த தேவடியா மகன் பிராணனை வாங்காம திரும்பிவரமாட்டேன். சரின்னு ஒரு வார்த்தை சொல்லுங்க போதும். எப்படியும் அவனைக் கொல்லாம வுடமாட்டேன் நான்...''

எல்லோரும் தீவிர ஆலோசனையிலாழ்ந்தார்கள். இனி என்னவாயினும் சரி... இந்த யல்லமந்தா அந்த மஸ்தானைக் கொல்லாமல் விடமாட்டான் என்பது சர்வ நிச்சயமாய்த் தெரிந்து போயிற்று

❀ ❀ ❀

மஸ்தான்......

ஜெகந்நாதரெட்டி நல்லகுண்டாவிற்கு ஓடி விட்ட பிறகு தன்னை இடையன் யல்லாமந்தா பிடித்துக்கொண்டு சங்கத்தாரிடம் ஒப்படைத்தபோதிருந்து தன் நவாப் தொப்பிக்கு அவமானம் நேர்ந்துவிட்டது போலவும், தன் மதிப்பு குறைந்து விட்டது போலவும் குமைந்து கொண்டிருந்தான். தன் உத்தியோகம் போனது போல்தான். அன்று அந்த ஸ்ரீனிவாசராவ் மட்டும் 'பிழைச்சிப் போடா'ன்னு மன்னித்திருக்காவிட்டால் அந்தயல்லமந்தா குடலை உருவி மாலையாகப் போட்டிருப்பான்.

தெ—12

www.padippakam.com



ஒரு கம்யூனிஸ்டா தன்னை மன்னிப்பது? இடையனான யல்லமந்தா தன்னை தூக்கில்போடுவதாக சபதம் செய்வதா?... காலம் கெட்டுவிட்டது என நினைத்துக் கொண்டான் மஸ்தானய்யா.

கிராமம் முழுக்க ஒருங்கிணைந்து வீராவேசத்துடன் புறப்பட்டிருக்கிறார்கள். சமயம்பார்த்துக்கொண்டு சங்கத்தலைவர்களை ஒரு கை பார்க்கவேண்டும் என்று அவனும் ஆக்ரோஷத்துடன் கொதித்துக் கொண்டிருந்தாலும் உண்மையை சொல்லப்போனால் அவன் செத்தவர்களுள் ஒருவன் போல்தான்...

தேஷ்முக் ஜெகன்நாத ரெட்டிக்கு அவன் மீது இன்னும் அபிமானம் குறையவில்லை. உயிருக்குப் பயந்து ஓடியிருந்தாலும் உடனே நூறு ரஜாக்கர்களை அவன் உதவிக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

ரஜாக்கர்கள் இருப்பிடத்தைக் காவல் காப்பதிலும், சங்கத்தலைவர்களை நோட்டமிடுவதிலும் அவன் மும்மரமாக இருந்தபோது 'கபி' நிழல்போல் அவனைத் துரத்திக் கொண்டிருந்தாள். வெகுலம்மா கழுத்தை நெரித்து அவள் நகைகளை அவனும் அவன் பெண்டாட்டியுமாய் கொள்ளையடித்தபோது கபி ஜன்னலிலிருந்து பார்த்துவிட்டாள்... அப்போதிருந்து ராத்திரிபகலாய் அவள் பின்னால் திரிகிறாள். இருட்டில்கூட பூனைக்கண்களுடன் அவன் பக்கமே உறுத்துப் பார்த்துக் கொண்டிருபபாள். அவன் செய்த பாவங்களைக் கண்ணாரப்பார்த்து பட்டியல் தயார் செய்து கொண்டிருந்தாள். இதேதும் சுத்தமாய்த் தெரியாது மஸ்தானுக்கு. தெரிந்திருந்தால் ஜாக்கிரதைப் பட்டிருக்கமாட்டானா... ? ... அல்லது அவளை விட்டு வைத்திருப்பானா...?

என்ன செய்தாலும் எந்தப்பணி நிர்வகித்தாலும் அதெல்லாம் அவன் மனமொப்பி செய்வதில்லை. நிறைய

www.padippakam.com



சம்பாதிக்க வேண்டும் என்ற பேராசை மற்றும் யல்லமந்தாக்களைப்பழி தீர்க்கவேண்டும் என்ற ஆவேசம் மட்டுமே அதற்கெல்லாம் காரணமில்லை. அவன் மதப்பற்றை சாதகமாக்கிக்கொண்டு தங்கள் அட்டூழியங் களுக்கு அவனைப்பயன்படுத்திக் கொண்டு அவனைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது ரஜாக்கர் களின் பெரிய வெற்றி என்றுதான் சொல்லவேண்டும்

அவனுக்கு இப்போதுள்ள உணர்வெல்லாம் பழி தீர்ப்பது ஒன்றுதான். ஒரு குறிப்பிட்ட இலட்சியமென்று எதுவும் கிடையாது. தன் வாழ்வின் மீது... சக மனிதர்கள் மீது... ரஜாக்கர்கள் மீதும்கூட... அவனுக்கிருப்பது பழி தீர்க்கும் உணர்ச்சி தவிர வேறில்லை.

இந்தப் பழியுணர்வு மஸ்தான் ஆத்மாவை சூன்ய மாக்கிவிட்டிருந்தது. இவ்வளவு குரூரமானவனாய் இது வரை எப்போதும்... தேஷ்முக் ஜெகந்நாதரெட்டியின் நிர்வாகத்தில் கூட.... நடந்து கொண்டதில்லை என அவனுக்கே தெரியும். மனிதாபிமானம் அடியோடு இழந்தவனானான்... பாவம்...; நீசனான பட்வாரி வெங்கட்ராவ் அவன் அதர்மச் செயல்களை ஊக்குவித்து தெம்பூட்டி வந்தான். அவனும் கெரில்லாக்கள் பிடியில் சிக்கி மாண்டு போனான் இந்த வெங்கட்ராவ் காங்கிர சில் சேர்ந்து கேசவராவை சரணடைந்தும் லாபமில்லாது போயிற்று. அந்த ஹரி பின்னாலிருந்து குத்தி விட்டான் வெங்கட்ராவையும் காந்தாராவையும். மொத்தத்தில் அவன் தைரியம் இழந்தவனானான். மனோதிடம் காற்றில் கரைந்து போயிற்று. மிஞ்சியதெல்லாம் இலக் கற்ற பகையுணர்ச்சி மட்டுமே.

தேஷ்முக் உதவியாய் அனுப்பி வைத்த ரஜாக்கர் களுக்குத் தலைவனாக அதிகாரம் செலுத்தி அடக்கியாள லாம் என நினைத்துக் கொண்டிருந்தான். சுடுகாடாகி விட்ட தெருக்கள்... வீடுகள்... மானபங்கத்திற்காளான

www.padippakam.com



பெண்கள்... அங்கமிழந்த ஆண்கள்... இடிந்த சுவர்கள்... எவ்வளவு அலங்கோலமான சூழல்! எங்கும் எதிலும் வெறுமை... வறுமை... சூன்யம்...! என்னமிச்சமிருந்தது? ரஜாக்கர்களை அதிகாரம் செய்து நிர்வாகம் ஏற்பது போய் அவர்களுக்கு அடிமையாகிவிட்டான்.

தன் செய்கைகளை மறந்து மன்னித்து தன் அதிகாரங்களை அங்கீகரித்து 'அபயம் தொரை' ன்னு ஜனங்கள் தன் காலில் விழும் நாள் வராமல் போகாதென்றும் அப்போது இழந்த மரியாதை, கௌரவத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ளலாம் என்றும் ஏகமாய் நம்பிக்கை கொண்டிருந்தான். அப்படியொரு நிலைமை வந்தால் ரௌடித்தனமெல்லாம் விட்டு தேஷ்முக் ஆகி செல்வாக்குடன் வாழலாமெனக் கனவு கண்டான்.

அவன் கனவெல்லாம் கரைந்து போய்விட்டன. அதெல்லாம் இனி நினைத்துக் கூடப் பார்க்கக் முடியாதென தெரிந்து கொண்டான். பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து இருக்கும் தொப்பி தவிர வேறு ஆஸ்தி ஏதுவுமில்லை சங்கத்தை அமுக்குமளவுக்கு செல்வாக்கும், வருமானமும் பெற முடியும் என்ற தைரியம், நம்பிக்கை அடியோடு குலைந்து போயிற்று. வீடுகளுக்கு தீமூட்டி, பயந்து ஓடும் பெண்களின் மார்பைக் கீறி நகைகளை அபகரித்து வந்தால் ரஜாக்கர்கள் அதட்டி மிரட்டி பிடுங்கிக் கொள்வார்கள். முகம் சுளித்தால் கண்டபடி வசை பாடுவார்கள். இதெல்லாம் அவனுக்கு நன்றாய் உணர்த்திவிட்டன, இனி எந்தக் காலத்திலும் தன் அதிகாரம் செல்லாது என்று. அவர்கள் பேச்சை அலட்சியம் செய்தால் அவர்கள் கையில் தன் சாம்பல் உதிர்வது தப்பாது என்று சர்வ நிச்சயமாய்த் தெரிந்து போயிற்று.

இந்துக்களானாலும் முஸ்லீம்களானாலும்... மஸ்தான் என்ற பெயர் காதில் விழுந்தாலே வெட-

www.padippakam.com



வெடத்து நடுங்குவார்கள். அவன் பார்வையினின்று மறைவதுதான் தாமதம் விரல்கள் சொடுக்கி சாபமிட்டுத் தீர்ப்பார்கள். ஜனங்கள் கோபக் கனலிடை வெந்து கொண்டிருந்தவனுக்கு அவன் கொள்ளையடித்த பொருள் களோ, செய்த மானபங்கங்களோ, உறிஞ்சிய இரத்தம் எதுவுமே திருப்தியும் நிறைவும் அளிக்கத் தவறிவிட்டன.

ஃ ஃ ஃ

பனித்திரையாய்ப் படர்ந்திருந்த நிசப்தம் சட்டென விலகியது.

''யல்லமந்தா சொன்னது நூத்துக்கு நூறு வாஸ்தவ மான விஷயம்தான்...'' என்றான் வீராரெட்டி. ''நம்ம தெலுங்கானா மக்களுக்கு இந்த மஸ்தானய்யா ஒரு துரோகி போலத்தான். அவன தூக்குலப் போட் டாகணும். அவன் பாவ காரியங்களுக்குக் கெடைக்கற தண்டனையை மக்கள் பார்த்து சந்தோஷப்படற விதமா பொது எடத்துல அவன தண்டிக்கணும். அவன எதுக்கு தூக்குல போடறம்னு அட்டைல எழுதி அவன் கழுத்துல தொங்கவுடணும். மத்தவங்களுக்கு ஒரு பாடமா இருக் கும். ஐயோ பாவம்னு இவங்களை நாம வுட்டு வச்சாலும் அவங்க நம்மளை சர்வநாசம் செய்யறவரை வுடறதா தெரியல. எனக்கும் ராமிரெட்டிக்கும் அனுமதி குடுங்க. யல்லமந்தா ஆவேசத்தைத் தீர்த்து வைக்கிறோம்...''

வீராரெட்டியின் வார்த்தைகள் யல்லமந்தாவுக்கு அளவற்ற சந்தோஷத்தைத் தந்தது. மற்றவர்கள் முகத் தில் கலவை உணர்ச்சிகள். மஸ்தான் துரோகி மீது அவர் களுக்கு ஆத்திரமும் அருவருப்பும் ஏராளமாய் இருந்த போதும் இப்படியொரு முடிவுக்கு வருவது இதுதான் முதல் தடவை.

www.padippakam.com



''நல்லாச் சொன்னே வீரா. திருட்டுப் பசங்களுக்கு புத்தி சொல்லாம விடக்கூடாது...'' ராமிரெட்டி சொன்னார்.

''நீ எதுக்கு வீரா... நான் ஒருத்தன் போதும்...'' சுபாஷ் சொல்ல...

''சரியாப் போச்சு. நான் நீன்னு போட்டி போடற துலயே நேரம் ஓடிட்டிருக்கு. இந்த வேலைக்கு யார் தோதுபடுவாங்கன்னு யோசனை பண்ணுங்க. மந்தை சேர்க்கறது மடத்துக்கே கேடு''ன்னு... கமலா இடை மறித்துச் சொன்னாள்.

''சும்மா எதுக்கு வீண் பேச்சு? ஒரு விஷயம் மட்டும் நல்லா யோசிக்கணும். தூக்கு போடறதுக்கு முன்னால பத்து பேர் நடுவுல விசாரிக்கணும் அவனை...'' ராமி ரெட்டி சொன்னார்.

''சரி...நாமே அதையும் செஞ்சிட்டாப் போச்சு...''— வீராரெட்டி.

''என்ன பார்க்கறிங்க... ஒங்களுக்கு புத்தியில்லையா? எனக்கு நிதானமா பேச வராது. எத்தனை பேர் இங்க கூடியிருக்கோம். அவன் சங்கதி விலாவாரியா பேசி னோம். அவனைப் பத்தி அறியாதவங்க யார் இந்த ஊர்ல? நாம் ஊர் ஜனங்க பிரதிநிதிங்க. ஊர் ஜனங்க சார்பா நாமே தீர்மானம் செஞ்சி அந்த காரியத்தை முடிச்சிடலாம். எனக்கு வுட்டுடுங்க அந்த வேலைய...'' சுபாஷ் தீர்மானமாய்ச் சொல்ல...

சந்தோஷம் பீறிட துள்ளிக் குதித்த யல்லமந்தா கை யிலிருந்த தடியால் தரை மீது ஓங்கித் தட்டினான்.

⁂ ⁂ ⁂

www.padippakam.com



எத்தனை எத்தனையோ தகனங்களில்... மானபங்கங்களில், கைதுகளில், துப்பாக்கிச் சூடுகளில் பங்கேற்றது மட்டுமன்றி தேஷ்முக் ஜெகந்நாதரெட்டி பங்களாவிற்கு காவல் காக்கும் பணியும் கூட நிர்வாகிக்கிறான் மஸ்தான். அந்த வீட்டின் கீழ்ப்பகுதி முழுக்க போலீஸ். மாடியில் ரஜாக்கர்கள். புழக்கடைப் பக்கத்தில் மற்றும் வீட்டின் வாயிற்பக்கத் திண்ணைகளில் குண்டர்கள் வாசம் செய்கிறார்கள்.

வழக்கம்போல் அன்று ராத்திரியும் காவல் காத்துக் கொண்டிருந்தான். தோளில் துப்பாக்கியுடன் ஷூக்கள் சப்திக்க நடந்து கொண்டிருந்தான்.

காற்றில் இலைகள் சலசலத்துக் கொண்டிருந்தன. மழை பெய்து கொண்டிருந்தது. ஆகாயத்தில் கருமேகத் திட்டுகள். நிலாவும், நட்சத்திரங்களும் கூடத் தலை காட்டாத அடர்த்தியான இருட்டு.

நேர்க்கோட்டின் மீது நடப்பது போல் ஒழுங்கு தவறாது இப்படியும் அப்படியுமாய் நடந்துகொண்டிருந்தான் மஸ்தான். இடையிடையே இரும்புக் கதவின் மீது சாய்ந்தபடி ஏதோ யோசனையிலாழ்ந்தான். பார்வையால் இருட்டை துழாவியபடி நின்று கொண்டிருந்த போது பின்னாலிருந்து இரும்புக்கரம் ஒன்று கழுத்தை நெரித்தது. மூச்சு விடமுடியாமல் திணறினான் மஸ்தான். மல்லாக்க விழுந்தான். வேரறுந்த மரமாய் விழுந்தவனை பல ஜோடிக் கைகள் தரையோடு தரையாய் அழுத்திப் பிடித்தன. இரும்பு கிளிப்பினால் மூக்கை இறுக்கினார்கள். தானாய்த் திறந்து கொண்ட வாயில் துணிப்பந்தை அடைத்து முகத்தை ஒரு டவலால் இறுகச் சுற்றினார்கள்.

சுய நினைவு பெற்றபோது கிராமத்துக்கு வெளியே இருந்த மைதானத்தில் விழுந்து கிடப்பது தெரிந்தது.

www.padippakam.com



கால்களையும் கைகளையும் இறுகக் கட்டியிருந்தார்கள். மேலே மப்பும் மந்தாரமுமாய் இருண்ட வானம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அவனுக்கு இரண்டு பக்கத்திலும் நிழல்போல் உருவங்கள். அவர்கள் யாரென்று அந்தத் தெளிவில்லாத நிலையில் சரியாகப் பிடிபடவில்லை. அருகேயிருந்த மரத்திலிருந்து வடம் போன்ற கயிறு தொங்கிக் கொண்டிருந்தது. 'முடிச்சைப் பலமாப் போடு...' யாரோ சொன்னதும் காதில் விழுந்தது.

மரண தேவதை தன்னைப் பரிகாசம் செய்வது போலிருந்தது. அவர்கள் ஆர்ப்பாட்டம் கண்டு தனக்குள் சிரித்துக்கொண்டான். தன் கத்தி எப்போதும் இப்படி அலட்டிக் கொண்டதில்லை. நிராயுதபாணிகளான ஏழு கெரில்லாக்களை வரிசையாய் நிற்க வைத்து கத்தி வேட்டையில் தலைகளை உதிர்த்தான். குறுக்கே வந்த பொம்பளையை ஆசை தீர அனுபவித்துவிட்டு இரண்டு கால்களையும் இரண்டு கட்டைகளாய் நறுக்கிப் போட்டிருக்கிறான்.

உருண்டு உருண்டு தப்பியோடி விடலாம் என்றுகூட முயற்சித்தான். ஆனால் ஒரே உதையில் சேர வேண்டிய இடத்தில் கொண்டு சேர்த்தார்கள். அவர்களை யாரென்று தெரிந்து கொள்ள பெரிதும் முயற்சித்தான். மூக்கை இறுக்கிக் கொண்டு போராடி தப்பித்துக் கொண்டால் அல்லது தன்னவர்கள் யாராவது அங்கு வந்து தன்னை விடுவித்தால் அந்தக் கொலைகாரப் பாவிகளின் வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்க வேண்டும் என்று நப்பாசைக் கொண்டான்.

சுபாஷ்...! ... தன்னை தூக்கில் போட ஆயத்தம் செய்து கொண்டிருப்பது சுபாஷா...? கமலா...? 'கொழுப்பெடுத்துத் திரியறா...' என நினைத்துக் கொண்டான்.

www.padippakam.com



''ரெட் ரிபப்ளிக் மக்கள் அர்ப்பணித்த ரத்தக் கண்ணீருக்குத் தர்ப்பணமாய்...'' கமலா அழகாய்க் கோஷமிட்டாள்.

எல்லை மீறிய பயத்துடன் விலுக்விலுக்கென உதைத்துக் கொண்டான் மஸ்தான். தூக்குக் கயிறு கீழ் முகம் காட்டியது.

பலமான கைகள் பல கயிற்றை அவன் கழுத்தில் இறுக்கி மேல் நோக்கி இழுத்தார்கள். தரைக்கு இரண்டடி உயரத்தில் அவன் உடம்பு தொங்கிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் டபடபவென அடித்துக் கொண்ட பிறகு ஓய்ந்து போயிற்று அவன் கைகளும் கால்களும்.

தொலைவில் பங்களா தகதகவென எரிந்துகொண்டிருந்தது. நெருப்பு நாக்குகள் பங்களாவின் நாற்புறமும் ஜுவாலையுடன் எரிந்து கொண்டிருந்தன. துப்பாக்கிச் சத்தங்கள் திக்கெட்டும் எதிரொலித்தன. தப்பித்து ஓட முயன்ற ராட்சசர்கள் கெரில்லாக்களின் துப்பாக்கிகளுக்கு இரையாகி நிலம் சாய்ந்தனர்.

பொழுது விடிந்தபோது ரஜாக்கர்கள், போலீஸ், குண்டர்களின் சாம்பல் மட்டுமே மிஞ்சியிருந்தன. ஊர் மக்கள் திரளாய் வந்து மஸ்தான் சவத்தைப் பார்த்துச் சென்றனர். ஆவேசம் அடங்காது காறி உமிழ்ந்து விட்டுச் சென்றனர். அவனை சம்ஹாரம் செய்தவர்களைப் பாராட்டியபடி சந்தோஷமாய்ச் சென்று கொண்டிருந்தார்கள்.

**(ஜுலை '48 'அப்பூதயா' இதழிலிருந்து)**

www.padippakam.com



# யல்ல மந்தாப் பைத்தியம்

ஊரை அடைந்த போது, கோழி கூவும் நேரமாகி விட்டது. ஊருக்கு அந்தப் பக்கமாய் வசிப்பவர்கள் வழக்குப் பாறையருகே நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அம்மாடியோவ்! வயசையும் மறந்துட்டு அந்தக் கெழவன் எப்படி சண்டை போட்டான்...! அடேங்கப்பா...!''

''சாதுவா இருந்த கெழவனுக்கு அம்மாம் பலமும் தைரியமும் எங்கிருந்து வந்தது?''

''ஏன்... சீதம்மா இல்ல... அதுகூடத்தான் இருக்கற இடம் தெரியாது. எவ்வளவு தைரியமா போலீஸ்காரன் மண்டையைப் பொளந்துட்டா. சமயத்துக்கு ஒலக்கை ஞாபகம் வந்ததே... அதைச் சொல்லு...''

''சாதுவா இருந்தா என்ன...சமயம் வந்தா பூனையும் புலியாயிடறதே...''

இந்த கமலாவைப் பாரேன். என்ன பாட்டு... என்ன பேச்சு... ஜனங்களை அப்படியே அசைச்சுட்டா, வீராரெட்டி அதை அவ்வளவு நல்லா தயார்ப்படுத்தி வச்சிருக்கான்...''

அநியாயமா அந்த சீதம்மா புண்ணியவதியை ஒழுங்கி ஏப்பம் வுட்டுட்டாங்க படுபாவிங்க...

www.padippakam.com



ராட்சசங்க. அவங்ககிட்ட துப்பாக்கி மட்டும் இல்லாம இருந்திருந்தா...''

''கடைசில என்னாச்சு... நம்மாளுங்கதான ஜெயிச்சாங்க... வீராரெட்டிய ஜெயில்லர்ந்து விடுவிச்சாங்க. அந்த தேஷ்முக் பய நாயைப் போல் பயந்து ஓடிட்டான்ல...?''

''மஸ்தான் பயலுக்கும் படேல் தடியனுக்கும் கெடைச்ச அடி உதைங்க... அம்மாடி... ஏழு ஜென்மத்துக்கும் மறக்க மாட்டாங்க மத்தவங்க. அந்த நாய்க ரெண்டும் வுட்டா போதும்னு ஊரை வுட்டுட்டே இல்ல ஓடிட்டதுங்க...''

''யல்லமந்தான்னா யல்லமந்தாதான். தனக்கு அநியாயம் செஞ்ச மஸ்தான எப்படி பழி வாங்கிட்டான்... ஒன் பகையா எம் பகையா...''

''இதெல்லாம் எதுக்கு இப்ப... ஜெயிச்சுட்டாங்க. அவங்க நெலத்தை அவங்க மறுபடியும் உழுதிட்டிருக்காங்க. நம்ம நெலம் நமக்கு எப்ப கெடைக்கப் போறதோ?''

''சங்கம் தயவு...''

எல்லோரும் சுவராசியமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''சரி... நேரமாச்சி. பொறப்படலாம்...'' எல்லோரும் கிளம்பியபோது 'போலீஸ்... போலீஸ்...' என்ற கூக்குரல்கள் கேட்டன. போலீஸ் லாரி ஊருக்குள் நுழைந்தது.

''ஏய்... கதவைத் தொற...'' ஒரு போலீஸ்காரன் விட்ட உதையில் கதவு இரண்டாய்ப் பிளந்து கொண்டது.

''டேய் கெழவா...தானியங்களை எங்க பதுக்கி வச்சிருக்க... மரியாதையா சொல்லிடு...'' கிழவன் இடுப்பில் எட்டி உதைத்தான் ஒருவன்.

www.padippakam.com



இந்த சந்தடியில் கூடைக்கடியிலிருக்கும் கோழிக் குஞ்சுகள் கீச்... கீச்... என்று கத்தி தம்மைக் காட்டிக் கொண்டு விட்டால் இந்தப் போலீஸ் கயவர்கள் அவை களையும் எடுத்துக் கொண்டுபோய் விடுவார்கள் என்ற அச்சத்தில் கூடையை எடுத்து அவைகளுக்கு விடுதலை தந்தான்.

''ஏய் கிழவி... கோழி... கோழி...'' என்று கத்தியபடி அவளைத் துப்பாக்கிக் கட்டையால் அடித்தான் போலீஸ் காரன்.

ஒரு இளம் பெண்ணை முடியைப் பிடித்து வெளியே இழுத்து வந்தான் இன்னொருவன். ''உன் புருஷன் எங்கடி?''

''அவன் எதுக்குடா இப்ப...?'' நான்கு பேர் 'ஹஹ்ஹஹ்ஹா' என்று பயங்கரமாய்ச் சிரித்தபடி நடுங்கிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அழுகை... கூச்சல்... வசவுகள்... கோஷங்கள் என ஒரே களேபரமாக இருந்தது. வழக்குப் பாறையருகே கூடியிருந்தவர்கள் அங்கிருந்து ஓட யத்தனித்த போது ''நில்லுங்கடா...'' எனக் கூச்சலிட்டான் இடையன் போயன்னா.

ஆடுகள் மேய்ச்சலுக்கு தழைகள் நறுக்கும் துறட்டுக் கத்தியை உயரே தூக்கிப் பிடித்தபடி நின்று கொண்டிருந் தான் அவன். அவன் கூப்பாடு போட்டதும் ஜனங்கள் டக்கென நின்றுவிட்டார்கள்.

''எங்க ஓடறீங்கடா... பத்து போலீஸப் பார்த்ததும் பயந்து ஓடணுமா...? பொம்பளைங்களப் பார்த்துகூட புத்தி வரலையா ஒங்களுக்கு?''

அவ்வளவுதான்... ... மந்திரம் போட்டாற்போல் திரும்பியவர்கள் யுவதியைச் சுற்றியிருந்த போலீஸைச்

www.padippakam.com



சூழ்ந்து கொண்டார்கள். கெட்ட வார்த்தைகளால் போலீசைத் திட்டினார்கள். போலீஸ் தடியால் அடிக்க... அவர்கள் பயப்படவில்லை. உடம்புகள் ரணமாகி ரத்தம் வடிந்தது. போயன்னாவின் துறடு பக்கவாட்டினின்று ரிவ்வென்று கிளம்பி ஒரு போலீஸ்காரன் கழுத்தைத் துண்டாக்கியது. மற்ற போலீஸ்காரர்களின் தடிகளும் தொப்பிகளும் அங்கேயே இறைந்து கிடந்தன. தூரத்திலிருந்து, 'இருங்க...நாளைக்கி உங்க சங்கதியை கவனிக்கிறோம்' என்ற கூச்சல் கேட்டது.

ஃ ஃ ஃ

அந்த ஊர்க்காரர்கள் நாற்பது பேரை போலீஸ் ஸ்டேஷனுக்கு கட்டி இழுத்து வந்தார்கள். சுற்றிலும் ஐம்பது ரிசர்வ் போலீஸ் காவலாய் நின்றுகொண்டிருந்தார்கள். துப்பாக்கிகளும் ரிவால்வரும் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. கையில் ஹண்டருடன் இன்ஸ்பெக்டர். நீண்ட கொறடாவுடன் இரண்டு குண்டர்கள். அருகே அந்த ஊர் படேல்...

''போலீசைக் கொன்னது எவன்...?'' இன்ஸ்பெக்டர் கர்ஜித்தார். யாருமே வாய் திறக்கவில்லை.

''சொல்லப் போறீங்களா இல்லை சொல்ல வக்கணுமா?''

''..............''

படேலுக்கு இன்ஸ்பெக்டர் சைகை செய்ய, படேல் லிஸ்டிலிருந்த பெயர்களைப் படிக்கத் தொடங்கினான்.

''வெங்கடரெட்டி...''

உடனே போலீசின் கொறடா அவன் உடம்பு மீது சள்சள் என்று விளையாடியது. ரிவால்வர் குறி பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

www.padippakam.com



''இப்ப சொல்லு...''

''தெரியாது...''

ரிவால்வரிலிருந்து குண்டுகள் விர்ரென்று பாய்ந்து... சவங்கள் தரையில் கிடந்தன. ''ச்சே...குண்டு தீர்ந்துட்டது...'' மேஜைமீது வீசினார் இன்ஸ்பெக்டர்.

படேல் ஒவ்வொரு பெயராய்ச் சொல்லிக் கொண்டே போக...

ஒவ்வொரு உடம்பும் கொறடா அடியில் ரணமாகி... ரத்தம் வடிந்தது. ஆனாலும் அத்தனைபேர் வாயினின்றும் ஒரே சொல்... ''தெரியாது...''

இன்ஸ்பெக்டருக்கு அடக்க முடியாத எரிச்சலும் விரக்தியும் ஏற்பட்டது.

''போய்த்தொலைங்க... திமிர்பிடிச்ச கழுதைங்களா... உங்களை எப்படி சொல்ல வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும். இவங்களைக் கொண்டு போய் கொட்டடியில அடைங்கடா...'' சலிப்புடன் கத்தினார்.

''போயன்னா...''

கடைசி பெயரைப் படித்தான் படேல்... வேறு யாரையோ அழைப்பதுபோல் அசையாது நின்றான் போயன்னா.

''அடேய்... ஒன்னைத்தாண்டா...'' பின்னாலிருந்த போலீஸ்காரன் பூட்ஸ்காலால் உதைத்தான்.

''ஓய்...எம்பேரு போயன்னா இல்ல...'' போலீஸ்காரன் விட்ட உதையில் இருந்த இடத்திலிருந்து இரண்டடி முன்னால் போய் விழுந்த போயன்னா விறைப்புடன் சொல்ல...

''அரே... பத்மாஷ்... கிசிராடா...'' ஹண்டர் பிடியால் ஓங்கி அடித்தார் இன்ஸ்பெக்டர். போயன்னா

www.padippakam.com



ஆடாது அசங்காது நின்றான். அடி விழும் இடத்தில் அணிச்சையாய் தடவிக்கொள்ளக்கூட கைகள் எழ வில்லை.

''நீங்க கூப்பிட்டது போயன்னாதான?''

''அடேய்... உன்னைத்தாண்டா... இடியட்...'' ஹண்டர்பிடி அவன் உடம்பில் பட்டவேகத்தில் தெறித்து தூரத்தில் எகிறி விழுந்தது.

அடுத்து போலீசின் கொரடா ஹண்டர் வேலையைச் செய்யத் தொடங்கியது. தணல்போல் தகதகக்கும் விழி களால் இன்ஸ்பெக்டரையும் படேலையும் சுட்டெரித்துக் கொண்டிருந்தான் போயன்னா.

'' எம்பேரு யல்லமந்தா...'' கம்பீரமாய்ச்சொன்னான்.

போலீஸ் திடுக்கிட்டது. படேலும் இன்ஸ்பெக்டரும் துள்ளி விழுந்தார்கள். ஆனாலும் கொறடாவால் அடிப்பதை நிறுத்தவில்லை.

''எங்க கான்ஸ்டபிளை யாருடா கொன்னது?''

''நான்தான்...''

இன்ஸ்பெக்டரும் படேலும் பலத்த வியப்பும் பயமும் ஒருசேர அடைந்தார்கள். உடம்பு சில்லிட்டுப் போனது. நெஞ்சில் கனன்ற கோபத்தையும் மீறி நெற்றியில் வியர்வை படர்ந்தது.

''அப்படின்னா யல்லமந்தாவா நீ...?''

தடியடிகள் பட்டு உடம்பெல்லாம் வீங்கிவிட்டது. தோல் உரிந்து கொண்டு வந்தது. எலும்புகள் முறிந்தன. எதற்கும் பயப்படவில்லை அவன்.

''நான்தான் கொன்னேன். நான்தான்... நான் தான்...'' உரக்கக் கத்தினான்.

www.padippakam.com



இன்ஸ்பெக்டர் முதல் தடவையாக மனித சுபாவத்தில் சிந்தித்தார். மற்றவர்களெல்லோரும் தங்களுக்குத் தெரியாதென்றார்கள். இவன் 'நானே' என்று திரும்பத் திரும்பச் சொல்கிறான். எவ்வளவு சித்திரவதை செய்தாலும் அசாத்திய துணிச்சலுடன் 'நான்தான்' என்கிறான். இவன் பைத்தியம் இல்லையே...?...

''இவனுக்கு மூளை கலங்கிட்டது போலிருக்கு...'' மெல்ல கிசுகிசுத்தான் படேல் இப்போது அந்த எண்ணம் இன்ஸ்பெக்டர் மனதிலும் திடமாயிற்று.

''விட்டுத்தொலைங்க...''

''வுட்டுட்டா... இன்னொரு கான்ஸ்டபிளை நறுக்க மாட்டான்னு என்ன நிச்சயம்?''

வேறுவழியில்லாது மீண்டும் அடிக்க ஆரம்பித்தார்கள். அலுப்பேற்படும்வரை அடித்தார்கள் ''போடா பைத்தியம்...'' என்று அவனை எழுப்பி தூரம் போய் விழுமாறு எட்டி உதைத்தார்கள்.

''ஆமா... பைத்தியம்தான். நிஜாம் பிசாசுகளை நறுக்கிக்கொல்லும் பைத்தியம்...'' உடம்பில் எஞ்சியிருந்த பலமெல்லாம் திரட்டிக் கத்தினான் போயன்னா.

ஃ ஃ ஃ

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அந்த ஊருக்குச்செல்லும் பாதையினூடே இன்னொரு குறுக்குப்பாதை. ராத்திரி எட்டுமணி இருக்கும். மக்கள் படையில் ஒரு ஐம்பது பேர் வரை இருந்தார்கள். அந்தக் குறுக்குப்பாதையில் இருட்டைப்பிளந்து கொண்டு மௌனமாய் நடந்தார்கள். சாலைகள் சந்திக்கும் இடம் அடைந்தபோது படைத் தலைவன் சட்டென நின்றான். கொஞ்ச தூரத்தில் ஏதோ நிழலாய் தெரிந்தது. ஆனால் அசைவில்லை. அந்த இடத்தில் டார்ச் லைட் ஒளியைப் படர விட்டான்.

www.padippakam.com



இடையன் போயன்னா நினைவற்று விழுந்திருந்தான். உடம்பு கொதித்துக் கொண்டிருந்தது. தோளில் தொங்கிக் கொண்டிருந்த பாட்டிலிலிருந்து நீரை எடுத்து அவன் முகத்தில் தெளித்தான் படைத்தலைவன் அவனிடம் சற்றே அசைவு தெரிந்தது. ''பை...த்.. தி...யம்...ய...ல்ல... மந்தா... பைத்...தி...யம்...'' மெல்ல முனகினான். உலர்ந்து போயிருந்த இதழ்களில் கொஞ்சம் கொஞ்சமாய் தண்ணீர் பட... கண்கள் திறந்தன. இன்னும் கொஞ்சம் நீர் குடிக்கச் செய்தார்கள். முழுத்தெளிவு வந்ததும் சரேலென எழுந்து உட்கார்ந்தான். ''பைத்தியம்... யல்லமந்தா பைத்தியம். நிஜாம் ராட்சசர்களைக்கொல்லும் பைத்தியம். நான் போறேன். எங்க வீராரெட்டி அய்யா விடம் போய்ச் சொல்லணும். எழுந்திருக்க முயன்றான். தலைவன் புரிந்து கொண்டான்.

''நான்தான் வீராரெட்டி... என்ன நடந்ததுப்பா...?'' பரிவுடன் கேட்டான்.

''நீங்களா... எங்க வீராரெட்டி அய்யாவா... அப்படின்னா வேஷ்டி, சொக்கா, தலைப்பால்லாம் எங்க... கமலம்மா எங்க... ஊஹூம்... நீங்க இல்ல...''

''இல்ல யல்லமந்தா. நம்ம மக்கள்படை வீரயாத்திரை கௌம்பியிருக்கு... அதனால்தான் இந்த டிரஸ்...''

''அப்படின்னா...?''

''நிஜாம் ராட்சசங்களோட யுத்தம் செய்யறதுக்காக நாமெல்லாம் படை திரட்டிட்டுப் போகணும்... படை தயாராயிட்டதுன்னே வச்சுக்கவம்...''

''அதுக்குள்ள படை தயாராயிட்டதா... எங்க வீராரெட்டிய்யா லேசுபட்டவரா என்ன?''

''சரி... என்னவோ சொல்லணும்னியே...''



படிப்பகம்

www.padippakam.com



''நம்ம ஊர்க்காரங்களை போலீஸ்நாய்ங்க ஜெயில்ல தள்ளிட்டாங்க, அந்த போலீஸ்காரன கொன்னது நான் தான்னா 'போடா பைத்தியம்'னு கழுத்த பிடிச்சித் தள்ளிட்டாங்க. ஆமா... நான் பைத்தியம்தான். நிஜாம் திருடர்களைக் கொன்னுப்போடற பைத்தியம்...''

''எத்தனை பேரை ஜெயில்ல வச்சிருக்காங்க?''

''உம்... ஒரு நாற்பது நாற்பத்தஞ்சு பேர் இருப்பாங்க...''

மக்கள் படை வந்தவழியேநடந்து போலீஸ் ஸ்டேஷன் பக்கமாய் நடந்தது.

''என்ன... என் தொறட்டை நீ வச்சிருக்கே'' என்று பக்கத்திலிருந்த ஒரு வீரனிடமிருந்து துறட்டுக்கழியையும் சோடாலியையும் பிடுங்கி தன் தோளில் வைத்தபடி நடந்தான் போயன்னா.

ரிசர்வ் போலீஸ் பீட்டு மாறும் நள்ளிரவு நேரம். மக்கள் படை வீரனொருவன் பின்பக்கமிருந்து சந்தடியின்றி சுவரேறிக் குதித்து ரிசர்வ் போலீஸ் பக்கமாய் ஊர்ந்து சென்றான். பக்கத்து பங்களாவைச் சுற்றிக் கொண்டு வந்த இன்னொருவன் காவல் சிப்பாயின் பின்னால் பதுங்கினான்.

''யார் அது...?'' உரக்கக் கத்தினான் காவல்சிப்பாய். அங்கு எப்போது போய்ச் சேர்ந்தானோ... ''யல்லமந்தா...!'' என இறைந்தான் போயன்னா. மிரண்டு போன சிப்பாயின் நடுங்கும் கையிலிருந்து கீழே விழுந்தது துப்பாக்கி. சப்தம் கேட்டு துள்ளியெழுந்தது ரிசர்வ் படை. பாம்ப் வெடித்தது. நிஜாம் பிசாசுகளை வெட்டிக்கொல்லும் பைத்தியம்' எனக்கத்தியபடி தப்பித்து ஓடப்பார்த்த காவல்சிப்பாய் தலையை கோடாரியால் வெட்டினான். ''ஆந்திர மகா சபைக்கு..,ஜே...!'' ஜெயபது

www.padippakam.com



குரல்கள் ஒருங்கிணைந்து பங்களா அதிரும் வண்ணம் கோஷமிட்டார்கள்.

இனி ரிசர்வ் படை ஏது...? மூன்று சவங்கள்... குற்றுயிரும் குலையுயிருமாய் பத்து சதைக்கூளங்கள்... ஐம்பது துப்பாக்கிகள்... ஐம்பது ஜோடி பூட்ஸ்சுகள்... பெல்டுகள்... இன்னும் சில பொருட்கள் மட்டுமே அங்கு இறைந்து கிடந்தன.

கோடாலி அடிகளுக்கு பூட்டுகள் உடைந்தன. "ஆந்திர மகா சபைக்கு... ஜே... தொண்ணூறு குரல்கள் ஆகாயத்தை எட்டின,

"தேஷ்முக்... படேல்...!" என்று கோஷமிட்டன குரல்கள். 'ஓ' வென்ற உற்சாகக் கூவல்களுடன் வெளியே வந்தார்கள் அடைப்பட்டிருந்தவர்கள். மக்கள் படையிட மிருந்த கோடாரிகள், தடிகள், ஈட்டிகள் அவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஐம்பது துப்பாக்கிகள் தோள்கள் ஏறின, மக்கள்படை இப்போது தொண்ணூறு பேரானது. பங்களாவைச்சுற்றி தீ வைத்துவிட்டு ஊர்ப்பக்கமாய் நடந்தார்கள். பின்னால் எரிந்து கொண்டிருந்த பங்களாவின் நெருப்புச்சுடர்களின் ஒளியில் துப்பாக்கிகள் ஜொலித்தன.

மக்கள் படை ஊர் மையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

"நடங்க... நடங்க... நடங்க... ராத்திரிபகலாய் கஷ்டப்பட்டு உழுத நெலத்தில் பயிர் செய்ய நடங்க... நடங்க......!" உற்சாகமான பாட்டு இரவின் நிசப்தத்தைக் கலைத்தது.

மக்கள் படை... வீரயாத்திரை... இதே பேச்சுதான் ஊர் முழுக்க. தேஷ்முக் காரில் ஏறி பின்பக்கவழியாய் தப்பி ஓடினான். மக்கள் படை ஊருக்குள் பிரவேசித்தது.

www.padippakam.com



கட்டிலினின்று ஃபிசுக்கென்று எழுந்த படேல் அரண்டு போய் ஓடத்துவங்கினார்.

''அதோ... அதோ... படேல்...!''

''பிடிங்க அவன. மக்கள் கோர்ட்டில் விசாரிப் போம்...'' படைத்தலைவன் சொல்லி வாய் மூடுவதற்குள் போயன்னாவின் கையிலிருந்த கோடாலி 'ரய்யங்...' என சீறிப்பாய்ந்தது. படேல் தலை அறுந்து விழுந்தது.

''யல்லமந்தா பைத்தியம். நிஜாம் பாவிங்களை நறுக்கும் பைத்தியம்...'' என்று வெறிபிடித்தவன்போல் கத்தினான் போயன்னா.

''படேலுக்கு இந்தத்தண்டனை வேண்டியதுதான்...'' என்றார்கள் ஜனங்கள்.

தலைவன் வழக்குமேடையேறினான். ''ஒங்க நெலத்தை நீங்க திரும்ப எடுத்துக்கலாம்...'' என அறிவித்தான்.

'என் நெலம் என் நெலம்' என்று எல்லோரும் மகிழ்ச்சியுடன் கூச்சலிட்டார்கள். யல்லமந்தா உட்பட அவர்கள் ஆடுமாடுகள் அவரவர்களுக்குத் திருப்பித்தரபட்டன. இந்த சந்தோஷசெய்தியை போயான்னாவிடம் சொல்வதற்காக அவனைத் தேடிச் சென்ற ஒரு வயோதிக விவசாயி ஊருக்கப்பால் வெட்டவெளியில் நிச்சலனமாய் நின்று கொண்டிருந்த போயன்னாவைக் கண்டு விஷயத்தைத் தெரிவித்தான். 'உம்'...என்று முனகி ஏதோ சொல்ல வாயெடுத்த போயன்னா... அதாவது யல்லமந்தாவின் நினைவு தப்பியது.

(மே 1948 'அப்யூதயா' இதழிலிருந்து)

(ராம்ஷா எழுதிய 'மத்தனய்யா மரணம்' மற்றும் கிரண் எழுதிய 'யல்லமந்தா பைத்தியம்' என்ற கதைகளுக்கு ஒரு விசேஷம் உண்டு. இந்த இரண்டு கதைகளின்

www.padippakam.com



பாத்திரங்கள் சுங்கரவாசிரெட்டி எழுதி 'ப்ரஜா நாட்டிய மண்டலி' அரங்கேற்றிய நாடகத்தில் வரும் பாத்திரங் களே. சீதா, சுபாஷ், யல்லமந்தா, கமலா, வீராரெட்டி, மஸ்தான்...இந்தப் பாத்திரங்களெல்லாம் 'மாபூமி'யின் முக்கிய பாத்திரங்கள்.

மஸ்தான் மற்றும் படேல் மீது ஜனங்களுக்கிருக்கும் கோபமும் பகையுணர்வும் எழுத்தில் வர்ணிக்க முடியாது. 'மாபூமி...' நாடகத்தில் இந்த இரண்டு பாத்திரங்களும் ஊரைவிட்டு ஓடிவிடுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனங்களுக்கு அவர்கள் மீதான பகையுணர்வும், கோபமும் தீரவில்லை. அந்த விழைவின் எதிரொலியில் விளைந்தவைதாம் இந்த இரண்டு கதைகளும்) □

படிப்பகம்

www.padippakam.com

பி. என். ரெட்டி

# ஜீவாதாரம்

''அடி... ஒன்னைத்தாண்டி... எழுந்திரு... விடிஞ்சி எம்மாம் நேரமாவுது. இன்னும் தூங்கறா... உம்... எழுந்திரு...'' மகளை எழுப்பிக் கொண்டிருந்தாள் ஐம்பத்தைந்து வயதான லச்சம்மா. நடு வயது தாண்டினாலும் கட்டுக் குலையாத ஆஜானுபாகுவான உடம்பு. வாலிப வயதைத் தொட்ட இரு மகன்கள்...பன்னிரண்டு வயது மகள். வாழ்க்கையில் அத்தனை கஷ்டங்களையும் அனுபவித்தவள். உடம்பில் இன்னும் வலுவிருந்தது. விவசாய வேலைகளை தானே சுயமாய்ச் செய்துகொண்டு வயிற்றை வளர்க்கிறாள்.

''இந்தப்பொண்ணு எழுந்திருக்கமாட்டேங்குதே...நாளைக்கே கல்யாணம் கட்டிக்கப் போறவ... கொஞ்சம் கூடப் பொறுப்பில்லாம இருக்கே... போற எடத்துல எப்படித்தான் பொழைக்கப் போவுதோ. ஏய் கங்கம்மா... ஒன்னெத்தான்... எல்லோரும் தயாராயிட்டாங்க. நீயானா இன்னும் பாயில சுருண்டு கெடக்கற...'' மகளின் தோளை உலுக்கி எழுப்பினாள்.

''இன்னும் வானம் வெளுக்கல. அதுக்குள்ள என்ன குடி முழுகிப் போச்சுன்னு எழுப்பறே...''

www.padippakam.com



''குடிமுழுகறதப்பத்தி ஒனக்கென்ன தெரியப் போவுது? ஆக்கிப்போட்டா தின்னறவ... சரி சரி... எழுந்து அடுப்ப பத்தவை. பால் கறந்துட்டு வரேன். ராம்ரெட்டி வர்றாராம். காப்பி போடணும்...''

''ராம்ரெட்டி வராறா? இன்னிக்கு ஊர்ல ஏதாவது மீட்டிங் இருக்கா?''

''மீட்டிங் மட்டுமா... ஊரெல்லாம் பண்டிகை கொண்டாடிட்டிருக்காங்க... இன்னிக்கி சங்கக்காரங்க நெலம் பங்கிடறாங்களாம்...''

''யார் நெலங்க...?''

''எர நூறு ஏக்கருக்கு மேல வச்சிருக்கங்க நெலத்துலேர்ந்து இல்லாதவங்களுக்கு பங்கிடறாங்களாம். அப்பாவி ஜனங்களை மோசம் செஞ்சி பிடுங்கிட்ட நெலத்த கூட திருப்பித் தராங்களாம்...''

''அப்ப நம்பளோடதும் நமக்கு திரும்ப கெடைச்சிடுமா?''

''நம்பளது மட்டுமல்ல. எல்லாருக்குமே அவங்கவங்க சொத்த திருப்பித் தந்துடறாங்களாம்...''

லச்சம்மா சொன்ன செய்தி சந்தோஷமூட்ட எழுந்து முகம் கழுவிக்கொண்டு மடமடவென வேலைகளைக் கவனிக்கலானாள் கங்கம்மா; லச்சம்மா மனதில் என்றைக்குமில்லாத யோசனைகள். ஏதேதோ புதிது புதிதாய். கிராமத்தில் நிலப்பங்கீடு நடக்கப்போகிறது என்ற செய்தி அறிந்தது முதல் ஒரு புது உலகத்தில் பிரவேசித்திருப்பது போன்ற உணர்விலிருந்தாள்... கங்கம்மாவை விடச் சின்னவளாக இருந்த பருவம் முதற்கொண்டு அவள் இறங்கி வேலை செய்யாத நிலமில்லை அந்த ஊரில்.

பின் வந்த நாட்களில் புருசனுடன் சேர்ந்து ராத்திரி பகலாய் மாடாய் உழைப்பு... உழைப்பு... உழைப்புதான்.

www.padippakam.com



வெய்யில்... மழைக்கஞ்சாத உழைப்பு. அந்தக் கடின உழைப்புக்கு அடையாளம் இன்றும் அவள் உடம்பில் இருக்கும் காய்ப்புகள். உழைத்து ஓடாய்த்தேய்ந்து உருக்குலைந்து நோய்வாய்ப்பட்ட அவள் புருசன் அவளைத் தவிக்கவிட்டு இறந்து போனான். இவ்வளவு நாள் உழைப்பில்... இத்தனை கஷ்டத்தில் அவள் கண்ட பலன் என்ன? அவளுடைய ஒரே ஆதாரமான பத்து ஏக்கர் செம்மண் நிலம் படேல் ராசய்யா வசமாயிற்று. அந்த நிலம் அவர்களிடம் இருந்தவரை குறுக்கிட்ட அத்தனை இன்னல்களையும் தைரியமாய் எதிர் கொண்டு எப்படியோ சமாளித்துக்கொண்டு காலத்தைக் கடத்தினார்கள் அவளும் அவள் புருசனும். அதுமட்டு மல்ல. அந்த நிலம் தங்களிடம் இருக்கும் வரை இந்த கஷ்ட காலத்திற்கும் நிச்சயம் ஒரு நாள் விடிவு பிறக் காமல் போகாது என்று ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந் தார்கள். ஆனால் அந்த ஒரே ஆதார இழையும் அறுந்து போன பிறகு அந்த நம்பிக்கை அடியோடு பொசுங்கிப் போய்விட்டது.

அந்த நிலம் அவளிடமிருந்து எப்படி அபகரிக்கப் பட்டது என்ற விஷயம் நினைவுக்கு வந்தால் வேதனை நெஞ்சை அடைக்கும். கிராமாதிகாரிகளாக இருந்த துரை களின் அட்டூழியத்திற்கு வலுவான நிரூபணம் அது. லச்சம்மா குடித்தனத்திற்கு வந்த புதிது. படேல் ராசய்யா அந்த நிலத்தின் மீது அப்போதிருந்தே ஒரு கண் வைத் திருந்தான். தனக்குச் சேரவேண்டிய கடன் வட்டியும் அசலுமாய்ச் சேர்ந்து அந்த செம்மண் நிலத்துக்கு ஈடான ஒரு தொகையை கணக்குக் காட்டி அந்த நிலத்தைத் தனக்குச் சொந்தமாக்கிவிடும்படிச் சொன்னான். அப்போதே பாதி பிராணன் போய்விட்டது லச்சம்மா புருசனுக்கு.கடன் பெற்ற மறுவருடமே ஏதோ கொஞ்சம் போக, அசலும் வட்டியுமாய் படேலுக்கு தானியம் அளந் தான். இப்போது இல்லாத பொல்லாத கணக்கெல்லாம்

www.padippakam.com



காட்டுகிறானே எனப் பதறினார்கள். ஊர்ப் பெரிய மனிதர்களை எதிர்த்துப் பேசமுடியாத கடை நிலையில் இருப்பவர்களை வேறு வழியின்றி வீட்டையோ நில புலன்களையோ அடமானம் வைத்து கடன் அடைப்பார் கள். ஆனால் இப்போது அவர்களின் ஜீவாதாரத்துக்கே உலை வந்துவிட்டதே...!

தன் உயிரைப் பணயம் வைத்தாவது தம் செம்மண் பூமியைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்தான் லச்சம்மா புருசன். அந்த தர்மப்போராட்டத்தில் புருசனுக்கு துணை நின்றாள் லச்சம்மா. சகவிவசாயிகளுடன் சேர்ந்து ஊரார்துணைடன் படேல் ராசய்யா மற்றும் அவன் ஏஜண்டுகளுடன் அயராது போராடி தம் நிலத்தைத் தக்கவைத்துக் கொண்டார்கள். ஆனால் அதோடு விட்டானா ராசய்யா? அவர்களை கோர்ட்டுக்கிழுத்தான். அவர்கள் தனக்கு பல நூறுகள் பாக்கியிருப்பதாக பொய் தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்தான் பொய்ச் சாட்சிகள் தயார் செய்தான். லச்சம்மாவும் அவள் புருசனும் பழைய சோறு மூட்டை கட்டிக் கொண்டு நாட்கணக்கில் கோர்ட்டைச் சுற்றித் திரிந்ததில் மிஞ்சிய சில்லறை நகை களும் போய் புதுக்கடனுக்காளானார்கள். என்ன ஆனால் என்ன? எதிர்பார்த்தபடிதான் நடந்தது. கோர்ட் தீர்ப்பு படேலுக்கு சாதகமாக அமைந்தது. துருப்புச் சீட்டான அந்த கோர்ட் ஆர்டரைக் கையில் வைத்துக்கொண்டு போலீசுடன் வந்து அவர்களின் உயிருக்குச் சமமான அந்த நிலத்தை பட்டப்பகலில் கொள்ளையடித்துச் சென் றான் ராசய்யா.

இந்த விதமாய் எத்தனையோ கஷ்டங்களுக்கும் கண் டங்களுக்கும் ஆளாகி போராடிப் போராடிச் சலித்துப் போன லச்சம்மா இந்த நிலப்பங்கீடு விஷயம் கேள்விப் பட்டதும் உணர்ச்சிவசப்பட்டு திக்குமுக்காடிப் போனாள் நம்ப இயலவில்லை. எப்படி நம்புவாள்? யார் யாரோ

www.padippakam.com



என்னென்னவோ சொன்னார்கள். புராண காலத்தில் ராமனும் கிருஷ்ணனும் அவதாரம் எடுத்து துஷ்டர்களைத் தண்டித்தது போல் இப்போதும் ஒரு புண்ணிய புருஷர் அவதரித்து கஷ்டப்படும் மக்களைத் தேற்றுவார் என்று ஊரிலுள்ள குருமார்கள் பண்டிதர்கள் சொல்லக் கேட்டிருக்கிறாள். கூடிய விரைவில் முஸ்லிம் ராஜ்யம் போய்விடுமென்றும் இந்து ராஜ்யம் வந்து எல்லோருக்கும் நல்லதே நடக்கும் என்று யாரோ ஆர்யசமாஜக்காரர்களாம்... அவர்கள் அநேக தடவை ஊரார் முன் பேசியிருக்கிறார்கள். அன்றைய ராமன் போலவே இன்று கடவுள் காந்தி அவதாரம் எடுத்திருக்கிறாரென்றும் நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கப்போகிறதென்றும் முன்னாள் படேல் மல்லாரெட்டி அடிக்கடி சொல்வதுண்டு. இந்தப் போதனைகளெல்லாம் போதனையாகவே நின்றுவிட்டன. அவன் ஏழ்மையும் அந்த அளவிலேயே நிற்கிறது. எல்லாமே காற்றில் கலந்து போன வார்த்தைகளாகிவிட்டிருக்க... இப்போது கேள்விப்படும் இந்தப் புது விஷயம் நிச்சயம் நடக்குமா என்று அவநம்பிக்கை கொண்டாள். இதுவரை எட்டிய செய்திகளெல்லாம், படேல் போன்ற ஊரின் பெரிய மனிதர்களுக்கே சாதகமாய் அமைந்தன. ஊரில் காலடி எறும்புகளாய் உள்ள தன்னைப் போன்ற ஏழை எளியவர்களுக்கு நன்மை பயக்கும் இந்த புதுச் செய்தி... புது விஷயம் நல்லபடி முடியுமா என்ற சந்தேகம். என்றோ ஆசை விடுத்த செம்மண் பூமி மீண்டும் தன் கைக்கு வருமா என்ற அவநம்பிக்கை கலந்த எதிர்பார்ப்பு.

இப்படி ஆயிரமாயிரம் யோசனைகள் நெஞ்சில் வரியிட... இருட்டுப் பிரியுமுன்பே கன்றுக்குட்டியை பாலுக்கு அவிழ்த்துவிட்டாள். பால் கறந்தாள். கறந்த பாலை ராம்ரெட்டிக்கெனப் பத்திரப்படுத்தினாள். ராம்ரெட்டியுடன் மக்கள் படையும் வரப்போவதாகச் செய்தி...

''கதவு தொற பெரியம்மா சீக்கிரம் நான் போகணும்...'' கதவு தட்டும் ஓசை...

www.padippakam.com



கதவைத் தட்டுவது கங்குலுவாகத்தான் இருக்கும் என்று வேகமாய்ச் சென்று கதவு திறந்தாள். கங்குலுதான்; சுறுசுறுப்பான முப்பது வயது இளைஞன்... மிகவும் பர பரப்பாய் காணப்பட்டான்.

''பால் எடுத்துவச்சிருக்கயா பெரியம்மா?''

''எதுக்குடா...?

''எதுக்கா... ஒனக்கு சங்கதி தெரியாதா...? அம்மோவ்... ஒனக்கா தெரியாது... சும்மா கதை வுடறே. சரி... நான் போறேன். தலைக்குமேல வேலையிருக்கு...'' என்று போகத்திரும்பியவனை நிறுத்தினாள் லச்சம்மா. ''போவியாம் இருடா. எப்பவும் அவசரந்தான் ஒனக்கு. சரி... என்ன சங்கதி சொல்லிட்டுப் போ...''

செருப்பில் கால் நுழைத்தபடி சொன்னான் கங்குலு. ''தெரியாதது போல் கேக்கறயே. இன்னிக்கே நம்ம ஊர்ல நெலம் பங்கு போடறாங்க. ராம்ரெட்டி வந்துட்டார். கொஞ்ச நேரத்துல பெரிய ஊர்கோலம்... சீக்கிரம் வந்துடு பெரியம்மா...''

''ராம்ரெட்டி வந்துட்டாரா?''

''ஆமா... படைகூட வந்துட்டது. ஒங்க அப்பய்யா கூட வந்திருக்கான்...'' ஓட்டம் பிடித்தான் கங்குலு.

''அம்மாடி... இந்தப் பயலுக்கு சங்கம் வேலைன்னா எவ்வளவு சந்தோஷம்?'' லச்சம்மா மனதில் இப்போது புது ஆலோசனைகள். எண்ணங்களை ஓட விட்டபடி மடமடவென காரியங்களைக் கவனிக்கலானாள். மகளை பால் காய்ச்சச் சொல்லிவிட்டு அரிசி கழுவலானாள். எப் போதும் நினைத்துக்கூடப் பார்க்காத மாற்றங்கள் ஏதேதோ நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இருமலும் தும்மலுமாய் கட்டிலில் கிடந்த மாமன் அதிர்ஷ்டம் இருந் தால் எளியவன் கூட வலியவனாகலாம் என்றும், யாதவர்

www.padippakam.com



வீட்டில் வளர்ந்த கிருஷ்ண மகிமை குறித்தும், இப்போதும் அதுபோல் ஒரு மகான் இருக்கத்தான் இருக்கிறான், அது யாரென்று தெரியாமல் போகாது என்றும் ஏதேதோ கதை பேசிக் கொண்டிருந்தான்.

'வயசாச்சில்லையா... ஏதோ உளர்றான் கெழவன்...' என்று அவளும் அவள் வீட்டாரும் கேலி பேசுவார்கள். ஆனால் இந்த கங்கலுகூட விட்டால் ஊரை ஆள்வாள் போலிருக்கிறதே...! இந்தப் பையன் இன்று ஊரில் ஒரு தலைவன் போல்தான் செல்வாக்கு பெற்றிருக்கிறான். அவன் மீது ஊராருக்கெல்லாம் கொள்ளைப் பிரியம். அவள் பார்த்து பிறந்தவன். பொழைப்பு அவளைவிட அநியாயம். மிஞ்சிமிஞ்சி ஐந்து ஏக்ரா நிலம் தேறுமா? அப்படிப்பட்ட கங்குலு இன்று ஊருக்கே அதிபதி. ஊருக்கே தலைவன். அப்பா... எவ்வளவு பெரிய மாற்றம்!......

அரிசியைக் கழுவி முடித்து பக்கத்து அடுப்பில் உலை வைத்தாள். வெளியே உரத்த கோஷங்கள்......

ஆந்திர மகா சபைக்கு ஜே...!
கம்யூனிஸ்ட் பார்ட்டிக்கு ஜே...!
உழுபவனுக்கே நிலம்!
நிஜாம் ஆட்சி ஒழியணும்!
மக்களாட்சி வாழ்க...! ...

கங்கம்மா வெளியே ஓடினாள். லச்சம்மா மனதும் பின்னாலேயே ஓடியது. அவளுக்கு இருப்புக் கொள்ள வில்லை. ஆனால் வேலைகள் முடிய வேண்டுமே! உலை கொதித்ததும் அரிசி கொட்டி அந்தப் பானைக்கும் பால் பாத்திரத்திற்கும் மூடிகள் போட்டுவிட்டு வெளியே ஓடினாள். ஊர்வலம் வீட்டு வாசலை நெருங்கியிருந்தது. அப்பா... எவ்வளவு பெரிய ஊர்வலம்! வயது முதிர்ந்தவர்கள்... குழந்தைகள் முதற்கொண்டு ஊரே திரண்டிருந்

www.padippakam.com



தது. பக்கத்து வீட்டு தள்ளாத கிழவி யல்லம்மா கூட இருக்கிறாளே...! நிறைமாதக் கர்ப்பிணி பிச்சம்மா கூட பின்னால் தள்ளாடியபடி வருகிறாள். இத்தனை பேரையும் கவனித்த லச்சம்மாவின் பார்வை வேறு யாருக்காகவோ அலைந்தன. அவளைப் போலவே பல பேர் யாருக்காகவோ பார்வையால் கூட்டத்தை அலைந்து கொண்டிருந்தார்கள். யாரோ ஊர்வலத்தின் முன்னணியில் இருந்த ஒருவரைச் சுட்டிக் காண்பிக்க... அதோ... அதோ... ராம்ரெட்டி...! வியர்வை ஊற்றெடுத்த முகம்... தோளில் துப்பாக்கி... காக்கி உடுப்பில் கம்பீரமாய் இருந்தார். எவ்வளவு பெரியவனாகிவிட்டான்! சின்ன வயதில் படேல் மல்லாரெட்டி வீட்டுக்கு வந்தபோது பார்த்தது தான். அந்த ராம்ரெட்டி எங்கே... இவர் எங்கே...? அன்று படேலின் ஆள். இன்று அவளைப் போன்ற கோடானு கோடி ஏழை எளியவர்களின் மனிதர். அது மட்டுமில்லை. தங்கள் சங்கத்தின் தலைவர்.

நெஞ்சு கொள்ளா மகிழ்ச்சியுடன் ஊர்வலத்துடன் சேர்ந்து கொண்டாள். கங்குலுவும் அவள் இளைய மகன் அப்பய்யாவும் கோஷங்கள் எழுப்ப 'ஜே' போட்ட நூற்றுக்கணக்கான குரல்களுடன் அவள் குரலும் இணைந்தது. ஊருக்கு வெளியே உள்ள பரந்த மைதானத்தை அடைந்தது ஊர்வலம். கிராமத் தலைவன் கங்குலு சபைக்கு தலைமை தாங்கினான். அங்கிருந்த பெரிய பாறை மீதேறி சொற்பொழிவாற்றினார் ராம்ரெட்டி. சமுதாயத்தில் நிலவும் பஞ்சம், வறுமை போன்றவைக்கு இன்றைய ஜமீன் முறை எந்த விதத்தில் காரணமாயிருக்கிறது என்பதை விளக்கமாய் எடுத்துச் சொன்னார்.

இந்த அடக்குமுறை ஒழிந்து சில பெரிய ஜமீந்தார்களின் கைவசமுள்ள லட்சக்கணக்கான ஏக்ரா நிலங்கள் கோடானுகோடி ஏழை மக்களின் கைக்கு வரும்போது தான் மக்களின் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி

www.padippakam.com



மேம்பாட்டையும் என்று அடித்துச் சொன்னார். இதெல்லாம் நினைத்துதான் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆந்திர மகா சபையும் நிலப் பங்கீடு திட்டம் ஏற்படுத்தி யிருக்கிறது என்று பலத்த கைத்தட்டலுக்கிடையே கூறினார்.

''கம்யூனிஸ்ட் பார்ட்டி மற்றும் ஆந்திர மகா சபை யின் கொள்கைகளை அனுசரித்து இந்தக் கிராமத்திலும் நிலப்பங்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணியைத் தொடங்கி வைக்கத்தான் நான் இங்கு வந்திருக் கிறேன். இந்தக் கிராமத்தின் கமிட்டி மேற்பார்வையில் நிலப் பங்கீடு இன்று ஆரம்பமாகிறது. இருநூறு ஏக்ரா வுக்கு மேல் வைத்திருக்கும் நிலச்சுவான்தாரர்களின் நிலங் கள் நிலங்களே இல்லாத ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப் படும். அதுமட்டுமில்லாமல் பூர்வ காலத்தில் கடன் என்ற பெயரில் மற்றும் வெவ்வேறு அக்கிரமக் காரணங்களி னால் அநியாயமாய் அபகரிக்கப்பட்ட நிலங்கள்கூட அவரவர்க்கு திருப்பித் தரப்படும்...''

இதெல்லாம் கேட்ட விவசாயிகள்... கூலிகள் சொற் பொழிவு முடிந்ததும் குசுகுசுவெனப் பேசிக் கொண்டார் கள்.

''இவ்வளவு தூரம் வந்துரும்னு தொரைங்க பாவம்... நெனச்சிருக்க மாட்டாங்க...''

''ஆமா... நாம மட்டும் என்னிக்காவது நெனச்சிப் பார்த்திருப்போமா இப்படி நல்ல காலம் பொறக்கப் போறதுன்னு...''

''அது சரி... ராம்ரெட்டி சாப் ஒருத்தர் வந்து சொன்னவுடன் அப்படியே நடத்திக் காட்டிடப் போறாங்களா...?'' சந்தேகம் தெரிவித்தான் ஒரு விவசாயி.

www.padippakam.com



சுருட்டை வீசியெறிந்தபடி சொன்னான் மற்றொருவன், ''விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு ராமன் சீதைக்கு என்ன வேணும்னு கேட்ட கதைதான் போ. அவர் பின்னால் பெரிய கம்யூனிஸ்ட் பார்ட்டி இருக்குன்னு மறந்து போச்சா? நம்மோட தேச தேசங்க இணைஞ்ச சங்கம் வேற துணை இருக்கு...''

''இதெல்லாம் சொல்லிட்டு அசல் சங்கதிய வுட்டுட்டயேடா. ஊர் மொத்தம் ராம்ரெட்டி சாப் பேச்சில் ஸ்திரமாய் நின்னுட்டுருக்கு. எல்லோரும் ஒண்ணானப்புறம் எவன் என்ன செய்ய முடியும்?''

அன்றைய கூட்டத்தைக் குறித்து பலவாறு விவாதித்தபடி நிலப் பங்கீடு நடந்தே தீரவேண்டும் என்ற உறுதியுடன் தத்தம் வழி நடந்தார்கள்.

வீடு திரும்பிய லச்சம்மா காய்ச்சிய பாலை எடுத்துக் கொண்டு ஆந்திர மகா சபை காரியாலயத்தை நோக்கிச் சென்றாள். அதற்குள் விவசாயிகளும் பெரிய கூட்டமாய் அங்கு சேர்ந்திருந்தார்கள். அவள் இளைய மகன் அப்பய்யா பாலை வாங்கிக் கொண்டு ராம்ரெட்டிக்கும் அவருடன் வநத படை வீரர்களுக்கும் காப்பி தயாரித்தான். காப்பி குடித்தான், பிறகு எல்லோருமாய் வராந்தாவுக்கு வந்தார்கள்.

அங்கு கூடியிருந்தவர்கள் தத்தம் நிலங்கள் அபகரிக்கப்பட்ட கதையை எடுத்துச் சொன்னார்கள். லச்சம்மா, அவள் மூத்த மகன் வெங்கய்யா, அவள் மைத்துனர் யல்லய்யா ஆகியோரும் தங்கள் செம்மண் நிலம் கைவிட்டுச் சென்ற கதையை விவரமாய்ச் சொன்னார்கள். எல்லாம் கேட்டுக் கொண்ட பிறகு கிராமக் கமிட்டி சேகரித்த தகவல்களையும் ஆதாரமாய்க் கொண்டு ராம்ரெட்டியுடன் கலந்தாலோசித்த பிறகு எந்தெந்த நிலம் யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்ற முடிவை அறிவிக்கும் விதமாய் கிராம சங்கத்தின் தலைவர் பேசலானார்...

www.padippakam.com



''அண்ணன் தம்பிகளே... அக்கா தங்கைகளே...! இன்று நமக்கு நல்ல நாள். பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து இப்படியொரு சந்தோஷம் நாம் கண்டதில்லை. இன்று நிலப்பங்கீடு திட்டத்தை ஆரம்பித்து வைக்கிறோம். கிராம எல்லைக்குள் இப்போது சுமார் ஐந்நூறு ஏக்கர் நிலம் பங்கிட உள்ளோம். இதில் முன்னூறு ஏக்ரா கிராமப் பெரிய மனிதர்களுடையது. அப்படியென்றால் அவர்களுக்கு இருக்கவேண்டியது போக (200 ஏக்ரா) எஞ்சியது இது. முன்னூறு போக மீதி இருநூறு ஏக்ரா நிலம் அதர்ம வழியில் சம்பாதித்தது. கடன் என்ற பெயரில் கொள்ளையடிக்கப்பட்டது... பதிலுக்கு பதிலாய திருப்பிக்கொடுத்து விடுவதாகச்சொல்லி அபகரித்தது... பாங்க் அதிகாரிகளுக்கு லஞ்சம்கொடுத்தும் மிரட்டியும் ஏமாற்றியும்சம்பாதித்துக் கொண்டது... இப்படி பலவிதங்களில் ஏமாற்றிப் பெற்ற நிலங்கள் அவை. பூர்வத்தில் கஷ்டப்பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்த விவசாயிகளுக்கு இவை பங்கிடப்படும்...'' விவசாயிகளும் கூலிகளும் காதைச் செவிடாக்குவதுபோல் எழுப்பிய கரவொலி அடங்க நீண்ட நேரமாயிற்று.

ஆந்திரமகா சபை... ஜிந்தாபாத்...!

கம்யூனிஸ்ட் பார்ட்டி... ஜிந்தாபாத்......!

உழுபவனுக்கே நிலம் சொந்தம்...!

மக்களாட்சி... வாழ்க...!......

உற்சாகத்துடன் கோஷமிட்டார்கள்... அந்த அலுவலகம் அதிரும் வண்ணம் பெருங்குரலெடுத்துக் கத்தினார்கள். வெங்கய்யாவும் அவன் சகாக்களும் ராம்ரெட்டியைத் தோளில் ஏற்றிக்கொண்டு 'ராம்ரெட்டி ஜிந்தாபாத்...' எனக்கூவினார்கள். சிறியவர்கள் பெரியவர்கள் என்ற வித்தியாசமின்றி அவர் கால்தொட்டு வணங்கினார்கள்.

www.padippakam.com



மக்கள் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட ஆட்டமும் பாட்டமுமாய் கும்மாளமிட்டுக் கொண்டிருக்க கங்குலு கிராமச் சங்கப் பெரியவர்களுடன் சேர்ந்து நிலம் அளப்பதற்குத் தேவையான கயிறு, அளக்கும் உபகரணங்களை சேகரிப்பதில் முனைந்தான்.

எல்லோரும் வயற்காட்டிற்குப் புறப்பட்டார்கள். லச்சம்மா மனதில் முளைவிட்ட சந்தேகங்கள் தவறானது என்று நிருபிக்கும் வகையில் அதிவேகமாய் காரியங்கள் நடைபெறலாயின. இதெல்லாம் நிஜந்தானா, நிலப்பங்கீடு நிச்சயம் நடைபெறுமா, நீசபுத்திக்காரர்கள் குறுக்கே வந்தால் ஊர்ப்பெரியவர்களால் அதைச்சமாளிக்க முடியுமா என்ற பல பல சந்தேகங்களுடன் லச்சம்மாவும் மற்றவர்களும் நிலம் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

தாறுமாறாய் ஓடிய லச்சம்மாவின் சிந்தனைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஒரு முடிவு வராமல் போகாது.

......வந்தே விட்டது.

ஆம்... நிலப்பங்கீட்டை யாரும் தடுக்கவில்லை. உழுபவனுக்கு நிலம் கிடைக்காமல் தப்பாது. நிலங்களைப் பங்கீடு செய்துதான் ஆகவேண்டும். இந்த அடியால் ஜமீந்தார் ஆட்சி வீழ்ந்தாக வேண்டும். சங்கராஜ்யம் அமுலாக வேண்டும். லச்சம்மா மனதில் இன்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்கும் எண்ணம் இது. கிளர்ந்தெழுந்த நவீன புரட்சி அன்று. மாலை மறுநாள் பிற்பகல் வரை கிராமக் கமிட்டியின் மேற்பார்வையில் மளமளவென்ச் செயலுருவம் பெற்றது. மக்கள்படை வீரர்களின் துணையுடன் நிலப்பங்கீடு நல்லபடி நிறைவுபெற்றது. சூழ்ச்சியால் மோசடியால் இழந்த நிலங்களை சரித்திரத்தின் முதல் அதிசயமாய்த் திரும்பப்பெற்ற விவசாயிகளும்



படிப்பகம்

www.padippakam.com



கூலிகளும் தங்கள் நிலங்களில் பயிரிட ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி இனி. இந்த மகோன்னத தருணத்திற்காகத்தானே அல்லும்பகலும் தவம் கிடந்தாள் லச்சம்மா. அவள் கனவு நனவாகிவிட்டது. நிலப்பங் கீட்டில் தம் கைக்கு வந்த நிலத்தில் பயிரிடத்தொடங்க ஒரு நல்லநாள் நிர்ணயித்துக்கொண்டார்கள். கிராமத்தைப் பொறுத்தவரை அந்நாள் ஒரு திருவிழா நாள்.

அந்த நாளும் வந்தேவிட்டது. லச்சம்மாவும் அவள் மகளும் சேர்ந்து வீடெல்லாம் சுத்தப்படுத்தி வீட்டின் வெளிச்சுவர்களை செம்மண்ணால் மெழுகி சுண்ணாம்புக் கோடுகளால் அழகாய் அலங்கரித்தார்கள். முத்து முத்தாய்க் கோலமிட்டு இன்னும் அழகூட்டினாள் கங்கம்மா. லச்சம்மாவின் இளைய மகன் அப்பய்யா படைப்பணிகளிலிருந்து இரண்டு நாள் விடுமுறை பெற்று ஒருநாள் முன்பே வந்து வீட்டை அழகுபடுத்துவதில் பங்கு கொண்டான். வீட்டின் மேல் பனைமர உயரத்தில் சுத்தியலும் அரிவாளும் போட்ட சிவப்புக்கொடியைக் கட்டினான். அது காற்றில் அழகாய் படபடத்தபடி நான்கு பர்லாங் தூரம்வரை தெரிந்தது. இதே விதமாய் தங்கள் நிலத்தைச்சுற்றி நான்கு மூலைகளிலும் சிகப்புக் கொடிகளை உயரே தூக்கிக்கட்டினான். அந்தக்கொடிகள் லச்சம்மா வீட்டின்மேல் இருக்கும் கொடிக்கு நேராய் அமைந்து பரஸ்பரம் நலம் விசாரித்துக்கொண்டிருந்தன.

விடிந்தால் அந்தப்பண்டிகை. எல்லாவீட்டிலும் மங்கள வாத்திய இசை இனிமையாய் ஒலித்து காற்றில் மிதந்து ஊரை உற்சாக வெள்ளத்திலாழ்த்தியது. எல்லோருடைய மனங்களிலும் மகிழ்ச்சி கரை புரண்டோடிக்கொண்டிருக்க லச்சம்மா மனதில் ஏதோ இனந்தெரியாத கலவரம் குடி புகுந்திருந்தது. வடைக்கு மாவாட்டியபடி உரல் முன் உட்கார்ந்தபடி தீவிரமாய் யோசித்துக்கொண்டிருந்தாள். நாளைக்கு அவள் ஜீவாதாரமான செம்மண் நிலத்தில்

www.padippakam.com



மீண்டும் பயிர் வேலை துவங்கப்போகிறது. அந்த ஆனந்தம் தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் கிடைக்கப் போவதில் சந்தேகமில்லை. ஆனால் அதில் முதல் உரிமை யுடைய தன் புருசன் இல்லையே... தங்கள் சந்தோஷத்தில் பங்கு கொள்ள அந்த மனிதன் இல்லையே...! நெஞ்சை அரித்துக்கொண்டிருந்த இந்த வேதனையால்தான் உற்சாக மற்று இருந்தாள். அந்த நிலம் ஆஜானுபாகுவாய் இருந்த தன் புருசனின் ரத்தத்தையும் உழைப்பையும் உறிஞ்சி ஒரு பக்குவத்திற்கு வந்தது. எதற்கும் உபயோகமற்ற காடாய், புதராய்க்கிடந்த மண் சமன்படுத்தப்பட்டு விளைச்சலுக்கு தயாரானதென்றால் அதற்குக் காரணம் தன் புருசனின் அயராத உழைப்புதான் இந்த நிலத்தின் சரித்திரம் தன் வாழ்க்கைச்சரித்திரம். இந்த நிலம் தன் புருசனின் ஜீவா தாரமாய் இருந்தது. இது கைவிட்டுப் போனதால் அவனுக்கு வாழ்க்கையில் பிடிப்பே போய்விட்டது. அன்றிலிருந்துதான் அவன் நாளுக்குநாள் உருக்குலைந்து இருந்தவரை நடைப்பிணமாய் காலம் தள்ளினான். கடைசியில் அதே ஏக்கத்துடன் கண்ணை மூடினான்

இதெல்லாம் நினைவு வர விழிகள் நீர் நிறைந்து கன்னத்தில் வழிந்தன.

''அய்யே... என்னம்மா இது... நாளைக்கு பெரிய பண்டிகையை வச்சுக்கிட்டு இப்படி அழுதிட்டு உக்கார்ந் திருக்கயே. என்ன நடந்தது? சொல்லும்மா...'' மாவுக்கு நீர் தெளித்துக் கொண்டிருந்த கங்கம்மா கவலையுடன் கேட்டாள்.

''ஒனக்கெதுக்குடி அதெல்லாம். என் விதி... என் கஷ்டம் என்னோட போவட்டும். சரி... கொஞ்சம் தண்ணி தெளி...''

''இப்ப நீ சொல்லலன்னா தண்ணி தெளிக்க மாட்டேன் போ...'' சிணுங்கியபடி கையிலிருந்த தண்ணீர்ச் சொம்பைக்கீழே வைத்துவிட்டாள் கங்கம்மா.

www.padippakam.com



சரேலென நிமிர்ந்து மகள் முகத்தைத் தீர்க்கமாய்ப்பார்த்தாள் லச்சம்மா. அவ்வளவுதான்... அடிவயிற்றிலிருந்து அடக்கமுடியாமல் பீறிட்டுக்கிளம்பியது துக்கம். கங்கம்மாவுக்குப்புரிந்து போயிற்று... தன் தகப்பனை நினைத்துதான் அம்மா அழுது கொண்டிருக்கிறாள்...... உடனே அவள் முகம் கூட வாடிவிட்டது.

''அம்மா... அய்யா மட்டும் இப்ப இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்... நானும் அப்பாவுடன் நெலத்துக்குப் போவேன்...'' அழுகை பீறிடச் சொன்னபடி கீழிருந்த சொம்பை கையிலெடுத்துக் கொண்டாள்.

இன்று தன் புருசன் இருந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமா இருக்கும்... தடியை ஊன்றியபடி எல்லோருக்கும் முன் நடப்பார். பிள்ளைகளும் தானும் கர்வத்துடன் அவர் பின்னால் நடப்பார்கள். இதைக் கண்டு தன் விரோதிகள் (நிலத்தை அபகரித்த பாவிகள்) வெட்கத்துடன் தலை குனிவார்கள். பாடுபட்டு உருவாக்கிய நிலத்தை மீண்டும் சுவாதீனம் செய்து கொண்ட புருசனின் மகிழ்ச்சியில் தானும் குழந்தைகளும் பெருமிதத்துடன் பங்கேற்றிருப்பார்கள். அப்படியொரு அதிர்ஷடத்திற்கு தாங்கள் கொடுத்துவைக்கவில்லை. சரி... இனி அதையே நினைத்து வருத்திக்கொள்வதில் லாபம் இல்லை. மேலும் தன் புருசன் பறிகொடுத்த நிலத்தை அவள் மீண்டும் சுவாதீனம் செய்துகொண்ட சந்தோஷத்தை நாளைக்கு ஊராருடன் பகிர்ந்து கொள்ளப்போகிறாள். புருசனிடமிருந்து பட்டப்பகலில் கொள்ளையடித்த அபூர்வமான வைரம் மீண்டும் கைக்கு வந்திருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டாடப் போகிறாள். புருசன் விட்டுச்சென்ற வீரக்கொடியை நாளை மீண்டும் நிலைநாட்டப் போகிறாள். ஆகையால் எதற்காக துக்கம் கொண்டாட வேண்டும்...!... மாவாட்டிக் கொண்டிருந்த லச்சம்மா மனதில் இப்போது ஒரு புதுத்தெம்பு மலர்ந்திருந்தது. அந்தப் புத்துணர்ச்சி ஊட்டிய உற்சாகத்தில்

www.padippakam.com



பாக்கிவேலைகளையும் மடமடவென முடிக்கலானாள். மகளும் பிள்ளைகளும் கூடமாட உதவி செய்ததில் எல்லா வேலைகளும் பொழுது சாய்வதற்குள் கச்சிதமாய் முடிந்துவிட்டது.

விடிந்தது. சூரியனின் இளங்கதிர்கள் பூவுல்கை மெல்ல மெல்ல வெளிச்சத்திற்கு கொண்டுவந்தன. வயல் நடுவே இருக்கும் பெரிய மரத்தில் இலைகள் சாம்புல்நிறக் கதிரொளிபட்டு வெள்ளியாய் மின்னின. ரம்மியமான இந்த ஒளியில் பிரதிபலிப்பாய் லச்சம்மாவின் விழிகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

குடும்பத்துடன் வயற்காட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் லச்சம்மா. கங்கம்மா புதுச்சேலை உடுத்தியிருந்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் சூரிய ஒளிக்குச் சமமாய் பளிச்சிட்டன. முதல் நாள் சவுக்காரம் போட்டுத் தோய்த்த பாதாம் கலர் சேலை உடுத்தியிருந்த புச்சம்மா சின்னப் பெண்போல் துள்ளி நடந்தாள். எல்லோருக்கும் முன்னால் கலப்பையுடன் நடந்து கொண்டிருந்தான் வெங்கய்யா. உழவு மாடுகளின் கொம்புகளில் குஞ்சலம், கழுத்தில் மணிமாலைகளுமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நடுவில் லச்சம்மாவும் கங்கம்மாவும் நடக்க... கடைசியில் தோளில் ரைஃபிளுடன் நாலாபக்கமும் நோட்டமிட்டவாறு அப்பய்யா. ஊர் ஜனங்கள் எல்லோரும் சுத்தமான ஆடையணிந்து நெற்றியில் குங்குமம் பளிச்சிட கம்பீரமாய் நடந்து கொண்டிருந்தார்கள்.

அதோ... அந்த மரத்தின் கிளையில் தான் புருசனுக்காகக் கொண்டுவந்த சோத்துக் கலயத்தைக் கட்டி வைப்பாள் லச்சம்மா. அந்த மரத்தடியில் உட்கார்ந்து சுருட்டு புகைத்தபடி சில நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொள்வான் அவன். உழைப்பின் சோர்வை அவன் சற்றே மறந்திருக்க சுவாரசியமாய்ப் பேசிக்கொண்டிருப்பாள்

www.padippakam.com


அவள். அந்த மரம் இப்போது மீண்டும் அவள் முன்...! சோத்து மூட்டையை மறுபடியும் அந்த மரக்கிளையில் கட்டுப் நாள் வந்திருக்கிறது. ஒரே வித்தியாசம்...அன்று புருசனுக்காக; இன்று பிள்ளைக்காக மருமகப்பெண்கள் வந்துவிட்டால் அந்த வேலை அவர்களுடையதாகி விடுகிறது.

எண்ண அலைகள் நெஞ்சில் புரண்டு புரண்டு ஓடிவர கால்கள் அவை பாட்டுக்கு அடிகள் வைத்துக்கொண்டிருந் தன. மேற்கொண்டு ஒரு ஃபர்லாங் நடந்ததும் ஒரு நீள மான பாறை தென்பட்டது. இளம் வெய்யிலில் அந்தப் பாறை முத்துபோல் மின்னிக் கொண்டிருந்தது அறுவடை நாளன்று சோறும் கறியும் வடையும் பாயாசமுமாய் விருந்து தயாரித்து அந்தப் பாறை மீதுதான் அவனுக்கு இலைபோட்டுப் பரிமாறுவாள். அன்று பெரிய சாம்ராஜ் யத்தை ஜெயித்துவிட்ட மிதப்புடன் மாலை நேரத்தில் இதே பாறை மீதமர்ந்துகொண்டு சகவிவசாயிகளுடன் குஷியாகப் பேசிக்கொண்டிருப்பான். மழைக் காலங்களில் கூட அந்தப் பாறையைப் பிரிய மனமில்லாதவன் போல் அதையொட்டி ஒரு சின்ன குடிசை போல் போட்டுக் கொண்டு இரவும் பகலும் பழியாய்க்கிடப்பான். சொல்லப் போனால் அந்தப் பாறை அவள் குடும்பத்திற்கு ஒரு மாற்றுவீடு. இந்தப் பாறைக்கு இன்னுமொரு விசேஷம் கூட உண்டு. அவனும் சக விவசாயிகளும் அந்தப் பாறை மீதே கூடி தங்கள் எதிர்காலம்... நல்லது கெட்டது... விவசாயம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் என தீவிரமாய் விவாதிப்பார்கள். இதோ... அந்த நாள் மறுபடியும் வந்தேவிட்டது. இது அவளுக்குக் கிடைத்திருக்கும் மகத் தான வெற்றி...!

இதோ...நிலம் வந்துவிட்டது.

''தேவடியாப்பசங்க...இஷ்டம் வந்தாப்பல அனுபவிச் சாங்க நம்ம சொத்த. இனி என்ன செய்யப்போறாங்க

படிப்பகம்

www.padippakam.com



பார்க்கலாம்...'' நிலத்தில் கால் வைத்ததும் ஆத்திரத்துடன் கூறினான் அப்பய்யா. ''வயிறு எரிஞ்சி சாகப் போறாங்க. இதுக்கோசம் இன்னும் எத்தனை குடும்பங்களை நாசமாக்கப் போறாங்களோ?'' வெங்கய்யா சொல்ல...

''அவங்க எத்தனை உசிருங்க பலி வாங்கினாலும் இந்த நெலத்த இனி கொள்ளையடிக்க முடியாது. அவங்களால. நம்ம உசிருக்குசிரானது இது...'' நா தழுதழுக்கச் சொன்னான் அப்பய்யா.

''ஆமா... இனிமே இதுக்காக அவங்க ஆசைப்பட்டா அது பகல் கனாதான்'' என்று ஆணித்தரமாய்ச் சொன்னான் வெங்கய்யா.

''அது கனவா நெஜமாங்கற சங்கதி இனிமே உங்க கைலதான் இருக்கு...'' பெருமிதத்துடன் பிள்ளைகளைப் பார்த்தாள் லச்சம்மா.

''இந்த நெலம் நம்ம கைவிட்டுப் போய்டுமோங்கற பயமே இனி வேணாம். கம்யூனிஸ்ட் பார்ட்டியும் ஆந்திர மகாசபையும் நமக்குத் துணை இருக்கறப்ப பயமெதுக்கு? அந்த காலத்துல அய்யாவுக்குத் துணையா ஒரு சங்கம் கிங்கம் எதுவுமில்ல...'' தோளினின்று சரிந்த ரைஃபிளைச் சரியாய் வைத்தபடி சொன்னான் அப்பய்யா.

''ஊர்க்காரங்கள்லாம் கூட ஒண்ணாயிட்டாங்க இப்ப...'' கங்கம்மா முதல் தடவையாக வாய்திறந்தாள். மகள் பேச்சு ஆனந்த மூட்டியது லச்சம்மாவுக்கு.

நிலத்தில் இறங்க ஆயத்தமானார்கள். லச்சம்மாவும் பிள்ளைகளும் ஒருசேர நின்றார்கள். வாய்நிறைய சிரிப்புடன் அவர்கள் மூன்று பேருக்கும் குங்குமமிட்டாள் லச்சம்மா.

'சிவப்புக் கொடிக்கு ஜே...!

www.padippakam.com



'கம்யூனிஸ்ட் பார்ட்டிக்கு ஜே...!'

'ஆந்திர மகாசபைக்கு ஜே...!'

அப்பய்யா உரக்க கோஷமிட மற்றவர்களும் 'ஜே' போட்டார்கள். கலப்பையை நகர்த்தினான் வெங்கய்யா. அப்பய்யா தோளில் ரைஃபிளுடன் அங்குமிங்குமாய் நடந்தான். தாங்க முடியாத சந்தோஷத்துடன் நிலத்தையும் மரத்தையும் சுற்றிச் சுற்றி ஓடினாள் கங்கம்மா. லச்சம்மா இருந்த இடத்திலேயே ஆணியடித்தாற்போல் நின்று நிலத்தில் இறங்கிய வெங்கய்யாவையும் நிலத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி பெருமூச்செறிந்தாள். கர்வமும் சந்தோஷமுமான உணர்ச்சிக் கலவையாக இருந்தது உள்ளம். வெங்கய்யா இடத்தில் புருஷனின் உருவம் தென்பட்டது.

இது வெறும் பிரமைதான். இப்போது அவன் இங்கு இல்லை எனத் தெளிந்தாள்— அவன் ஸ்தானத்தில் அவன் பிள்ளைகள் இறங்கிய கொடியை மீண்டும் ஏற்றியிருக்கிறார்கள். அவள் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவள்தான். எவ்வளவு பெரிய வெற்றி இது! இந்த நிலம் கைநழுவிப் போனபோது என்றேனும் ஒரு நாள் திரும்பக் கிடைக்காமலா போகும் என்ற ஆசை இருவருக்குமே இருந்தது. புருசன் இருந்தவரை நிறையவே இருந்த நம்பிக்கை அவன் போன பிறகு அடியோடு போய்விட்டது. நம்பிக்கை இழந்தது நிலத்தின் மீது மட்டுமல்ல. வாழ்க்கையின் மீது கூடத்தான். தம் குழந்தைகளுக்காகத்தான் வாழவேண்டி இருந்தது. அது கூட அவங்களுக்கு தான் பாரமே தவிர தன்னால் அவர்களுக்கு எந்தவித பிரயோஜனமும் இல்லை... அவர்களுக்கு தான் விட்டுச்செல்வது எதுவுமே இல்லை என்ற குறையுடன் தான் காலத்தை நெட்டித் தள்ளிக்கொண்டு வந்தாள்.

ஆனால் சரித்திரம் அவள் சற்றும் எதிர்பாராதவிதமாய் புதுத்திருப்பம் கண்டிருக்கிறது. அவளும் அவளை

www.padippakam.com



யொத்த கோடானு கோடி எளியவர்களும் பலம்—பொருந்தியவர்கள்தாம் என்பது பகைவர்களுக்கு நிரூபண மாகிவிட்டது. கண்முன் கம்பீரமாய்க் கிடக்கும் இந்த நிலமே அதற்கு சாட்சி. புதிதாய்க் கிடைத்த தன்னம்பிக்கையுடன் அப்படியும் இப்படியுமாய் வீரநடை போட்டுக்கொண்டிருந்தபோது பின்னாலிருந்து ஏதோ சப்தம்...

''அம்மா... சின்னய்யா, பெரியய்யா, ஊர்க்காரங்கள் லாம் வராங்க. வா... எல்லோருமா பாறைமேல் உட்கார்ந்து பேசலாம்...'' அப்பய்யா பரபரப்புடன் அழைத்தான். சக விவசாயிகளும் ஊர்மக்களுமாய் இருபது பேருக்கு மேல் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களும் தமக்குத் திரும்பக் கிடைத்த நிலங்களில் பூர்வாங்க வேலை களை முடித்துவிட்டு வந்தார்கள். அவர்களுள் லச்சம்மா வின் ஓரகத்தி புல்லம்மாவும் அவள் மருமகள் பிச்சம்மா வும் கூட இருந்தார்கள். எல்லோரும் சிரித்த முகத்துடன் காணப்பட்டார்கள். இவர்களைப் பார்த்ததும் வெங்கய்யாவும் ஓடிவந்தான். எல்லோருமாய் பாறை அருகே கூடினார்கள்.

''கங்கி... அந்தத் தொடப்பத்த கொண்டா...'' லச்சம்மா கூற... துடைப்பம் எடுத்துவந்த கங்கம்மா தானே பெருக்கலானாள். எல்லோரும் உட்கார்ந்தார்கள்.

''சீக்கிரமாகவே வேலைய முடிச்சிட்டாப்பல இருக்கே...'' அவர்களைப் பார்த்துப் பொதுவாய்க் கேட்டாள லச்சம்மா.

''விடிஞ்சதிலேர்ந்து இதே வேலை தானே... எவ்வளவு நேரமாவப் போவுது...'' லச்சம்மாவின் பெரிய மைத்துனன் யல்லய்யா... கங்கம்மா ஓடிவந்து பெரியப்பா யல்லய்யா முதுகின்மீது சாய்ந்தவாறு ''பெரியய்யா... இனிமே இந்த நெலமெல்லாம் எப்பவும் நம்ம கையிலயே இருக்குமில்ல...?'' என்று அவர் முகவாய் பிடித்துக்கொண்டு கேட்டாள்...

www.padippakam.com



''என்னைக் கேக்கறயே பொண்ணு... வரப்போறது ஒங்க காலம். நீங்கதான் காப்பாத்திக்கணும்...''

''ஆமா பெரியப்பா. கைக்கு வந்தத போக்கடிப் போமா...?'' கம்பீரமாய்ச் சொன்னாள் கங்கம்மா.

''அப்படிச் சொல்லு பொண்ணு. இன்னிய சங்கதியே வேற... தெரியுமா யல்லய்ய மாமா?'' வீரய்யா சொல்ல எல்லோரும் கங்கம்மாவைப் பார்த்து ஆமோதிப்பது போல் சிரித்தார்கள்.

''இதுக்கு இந்த வருசம் மேளம் கொட்டுவோமா லச்சம்மா...?'' யல்லய்யாக் கிழவன் கேட்க... கங்கம்மா கோபத்துடன் அவன் தலைப்பாகையை அவிழ்த்து விட்டாள்.

''ஆமா லச்சம்மா... நெலமும் கெடச்சுட்டது. வெங்கய்யாவுக்கும் கங்கிக்கும் சம்மந்தம் பார்க்கவேண்டியதுதான்...'' சிரித்தபடி சொன்னான் வீரய்யா.

''ஒங்க எல்லோருடைய தயவிருந்தா அதுவும் நடந்துடறது...'' மனம் குளிரச் சொன்னாள் லச்சம்மா. பிறகு கொஞ்ச நேரத்திற்கு யாரும் பேசவில்லை.

தம்பி இருந்தால் இன்னும் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் என்ற வருத்தத்துடன் சுருட்டு புகைத்தபடி எதிரில் விரிந்து கிடந்த நிலத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் யல்லய்யா. லச்சம்மா பிள்ளைகள் மனதிலும் அதே நினைவுதான். சில நிமிட மௌனத்திற்குப் பிறகு தூக்கத்திலிருந்து விழிப்பு பெற்றவன் போல் மெல்லக் கூறினான் வீரய்யா

''நெலங்களை இழந்த தொரைங்க என்னென்ன செய்யப் போறாங்களோ... பார்க்கணும்...''

''அவங்க இப்ப அடுப்புல ஏத்தின உலையா கொதிச்சிட்டிருப்பாங்க— இந்த ரஜாக்கருங்க நம்ம மேல

www.padippakam.com



இல்லாது பொல்லாதெல்லாம் சொல்லி அவங்க ஆத்திரம் இன்னும் அதிகமாவப்போவுது...'' வெங்கய்யா கூற... அண்ணனின் கருத்தை தம்பி ஆமோதித்தான்.

''ஆமா... நாம ஜாக்கிரதையா இருக்கணும். அவங்க சும்மா வுட்டுடமாட்டாங்க. இனிமே இந்த ரஜாக்கருங்க அட்டூழியம் கூட நம்ம ஊர்லதான் தீவிரமா இருக்கும்னு நெனைக்கறேன்...''

''நாம அதுக்கும் தயாரா இருக்கணும்...''

''நெலத்துல வேலை செய்யாத மத்தவங்க ஊருக்குள்ள ரொம்ப எச்சரிக்கையோட இருக்கணும். அவங்க தாக்குதலுக்கு ராவும் பகலுமா தயாரா இருக்கணும். இங்க நெலத்துப் பக்கம் மக்கள் படை பார்த்துப்பாங்க. என்ன ஆனாலும் சரி... கெடைச்ச நெலத்துல வெவசாயம் செஞ்சே தீரணும்...''

''ஆமா... இதைத்தவிர வேறு வழியில்ல...'' லச்சம்மா உட்பட எல்லோரும் ஆமோதித்தார்கள்.

''ரொம்ப காலத்துக்கப்புறம் நமக்கு திரும்பக்கெடைச்சிருக்கற நெலத்தை நம்ம உசிர குடுத்தாவது காப்பாத்திக்கணும். நெலத்தை இழந்துட்டு நாம பட்ட கஷ்டங்க... அதை மறுபடி அடையறதுக்காக நாம வானம் பார்த்த பூமியா ஆசையோட காத்திருந்தது... இதெல்லாம் வீணாகாம இருக்கணும்னா நம்ம நெலத்தைக்காப்பாத்திக்கறதுக்காக நாம எல்லாத்துக்கும் தயாரா இருக்கணும்...'' யல்லய்யா உணர்ச்சி வசப்பட்டுச்சொல்ல...

''ஆமா... நாம போனாலும் பரவாயில்ல. நெலத்த வுடக்கூடாது...'' லச்சம்மா கூறினாள்.

''இத்தனை நாள் இருந்தது போலவே ஊர் ஜனங்கள்லாம் ஒத்துமையா ஒரு பேச்சுல நிக்கணும்...'' யல்லய்யா சற்றுக் கடுமையாகவே எச்சரித்தார்.

www.padippakam.com



"வாஸ்தவமான பேச்சு மாமா. அன்னிக்கி நாம கட்டுப்பட்டு நின்னிருந்தா நெலம் போயிருக்குமா?"

"நெலம் மட்டும் இல்ல. தம்பி கூட போயிருக்கமாட்டான்"

"அன்னிக்கும் இன்னிக்கும் முடிச்சு போடறயே பெரியப்பா. இப்ப ஊரெல்லாம் ஒண்ணாயிட்டது. இப்ப கம்யூனிஸ்ட் பார்ட்டி, ஆந்திரமகா சபை, மக்கள் படைன்னு எத்தனை இருக்கு? இன்னிக்கி இதெல்லாம் நம்ம பெரிய பலமில்ல...!" என்றான் அப்பய்யா.

"அப்பய்யா சொல்றதும் சரிதான்..." ஊரார் ஒருமித்துக் கூறினார்கள்.

"சரி... நம்ம சொத்து கைக்கு வந்துட்டது. காப்பாத்திக்கறது நம்ம பொறுப்பு..." லச்சம்மா முடிவுரை போல் கூற... எல்லோரும் எழுந்து தத்தம் வழி நடந்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு... நிலப்பங்கீடு நடைபெற்ற கிராமங்களில் ரஜாக்கர்களின் தாக்குதல் சற்றுத் தீவிர மாகவே இருந்தது. ஒவ்வொரு தாக்குதலின் போதும் நூற்றுக்கணக்கான ரஜாக்கர்களும் மிலிட்டரிகாரர்களும் கிராமங்களுக்கு தீ வைத்தும் கண்ணில் பட்டவர்களை யெல்லாம் சித்திரவதை செய்துகொண்டும் மரண யாகம் நடத்தலானார்கள். இப்படிப் பல விதங்களில் இம்சைக் காளான கிராமங்களில் லச்சம்மா ஊரும் ஒன்று.

இந்த ராட்சசத் தாக்குதலில் மற்ற கிராமவாசிகள் போலவே தன் நிலத்தையும் எவ்விதச் சேதத்திற்கு மாளாகாமல் கண்ணின் இமைபோல் பாதுகாத்தாள் லச்சம்மா. அந்த ஆண்டு விளைச்சலும் வீட்டிலுள்ள மற்ற உடமைகளும் ரஜாக்கர்கள் கழுகுப் பார்வையில் படா வண்ணம் அநேக உபாயங்கள் மூலம் காப்பாற்றிக்கொண் டார்கள். காடுகளில்... குன்றுகளிடை என தானியங்

www.padippakam.com



களைப் பதுக்கி வைத்தார்கள். பொல்லாத ரஜாக்கர் களுக்கு அந்த மறைவிடங்களும் தெரிந்து போக... வேறு வழியில்லாது முக்கியமான உடமைகளையும் தானியங் களையும் பெரிய பெரிய கூடைகளிலும் கோணிப் பைகளிலும் கட்டி தலையிலும் தோளிலும் சுமந்தபடி முகாம்களை மாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர் களுடைய இருப்பிடங்களைச் சுற்றிலும் மலைகளும் குன்று களும் மரங்களுமாய் இயற்கையே கோட்டைச்சுவர்களாய் அமைந்தது. உளவுப்படைகள் அவ்வப்போது அனுப்பிய செய்திகளினடிப்படையில் தயாராக இருந்த கெரில்லாப் படை ரஜாக்கர் மீது தாக்குதல் நடத்தத் துவங்கியது. மிரண்டு போன ரஜாக்கர்கள் இப்படி சிறுசிறு குழுக்களாகத் தாக்குதல் நடத்துவது தோல்வியில்தான் முடியும் என்றும் இனி பெரிய படையுடன் வருவதெனவும் முடிவு செய்தார்கள்.

மொத்தத்தில் கிராம மக்கள் நிலங்களைக்காப்பாற்றிக் கொண்டார்கள். அந்த வருடம் பருவ மழையும் பொய்த்து விடாமல் தன் பங்குக்கு உதவி செய்ய... நிலங்கள் நல்ல விளைச்சல்கள் கண்டன ஒவ்வொரு கதிரிலும் நிரம்ப நிரம்ப தானிய மணிகள்...

தங்களுடைய ஒருமித்த அயராத போராட்டத்தின் பலனாய் எல்லாவித நலன்களும் அடைந்தார்கள் கிராம வாசிகள். தன் மூத்தபிள்ளை வெங்கய்யா, மகள் கங்கம்மா கல்யாணங்களை அமோகமாய் நடத்தினாள் லச்சம்மா. விவசாயப் பொறுப்பு அதிகமாகிவிட்டதால் படைத் தலைமையின் அனுமதியுடன் வீட்டுடனே தங்கி, கிராமக் கமிட்டி அங்கத்தினராகி தன் கடமைகளைத் தொடர லானான் அப்பய்யா. அந்த வருடம் கிராம ஜனங்களில் வாழ்க்கை ஆனந்தமாய்க்கழிந்தது.

**(ஆகஸ்ட் 15, 27—1992 'ப்ரஜா சக்தி' இதழிலிருந்து)**

இது பாதியிலேயே நின்று விட்ட கதை இதன் அடுத்த பாகம் 'ப்ரஜா சக்தி'யில் வரவில்லை. படைப்பாளர் கதையைப் பூர்த்தி செய்தாரா இல்லையா என்ற விவரம் தெரியவில்லை.)

www.padippakam.com

எம். வெங்கடராவ்

# ஜீவகாருண்யப் போராட்டம்

**வா**சற் திண்ணையிலமர்ந்து ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான் ராமிரெட்டி பஞ்சாயத்து பிரசிடெண்டின் மாடுகளின் கழுத்துமணி ஒலியில் உலுக்கிவிழுந்து நிமிர்ந்தான். மலைப் பாம்பு போல் 'உஸ்... உஸ்...' என பெருமூச் செறிவது போல் சத்தம் செய்தபடி கொம்புகளை ஆட்டியபடி அவை அந்தத் திண்ணைப்பக்கமாய் பார்க்க, சரேல்லன எழுந்து உள்ளே சென்றான் ராமிரெட்டி.

கோட் ஸ்டாண்டில் தொங்கிய ஜிப்பாவை எடுத்துப் போட்டுக்கொண்டு அலமாரியருகே சென்றான். அதன் கதவில் பதித்துள்ள கண்ணாடியில் அவன் நீள முகம் இன்னும் நீளமாய்த் தெரிந்தது. கண்ணாடி முன் அப்படியே கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தான். நெஞ்சில் குமைந்து கொண்டிருந்த கவலை கண்ணாடியில் துல்லியமாத் தெரிவது போலிருந்தது.

''ஊஹூம்''— தனக்குள் முனகியபடி போட்டுக்கொண்ட ஜிப்பாவை அவிழ்த்தபடி மீண்டும் யோசனையிலாழ்ந்தான்.

ஃ ஃ ஃ

www.padippakam.com



ராமிரெட்டி தேஷ்முக் குழுவைச் சேர்ந்தவன்தாம். தேஷ்முக்கின் செயற்பாடுகளுக்கு இவர் ஆலோசனையராக இருந்தவன்தான். அவன் பண்ணையில் விருந்துகளுக்கேற் பாடு செய்திருக்கிறான். கலந்து கொண்டுமிருக்கிறான்.

கொஞ்சம் வசதியுள்ள விவசாயி ஆனாலும் தேஷ் முக்கின் கையை எதிர்பார்க்கவேண்டிய நிலைமையிலுள்ள வன். தன் காரியம் பூர்த்தியாகும்வரை கூலியைக் கண்ணில் காட்ட மாட்டான் தேஷ்முக். ஓரிரு சமயங்களில் சரியான விளைச்சலின்றி நஷ்டமேற்பட்டது. தான் தேஷ்முக் பக்கமிருப்பதால் சரியான சமயம் பார்த்து எடுத்துச் சொன்னால் தன் பிரச்னைகளுக்கு நிச்சயம் செவிசாய்ப் பான் என்ற நம்பிக்கையுடன் அவனை அணுகினான். ''இங்க பார் ராமிரெட்டி, பருவம் தவறிட்டதால சரியான விளைச்சல் இல்லாம போய்ட்டதுங்கற சரி... ஒரு காரியம் செய். உன் மாடுகளைக்கூட என் நெலத்துக்கே அனுப்பிடு. என் வேலையும் சீக்கிரம் பூர்த்தியாயிடும். அதுக்குள்ள உன் நெலத்தையும் தயாராக்கிடலாம் நீ...'' கனிவும் கண்டிப்புமாய் தேஷ்முக் கூறியபோது திடுக்கிட்டான் ராமிரெட்டி. விருந்துக்கும் மருந்துக்கும் வந்திருந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 'ரைட்... ரைட்' என ஆமோதித்து பரிகாசமாய்ச் சிரித்தார்கள். புசுபுசுவென எட்டிப்பார்த்த சினத்தை வந்த வேகத்தில் கட்டுப்படுத்திக் கொண்டு 'அக்கிரமத்துக்கு அளவில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது' என மனதுள் முணுமுணுத்தானே தவிர வெளியே சொல்லவில்லை.

'கோடபாடு' கிராமத்தில் சங்கத்தின் பலம் அதிகரித்துக்கொண்டிருந்த தருணம் அது. விவசாயக் கூலிகள் பண்ணையில் வெட்டிவேலை செய்வதை நிறுத்திக்கொண்டிருந்தார்கள். ராமிரெட்டி புத்திசாலி. பிழைக்கத்தெரிந்தவன் கூட. ஆகையால் அதிக யோச னைக்கு இடமின்றி சங்கத்தின்பால் தன் கவனத்தைத்

www.padippakam.com



திருப்பினான். தனக்கு அவமானம் நேர்ந்த நாளினின்று சங்கம் குறித்து எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாய்ப் பேசுவதை நிறுத்திக்கொண்டான். தேஷ்முக்கின் ஆட்களுக்குத் தெரியாமல் சங்கத்திற்கு சந்தா கூடச்செலுத்தலானான். பண்ணைக்கு மட்டும் தினமும் போய்வந்து கொண்டிருந்தான். ''என்ன ராமிரெட்டி... பண்ணை தரிசனம் விட்டபாடில்லையா...?'' என யாராவது கேட்டால், ''உம்...பெரிய ஆள்... சங்கத்தை குறி வச்சுடுவாரோன்னு தான்...'' என்று பதில் சொல்வான். ''ராமிரெட்டி சங்கத்து ஆள்தான். காலத்துக்குக் கட்டுப்பட்டிருக்கானே தவிர...'' ஊர் மக்கள் பேசிக்கொண்டார்கள்.

மக்கள் படையின் புரட்சியாத்திரைத்திட்டம் துவங்கியதும் நிலைமை அடியோடு மாறிவிட்டது. தேஷ்முக்கின் அட்டூழியங்களுக்கு ஒரு முடிவேற்பட்டது மட்டுமல்ல... அவன் 'கோடபாடி'லிருந்தே விலகிச் சென்றுவிட்டான். ரௌடிகள், ரஜாக்கர்கள், நிஜாம் ரிசர்வ் படையினர்... யாராலும் அவன் அக்கிரம பரிபாலனத்தை நிலை நாட்டச் செய்ய முடியாது போனதால் பெஜவாடாவுக்கு தன் முகாமை மாற்றிக்கொண்டு விட்டான். தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து கோடநாட்டின்பரிபாலத்தை ஏற்றுக்கொண்டது.

ராமிரெட்டி நினைத்துக்கூட பார்க்காத விஷயங்கள் மடமடவென நடந்தேறின. தேஷ்முக்கின் அதிகாரமும் ஆணவப்போக்கும் கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது குறைய வேண்டும் என நினைத்தான். குறைந்தபட்சம் தன்னையொத்தவர்கள் மீது காட்டும் அதிகாரமும் அகம்பாவமுமாவது குறையவேண்டும் என எதிர்பார்த்தானே தவிர இப்படியொரு திருப்பம் நேருமென்று கனவிலும் கருதியவனல்ல. அன்று தேஷ்முக்கிற்கு அடுத்தபடியாக கிராமத்தின் பெரியமனுஷன் அவன்தான் இன்று விவசாயிகளுள் ஒருவன். எல்லோரையும் போல் அவனும்

www.padippakam.com



நியாயமான வரி கட்டியாக வேண்டும். எதிர்த்து ஒரு வார்த்தை பேசக்கூடாது. தன் பெரியமனுஷத்தனம் என்ன ஆயிற்று? சர்வமும் பஞ்சாயத்துதான்.

கடந்த காலமே நன்றாக இருந்தது. 'அந்த நாட்கள் வந்துவிடக் கூடாதா?' — எப்போதும் இதே ஏக்கம். தேஷ்முக் போல் தானும் ஊரை விட்டுச்சென்று விட்டால்...? அப்படிப் போனால் தேஷ்முக்கினுடையது போல் தன்னுடைய நிலம், வீடு, ஆடு, மாடெல்லாம் ஊராருக்குப் பங்கீடு ஆகிவிடுமே...! மறுபடியும் தன் சொத்துக்கள் தனக்குக் கிடைக்கும் என்று என்ன உத்தரவாதம்? ஆசைப்படுவதுபோல் மறுபடியும் அந்த நாட்கள் வந்தால் அந்த தேஷ்முக்கை எப்படி நம்புவது?...இல்லை... இல்லை...இங்கேயே இருக்க வேண்டும். ஒருவேளை மறுபடியும் தேஷ்முக் ராஜ்யம் வந்தால் தன்னை நிச்சயம் கைவிடமாட்டான். ஆனால் அந்த நாள் வருவதெப்போது? அதுவரை தன் பொறுப்பு என்ன?

எல்லோரையும் போல் கிராம அரசுக்கு வரி கட்டினான் ராமிரெட்டி. தேஷ்முக்கின் நிலங்கள் பங்கிடப் பட்டபோது தன் இருபது ஏக்ராவை ''எனக்கெதுக்கு இத்தனை... இல்லாதவங்க பொழைக்கட்டும்''னு பஞ்சாயத்திடம் ஒப்படைத்தான். ஒரு விசுவாசமிக்க பிரஜையாகவே பஞ்சாயத்திடம் நடந்துகொண்டு வருகிறான்.

அன்றிரவு ராமிரெட்டிக்கு தூக்கம் வரவில்லை. மனதில் ஏதோ சொல்லத் தெரியாத கலவரம். அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டிருந்தான். ஒருபக்கமாய் குவிந்து கொண்ட மெத்தையினின்று சட்டென்று எழுந்து கதவைத் திறந்து கொண்டு அருகே இருந்த குடிசை நோக்கிச் சென்று மெல்ல குரல் கொடுத்தான்.

''நாரய்யா...''



படிப்பகம்

www.padippakam.com



''யாரது... ராமிரெட்டி சாபா? இந்த ராத்திரி நேரத்துல...'' கலவரத்துடன் திக்கித் திணறினான் நாரய்யா.

''கொஞ்சம் பெஜவாடா வரை வரணும் நாரய்யா...''

''பெஜவாடாவா...? எதுக்கு?''

''ஒரு கடுதாசி தரேன். தேஷ்முக்கிடம் கொடுத்துடணும்... கொஞ்சம் பணம் வரவேண்டியிருக்கு.''

''தேஷ்முக்கா... அம்மாடி... என்னால முடியாது பஞ்சாயத்துக்கு தெரிஞ்சா மறுபடி ஊர்ல நுழைய விடுவாங்களா?''

''ஒண்ணும் ஆகாது நாரய்யா. நமக்கு வரவேண்டிய பாகத்துக்காகத்தான...?''

''என்னமோ சாப்... போராடி போராடி ரத்தம் கக்கியதெல்லாம் முடிஞ்சி இப்பதான் நெலம் நீச்சு குடும்பம் குட்டின்னு ஸ்திரப்பட்டிருக்கேன். மறுபடி அந்த தேஷ்முக் மூஞ்சி பார்க்க மாட்டேன். இந்த ஜோலி எனக்கெதுக்கு ரெட்டி சாப்? அதுவுமில்லாம நாளைக்கு விசாரணையாம். என் சங்கதிக்கு முடிவு சொன்னாங்களாம்...''

விசாரணை...! ராமிரெட்டியின் கால்கள் தள்ளாடின. 'சரி... உன் இஷ்டம்' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குச் சென்றான். கட்டிலில் விழுந்து மல்லாக்கப் படுத்தவாறு நாரய்யாவைப் பற்றி நினைத்தபடி இரவைக் கழித்தான்.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை எட்டு மணிக்கு கிராம மக்கள் பஞ்சாயத்து சபை முன் கூடினார்கள். வேப்ப மரத்தடியின் கீழிருந்த மேடை மீது பஞ்சாயத்து உறுப்பினர்கள்

படிப்பகம்

www.padippakam.com



அமர்ந்திருக்க, நாரய்யா கைகளைப் பின்னால் தொங்க விட்டபடி தலை குனிந்து நின்று கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ

நாரய்யாவும் சங்கத்தைச் சேர்ந்தவன்தான். அவன நிலத்தை தேஷ்முக் கொள்ளையடித்து விட்டிருந்தான். தேஷ்முக்குக்கு எதிராய் சங்கம் குரல் உயர்த்தியதால் அவனும் சங்கத்தில் சேர்ந்து விட்டான். தன் நிலத்துக்காக மற்றவர்களுடன் சேர்ந்து அவனும் போராடினான். இதற்கு மேல் ஒன்றும் தெரியாது அவனுக்கு. இரண்டு மூன்று தடவை ரஜாக்கர்களின் தாக்குதல்களின்போது தைரியமாய்ப் போராடினான். அவனுக்கு பலத்த அடி பட்டதுடன் ரஜாக்கர்கள் அவன் தானியங்களையும் அபகரித்துக் கொண்டுவிட்டார்கள். வீட்டுக்கு தீ வைத்தார்கள்.

கொஞ்சம் ஆசுவாசமடைய நினைத்து பெஜவாடா சென்றான். ஒன்றுக்குப் பத்தாய் வாடகை கொடுத்து வீடு பார்த்துக் கொள்ளவும், முதலீடு போட்டு வியாபாரம் தொடங்கவும் கஷ்ட ஜீவிகளுக்குக் கொடுப்பினை ஏது? மொகல்ராஜபுரம் மலைப் பக்கமாய் இருக்கும் குடிசைகளில் தங்கிக் கொண்டு ரிக்ஷா இழுக்கலானான். ஒரு மாதம் கழிந்திருக்கும்... மறுபடியும் கோடபாடு சென்று விடவேண்டும் போலிருந்தது. ராத்திரி பகலாய் ரிக்ஷா இழுத்தாலும் பாதி வயிறுதான் நிரம்புகிறது. இங்கு பசியால் சாவதெதற்கு? ஒரு நாள் ராத்திரி தன் உழைப்பை மூலதனமாய்க் கொண்டு செழுமையடைந்திருக்கும் நிலம்... அதை தேஷ்முக் கொள்ளையடித்தது... நிலம் கைவிட்டுப் போன கவலையில் தகப்பன் நோய்வாய்ப் பட்டு அந்த கலவரத்துடனே கண்ணை மூடியது... என அவன் வாழ்க்கைச் சரித்திரம் முழுக்க வரிசையாய்க் கனவில் வந்தன.

www.padippakam.com



கோடபாடு விழுக்தி பெற்றதென்று பெஜவாடாவில் சிகப்புச் சங்கக்காரர்கள் பேசிக் கொண்டார்கள். அவனுக்குப் புரியவில்லை. தேஷ்முக் ஊரை விட்டு ஓடிவிட்டான் என்றார்கள். அதுமட்டும் நன்றாகப் புரிந்தது. தன் நிலம் மறுபடி தன் கைக்கு வரும். மொகல்ராஜபுரம் மலையளவு உயர்ந்தான் நாரய்யா. பெண்டாட்டியுடன் மூன்றாம் நாளே கோடபாடு போய்ச் சேர்ந்தான்.

விவசாய வேலைகள் மும்முரமாய் நடந்து கொண்டிருந்தன. விவசாயிகள் அவரவர் நிலங்களில் பயிரிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படியானால் தன் நிலம்? தன் குடிசைக்கருகிலேயே இருந்த ராமிரெட்டியிடம் விசாரிக்க, ''நான் அப்பவே சொல்லல... சங்கக்காரர்கள் ஏழைங்க நெலங்களைக்கூடப் பங்கீடு செய்யப் போறாங்கன்னு...'' என்று ராமிரெட்டி பதில் தந்தார். ரத்தம் கொதித்துப் போன நாரய்யா மறுநாள் விஷயத்தை பஞ்சாயத்தின் முன் வைத்தான். எப்போதோ நாரய்யா தகப்பன் காலத்தில் தேஷ்முக்கின் அதர்மங்களுக்கு ரிக்கார்டு கணக்குகளிருந்தன மேலும் சமயத்தில் நாரய்யாவும் ஊரில் இல்லை. பஞ்சாயத்து விசாரித்தது. தன் நிலத்தின் எல்லைகளைக் காட்டினான் அவன். வயோதிக விவசாயிகள் சாட்சி சொன்னார்கள். அவன் நிலம் மீண்டும் கிடைத்துவிட... ஆனந்தக் கூத்தாடினான் நாரய்யா.

ஆனால் அவனுக்குக் கூடவே ஏற்பட்ட சந்தேகம்... தான் வந்து சண்டை போட்டதால் காரியம் கைகூடிற்று. அதே வாயில்லாப் பூச்சியாக இருந்தால்? ராமிரெட்டியும் அதையே சொன்னான்.

''கேட்டுக்க நாரய்யா... இப்ப என்ன இருக்கு... இன்னிக்கு நெலம் பங்கிட்டாங்களா? நாளை மறுநாள் பொம்பளைங்களைக் கூட பங்கு போடுவாங்களோ என்னமோ...?''

''ச்சே ச்சே... அவ்வளவு தூரம் போவாங்களாய்யா?''

www.padippakam.com



''எனக்கு மட்டும் என்ன தெரியும்... நெறைய பேர் பேசிக்கிறாங்க...''

சங்கம் என்றாலே ஒரு தோழமை உணர்வுடன் பேசும் ராமிரெட்டி இப்போது இப்படிப் பேசுவது சந்தேகத்தைத் தந்தது. பெஜவாடாவில் கூட சிலர் இந்த தினுசில் பேசிக் கேட்டிருக்கிறான். சாதாரணமாய் நாரய்யா யாரையும் இலட்சியம் செய்ய மாட்டான். ஆனால் ராமிரெட்டி பேச்சு மண்டைக்குள் தேளாய் கொட்டிக் கொண்டிருந் தது. ஊரில் எல்லோருக்கும் ராமிரெட்டி நல்லவனாகவும் நாரய்யா கெட்டவனாகவும் ஆனார்கள். இந்த நாரய்யா சங்கதியை கவனிக்க வேண்டும் என்று பஞ்சாயத்து கூட்டினார்கள்.

''உன் நிலத்தை உனக்கு சேர்த்திட்டோம் இல்லையா?''

''ஆமாங்க...''

''இல்லிங்க. பொம்பிளங்களைக்கூட பங்கு போட்டுப் பாங்கன்னு சொன்னான் இவன்...'' கோபமாய்க் குறுக் கிட்டான் ஒரு விவசாயி.

''எதுக்கு இவ்வளவு ஆவேசப்படறே... இரு... இவனை விசாரிச்சுடலாம்...''

''நாரய்யா... நீ ஊருக்கு திரும்பி வந்தப்புறம் இங்க ஏதாவது ரகளை நடந்ததா?''

''இல்லிங்க...''

''குடும்ப சண்டை கூட கணிசமா குறைஞ்சு போயி ருக்கில்ல?''

''முன்னை விட இப்ப எவ்வளவோ மேலுங்க...''

''உன் நிலம் உனக்கு கிடைச்சிட்டது. உன் தானியம் உனக்கு கிடைச்சிட்டது. உழவு மாடுகளும் கிடைச்

www.padippakam.com



சாச்சு. கொஞ்ச நாள் முன்ன ரஜாக்கர்கள் ஊருக்குள் வந்து உங்க வீட்டு பொம்பளைங்களிடம் தாறுமாறா நடந்துக்க பாத்தப்ப, உன் மாடுகளை ஓட்டிட்டுப் போக முனைந்தப்ப மக்கள் படை குறுக்கே வந்து காப்பாத்தி னாங்க இல்லையா?''

''ஆமாங்க...''

''இங்க பஞ்சாயத்து பரிபாலனம் எந்த விதத்தில் உனக்கு இஷ்டமில்லாம நடந்துக்கறது சொல்லு பார்ப் போம். ஸ்கூலா, ஆஸ்பத்திரியா...பின்ன எதுக்கு இந்த வறட்டுப் பேச்சு...'' பிரசிடெண்ட் சற்று கடுமையாகவே கேட்டார்.

நாரய்யா தலை குனிந்தான். தப்பு செய்து விட்டேனா... மோசம் போய் விட்டேனா...வருத்தத்தில் நிலைகுலைந்து போனான்.

''எந்தப் புழு உன் தலையில் புகுந்திருக்கு? யாராவது உனக்கு சொல்லிக் கொடுத்தாங்களா? உம்... சொல்லு...'' உரத்த குரலில் அதட்டினார் பிரசிடெண்ட்.

குனிந்த தலை நிமிரவில்லை நாரய்யா. வாய்க்குள் ஏதோ முனகி... சட்டென்று நிமிர்ந்தான். தண்ணீரை மெல்பவன் போல் நிதானமாய்க் கேட்டான்.

''ராமிரெட்டி சங்கம் ஆளுதானே? பின்னே ஏன் இப்படி சொல்றாரு?''

''உன்னிடமா...?''

''என்னிடம்தாங்க...'' சபை முழுக்க வியப்புடன் வாய் பிளந்தது. விழிகள் விரிந்தன.

''ஆமாங்க... நடுராத்திரி இவனும் ராமிரெட்டியும் குசுகுசுன்னு பேசிட்டிருந்தாங்க.''

www.padippakam.com



ஒரு மக்கள் பாதுகாப்புப் படை வாலண்டியர் ரிப்போர்ட் கொடுத்தான்.

''தப்பு நடந்து போச்சுங்க. எனக்கொண்ணும் தெரியாது. ரெட்டி சாபுக்கு தேஷ்முக் காசு தரணுமாம். போய் வரச் சொன்னப்ப முடியாதுன்னேங்க...''

''ராமிரெட்டி...!'' நம்பமுடியாதவர்களானார்கள் ஊர் ஜனங்கள்.

''மோசம்...! ஊரில் கொள்ளையடித்ததை வைத்து தேஷ்முக் போட்ட விருந்தையும் புலவு வகையறாக்களையும் ராமிரெட்டியால் மறக்க முடியவில்லை போலிருக்கிறது.

சபை முழுவதையும் பார்வையால் அளந்தார் பிரசிடெண்ட். ராமிரெட்டி தென்படவில்லை. ''கூப்பிடுங்க ராமிரெட்டியை...''

வேட்டைக்காகக் காத்திருந்த புலிபோல் நிசப்தமாய் இருந்தது சபை.

ஃ ஃ ஃ

அப்போது சபைக்கு நேர் மேலாய் ஓர் விமானம் இரைச்சலிட்டபடி கடந்து சென்றது. ஜனங்கள் அண்ணாந்து பார்த்தார்கள். தூரத்தில் மேலிருந்து காகிதப் பட்டம் போல் இறங்கி வந்து கொண்டிருந்தது பொட்டலம் போன்ற ஒரு பொருள். பால சங்க அங்கத்தினர்கள் ஆவலுடன் ஓடினார்கள். தரையில் விழுந்த ஒரு சின்ன பார்சலை எடுத்து வந்து பிரசிடெண்டிடம் கொடுத்தார்கள். அதிலிருந்த கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானார் பிரசிடெண்ட்.

''ஜீவகாருண்யப் போராட்டம்''

www.padippakam.com



ஹைதராபாத் மக்களை ரஜாக்கர்களிடமிருந்தும், வேறு விதங்களில் அராஜகம் செய்பவர்களிடமிருந்தும் பாதுகாத்து அமைதியை நிலை நாட்டுவதற்காக இண்டியன் யூனியன் படை வந்து கொண்டிருக்கிறது. ஹைதராபாத் மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக மக்கள் நலம் கோரும் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைதான் இந்த ஜீவகாருண்யப் போராட்டம்.

ஜெய் ஹிந்த் ... !

— ஜெனரல் ராஜேந்திர சிங்''

கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது பூமி அதிர்வது போல் பலத்த சப்தம் கேட்டது. டாங்குகள், பீரங்கிகள் தாங்கிய வண்டிகள் மற்றும் தரைப் படைகள் வந்து கொண்டிருந்தன. ஜனங்கள் சரேலெனப் பாய்ந்து மேடை மீது ஏறி சுவர்ப் பக்கமாய் ஒடுங்கி நின்றார்கள். படை கடந்து சென்றது. பின்னால் மதறாஸ் போலீஸ் அதிகாரிகள்... காந்தி குல்லாயும், கதராடையும் அணிந்த தேஷ்முக், பட்வரி அவர்கள் பரிவாரம் மற்றும் மலபார் ஸ்பெஷல் போலீஸ் படை வந்துகொண்டிருந்தது.

'ஜெயித்துவிட்டோம்' என்பது போல் தெளிவுடனும் தைரியத்துடனும் காணப்பட்டன தேஷ்முக், பட்வாரி முகங்கள். சிகப்பு அரளிப் பூ மாலையுடன் பக்கத்து சந்திலிருந்து வந்தான் ராமிரெட்டி. கையிலிருந்த மாலையை தேஷ்முக்கிற்குப் போட, அவன் ராமிரெட்டியை கட்டி அணைத்துக் கொண்டான். பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மிகுந்த ஆச்சரியத்துக்குள்ளானார்கள்.

கோடபாடில் சில மாதங்கள் ரஜாக்கர்கள் ஜாடை இல்லை. இவ்விஷயத்தை எடுத்துச் சொன்ன பட்வாரி பஞ்சாயத்து உறுப்பினர்கள் பக்கம் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னான். வெற்றிக் களிப்பில் திளைத்துக்கொண்டிருந்த அதிகாரிகள் பட்வாரி காட்டிய திசையில் பார்ப்ப

www.padippakam.com



தற்குள் அவர்கள் கட்டைச் சுவரையொட்டி பதுங்கிப் பதுங்கி தெற்குப் புறமாய் இருந்த காட்டுக்குள் மறைந்து விட்டார்கள்.

தேஷ்முக்கின் கழுத்து மாலை அவர்கள் விழிகளில் செவ்வரியாய்ப் படர்ந்திருந்தது.

''யார் மீது ஜீவகாருண்யம்...? யார் மீது போராட்டம்?''— தன்னியல்பாய்க் கேட்டான் நாரய்யா.

கோடபாடில் 'மக்கள் நல' அமைப்பு வேட்டையை ஆரம்பித்தது.

**(டிசம்பர் 1948 'விசாலாந்திரா' இதழிலிருந்து)**

[கம்யூனிஸ்ட் கெரில்லா தாக்குதல்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் துரைகள் ஊரைவிட்டு நகரங்களுக்கு ஓடிவிட்டார்கள். நிஜாம் படைகளும் ரஜாக்கர்களும் கூட அவர்கள் போராட்டத்தைச் சமாளிக்க முடியாது திணறிப் போனார்கள். சுமார் மூவாயிரம் கிராமங்கள் விமுக்தி பெற்றன. லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு மக்கள் உரிமையாளரானார்கள். அக்கம் பக்கத்து பிரதேசங்களிலும் போராட்டம் தீயெனப் பரவியது. பாரத யூனியனுக்குக் கீழ் வர மறுத்த நிஜாம் தன் தந்திரத்தை. சுயேச்சையை நிலைநாட்டிக் கொண்டான். 1948ன் நிலைமை இது. இந்தக் காலகட்டத்தில் யூனியன் படைகள் 1948 செப்டம்பர் 13ந்தேதி தெலுங்கானாவில் பிரவேசித்தன. தெலுங்கானா மக்களை அவர்கள் கஷ்டங்களினின்று விடுவிக்கவும், நிஜாமின் அரக்கப்பிடியினின்று அவர்களைக் காப்பாற்றிக் கடைதேற்ற நினைத்தும் போலீஸ் உதவியுடன் இந்த ஜீவகாருண்யப் போராட்டம் துவங்கியிருப்பதாக அறிவிப்பு விடுத்தது. கூடிய விரைவிலேயே அவர்கள் சுயரூபம் தெரிந்து கொண்டார்கள் மக்கள். மேற்சொன்ன பரிமாணங்களை இக்கதை விவரிக்கிறது.

www.padippakam.com



செப்டம்பர் 18 அன்று நிஜாம் சரணடைந்தான். அதன் பின் தெலுங்கானா போராட்டம் செப்டம்பர் 1951ல் நிறுத்தம் கண்டவரை மூன்று வருட காலம் கெரில்லாவுக்கும் யூனியன் படைக்கு மிடையே தீவிர போராட்டம் நடந்தது. நிஜாம்படை மற்றும் ரஜாக்கர்களையும் விட மோசமாய் நடந்து கொண்டது யூனியன் படை. அதன் துணையுடன் காங்கிரஸ் தலைவர்கள் என்ற பெயருடன் துரைகள் மீண்டும் கிராமங்களில் பிரவேசித்தனர். ஏராளமான வீரர்கள் அமரர்களானார்கள்.] □

படிப்பகம்

www.padippakam.com

## தும்மல வெங்கட்ராமய்யா

# கல்யாணம் செய்தார்கள்

ஒவ்வொருவராய் குளித்து முடித்தார்கள். சந்தோஷமும் சிரிப்புமாய் எல்லோரையும் உபசரித்துக் கொண்டிருந்தாள் ரங்கம்மா, தள்ளாமை கூடியிருந்தாலும் பொருட்படுத்தாது சுறுசுறுப்பாய் வளைய வந்துகொண்டிருந்தார்கள்.

அயர்ச்சிமேலிட சில படைவீரர்கள் சோம்பிக் கிடந்தார்கள். சிம்ளி ஏந்தியபடி வந்தவள் கண்ணுக்குமேல் புறங்கை குவித்து "யாரது... குளிக்கப் போங்க..." என்று கனிவும் கண்டிப்புமாய்க் கூறினாள்.

"நான் குளிக்கப் போறதில்ல பாட்டி..." அந்த இளைஞன் முனக...

"எம்மாந் தொலைவுலேர்ந்து வந்திருக்கிங்களோ. சொம்பு சுடுதண்ணி ஒடம்புல பட்டா அசதியெல்லாம் பறந்து போய்டாதா..." பரிவுடன் சொன்னாள்.

"நரசன்னா ரொம்பத்தான் பயந்து போயிருக்கு பாவம்..." வீரர்களுள் ஒருவன் விவகாரத்தைத் துவங்க...

"புதுசில்ல... மிரண்டு போயிருக்கான்..."

www.padippakam.com



''பருத்த ஒடம்புக்காரங்க எதுக்கும் கையாலாகாதவங்க...''

''ஒடம்பு தடிச்சிருக்காப்பல மூளையும் வளர்ந்திருக்கான்னு தெரியல...''

''நாளைக்கி தாக்குதல் நடத்தறப்ப தெரிஞ்சுடாதா...''

கேலியும் கிண்டலும் சிரிப்புமாய் பேச்சு தொடர்ந்தது.

''அட... நரசன்னாவா... யாரோன்னில்ல நெனைச்சிட்டிருந்தேன்... அடையாளம் தெரியாம மாறியிருக்கே... எங்க ஊர்லேர்ந்து ஒருத்தராவது படையில சேர்ந்திருக்கயேன்னு சந்தோஷமா இருக்கு'' ரங்கம்மா பேச்சிடைப் புகுந்தாள். நரசன்னா பேச முனைந்த போது கொம்பு ஊதும் ஒலி கேட்டது.

''அட்டென்ஷன்...!''— உரக்கக் கூவினான் படைத் தளபதி. அதுவரை விரவிக்கிடந்த சோம்பலும் அயர்ச்சியும் இருந்த இடம் தெரியாது மறைய பரபரவென ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு வரிசையில் நின்றார்கள் வீரர்கள்.

''அது கல்யாண மேளம் அப்பா. எதுக்கு இப்படி பதர்றீங்க? ஊரைச்சுத்தி காவல் வச்சிருக்கிங்கில்ல?'' ரங்கம்மா சிரித்தாள்.

''அப்படியா... ஆமா, யார் வீட்டுக் கல்யாணம்?'' ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு ஆவலுடன் கேட்டார்கள்.

''நம்ம நரசன்னா வீட்லதான்...''

''நல்லதாப் போச்சு, நமக்கெல்லாம் கல்யாண சாப்பாடு போடமாட்டானா நரசன்னா...? பாவம்...

www.padippakam.com



பாட்டிக்கு சிரமமில்லாம இருக்குமில்ல...; அது சரி... ஏன் கவலையா இருக்க... கல்யாணத்துக்குப் போக முடியுதோ? இல்லையோன்னா?'' நரசன்னாவைக் கேட்டான் தளபதி.

''ஒன் அய்யா தகவல் தெரிவிக்கலயா நரசன்னா...? ஆனாலும் எங்கன்னு தகவல் அனுப்ப...? என்ன கல்யாண மோப்பா... ஒரு நல்லது கெட்டது பார்க்கத்தேவல... ஒங்கய்யா பிடிவாதம் ஊரறிஞ்ச விஷயம். ஒங்கம்மா வாய கட்டிட்டாரு... பாவம் பொண்ணு... சொல்லவும் முடியாம மெல்லவும் முடியாம திண்டாடிட்டிருக்கு...'' அங்கலாய்ப்புடன் கூறினாள் ரங்கம்மா.

''அத நெனெச்சாதான் பாட்டி கவலையா இருக்கு... நான் போறதுக்கு முன்னகூட அய்யாகிட்ட இதபத்தி சண்டைபோட்டுட்டுதான் போனேன்...''

மீண்டும் கொம்பூதும் ஒலி கேட்டது எல்லோரையும் டிரஸ் போட்டுக்கொண்டு வரிசையில் நிற்க உத்தர விட்டான் தளபதி.

''சாப்பிட்டுட்டு போவலாமேப்பா...''

''இன்னொரு வாட்டி வர்றோம்...''

லெஃப்ட், ரைட்... லெஃப்ட், ரைட்...

தளபதியின் பின்னால் அணிவகுத்துச் சென்றார்கள் கெரில்லாக்கள். வீட்டு வாயிலில் நின்று அவர்கள் பார்வை யினின்று மறையும் வரை பார்த்தபடி நின்றாள் ரங்கம்மா.

காமாரெட்டி புறத்தின் எல்லையிலிருந்து ரங்கம்மா வீடு. கெரில்லாப்படை எப்போது வந்தாலும் அவள் வீட்டில்தான் முகாமிடும். அவளுடைய ஒரே மகள் நிஜாம் மிலிட்டரி ராட்சசர்களுடனான போராட்டத்தில் மடிந்த பிறகு அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற ஆவேசம் தவிர வேறு நினைவில்லை ரங்கம்மாவுக்கு. கெரில்லாத்தளம் தன் வீட்டில் தங்கும் போதெல்லாம்

www.padippakam.com



அவர்களை ஆதரவுடன் உபசரித்து கண்ணும் கருத்து மாய்ப் பாதுகாத்து வருகிறாள். அன்று அவர்கள் சாப்பி டாமலே சென்றுவிட்டது அவளுக்கு மிகவும் வருத்தமாக ஆயாசமாக இருந்தது.

தளபதி புச்சன்னா ஒரு சமயம் பேச்சு வாக்கில் கூறி னான்....

''பாட்டி... நீ என்ன சொன்னாலும் கேக்கறோம். ஆனா... நாங்க எங்க போறோம், ஏன் போறோம்னு மட்டும் கேக்காத எங்களுக்கு தர்மசங்கடம் ஏற்படுத்த மாட்டில்ல...?''— அதனால்தான் திடீரென்று அவர்கள் கிளம்பிவிட்ட போது அவளால் எதுவும் செய்ய முடியாம லாகி விட்டது.

∴ ∴ ∴

ரகுவய்யா போன்ற பிடிவாதக்காரர் அந்த ஊரி லேயே யாருமில்லை. யார் பேச்சையும் கேட்கமாட்டார். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்னும் குணம். அப்பாவுக்கு தப்பாது பிறந்தவன் என்று நரசன்னாவைக் குறித்து ஊரார் பேசிக் கொள்வதுண்டு. ஆனால் தகப்ப னின் சுபாவத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் ஒருநாள் ஊரைவிட்டே ஓடிவிட்டான்... அவன் கெரில்லாப் படை யில் சேர்ந்துவிட்டதாகவும் அப்படை அடுத்தடுத்து இரண்டு மூன்று வெற்றிகளை கண்டிருப்பதாகவும் கேள்விபட்ட கிராம மக்கள் அவனைக் குறித்து பெருமித மடைந்தார்கள்.

''நரசன்னா இருந்திருந்தா இப்படி நடந்திருக்காதோ என்னவோ...?'' என்று அங்கலாய்த்தார்கள்.

''யார் தலையெழுத்த யார் மாத்தமுடியும்? அவளுக்கு விதித்திருக்கிறது இவ்வளவுதான்...'' வேதாந்தம் பேசி னார்கள் சிலர்.

www.padippakam.com



''வேளை வந்துட்டா நிறுத்த முடியுமா... சரி... நல்ல காரியத்த நடத்தி வக்க ஒதவியா இருப்போம்...'' வேறு சிலர்...

திருமணமேடை பரபரப்பாக இருந்தது, தார்ப் பாய்ச்சிக்கட்டிய வேஷ்டியைச் சரிசெய்தபடி மடமடவென உத்தரவுகளிட்டாவாறு அங்குமிங்குமாய் அலைந்து கொண்டிருந்தார் ரகுவய்யா

ஊருக்கு வெளியே கொம்பூதும் சத்தம் கேட்டது. ''புறப்படுப்பா. நேரமாகல...?'' சத்தம் போட்டபடி பலகாரங்கள் தின்றபடி குறுக்கும் நெடுக்குமாய் ஓடிய குழந்தைகளை விலக்கித்தள்ள கை ஓங்கிய போது...

''என்னங்க... கொஞ்சம் வந்துட்டுப்போறீங்களா...?'' உள்ளிருந்து அவர் மனைவி கூப்பிட்டாள்.

''ஏன்... என்ன வந்தது இப்ப...?'' அங்கிருந்தே உறுமினார்.

''பொண்ணு... அவ... வந்து...'' வார்த்தைகள் சிக்கிக்கொள்ள குமுறினாள் சாயம்மா.

''சொல்லித் தொலையேண்டி. என்ன ஆச்சு...?'' சிங்கம்போல கர்ஜித்தார் ரகுவய்யா.

''அங்கயே நின்னு ஏன் அப்படிக்கத்தறிங்க? நாலுபேர் சுத்தி இருக்காங்களேங்கற இங்கிதமில்லாம...''

''என்னடி ரோதனை... அங்க அவங்க வந்தாச்சு. இன்னும் ஏற்பாடுகளே முடிஞ்சபாடில்லன்னா...'' கொஞ்சம் தணிந்து வந்தார்.

''நம்ம பொண்ணுக்கு இஷ்டமில்லையாம்...''

''என்ன இஷ்டமில்லாம போச்சாம்... இந்த கல்யாணமா... தோலை உரிச்சிடுவேன் ஜாக்கிரதை. எங்க

www.padippakam.com



அவ?'' ஒரே பாய்ச்சலில் அறைக்குள் நுழைய... சுற்றியிருந்த பெண்கள் மிரண்டுபோய் விலகி நின்றார்கள்.

''கூடப்பொறந்த சுபாவம் அவ்வளவு சுலபமா போய்டுமா என்ன?'' பந்தல் அலங்காரத்தை சரி பார்த்தபடி ரகுவய்யா மாமாவை விமர்சித்தான் ஒரு இளைஞன்.

''சரி... ... காரியம் ஆவட்டும். தெரிஞ்ச விஷயத்தை திருப்பித்திருப்பி பேசி நேரத்தைப் போக்க வேணாம்... இப்பவே தாமசமாயிட்டது...'' நரை விழுந்த நபர் அதட்டல் போட்டார். உள்ளிருந்து விசும்பல் ஒலி கேட்டது.

''எதுக்கு இப்படி ஆத்திரப்படறீங்க? கழுத்தை நெரிக்காத குறையா அவளை இந்த கல்யாணத்துக்குச் சம்மதிக்க வச்சாயிட்டது. நான் சொன்னது அதில்ல. அவளுக்கு இந்தச் சேலை வேணாமாம்...'' சாயம்மா மல்லி வாய் மூடுமுன் கத்த ஆரம்பித்தார் ரகுவய்யா.

''இந்த அல்ப விஷயத்துக்கு என்னைக்கூப்பிடணுமா? அவளுக்கு இந்த சேலை கட்டறதுக்கு இத்தனை கூத்தா? நேரமாயிட்டிருக்கு. எப்படியோ சமாதானம் செஞ்சி கட்டு சொல்றேன்...'' அறையை விட்டு வெளியே வர யத்தனிக்க...

''ஏண்டி சாயம்மா... எங்கடி போன... ஒண்ணு கெடச்சா இன்னொண்ணு கெடைக்கல. தாளிக்கற எண்ணெய எங்க வச்சிருக்க...'' கூப்பாடு போட்டபடி வந்தாள் ரகுவய்யாவின் அம்மா

''ஏண்டா... ரூமுக்குள்ள உட்கார்ந்து என்னடா செய்யற... அங்க எல்லோரும் ஒனக்கோசம் காத்திட்டிருக்காங்கல்ல... புள்ளய ஏண்டா இப்படி கரிச்சுக்கொட்டற... சம்பந்தம் பார்த்த லட்சணத்துல இது வேறயா...

www.padippakam.com



இன்னிக்கு ஒரு நாளாவது அவள விட்டுவக்கமாட்டயா? பச்சபுள்ள... அறிஞ்சோ அறியாமலோ ஏதோ பேசிட்டாலும் வயசுல பெரியவனா சமாளிச்சிட்டுப்போகாம அது கூட இப்படி மல்லுக்கு நிக்கணுமா?'' பிள்ளையைக் கண்டித்தவள் மருமகள் மீது பாய்ந்தாள்.

''இந்த சின்ன விஷயத்துக்கு புருசன்கிட்ட மொறையிடணுமாக்கும்?''

கல்யாணப்பெண் சாந்தம்மா ஒரு மூலையில் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தாள். அடிபட்ட மான்குட்டி போல் மிரட்சியுடன் அவர்கள் மூன்று பேரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''மாமா ரூம்ல படுத்துத் தூங்கிட்டாரா என்ன?''

''சாப்பாட்டுக்கு நேரமாவுதுன்னு பலகாரம் தின்னுட்டிருக்காரோ என்னமோ?''

மணமேடையருகே உறவுக்காரர்கள் உரிமையுடன் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்கள்.

''இந்த சின்ன விஷயத்துக்கு என் மண்டைய உருட்டணுமா? இதுக்குக்கூட துப்பில்லாம போச்சா?'' மனைவியை நோக்கி இரைந்து விட்டு மகள் பக்கம் திரும்பினார் ரகுவய்யா. ''இத பாரு சாந்தா... என் சங்கதி ஒனக்குத்தெரியுமில்ல...பொறுக்கறவரை பொறுப்பேன். மீறிட்டா என்ன செய்வேன்னு...'' முழுதும் முடிக்காமல் நிறுத்த... வார்த்தைகளுக்குப் பதில் பற்கள் அரைபட்டன. வெளியே போக அடி வைத்தவர் மீண்டும் திரும்பினார்.

''அதோ... அந்த சேலையே அவளுக்கு கட்டுங்க. துரை பக்கத்தில் இருந்து வாங்கினாராம். ஆசையா



படிப்பகம்

www.padippakam.com



வாங்கிக்குடுத்திருக்காங்க. கட்டினாத்தான அவங்களுக்கும் திருப்தியா இருக்கும்? கட்டலன்னா அவங்க கோவத்துக் காளாகணும். எதுக்கு இல்லாத பொல்லாப்பெல்லாம்? பெரிய எடத்து சம்பந்தம்...'' எச்சரிக்கை செய்து விட்டு ஒரு வழியாசப் பந்தலுக்கு வந்தார்.

''ஆமா பெரிய ஆசை. அப்படின்னு ஒண்ணு இருந்தா இப்படி அழுமா இது? பையன்கூட வீட்ல இல்லாத நேரம். பொம்பிளைங்க எங்க வாய அடச்சிட்டு செய்யறது பத்தாதா? சேலை விஷயத்துலகூட ஒன் அதிகாரம்தானா? அவளுக்கு இஷ்டமானத கட்டிக்கட்டுமே... ஏண்டி... நீதான் சொல்றது...'' ரகுவய்யாவின் தாயார் முகத்தை நொடித்தாள்.

''நான் என்ன செய்யட்டும்? ஒங்க மவன் எம் பேச்சைக் கேக்கறாரா? நீங்கதான் அவரிடம் தைரியமா சொல்றது... இப்படி பின்னால் முட்டிக்கிட்டா... என் ராசி நல்லதாயிருந்தா...'' ரகுவய்யாவின் மனைவி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா... எனக்கு வேணாம்மா...'' சுவரோடு சுவராய் ஒட்டிக் கொண்டாள் சாந்தம்மா. செய்வதறியாது மருமகளையும் பேத்தியையும் பெட்டிமேல் இருந்த அந்த சேலையையும் மாறி மாறிப் பார்த்தாள் ரகுவய்யாவின் தாய். அவர் மனைவி அப்படியே சரிந்து உட்கார்ந்து விட்டாள். சற்றுத் தள்ளி எரிந்துகொண்டிருந்த அகல் விளக்கு அவர்களைப் பார்த்து இரக்கப்படுவதுபோல் மினுக்மினுக் என எரிந்து கொண்டிருந்தது. தொலைவில் கொம்பு ஊதும் ஒலி. வீட்டு முன்னால் சிறுவர்களின் உல்லாசக் கூச்சல். அந்த அறையில் மட்டும் அடர்த்தியான நிசப்தம்.

துரையின் (தேஷ்முக்) ஆலோசனைப்படி மாப்பிள்ளை அனுப்பியிருந்த சிகப்பு பட்டுச்சேலை கொள்ளிவாய்ப்பிசாசு வாய்பிளந்ததுபோல் சாந்தம்மா

www.padippakam.com



வைப் பயமுறுத்தியது. அவள் விழிகளில் பெருகிய நீர் கன்னங்களில் ஆறானது. துடிக்கும் இதழ்களிளின்று 'வேணாம்... வேணாம்...' என்ற ஒற்றைச்சொல் வெளியே வராது உள்ளுக்குள் சுழன்று ஈனஸ்வரமாய் ஒலித்தது.

ஃ ஃ ஃ

ஊருக்கு வெளியே பிள்ளைவீட்டார் இறங்கினார்கள். பானகக்குடங்கள் இறக்கப்பட்டன. கைகால் கழுவிக் கொண்டு உறவுக்காரர்கள் பானகம் அருந்தலானார்கள்.

மாப்பிள்ளை சோமய்யாவுக்கும் தேஷ்முக்கிற்கும் ஏதோ தொடர்புண்டாம். ஊரைவிட்டு ஓடி பட்டணத்தில் முகாம் போட்டிருந்த தேஷ்முக் ஆந்திரமகாசபையுடன் சமாதானம் செய்துகொள்ள தூது அனுப்பிக்கொண் டிருக்கிறார். ஊராரிடம் நல்ல பெயர் எடுக்கவேண்டும் என்றோ? மாப்பிள்ளைக்கு தன் கூண்டுவண்டி மற்றும் பரிவாரங்களை அனுப்பி வைத்து தன் செல்வாக்கை நிரூபித்துக்கொண்டதுடன் மாப்பிள்ளையின் அந்தஸ் தையும் சற்றே உயர்த்தினார். வந்திருந்த உறவுக்காரர் களில் இளைஞர்கள் குறைவாக இருந்தனர். பெரும்பாலும் வயோதிகர்கள்தாம்.

''படைவீரர்கள் வந்திருக்காங்க. உக்கார வைங்க...''

''பிள்ளைங்களா... கொஞ்சம் தள்ளி உட்காருங்க...''

''நம்ம ஊரில் மீட்டிங் இருக்குங்க. ரெண்டும் ஒண்ணா வந்திருக்கு. கல்யாணம் முடிஞ்சதும் மீட்டிங் வச்சுக்கலாம். எல்லோரும் ஓய்வா இருப்பாங்க...''

''ஏய்... யாரங்கே... இவங்களுக்கெல்லாம் பானகம் குடுங்க...''

''எங்க உபசாரம் இருக்கட்டுங்க. மாப்பிள்ளை எங்க?''

www.padippakam.com



''அதோ... ஓங்க பக்கத்திலேயே இருக்கார்...''

''இவரா...''

''ஆமா... முந்திய கல்யாணங்கபோல் மாப்பிள்ளை அவ்வளவா அட்டகாசம் செய்யல. செஞ்சாலும் நடக்காதுன்னு சில சம்பிரதாயங்களையெல்லாம் மாத்தியிருக்கோம்...''

''அப்படின்னா இது...

''அவருக்கு இது மூணாவது கல்யாணங்க...''

''மூணாங்கல்யாணம்னு பேருதானதவிர அப்படி ஒண்ணும் வயசாகிவிடல.''

''நிறுத்துய்யா, இதெல்லாம் யார் கேட்டாங்க ஒன்ன...?'' தளபதியுடன் பேசிக் கொண்டிருந்த கிழவனை அதட்டினார் ரகுவய்யா. தளபதி புச்சன்னா தன் பையிலிருந்து கறுப்பான பொருள் ஒன்றை எடுத்து மணமகன் அருகே வைத்தார்.

அதைப் பார்த்ததும் விதிர்விதிர்த்துப் போனான் மணமகன். அதிர்ச்சியில் தலைப்பாகை எகிறி விழுந்தது. ''பிஸ்டல் எதுக்குங்க.. ?''

''இருக்கற இடம் விட்டு இஞ்ச் நகரக் கூடாது...'' வாலண்டியர்கள் உத்தரவு போட்டார்கள். மளமளவென மணமகனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''அது பிஸ்டல் இல்லய்யா. பாட்டரி லைட்...'' என்றபடி ஸ்விட்சைப் போட்டார் புச்சன்னா.

''நல்ல வேலை செஞ்சிங்க போங்க. நெஞ்சு நின்னுடும் போலாயிடுச்சி...'' பயத்துடன் சிரித்தான் கிழவன்.

''ஐயா மாப்பிள்ளை... இது எத்தனாவது கல்யாணம்?''

www.padippakam.com



''மூணாவதுங்க—''

''பிள்ளைங்க...?''

''நாலு பேர்...''

''ரெண்டு பொண்ணுங்க மாமியார் வீட்டுக்குப் போயிட்டாங்க. எள வயசுக்காரன் ஒருத்தன். கடைக் குட்டி சின்னப்புள்ள... அவன பாத்துக்கறது தவிர புதுப் பொண்ணுக்கு வேற சிரமம் எதுவும் இல்லிங்க...'' மண மகன் அருகே இருந்த கிழவன் கொஞ்சம் தைரியத்துடன் பேசினான்.

''நேரமாயிட்டிருக்கு. எதுக்கு இல்லாத பேச்செல் லாம்... முகூர்த்தம் தவறிடப் போவுது...''

''இருக்கற பேச்சுதான். கேலியில்ல, வேடிக்கை யில்ல. நீங்க கொஞ்சம் சும்மா இருக்கிறீங்களா...?''

''தளபதி சாப் பிற்பாடு எல்லாம் விவரமா சொல் வாரு. கொஞ்சம் பொறுமையா இருங்க...''

கெரில்லாக்கள் எல்லோரையும் ஒழுங்காய் உட்கார வைத்தார்கள். யாரும் குறுக்கே பேசவில்லை. பலமான நிசப்தம் சூழ்ந்திருந்தது.

''மாப்பிள்ளை ஐயா... தலைய ஏன் இப்படி முழுசா சிரைச்சிருக்கீங்க? கல்யாணமாச்சே? ஜோரா கிராப் இருந்தாத்தான அழகு?''

''பெண்டாட்டி போயிட்டால்ல... புருசன் செத்துப் போன பாப்பாரம்மா போல் இவரு செஞ்சிருக்கார் போல...''

கொல்லென்ற சிரிப்பு எழுந்தது.

''யார்ரா அது... பெரியவன் சின்னவங்கிற மரியாதை இல்லாம...''

www.padippakam.com



''அதில்லங்க...'' மாப்பிள்ளை பக்கத்துக் கிழவன் கையைப் பிசைத்தபடி தளபதியருகே வந்தான்.

''எதில்ல...?''

''முழுசா நரைச்சிட்டது. மொட்டையடிச்சி தலையைச் சுத்தி துணி கட்டிட்டா நல்லாயிருக்கும்னு தான்... கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது இந்தக் காலத்துப் புள்ளைங்களப் போல இருக்கணுமில்ல...'' கிழவன் ராகமாய்ச் சொல்ல...

சிறுவர்கள் கிண்டலடித்துப் பாடினார்கள்.

ரகுவய்யாவின் பொறுமை எல்லை கடந்தது.

''ஏண்டா...குனியா மல்லுக்கு நிக்க பயந்து இவங் களையெல்லாம் துணைக்கு கூட்டிட்டு வந்தியாக்கும்...?'' மகன் நரசன்னாவை நோக்கி சினத்துடன் பாய்ந்தார். ஊர் மக்கள் அவரைப் பின்னுக்கு இழுத்தார்கள்.

''இப்ப நீங்க என்னதான் சொல்றிங்க? கல் யாணத்தைப் பார்த்துட்டு ஒங்க ஜோலிய கவனிங்க. ஒங்களுக்கு சம்பந்தம் இல்லாத விஷயத்துலல்லாம் மூக்கை நுழைக்கறது நல்லால்ல. ஆமா...'' சற்று கடுப் பாகவே சொன்னார் ரகுவய்யா.

தோளில் ரைஃபிளுடன் அவருக்கு எதிரே வந்து நின்றான் புச்சன்னா.

''என்ன... சுடப் போறிங்களா... எங்க... சுடுங்க... பார்க்கலாம்...'' ஆவேசத்துடன் கூச்சலிட்டார் ரகுவய்யா.

''ரகுவய்யா... பதட்டப்படாம இப்படி உக்காரு. அவங்க என்னதான் சொல்றாங்கன்னு கேப்பமே...'' அவரை இழுத்து உட்கார வைத்தார்கள் உறவுக்காரர் கள்.

''இப்ப ஒனக்கு என்ன வயசாவுது?''

''நாப்பது...''

படிப்பகம்

www.padippakam.com



''நெஜம் சொல்லு...''

''மேல கொஞ்சம் இருக்கலாம்...''

''சரியாச் சொல்லு...''

''அம்பத்தஞ்சு ஆவுதுங்க...''

''பொண்ணுக்கு...?''

''தெரியாதுங்க...''

''தெரியாது...?''

''பதிமூணு...''

''பொண்ணுக்கு இந்த கல்யாணத்தில் சம்மதம் தானா?''

''எனக்கென்ன தெரியுங்க?''

''என்ன தெரியும்னு அலங்காரம் பண்ணிட்டு வந்து நிக்கற?''

''ஏதோ அறியாத வயசு. அடம் புடிக்குது. நாளானா தானா வழிக்கு வந்திடும். ஆனாலும் பொண்ணு சம்மதம் என்னங்க... புதுசா இருக்கே...?'' மாப்பிள்ளையின் உறவுக்காரக் கிழவன் இன்னும் ஏதோ சொல்லப் போக தளபதி இடைமறித்தான்.

''மேலே ஒரு வார்த்தை பேச வேணாம். அந்த ரகுவய்யா கழுத்தில் கட்டச் சொல்லு தாலிய...''

ரகுவய்யா தலை குனிந்தார். தன் கையாலாகாத் தனத்தை நினைத்துக் குமைந்தார். கண்களில் நீர் பொங்கியது. மணமகன் திருதிருவென விழித்தான்.

''காலம் போற போக்கில இப்படியெல்லாம் செய்யறது நல்லதில்லதான்...''

''வீட்ல மத்தவங்க வேணவே வேணாம்னு முட்டி மோதிட்டதையும் சட்டை செய்யாம இப்படி வீம்பு பிடிச்சு கட்டி வக்கறது நியாயமில்லதான்...''

www.padippakam.com



''ஆனாலும் கெரில்லாக்களுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்னு... அவங்க ஜோலிய பார்த்துட்டுப் போகாம...''

''இந்தக் கல்யாணம் நடக்காது. நடக்க விடமாட்டோம். பிள்ளை வீட்டுக்காரங்க வந்த வழி போகலாம்...'' நரசன்னா கட்டளையிட்டான்.

''எங்க யாருக்குமே இதில் இஷ்டமில்ல. அய்யா பலவந்தத்துலதான் எல்லாம் நடக்கறது. என்ன ஆனாலும் சரி... இந்த கல்யாணத்தை நடக்க விடமாட்டேன்...'' மறுபடியும் சொன்னான் நரசன்னா. குரலில் உறுதி தெரிந்தது.

''என்னய்யா... எங்களை இப்படி அவமானத்துக் காளாக்கறது உமக்கே நல்லாயிருக்காய்யா... நீயெல்லாம் ஒரு பெரிய மனுஷனா...?'' பிள்ளை வீட்டுக்காரர்கள் ரகுவய்யாவை தலைக்குத் தலை ஏசினார்கள்.

''முகூர்த்த சமயத்தில் கல்யாணத்த நிறுத்திடறது நல்லாயிருக்கா?''

''இதோடு விட்டு வக்கறமேன்னு சந்தோஷப்படுங்க. நிறுத்தினது கல்யாணம் மட்டுமல்ல. உங்க கழுத்துல விழ இருந்த கத்திய கூடத்தான்...''

''உம்... எழுந்திருங்க...'' அதட்டினான் நரசன்னா.

''சாப்பிட்டிட்டுப் போவட்டுமே பாவம்...'' ஒரு இளைஞன் குறும்புடன் கண் சிமிட்ட....

''ஆமா... அது ஒண்ணுதான் பாக்கி. கெடைச்ச மரியாதை பத்தாதாக்கும்...'' முணுமுணுத்தான் கிழவன்.

வேஷ்டியைச் சரிசெய்தபடி வண்டியை நோக்கி கப கபவென நடந்தான் மணமகன்.

www.padippakam.com



''புச்சான்னா சாபின் உரை இருக்கு. கேக்கறவங்க கேட்டுட்டுப் போகலாம்...'' பிள்ளை வீட்டாரைப் பார்த்து பொதுவாகச் சொன்னான் ஒரு இளைஞன்.

''கேட்ட உரை பத்தாதாக்கும்?''

''உம்... பேசாம நடங்க...'' மணமகன் திரும்பிப் பார்த்து கத்த... எல்லோரும் நகர்ந்தார்கள். வண்டிகள் புறப்பட்டன. ஒரு பர்லாங் கடந்திருக்கும்...

தொலைவிலிருந்து சிரிப்பொலியும் கரவொலியும் காற்றில் மிதந்து வந்து செவிப்பறையைத் தாக்கியது.

வண்டியிலிருந்த வயோதிகர் ஒருவர் பெருமூச்சுடன் சொன்னார். ''எமகாதகப் பய அந்த புச்சன்னா. அநியாயமா அவங்க மனஸைக் கலச்சிட்டானே. தானும் தன் ஆட்களும் செய்த காரியத்துக்கு கைதட்ட வக்கற சாமார்த்தியத்த பாரேன். இப்படிப்பட்ட கல்யாணங்க நடக்கக் கூடாதுன்னு உபன்யாசம் நடத்தறான் போலிருக்கு...''

''யாருடா அது... ஏன் அப்படி ஓடி வர்றான்?''

''சின்னப் பையன்... அதான் புயலாட்டம் ஓடி வர்றான். அதென்ன அவன் கையில...?''

''கொஞ்சம் நிறுத்து. அட ஒன்னைத்தான் வண்டிய நிறுத்து...''

''நிக்க வேணாம் போவட்டும். எதுக்கு மறுபடியும் பொல்லாப்பு?'' மணமகன் பயந்தபடி சொன்னான்.

மறுபடியும் கரவொலி கேட்டது. மீட்டிங் நடந்து கொண்டிருந்த திசையிலிருந்து. மூச்சிறைக்க ஓடி வந்த சிறுவன் வண்டியை நெருங்கிவிட்டான்.

''இதோ ஒங்க சேலை நீங்க அனுப்பி வச்ச முகூர்த்தப் புடவை. ஒங்க மூஞ்சில எறிஞ்சிட்டு வரச் சொல்லிச்சு எங்கக்கா...''

www.padippakam.com



''பையனோட திமிரைப் பார்த்தியா?''

''வண்டி போகட்டும். நிறுத்த வேணாம். நாசமா போவட்டும் சேலை...'' மாப்பிள்ளையின் குரல் இன்னும் குழறிக்கொண்டிருந்தது.

''சேலை... சேலை...'' எனக்கத்தியபடி வண்டியின் பின்னால் கொஞ்ச தூரம் ஓடினான் சிறுவன். வண்டிகள் இன்னும் இன்னும் வேகமெடுத்தன. அவனால் அந்த வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

''இவன் மொகரகட்டைக்கு கல்யாணம் ஒரு கேடா...த்தூ...!'' அந்தத் திசையில் உமிழ்ந்துவிட்டு கையி லிருந்த புடவையை வீசி எறிந்தான்.

ஒரு குச்சியை எடுத்து தோளில் சரித்துக் கொண்டு 'லெஃப்ட்... ரைட்..., லெஃப்ட் ரைட்...' என்று சொல்லிக் கொண்டு மார்பை உயர்த்தியபடி பெருமிதத்துடன் ஊர் நோக்கி நடந்தான். நடுநடுவே சல்யூட்... யாராவது பார்த்துவிட்டார்களோ என்ற வெட்கத்துடன் சட் டென்று திரும்பிப் பார்த்துவிட்டு மறுபடியும் 'லெஃப்ட் ரைட்' சொல்லியபடி ஊர்பக்கம் விரைந்தான்.

வியர்வையால் நனைந்து பளபளத்த மொட்டைத் தலையை வருடிக்கொடுத்தபடி ''அம்மாடா...'' என ஆசுவாசமாய் பெருமூச்செறிந்தான் தொலைவில் வண்டி யிலிருந்த மணமகன். □

www.padippakam.com

டாக்டர் உப்பல லட்சுமணராவ்

# கொரில்லா

"இன்னுமா அலங்காரம் முடிஞ்ச பாடில்ல? அவங்க கார் வந்துடப் போவுது. டேய் பாஸ்கரம்... உன் பெஞ்சாதிய இரும்புப் பெட்டியிலேர்ந்து ராக்கொடி, ஜடைபில்லை, நாகாம், சுட்டி, ஒட்டியாணம் எடுத்து அண்ணியிடம் குடுக்கச் சொல்லு. இந்த வீட்ல யாருக்குமே துளிக்கூட பொறுப்பில்லே. எல்லாம் நான் ஒருத்தனா திண்டாட வேண்டியிருக்கு..." பெரியண்ணன் அங்கலாய்த்துக் கொண்டார்.

"எதுக்கு இப்படி அநாவசியமா கவலைப்படறீங்க? எங்க வேலைய நாங்க பார்த்துக்க மாட்டமா...? போய் மத்த சமாசாரங்கள கவனியுங்க, தாழ்வாரத்துல ஜமக்காளம் விரிச்சி, வெத்தலைபாக்கு பலகார விஷயமெல்லாம் பாத்துக்கங்க..." பெரிய அண்ணி சிரித்தபடி கூறினாள்.

இந்த நாடகம் புதிதல்ல எனக்கு. ஒன்றரை வருஷ காலத்தில் இது ஐந்தாவது தடவை. பெண் பார்க்க வந்த கோஷ்டியின் வயதான அம்மா என் கழுத்தில் இருக்கும் சந்திரஹாரத்தை ஒற்றை விரலால் தூக்கிப் பிடித்து எத்தனை அடுக்குகள் இருக்கின்றன என்று எண்ணுவது...

படிப்பகம்

www.padippakam.com



இன்னொரு பெண்மணி எவ்வளவு நீளம் இருக்கிறது என என் பின்னலை இழுத்துப் பார்ப்பது...சவுரி இணைக்கப் பட்டிருக்கிறதாஎன்று பின்னல் கால்களிடை விரல்விட்டுத் துழாவுவது... நான் ஊமையோ திக்குவாயோ இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்வதாக பெரிய சங்கீத ஞானம்இருப்பவர்கள் போல் என்னை பாடச்சொல்வது... கை கால்கள்முடமில்லாமல் இருக்கிறதா என்று நோட்டம் விட 'உங்க பொண்ணுக்கு பரதநாட்டியம் தெரியுமா?' என மகாரசனையுடன் கேட்பது..., 'பொண்ணை கொஞ்சம் சுவரோரமா நிக்கச்சொல்றீங்களா... உசரப் பொருத்தம் பார்க்கவேணாம்...?' என உத்தரவு போடுவது... இதெல் லாம் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன அனுபவங்கள்.

என் அண்ணன்மார்கள் என்னை நன்றாகவே பார்த் துக்கொள்கிறார்கள். என் கல்யாணம் முடிந்துவிட்டால் ஒரு பெரிய பாரம் இறங்கினாற் போன்ற ஆசுவாசம் ஏற் படும் அவர்களுக்கு. அந்த அளவுக்கு பதட்டமாகவும் கவலையுடனும் காணப்பட்டார்கள். இரண்டு அண்ணிக ளுக்கும் ஆணும் பெண்ணுமாய் குழந்தைகள் இருந்தாலும் என் மீது ஒரு அலாதியான பாசம் உண்டு. அம்மா இல்லாத குறையே தெரியாதபடிக்கு அருமை பெருமை யாக என்னை வளர்த்தார்கள். அண்ணன்களுக்கு இருநூறு ஏக்கருக்கு மேல் நிலபுலன்கள், தோப்பு என இருந்ததால் நிஜாம் பிரபுத்துவத்தில் மற்ற நிலச் சுவான்தாரர்களைப் போல் அவர்கள் 'இளைய தேஷ்முக்' அந்தஸ்து பெற்றவர் கள். ஊரில் மிகுந்த செல்வாக்குடையவர்கள்.

சின்ன அண்ணி என் பின்னலில் ஜடை பில்லை பொருத்திக் கொண்டிருந்தாள். அலங்காரத்தில் மனம் சிறிதும் லயிக்கவில்லை எண்ணங்கள் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தன. எனக்கு மட்டும் பெண் பார்க்க வருப வனைக் கேள்வி கேட்கும் அதிகாரம் கிடைத்துவிட்டால்... 'உங்களுக்கு பாடத்தெரியுமா? க்ஷேத்ரய்யா பாட்டெல்

www.padippakam.com



றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அவருடைய காம்போதி ராகப் பாடல் வருமா உங்களுக்கு? நான் ஐந்தடி மூன்றங் குலம். உங்கள் உயரம் எவ்வளவு? எங்கள் பண்ணை போல் உங்கள் பண்ணையிலும் வேலை செய்யற கொத் தடிமைகள் உங்களைப் பார்த்து பயப்படுவார்களா?'...

கேள்விகள் நினைவளவில் நின்றுவிட்டன. காரணம் இந்தத் தடவை என்னுள் ஏனோ ஒரு திடமான நம்பிக்கை இன்றைய நிகழ்ச்சி என் வாழ்க்கையின் புது அத்தியாயத் தின் துவக்கம் என்ற உள்ளுணர்வின் உந்துதலனாலோ என்னவோ போர்க்கொடி உயர்த்திய உத்வேகத்தை அடக்கி அமரிக்கையாகவே நடந்து கொண்டேன்.

ஃ ஃ ஃ

எனக்கு இப்போது ஐந்துவயது மகன் இருக்கிறான். அவனைப் பராமரிப்பதிலேயே நேரம் சரியாகிவிடுகிறது. என் வாழ்க்கை முற்றிலும் திசைமாறிவிட்டதை நினைத் தால் வியப்பாகத்தான் இருக்கிறது. பெண்பார்க்க வந்த போது எங்கள் விழிகள் கலந்தபோது அந்தப் பார்வையில் ஒரு தாகம் கண்டேன். என் பெண்மையை வெட்டி வீழ்த்தும் வசீகரமான பார்வை அது. கூடவே நிலவின் தண்மை போன்ற இதமான பரிவையும் அன்பையும் நேயத்தையும் வெளிப்படுத்திய அக்கருவிழிக் காட்சியை என் இதயத்தில் பத்திரப்படுத்திக் கொண்டேன். அந்தப் பார்வைப் பரவசத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க வேண்டும் என்ற விழைவு ஏற்பட்டது.

நாங்கள் இப்போது தெலுங்கானாவில் 'அஸ்வாராவ் பேட்' ஜில்லாவில் 'ரேகபல்லி' கிராமத்தில் இருக்கிறோம். பெண்பார்க்கவந்த அன்றே அவர் அண்ணன்களிடம் சொன்னார். "எங்க ஜில்லாவில் எனக்குத் தாராளமா நில மிருக்கறது வாஸ்தவம்தான். ஆனால் இந்தக் காலத்துல எது சாஸ்வதம் சொல்லுங்க...ஆந்திரமகாசபை நடத்தற

www.padippakam.com



போராட்டத்தால தெலுங்கானா முழுக்க கொதிச்சிட்டிருக்குல்ல. விவசாயிங்க என்னிக்காவது ஒருநாள் அவங்கவங்க நெலத்தைப் பறிச்சுக்காம விடமாட்டாங்க...'' அதற்கு என் பெரியண்ணன் ''நம்ம நெலத்தைப் பிடுங்கிக்கற வஸ்தாதை என் முன்னே வந்து நிக்கச்சொல்லுங்க சுப்பய்யா. அவன சுட்டு வீழ்த்தலன்னா என்பேரு சந்திர சேகரய்யா இல்ல. நிஜாம் இருக்கறவரை நமக்கு என்ன பயம்?'' என்று சொல்லி இகழ்ச்சியாய்ச் சிரித்தார்

தன் நிலங்களை விவசாயக் கூலிகளுக்குப் பகிர்ந்தளிக்க விரும்புவதாகவும் என் பெயரில் நூறு ஏக்கர் எழுதிவைக்க நினைத்திருப்பதாகவும் கூறி என் கருத்தைக் கேட்டார். என் பெயரில் சென்ட் நிலம்கூட வேண்டாமென்றும் முன்னூறு ஏக்கரையும் ஏழை விவசாயிகளுக்கே எழுதி பத்திரம் தயாரித்துக் கொடுத்துவிட வேண்டுமென்றேன். அதைக் கேட்டதும் அவர் முகத்தில் சுடர் விட்ட மகிழ்ச்சியொளி வார்த்தைகளுக் கடங்காதது. இன்னொன்றும் சொன்னேன். கிருஷ்ணா ஜில்லாவில் உள்ள 'வேதாத்திரி'யில் இருக்கும் எங்களுக்குச் சொந்தமான ஐம்பது ஏக்கராவை மட்டும் பையன் பெயரில் மாற்ற வேண்டுமென்றும் வளர்ந்து ஆளான பிறகு அந்த நிலத்தை விவசாயிகளுக்கு தானம் செய்வதும் செய்யாததும் அவன் இஷ்டம். அந்த யோசனையையும் ஏற்றுக்கொண்டு பத்திரம் தயார் செய்தார். அவர் எப்போதோ 'சங்கத்'தில் (ஆந்திரமகா சபை) மற்றும் கட்சியில் அங்கத்தினராகி விட்டிருந்தார்.

எங்கள் நிலங்களை அவர் இப்படி பொதுவுடைமையாக்கியதுதான் தாமதம், சுற்றுவட்டாரக் கிராமங்களில் கலவரம் மூண்டது. ஏழை விவசாயிகள் கிளர்ந்தெழுந்தார்கள். ஊரைச்சுரண்டும் வஞ்சகர்கள் மீது தாக்குதல் ஆரம்பித்தார்கள். அவர்களின் பண்ணை வீடுகளில் நுழைந்து கத்தி, துப்பாக்கிகளை அபகரித்து... பருக்களை

www.padippakam.com



ஓட்டிக்கொண்டு... நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு.... மடமடவென உழ ஆரம்பித்தனர். கொத்தடிமையாக இருந்தபடி நடைப்பிணம் போல் காலம் தள்ளிக் கொண்டிருந்த விவசாயக்கூலிகளின் கோபத்தீயின் வெப்பம் தகித்துப்பொசுக்க... அக்கிரமக்காரர்கள் உயிருக்குப் பயந்து உடமைகளைவிட்டு பட்டிணங்களுக்கு ஓட லானார்கள். என் அண்ணன்களும் குடும்பத்துடன் கிராமத்தைவிட்டு ஏலூருக்குச் சென்று விட்டார்கள்.

தார்மீகப் போராட்டப் நடத்தி வெற்றி கண்டு விவசாயத்தில் ஈடுபட்ட பதினைந்து கிராமங்களின் வாழ்க்கையை நாசமாக்கிவிட வேண்டும் என்ற வெறியுடன், குறைந்தபட்சம் விவசாயிகள் தங்கள் நிலங்களை விட்டுவிட்டு ஊரைவிட்டு ஓட வேண்டும் என்ற பேராசையுடன் நிஜாம் போலீஸ், நிலச்சுவான்தாரக்குண்டர்கள், படேல் பட்வாரிகள், ரஜாக்கர்கள் ஆகியோர் ஒன்றுதிரண்டு படையெடுத்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார்கள். மீண்டும் கொள்ளை... தீவைப்பது... மான பங்கங்கள்... என இம்சைகள் ஒவ்வொன்றாய்த் துவங்க...

கிராமங்களில் விவசாய இளைஞர்களும் இளம் பெண்களும் சேர்ந்து படை அமைத்து அவர்களுள் திறமை சாலிகளுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு காடுகளில் ஒளிந்து போராட்டம் நடத்தும் கெரில்லாக்களுடன் இணைந்து போர்க்கொடி உயர்த்துமளவுக்கு மடமடவென வேலைகள் நடந்தேறின. படையைச் சேர்ந்த மற்ற இளைஞர்கள் ஆந்திரமகாசபை மற்றும் கட்சியுடன் தொடர்பு கொண்டு ஊர்க்குழந்தைகளுக்கு பள்ளிக்கூடம் ஏற்பாடு செய்தார்கள். பஞ்சாயத்து ஆட்சிமுறை அமுலாக்கப்பட்டது. சுற்றுவட்டாரக் கிராமங்களில் என்ன தகராறு, குடும்பச் சண்டைகள் நடந்தாலும் பஞ்சாயத்து கோர்ட்தான் விவகாரத்தைச் சரிசெய்து தீர்ப்பு கொடுக்கும்

www.padippakam.com



பெருந்தனக்காரர்கள்சும்மாயிருக்கவில்லை. போலீஸ் நிஜாம் ரஜாக்கர்களின் துணையுடன் சங்கம் மற்றும் கட்சியை சர்வநாசமாக்காமல் விடுவதில்லை என அறை கூவல்கள் விடுத்தார்கள். எங்கள் கிராமத்திலிருந்து இருபத்தைந்து மைல் தொலைவில் இருக்கும் 'தஸ்தகிரி' மைதானத்தில் போலீஸ் முகாமிட்டது. ஈவிரக்கமற்ற அவர்களின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போயிற்று. இந்தப் போலீஸ் கேம்பைப் பூண்டோடு அழிக்க வேண்டுமென்ற உத்வேகத்துடன் மாவட்ட சங்கம் மற்றும் கட்சி அனுமதியுடன் எல்லைக் காவல் பொறுப்பிலிருந்து இருபத்தைந்து இளைஞர் களைத் தேர்ந்தெடுத்து அந்தக் குட்டிப்படைக்கு என் புருஷனைத் தலைவனாக்கி அவர்களுக்கு ஒரு வாரம் கெரில்லாப் போராட்டப் பயிற்சி அளிக்கப்பட்டது. சரியாக எட்டாவது நாள் இரவு போலீஸ் காம்புக்கு மைல் தூரத்திலிருக்கும் 'ராயப் ரோலு' குன்றின்மீது கூடாரமிட்டுக் கொண்டது தேர்ச்சிபெற்ற அந்தப்படை. அன்றிரவு வீட்டிற்கு கிளம்புமுன் தூங்கிக்கொண்டிருந்த பையனின் கன்னத்தில் ஆசைதீர முத்தமிட்டார்.

''பார்வதி... மறுபடி எப்ப வருவேன்னு நிச்சயமா சொல்ல முடியாது. இவ்வளவு காலமா நாம் அடிபட்டுக் கொடந்தோம். இனிமே அடிவாங்கப்போறது அவங்க முறை. நம்ம புது அணுகுமுறை அவங்களால தாக்குப் பிடிக்க முடியாதுகங்கறது சர்வநிச்சயம். ஆனாலும் எது எப்படி நடக்குமோ...? எதையும் எதிர்கொள்ற நெஞ்சுரம் வேணும் வரட்டுமா?'' என் கைகளைப்பிடித்துக்கொண்டு குரல் கம்மக் கேட்டபோது திகில் என்னை பாம்பெனச் சுற்றிக் கொண்டது.

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க... எல்லாம் நல்ல படியா முடியும்...'' மேலே பேசமுடியாது அவர் அகன்ற மார்பில் சாய்ந்துகொண்டேன். பொங்கி வெடித்த அழுகையுடன் நடுங்கிக்கொண்டிருந்த என்னைத்

www.padippakam.com



தன்னுடன் சேர்த்தணைத்து கண்ணீரைத் துடைத்தார். கேசத்தைப்பரிவுடன் நீவிவிட்டு விழிகள், நெற்றி, கன்னம், இதழ்கள், செவிமடல் என முத்தங்களால் ஒற்றினார். நெஞ்சு நிறைந்த பாசத்தைப் பார்வையால் பரிமாறியபடி தீவிரமான குரலில் சொன்னார்.

''வரப்போற காலம் உனக்கு ஒரு பரிட்சையாத்தான் இருக்கும். ஏதேதோ பிரச்னைகள் ஏற்படலாம். மாற்றங்க நிகழலாம். அத்தனையும் ஒரு சவாலா ஏத்துக்கிட்டு தைரியமா எதிர்நீச்சல் போடக்கத்துக்கணும் நீ. பையனை பத்திரமா பாத்துக்க. என்ன நடந்தாலும் சோர்ந்து போய் மூலையில் முடங்கிடாம திடமா நின்னு நம்ம கட்சி கௌரவத்தைப் பாதுகாக்கணும்...'' மீண்டும் ஒரு முறை அழுந்த முத்தமிட்டு விட்டு சரேலென எழுந்து இருளில் மறைந்தார்.

விடிந்தபோது கிராமத்தின் சூழல் அடியோடு மாறி விட்டிருந்தது. எல்லோருடைய இதயங்களிலும் காரிருள் படர்ந்திருந்தாலும் விழிகள் உக்கிரம் செவ்வரியிட்டு ஒளிர்ந்து கொண்டிருந்தன. சுருதி சேர்த்துத் தயாராக வைக்கப்பட்டிருக்கும் வீணையின் தந்திகளில் விரல் நுனி பட்ட மாத்திரத்தில் ஓம்காரம் ஜிவ்வென்று பொங்கிப் புறப்படுவது போல் சிலிர்த்தெழுந்து நின்றார்கள் ஜனங்கள்.

மூன்று நாட்கள் அமைதியாகவே சென்றன. நான் காவது நாள் விடிந்தும் விடியாததுமான அரையிருட்டில் கதவு தட்டும் ஓசை வண்ணாத்தி அயிலம்மா... அவள் தான் இப்படி ஒரு சங்கேதம்போல் ஓசையெழுப்புவாள். குலத்தொழிலில் ஈடுபட்டபடி சங்கப் பணிகளையும் ஆர்வமுடன் செய்து வருபவள். ஏதோ விபரீதம் நடந் திருக்கவேண்டும். இல்லையென்றால் இந்த விடியற்

தெ—17

www.padippakam.com



காலையில் ஏன் வந்து கதவைத்தட்ட வேண்டும்? ஒரு வேலை தாக்குதலில் அவருக்கும் படைக்கும் ஏதாவது... பயத்தால் குப்பென்று வியர்க்க கதவைத் திறந்தேன்.

''என்ன விஷயம் அயிலம்மா? நம்மவங்கள்லாம்...'' அவள் முக இறுக்கம் திகிலூட்ட மேலே பேச்செழவில்லை.

''வந்து... தாயி... என் வாயால எப்படிம்மா சொல்வேன். நம்ம அய்யாவும் வெங்கடராம சாபோட மகன் வீரய்யாவும் திரும்பி வரமாட்டாரும்மா. போலீஸ் தடியனுங்ககூட ஆறுபேர் மண்டைய போட்டுட்டாங்களாம். ஹர்க்காரா சொன்னான்...'' அழுகையினூடே சொன்னாள். அப்படியே சரிந்து விட்டேன். அயிலம்மா என்னை நடத்திச்சென்று கட்டிலில் படுக்கவைத்தாள். பக்கத்திலிருந்த சின்ன கட்டிலில் பையன் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் மேலுதடு மெல்ல அசைவது லாந்தரின் மெல்லொளியில் தெரிந்தது. அவள் முகத்தில் விரிந்த சின்ன முறுவல் பூவிதழ் பிரிவது போலிருந்தது. கடைசியாக அவர் சொன்னது நினைவில் வந்தது ''பார்வதி... மனசைத் திடப்படுத்திக்கணும் நீ. வாழ்க்கை எப்படி தடம் மாறிட்டாலும் கட்சியோட கௌரவத்தை மட்டும் கடைசிவரை கட்டிக்காக்கணும்... என்ன... செய்வியா பார்வதி...?...''

கடந்த ஆறாண்டு வாழ்க்கை காட்சிகளாய் கண்முன் ஓடின. அண்ணன்கள்... அண்ணிகள்... பெண்பார்க்கும் நிகழ்ச்சிகள்... அவர் வந்து என்னைப் பார்த்தபோது என்னுள் ஏற்பட்ட கிளர்ச்சிகள்... அவரின் பரிவான பார்வை... அன்பான மொழிகள்... காதல் கசியும் இறுக்கமான அணைப்புகள்... எங்கள் வாரிசு... கடைசியாக கடைசியாக இதோ... அவர் தான் நேசித்த மண்ணோடு கலந்துவிட்டார். அவரைப் போல எத்தனையோ வீரர்கள் மண்மாதா அரவணைப்பில் இறுகிவிட்டார்கள். நிஜாம் ராட்சசர்களின் அசுரப்பிடியில் நசிந்து விட்டனர்.

www.padippakam.com



இப்போது எனக்கு மிஞ்சியிருப்பது இதோ இந்த இளம் குருத்து ஒன்றுதான் இவன்... மற்றும் தெலுங்கானாக் குழந்தைகள் யாருமே இந்த அக்கிரமங்களுக்குப் பலியாகக் கூடாது.

தொய்ந்து விழுந்திருந்த உடலில் திடீரென்று பலம் வந்துவிட்ட உணர்வு... உத்வேகம்...! விருட்டென எழுந்து கொல்லைப் பக்கம் சென்று சில்லென்ற நீரால் முகம் கழுவிக்கொண்டு வந்தேன்.

''தெளிஞ்சிட்ட தாயி... அப்படித்தான் இருக்கணும். 'ஓங்க கால்ல வுளுந்து கும்புடறேன் தொரை. ஓங்க அடிமை நான்'னு என் புருசன் சொல்லலன்னு கொத்தடிமையா இருக்க மறுத்துட்டான்னு துண்டு துண்டா வெட்டி என் வூட்டு வாசல்ல எறிஞ்சிட்டுப் போனாங்க. அத்தனையும் அப்பட்டமா கண்ணு முன்னால பார்த்தும் சொட்டு தண்ணி வரல என் கண்ல. அன்னிக்கு சபதம் வச்சேன். என் குங்குமத்த அழிச்ச அந்தப் பாவிங்க ரத்தம் கொட்டி சாவறத பாக்காம நான் சாவமாட்டேன். என் விதி ஒனக்கும் வந்தாச்சா தாயி. ஹூம்... இன்னும் எத்தனை பேரோ? எப்படில்லாம் போராடணும்மா நாம...? இந்தா இந்த கஞ்சிய குடி தாயி இனிமேதான் ஒடம்புலயும் மனசுலயும் நெறைய தெம்பு தேவைப்படுது கொழந்தே...''

நான் கஞ்சி குடிப்பதைக் கனிவுடன் பார்த்துக்கொண்டிருந்தாள் அயிலம்மா.

ஃ ஃ ஃ

'பார்வதி...! தைரியமா இருக்கணும் நீ. கட்சி பெயரைக் காப்பாத்தணும்...' — ஆமாம்... கட்சியின் கௌரவத்தை நிலைநாட்டப் போகிறேன். கடும் பிரயாசையின் பேரில் கல்லானது இதயம். காம்ரேடுகள் ராமுலம்மா, ரங்கம்மா, சாவித்திரியம்மா, நரசம்மா என

www.padippakam.com



நிறைய பேர் போராட்டத்தில் பங்கேற்றிருக்கிறார்கள். நானும் சேருவேன். ஆனால் பையன் சங்கதி? அவனை யார் பார்த்துக் கொள்வார்கள்? நான் திரும்பி வரும்வரை யாரிடமாவது ஒப்படைத்துச் சென்றால்...? திரும்பி வருவேனா? அவர் வந்தாரா? வெங்கட்ராமின் மகன் வந்தானா? ஐயோ... என்னால் முடியாது. குழந்தையை விட்டுப் பிரியமாட்டேன். ஆனால் இடுப்பில் குழந்தையை வைத்துக்கொண்டு என் இலட்சியத்தில் வெற்றிகாண முடியுமா?

நிஜாமுடனான போராட்டம் தங்கு தடையின்றி தொடர்ந்து கொண்டிருந்தது. என் பாதையில் தான் தயக்கம். இந்தத் தயக்கத்தை உதறவேண்டும். உதறித் திருவேன். அயிலம்மாவின் உதவியுடன் பிள்ளையுடன் 'ஆண்ட்ராதி கூடம்' சென்றேன். குயவர் குடிசைப் பகுதியில் இருந்த நாகக்காவிடம் எங்களை ஒப்படைத்தாள் அயிலம்மா. இருள் படர்ந்த பிறகு பையனைத் தோளில் ஏற்றிக்கொண்டு என் கையைப் பிடித்து குன்றுகளை கடந்து அழைத்துச் சென்றாள். வழிநெடுக நிஜாம் போலீஸ் குறித்து, நிலச்சுவான்தார்களின் அக்கிரமச் செயல்கள் குறித்து, கெரில்லாப் படைகளின் சாகசங்கள் குறித்து கதைகள் போல் நிறைய விஷயங்கள் சொல்லிக் கொண்டுவந்தாள். இரண்டு ராத்திரிகள் நடந்து இந்த முகாமை அடைந்தோம்.

ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன. துப்பாக்கிப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றேன். முன்னூறு கஜ தூரத்தில் மூங்கில் கழி முனையில் செருகப்பட்ட நாவல்பழமொன்றை குறிபார்த்துச் சுட்டு வீழ்த்தக் கற்றுக்கொண்டேன். ரைஃபிள்களை அக்கக்காய்ப் பிரித்து சுத்தமாய்த் துடைத்து எண்ணெய் தடவி கணப்பொழுதில் மீண்டும் பொருத்தி தோட்டாக்கள் புகுத்தி தயார் நிலையில் வைக்கக் கற்றுக்கொண்டேன். துப்பாக்கி மருந்துகளை

www.padippakam.com



சரியான விகிதத்தில் கலந்து கைக்குண்டுகள் தயாரிப்பதி லும் தேர்ச்சி பெற்றேன். ஈயத்தை உருக்கி குண்டுகள் செய்யத் தெரிந்து கொண்டேன். இன்னும் ஒரு வாரத்தில் என்னை கெரில்லாப் படையில் சேர்த்து விடுவதாக காம்ரேட் கோடய்யா திருப்தியுடன் சொன்னார்.

இரண்டு நாட்கள் முன்பு வரங்கலிலிருந்து கட்சியின் மேலதிகாரிகள் முகாமுக்கு வந்திருந்தனர். அமரவீரர் காம்ரேட் சுப்பய்யாவின் மனைவியையும் என்னையும் மிகவும் பாராட்டினார்கள். வைராக்கியம் நிறைந்த என் ஆர்வத்தையும் துப்பாக்கியைக் கையாளுவதில் நான் அடைந்த தேர்ச்சியையும் வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி னார்கள். கட்சியில் அங்கத்தினராகும் பொருட்டு அப்ளி கேஷன் கொடுத்தேன். பெற்றுக் கொண்டு, ''உங்களை நாளை அல்லது மறுநாள் கெரில்லா படைக்கு அனுப்பி தாக்குதலில் இடம் பெறச் செய்வதாக காம்ரேட் ஜகந் நாதம் சொன்னார். நீங்க சாதிப்பீங்கன்னு நம்பிக்கை இருக்கு. ஆனா உங்க மகன் சங்கதி? தாக்குதலின் போது எடாகூடமா ஏதாவது நடந்துட்டா பையன் பொறுப்பை பார்ட்டி ஏத்துக்க முடியாதே... அதைப்பற்றி என்ன தீர் மானிச்சிருக்கீங்க... காம்ரேட் பார்வதி... எதுவாக இருந் தாலும் மனம்விட்டுச் சொல்லுங்க...'' என்று ஆதரவு தொனிக்கக் கூறினார்கள்.

குழந்தையை என்ன செய்யப் போகிறீர்கள் என்ற கேள்வி என் செவிகளில் ஈயமெனப் பாய்ந்து பாதாதி கேசம் நடுங்கியது. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. இந்தப் பிரச்னை அவ்வப்போது என் நெஞ்சின் மூலையில் எட்டி எட்டிப் பார்த்தாலும் வேண்டு மென்றே அலட்சியம் செய்தேன். அதைக்குறித்து தீவிர மாய் யோசிக்க முயன்றவளில்லை. இப்போது அவர்கள் வற்புறுத்தலாய்க் கேட்கிறார்கள் என்ன பதில் சொல்ல... என் முகச்சலனங்களைக் கவனித்தவராய் காம்ரேட் கூறினார்.

www.padippakam.com



''பையனை இங்க விட்டுவிட்டு தாக்குதலுக்குச் சென்றால் உங்க கவனமெல்லாம் இவன் மீதே இருக்கும். இவன் முகாமில் இருந்தால் முகாமின் கட்டுப்பாடுகளுக்கு பங்கம் விளையும். கெரில்லா வாழ்க்கை முறையில் குழந்தைக்கு இடமில்லை என்பதை நீங்க இத்தனை நாட்களில் தெரிந்து கொண்டிருப்பீர்கள் அவனைப் பிரிய நீங்க சித்தமாகணும் காம்ரேட் பார்வதி...''

''ஐயோ... அப்படிச் சொல்லாதீங்க காம்ரேட்...'' என்னையறியாது கத்திவிட்டேன்.

''ஆமாம்... எனக்குத் தெரியும். பையன் பக்கத்துல இருந்தா அவனைப் பார்க்கறப்பல்லாம் உங்க கணவர் ஞாபகம் வந்து உங்க வைராக்கியமும் உறுதியும் இன்னும் வலுப்பெறும் என்றும் புரிகிறது எல்லாம் சரிதான். ஆனால் கெரில்லாவின் முரட்டுத்தனமான வாழ்க்கையில் அது முடியாதே...! கட்சியின் கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் யாருமே விதிவிலக்கில்லை கட்டுப் பட்டுதான் ஆகணும். தனிப்பட்ட பந்தங்களை அறுத்துக் கொள்வது தவிர வேறு வழியில்லே. கட்சி எல்லாவற்றை யும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கு. பையனை அழைத்துக்கொண்டு நாளைக்கு விடியலிலேயே ஏலூர் புறப்படுங்க. உங்க அண்ணன் வீட்டுக்குப் போங்க. உங்க சின்ன அண்ணியின் அத்தை பிள்ளைக்கு குழந்தை கள் இல்லை. கொஞ்சம் வசதி குறைந்த விவசாயி அவர். அவருக்கு உங்க மகனை சுவீகாரம் கொடுத்துடுங்க. வேதாத்ரியில் இருக்கும் ஐம்பது ஏக்கருக்கு பையன்தான் வாரிசென காம்ரேட் சுப்பய்யா எழுதி வைத்த காகிதத்தை மறக்காம எடுத்துச்செல்லுங்க. நீங்க இன்னும் உங்க வீட்லதான் இருக்கீங்கன்னு உங்க அண்ணன்க நினைச் சிட்டிருக்காங்க அப்படியே இருக்கட்டும். இந்த விஷயங் களையெல்லாம் ரகசியமா வச்சுக்கணும். நீங்க கெரில்லாங் கறது ஞாபகமிருக்கட்டும். குழந்தையை தத்து கொடுக்கற சடங்கு முடிஞ்ச உடனே புறப்பட்டு வந்துடுங்க...'' நீனா

www.padippakam.com



மாய்ப் பேசி அந்தப் பிரச்னைக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்தார் காம்ரேட்.

ஃ ஃ ஃ

அந்நிய மனிதர்களிடம் என் கையால் குழந்தையை அள்ளிக்கொடுத்துவிட்டு திரும்பி வந்தேன். மார்பைக் கிழித்து இதயத்தைப் பிய்த்தெடுத்துக் கொடுப்பது போலிருந்தது அப்போது. அண்ணன்கள் என்னிடம் அன்பாகத்தான் இருந்தார்கள். ஆனால் குழந்தையை சுவீகாரம் கொடுத்தது அவர்களுக்கு அவ்வளவாக விருப்பமில்லை. ஐம்பது ஏக்கரை வாரிக்கொடுப்பது பொறுக்கவில்லை அவர்களுக்கு. நிஜாம் நிலபுலன்களுடன் இந்த ஐம்பது ஏக்கரையும் அவர்களே பயிர்செய்திருப்பார்கள் என்று அரற்றினார்கள். அண்ணிகள் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு அழுதார்கள். குழந்தையை மாறி மாறி முத்தமிட்டார்கள் அவனை சுவீகாரம் எடுத்த தம்பதி என் அண்ணன் வீட்டிலேயே வந்திறங்கினார்கள். சுவீகாரச் சடங்குகளுக்காகும் செலவினங்களுக்கென என் வளையல்கள் நான்கையும் அண்ணனிடம் கொடுத்தேன். குழந்தைக்கு வேண்டிய துணிமணிகளுக்கும் மற்ற தேவைகளுக்கும் என் சங்கிலியை விற்றேன். விவசாயக் கூலிக்கு குழந்தையை சுவீகாரம் கொடுத்தது நல்லதென்றே தோன்றியது. இல்லையென்றால் வருங்காலத்தில் அண்ணன்களைப் போல் இவனும் ஒரு இளைய தேஷ்முக்காகி மக்கள் மீது அதிகாரம் செலுத்துவான். பிள்ளையைப் பிரியப் போகும் தருணத்தில் இந்த நினைவு சற்று ஆறுதலாக இருந்தது. இன்னும் இரண்டு நாட்களாவது தங்கிச் செல்லும்படி அண்ணன்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் எனக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. கணவரின் நினைவுகளும் கெரில்லாவின் கடினமான நிபந்தனைகளும் என்னை முகாமுக்கு இழுத்து வந்தன. மலைப்பாறைகளிடை... ஆங்காங்கே எதிர்ப்பட்ட கட்சி

www.padippakam.com



ஒற்றர்களுக்கு சங்கேதக் குறியீடுகள் தெரிவித்தபடி நடந்து... மூன்றாவது இரவில் சேர வேண்டிய இடம் அடைந்தேன்.

இது பயிற்சி முகாமல்ல... கெரில்லாகேந்திரம் எனத் தெரிந்தது. கேந்திரத்தில் சேர்ந்து மூன்று மாதங்களாகி விட்டன. மிலிட்டரி ரைஃபிள் 303ஐ எனக்குக் கொடுத் தார்கள். நானூறு கஜ ரேஞ்ச்... ஐந்து தோட்டங்கள்... இந்த ரைஃபிளால் சுடும்போது கடந்தகால உற்சாகம், துள்ளல், சுறுசுறுப்பு அத்தனையும் விரல் நுனிகளில் விரவியிருப்பது போல ஒரு உணர்வு. அடுத்தடுத்து நான்கு தாக்குதல்களில் பங்கேற்றேன். கெரில்லா யுத்தத் தந்தி ரங்கள் அணுகுமுறைகளை அணுப்பிசகாது அனுசரித்து எங்கள் படைக்கு எந்தச்சேதமும் விளையாதபடிக்கு நான்கு தாக்குதல்களையும் வெற்றிகரமாய் நடத்தி வைத்ததில் பெரும்பங்கு எனக்கும் உண்டு என்றுணர்ந்த போது பெருமிதமாக இருந்தது. என் ரைஃபிளுக்கு ஆறு நிஜாம் போலீஸ்காரர்கள் பலியாயினர். எங்கள் படையின் வீரநாயகி வெங்கடம்மா. அவள் துப்பாக்கி ஏழு போலீஸ் காரர்களையும் நான்கு ரஜாக்கர்களையும் சுட்டு வீழ்த் தியது. காம்ரேட் கரடய்யா எட்டு போலீஸையும், லச்சக்கா ஐந்து ரஜாக்கர்களையும் மண்ணில் வீழ்த்தி னார். இப்படி மடிந்தவர்கள் போக எத்தனை ராட்ச சர்கள் அங்கஹீனர்களானார்களென்று கணக்கு வைக்க வில்லை நாங்கள்.

நான்கு மைல் தொலைவிள்ள ‘நாகாய கூடம்’ பகுதியில் விவசாயிகளைப் பழி தீர்த்துக்கொள்ள வேண்டு மென்று படேலும் பட்வாரியுமாய் பத்து ரஜாக்கர் களையும் ஐந்து போலீஸ்காரர்களையும் அனுப்பிவைத் திருப்பதாகவும், வயற்காட்டு வேலைகள் முடித்துக் கொண்டு ஆண்கள் வீடு திரும்புவதற்குள் வந்தகாரியம் முடிந்து திரும்பிவிட வேண்டும் என்று மாலை நான்கு

www.padippakam.com



மணியளவில் இந்த சாலை வழியாகத்தான் அவர்கள் சென்றிருக்கிறார்கள் என்றும் எங்களுக்ுத் தகவல் கிடைத்தது. அந்தப்படுபாவிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களுக்கு புத்தி புகட்ட வேண்டும் என்று தீர்மானித்து எங்கள் தளபதி எங்கள் படையை இரு பிரிவுகளாக்கி சாலையோரமாய் பாறைகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்க வேண்டுமென்றும், வலது புறத்திலிருக்கும் குழு முதலில் தாக்கத் தொடங்கவேண்டுமென்றும் இடப்பக்கம் ஒளிந்திருக்கும் முப்பதுபேரும் அவர்களைத்தொடரவேண்டும் என்றும் உத்தரவுகள் பிறப்பித்தார்.

அந்தப் பகுதியில் இதற்குமுன் கெரில்லாதாக்குதல் நடைபெற்றதில்லை போலிருக்கிறது. துப்பாக்கி சப்தம் காதில் விழுந்ததுதான் தாமதம் பின்னங்கால் பிடரியில் பட ஓட்டம் பிடிக்கலானார்கள். அவர்கள் நீண்ட தூரம் ஓடவேண்டிய அவசியம் இல்லாது போயிற்று. ரஜாக்கர்கள் ஏழுபேரும் குண்டடிப்பட்டு இருந்த இடத்தில் சுருண்டு விழுந்தார்கள். போலீஸில் ஒருவன் மடிந்து விழ மற்ற மூன்றுபேரும் ஒருவாறு சுதாரித்துக் கொண்டு நடுங்கும் கரங்களால் பாறைகள் பக்கமாய் சுட ஆரம்பிக்க... குண்டுகள் வீணாவதுதான் மிச்சம் வந்த வழியே திரும்பி ஓட ஆரம்பித்தார்கள்.

மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு செத்து விழுந்தவர்களின் யூனிஃபார்ம், துப்பாக்கிகள், அவர்கள் ஜேபியிலிருந்த காகிதங்களை எடுத்துக்கொண்டோம். துரதிர்ஷ்டவசமாய் துப்பாக்கி பிரயோகித்துக் கொண்டிருந்த காம்ரேட் நாகன்னாவின் மார்பில் குண்டு துளைக்க துடிதுடித்து நிலத்தில் சரிந்தார். பூதம்மாவின் இடப்பக்கத் தோளில் குண்டடிபட்டது என் வலது தோளிலும் பலமாக காயங்கள். நல்லகாலம்... தோட்டா வெளியே வந்து விட்டது. ஆனால் வெள்ளமென ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. காம்ரேட்கள் பச்சிலையை

www.padippakam.com



அரைத்து காயத்தில் வைத்து கட்டுப்போட்டார்கள். ரத்தப் பெருக்கு நின்றிருப்பதுபோல் பட்டது. செத்துப் போன காம்ரேட் உடலை ஒரு காம்ரேட் எடுத்துத் தன் தோளில் போட்டுக்கொண்டார். நானும் பூதம்மாவும் வெங்கடம்மா மற்றும் பாபக்கா உதவியுடன் மெல்ல நடக்க... அனைவரும் முகாமை அடைந்தோம் கொஞ்சம் ஆசுவாசப் படுத்திக்கொண்ட பிறகு லாபநஷ்டங்களை கணக்குப் போட்டோம். லாபம் எதிரிகள் ஒன்பதுபேர் சாவு... மூன்று போலீஸ் யூனிஃபார்ம்... மூன்று 303 ரைபிள்கள்... ஏழு துப்பாக்கிகள்... நூற்றி ஐம்பது துப்பாக்கிகுண்டுகள்... மூன்று டைரிகள்... இரண்டுஆர்டர் காகிதங்கள் முதலியவை இழப்பு சக காம்ரேட் மரணம்... இரண்டு காம்ரேட்களுக்கு பலமான காயங்கள். இது இன்றைய வரவு செலவு பட்டியல். கெரில்லாக்களுக்கு சந்தோஷப்படவும் வேதனைப்படவும் நேரம் ஏது...? காம்ரேட் நாகன்னாவின் இறுதிச்சடங்குகள் நடந்தன. முகாம் டாக்டர் காம்ரேட் எங்கள் காயங்களுக்கு மருந் திட்டு பேண்டேஜ் போட்டார். முகாம் இருந்த சுவடே தெரியாமல் செய்துவிட்டு அன்றிரவே ஐந்துமைல் தொலைவிலுள்ள இன்னொரு இடம் சேர்ந்தோம்.

ஃ ஃ ஃ

''என் 303 ரைஃபிளை எனக்குக் கொடுத்துடுங்க. இதோ... சுடப்போறேன்... குறி தவறாம குண்டு எப்படி போகப்போறதுன்னு பாருங்க...''

''குறி தவறிட்டது காம்ரேட். 'ரீகாயில்'ல உங்க தோள் எப்படி நடங்குதுன்னு தெரியுதா...? இவ்வளவு எதுக்கு... உங்க முகமே சொல்லுதே... நீங்க ஒப்புக்கலன் னாலும் எவ்வளவு வலியிருக்குன்னு நல்லாத்தெரியுது...'' டாக்டர் காம்ரேட் சொல்ல...

www.padippakam.com



''வேணும்னா எனக்கு போலீஸ் பிஸ்டல் கொடுங்க. வேற என்ன செய்யச் சொன்னாலும் செய்யறேன் டாக்டர். என்னை படையிலேர்ந்து மட்டும் விலக்கிடாதிங்க...'' கைகூப்பி இரைஞ்சினேன். விடாது கெஞ்சினேன். காலில் விழாத குறையாய் மன்றாடினேன். பயனியல்லை. தோளில் பட்ட குண்டடி என் கெரில்லா வாழ்க்கைக்கு சமாதி கட்டி விட்டது.

''காம்ரேட் பார்வதி... கெரில்லா எப்போதும் கெரில்லாதான். தோளில் துப்பாக்கி சுமக்கறதோட கெரில்லாக்கள் கடமை முடிஞ்சி போயிடலே. இதைவிடப் பொறுப்பான காரியத்தை உங்களுக்குத் தரப்போறது கட்சி. கட்சி தலைமறைவாய் இருந்தாக வேண்டிய நேரத்தில் கட்சி காம்ரேட்களின் செயல்பாடுகள் கெரில்லாக்களின் செயல்பாடுகளே. கட்சி காம்ரேட்கள் அத்தனைபேரும் கெரில்லாக்கள்தான். விடியலில் புறப்படுகிறோம். தயாராக இருங்கள் காம்ரேட் பார்வதி...'' தளபதி கனிவுடன் கூறினார்.

என் வாழ்க்கைப் பயணத்தில் மற்றொரு திருப்பம்...

ஃ ஃ ஃ

''காம்ரேட்... காகிதங்கள் தீர்ந்து போச்சு, வாங்கி வரணும்...''

''ரூல் கட்டை வேற குடுங்க காம்ரேட்...''

''கட்டை பேனா முனை மழுங்கிடுச்சு, மாத்தணும்...''

இதெல்லாம் சொல்வது... கேட்டது யார்... கெரில்லா காம்ரேட் பார்வதி... நானேதான்.

''இதோ இந்த பாண்டேஜ் போதுமா பாருங்க...''

''சிரஞ்ஜ் ரெடியா இருக்கு. கொண்டு வரட்டுமா டாக்டர்?''

www.padippakam.com



''புண்லேர்ந்து நீர் வடிஞ்சிட்டிருக்கு. பெட்டால் போட்டு சுத்தம் செஞ்சி ஆயிண்ட்மெண்ட் போடட்டுமா டாக்டர்...?''

''டெம்ப்ரேச்சர் பார்த்துட்டேன். தொண்ணூத் தொம்பது இருக்கு. பார்லி தண்ணி குடிக்கச்சொன்னேன். டைபார்டின் மிக்ஸர் கொடுக்கட்டுமா?''

கெரில்லாப்படையில் இருந்தபோது முரட்டுத்தன மான செயல்பாடுகள்...வார்த்தைகள்... பழக்கவழக்கங்கள் இப்போது அதற்கு முற்றிலும் மாறாய் அன்பும் பரிவும் கருணையும் கரிசனமுமாய்... மானுடசேவையின் மற்றொரு கோணம் அறிந்து... காம்ரேட் பார்வதிக்கு இப்போது இரண்டு அவதாரங்கள். அது சாயங்கால அவதாரம். பகல்நேர வேஷம் இது.

பட்டணத்தில் ஒரு மோட்டார் ஒர்க்ஷாப்பின் பின்னால் உள்ள ஷெட்டில் கட்சியின் ரகசியமையம் அமைக்கப்பட்டது. மொத்தம் ஐந்து பேர். காம்ரேட் நாரய்யா குண்டூர் மிஷின் காலேஜில் பி. ஏ. படித்தவர். கட்சி பத்திரிகையில் கொஞ்சகாலம் பணிசெய்திருக்கிறார். நோட்டீஸ்கள்... அறிக்கைகள்... கட்சி வாக்கியங்கள எழுதுவதில் தேர்ந்தவர். அவருடைய எழுத்துக்கள் சில சிரிக்க வைக்கும்... சில சிந்திக்கச் செய்யும்... சிலிர்த்துக் கொண்டு சினந்தெழச் செய்யும் சில வரிகள். மக்களுடைய கடமைகளை எடுத்துச்சொல்லும் உபதேசங்களும் உண்டு. கட்சிப்பிரச்சாரத்திற்கு உயிர் நாடி அவர் எழுத்துக்கள் தாம். காம்ரேட் கேசவுலுக்கு ('ஸ்டென்சில்' எடுப்பது மற்றும் பிரதி எடுக்கும் வேலை. காகிதங்களை ஒழுங்காய் அடுக்குவது... டிசைன் அமைப்பது... பிரசார வாக்கியங் களை தாளில் எழுதிக்கொடுப்பது போன்ற வேலைகள் எனக்குக் கொடுக்கப்பட்டன. காம்ரேட் நரசிம்முலு என் வேலைகளில் உதவியாக இருந்தான். ஊருக்குள் இருக்கும் கட்சி அலுவலங்களுக்குச் சென்று தகவல் பரப்புவதும்

www.padippakam.com



அவர் பொறுப்பில் இருந்தது. காம்ரேட் அஞ்சய்யா ஷெட் வாசலில் கார் ரிப்பேரில் ஆழ்ந்திருப்பவன்போல் பாவனை செய்தபடி காவல் காத்துக் கொண்டிருப்பார். கட்சி காம்ரேடான ஒரு டாக்டரின் கிளினிக்கில் 'அச்சம்மா' என்ற பெயருடன் 'நர்சிங்' கற்றுக் கொள்வதில் பகல் முழுக்க அங்கேயே இருப்பேன். மாலை நான்கு மணி ஆவதுதான் தாமதம் உடைமாற்றிக்கொண்டு புழக்கடை வழியாக 'ஷெட்' அடைவேன். விளக்கு வைப்பதற்கு முன்னே என் வேலைகளை முடித்துவிட்டு ஆஸ்பத்திரி திரும்பிவிடுவேன். டாக்டர் காம்ரேட் கொடுக்கும் சம்பளத்தில் ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்து சாப்பிட்டுவிட்டு கிளினிக் ஸ்டோர் ரூமில் படுத்துக்கொள்வேன்.

...என் கணவருடன் வெண்ணிலவுப்பார்வை... குழந்தையின் பூஞ்சிரிப்பு... துப்பாக்கி சப்தம்... நோயாளிகளின் முனகல்கள்... காம்ரேட் நாரய்யாவின் விழிகளில் தெறிக்கும் மின்னலொளி... கனவும் கற்பனைகளும் நிழலும் நிஜமுமாய் நான்குமாத வாழ்க்கை நழுவிச் சென்றது. மனம் நிலைகொள்ளாது தவித்தது. அமாவாசை இரவில் முழுநிலவின் கிரணங்கள்... கருமேகங்கள் கவிந்த நள்ளிரவு இருளில் மின்னலொளிக் கதிர்கள்... எது என்னை ஈர்த்துக் கொண்டிருக்கிறதென்று புரியவில்லை. எதிர்காலம் குறித்த குழப்பம் ஒரு பக்கம்... ஏதோ இனம்புரியாத சஞ்சலம் மற்றொரு பக்கம்... என் மன உளைச்சலை யாரிடம் சொல்ல...? சொன்னால் புரிந்துகொள்ள முடியுமா? கேட்டுக்கொள்ளத்தான் யாருக்கு அக்கறை? கட்சிக்கு என் வேதனைகளை உணரும் இதயம் இருக்குமா?... சொல்லலாமா...? என் குழப்பங்களை வெளியே கொட்டலாமா...

ஒருநாள் பேச்சுவாக்கில் காம்ரேட் நாரய்யா தன்னைப் பற்றிச் சொன்னார். படிப்பு முடிந்ததும் கட்சியில்

படிப்பகம்

www.padippakam.com



சேர்ந்துவிட்டதாகவும், தன் மீது எத்தனையோ ஆசைகள் வைத்திருந்த பெற்றோர், மகன் தங்கள் மதம் விடுத்து கம்யூனிஸ்ட் மதம் சேர்ந்த கவலையில் நோய்வாய்ப் பட்டு கொஞ்ச காலத்தில் மரணமடைந்ததாகவும், கொஞ்ச காலம் நர்ரா ஆஞ்ஜனேயலு படையில் இருந்து போராட்டத்தில் பங்கேற்றதாகவும், வலது காலில் குண்டடி பட்டாலும் கட்சி தன்னை இந்த வேலையில் சேர்த்திருப்பதாகவும் சொன்னார். நானும் என் கடந்த காலம், என் கெரில்லா அனுபவங்கள் எல்லாம் விளக்கமாய்ச் சொன்னேன். அவர் நன்றாகப் படித்தவர்... பண்புள்ளவர்... மரியாதை தெரிந்தவர்... உயர்ந்த ரசிகர்... நல்ல நல்ல நூல்களை எனக்குக் கொடுத்துப் படிக்கச் செய்தார்..., வாழைப்பழத்தை தோலுரித்து கையில் வைப்பது போல் புரட்சி தத்துவங்களை சுலபமாகப் புரிந்துகொள்ளும் வகையில் போதித்தார். கலைகளுக்கும் இலக்கியத்திற்கும் இந்த சமூகத்துடன் உள்ள சம்பந்தத்தை அழகாய் எடுத்துச் சொன்னார்.

ஒரு வருடம் வேகமாய்ச் சென்றுவிட்டது. பாதி ரகசிய வாழ்க்கை. 'ஸ்லெக்லோஸ்டெயில்' எடுப்பது... புரட்சி தத்துவங்கள் புரிந்து கொள்வது... மற்ற கட்சிப் பணி கட்டளையாய் ஏற்று நடந்து கொள்ள என ஒரு பகுதியும், நர்சிங் வேலை கற்றுக் கொளவது... என இன்னொரு பகுதி வாழ்க்கை. இரண்டிற்குமிடையே காம்ரேட் நாரய்யாவுடனான சிநேகம் வலுப்பட்டுக் கொண்டு வந்தது. என்னுள் எப்படி இந்த மாற்றம் விளைநதது...? நினைக்க நினைக்க வியப்பாகவும் திகைப்பாகவும் வேதனையாகவும் கூட இருந்தது. என் கணவரை கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து கொண்டிருக்கிறேனா? குழநதையை சுவீகாரம் கொடுத்துவிட்ட பிறகு கல்லாக்கிக் கொண்ட மனதில் மறுபடியும் அன்பெனும் ஈரம் கசிந்ததெப்படி? பட்ட மரத்தில் துளிர்கள் எட்டிப் பார்க்கின்றதே! என் கணவருக்கு துரோகம் செய்கிறேனா?

www.padippakam.com



திரும்பத் திரும்ப இதே யோசனை... இதே குழப்பம் என்னை ஆட்கொண்டது. அலைகடலாய் ஆர்ப்பரித்தது நெஞ்சம்.

இவ்வளவு போராட்டத்திற்கிடையேயும் எங்களிடையில் முகிழ்த்த சிநேக மொட்டு மலராய் விகசித்து மணம் பரப்பி மகரந்தம் இறைக்க... அந்த லாகிரியில் என் குழப்பங்கள் இருந்த இடம் தெரியாமல் மனதின் அடித்தளத்தில் புதைந்து விட்டது. அவர் விரல்கள் என்னைத் தீண்டியபோது என் உடலெங்கும் தேளும் பூரானும் ஊர்வது போலிருந்தது என்று சொன்னால் அது அப்பட்டமான பொய் உடல் சிலிர்த்துப் போனது என்றால் அது ஆத்ம வஞ்சனை போன்றது. நரம்புகளில் மின்சாரம் பாய்ந்தது போலிருந்ததென்பதும் சரியல்ல. இதயமெங்கும் ஆனந்தம் பொங்கிப் பிரவாகித்தது. இந்த உணர்வு ஒன்றுதான் உண்மையான வெளிப்பாடாய்த் தோன்றுகிறது தாம்பத்திய சுகம் எனக்குப் புதிதல்லதான். ஆயினும் காம்ரேட் நாரய்யாவிடம் எனக்கு ஈர்ப்பு ஏற்பட்ட விஷயத்தை, மனவிழைவை ஒப்புக்கொள்வதில் எனக்கு எவ்விதத் தயக்கமுமில்லை. அதற்காக வெட்கப்படவுமில்லை. என் கணவர் என்னைப் பூவில் வைத்துப் பார்த்துக்கொண்டார் நானும் அவரை என் இதய தெய்வமென ஆராதித்தேன். ஆனால் எத்தனை காலம் நிழலைப் பார்த்துக் கொண்டு வாழ முடியும்?... அவர் தன் இறுதி ஆசையை வெளியிட்டது கட்சியின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான். இப்போது கட்சிக்கு எந்த விதத்தில் துரோகமிழைத்தவளாவேன்...? இப்போது மட்டுமல்ல... எப்போதும் துரோகம் செய்யமாட்டேன். கட்சி கௌரவத்திற்குப் பங்கம் வரும் விதமாய் என்றென்றும் நடந்துகொள்ள மாட்டேன்.

கட்சி மேலிடத்தைச் சேர்ந்தவர்கள் ஓரிரு முறை வந்தபோது எங்கள் நேசத்தை அவர்கள் புரிந்து கொள்வது

www.padippakam.com



அப்படியொன்றும் சிரமமான காரியமாய் இருக்கவில்லை. அதற்கு தடையேதும் தெரிவிக்காததோடு ஆதரவு தருவது போலவும் தோன்றியது. ஒருநாள் கட்சியின் இரகசிய ஆலோசனைக் கூட்டத்தில் எங்கள் விஷயம் குறித்த விவாதம் எழுந்தது. கட்சி மேலிடம் எங்கள் கருத்தைக் கேட்டது. கட்சி அனுமதித்தால் நாங்கள் திருமணம் செய்து கொள்ளுகிறோம் என்று சொன்னோம். கட்சி முன்னிலையில் எங்கள் திருமணம் நடைபெற வேண்டும் என்ற விருப்பத்தையும் வெளியிட்டோம். மறுநாள் கட்சி கூட்டத்தில் நாங்களிருவரும் கரங்கள் பிணைத்து ஒருவருக்கொருவர் துணையாய் ஆதரவாய் வாழ்வோம் என்றும் கட்சியின்பால் அக்கறையும் ஈடுபாடும் மதிப்பும் கொண்டு அதனடிப்படையில் எங்கள் இல்லறம் நடக்கும் என்றும் உறுதிமொழி கொடுத்தோம். கணவன்-மனைவி ஆனோம்.

ஃ ஃ ஃ

என் வாழ்க்கையில் இன்னொரு திருப்புமுனை... தேச சரித்திரத்திலும் ஒரு பெரிய மாற்றம்...; நேரு அரசாங்கத்தின் 'போலீஸ் கெடுபிடி'க்கு தாக்குப் பிடிக்க முடியாது போய் சரணடைந்துவிட்டார்கள் நிஜாமும், படைகளும். 'போலிஸ் அடக்குமுறை' மிலிட்டரி அடக்குமுறையாய் உருவெடுத்தது. அரசாங்கம் மிலிட்டரியை நிலச்சுவான் தார்கள், ஜாகிர்தார்கள், ரஜாக்கர்கள் மீது பிரயோகிக்காமல் விவசாயிகள்... கட்சி அங்கத்தினர்கள் மீது தன் கைவரிசையைக் காட்டிற்று. அங்கே டில்லியில் நேரு, படேல், இங்கு ஜெனரல் சௌத்ரி, ஐ. சி. எஸ். வெல்லோடி, டி. எஸ். பி. நஞ்சப்பா... என எல்லோருமாய் கட்சியை உருத் தெரியாமல் குலைப்பதாகச் சபதம் செய்தார்கள். மிலிட்டரியின் அட்டூழியம் கட்டுக்கடங்காது போயிற்று கொள்ளை, மானபங்கம், தீ வைப்பது என எதையும் விட்டு வைக்கவில்லை. தெலுங்கானா

www.padippakam.com



முழுக்க சின்னாபின்னமாய்ச் சிதைக்கப்பட்டது. மிரட்சியடைந்த மக்கள் செய்வதறியாது நிலைகுலைந்து போனார்கள். விவசாயிகள், ஆயுதங்கள் பிரயோகித்து ரத்தம் சிந்திப் போராடிப் பெற்று மூன்றாண்டுகளாய் விவசாயம் செய்து விளைச்சல் கண்ட நிலங்களை மீண்டும் ரத்தம் சிந்தி போராட்டம் நடத்தி காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை உருவாயிற்று. தெலுங்கானா ஏழை விவசாயக் கூலிகளால் நேரு சேனைகள் முன் தாக்குப் பிடிக்க முடியவில்லை. மிலிட்டரியின் அட்டூழியங்களைக் கண்டு விவசாயிகளின் தைரியமும் நம்பிக்கையும் நாளுக்கு நாள் குலைந்து போய்க்கொண்டிருந்தது.

''நீங்க ரெண்டு பேரும் கம்மம் ஜில்லாவில் இருக்கும் 'சித்தபல்லி' கிராமத்துக்குப் போய் அங்க பாலகுரு மல்லிகாம்பா வீட்டில் தங்கி பிரசார வேலை கவனிச்சுக்கங்க. நீங்க அங்க இருக்கறது யாருக்கும் தெரியக்கூடாது. தெரியுமில்ல?'' கட்சி மேலிடம் எங்களை எச்சரித்து அனுப்பிவைத்தது.

பிரசாரம் அவ்வளவாய் பலனளிக்காது போனாலும் கட்சி உத்தரவை மீறாது கடமை செய்துவந்தோம். ஜனவரி 1951...; விவசாயப் போராட்டம் ஜீவமரணப் பிரச்னையை எதிர்கொண்டது. என் வயிற்றில் புதுக் கரு... போராட்டத்தின் உக்கிரத்தில் உடம்பின் வலு நசிந்து கொண்டுவர... பாரத மிலிட்டரிக்கெதிராய் கெரில்லாப் படையில் ஏராளமான இழப்பு. இருந்தவர்கள் ஒவ்வொருவராய் நிலம் சரிய... புதிதாய்ச் சேர யாரும் முன்வரவில்லை. இருந்தவர்களில் கூட சிலர் படையை விட்டு விலகிக் கொண்டார்கள். போராட்டத்தை நிறுத்தி விட்டால் அது தெலுங்கானா விவசாயத்திற்கு செய்யும் பெரிய துரோகமாகும். விவசாயக் கிளர்ச்சியை முதுகில்

தெ—18

www.padippakam.com



குத்தினாற் போன்றாகும். எங்கள் இருவருடைய கருத்தும் இதுதான். தலைமறைவாய் நடத்தப்பட்டுவந்த கட்சி அமைப்புகள் மூடப்பட்டு அத்தனை அங்கத்தினரையும் கெரில்லாப்படையில் சேர்ந்து காடுகளுக்கு அனுப்பி வைத்து மிலிட்டரிக் கெதிராய் போராட்டத்தைத் தொடருவது என்ற கடூரமான தீர்மானத்திற்கு வந்தது கட்சி மேலிடம்.

கட்சியின் தலைமைக் கமிட்டி காரியதாரிசி காம்ரேட் சிவராமய்யா எங்கள் கேந்திரத்திற்கு வந்து கட்சி நிர்ணயத்தை எங்களுக்குத் தெரிவித்து, காம்ரேட் நாரய்யா 'பின்டி போலு' மலைகளுக்குப் போக வேண்டும் என்றார்கள்.

''நானும் கெரில்லாவாக இருந்தவள்தான். போராட்டத்தில் பங்கேற்க எனக்கும் அனுமதி கொடுங்க...'' காம்ரேட் சிவராமய்யாவிடம் விண்ணப்பித்துக் கொண்டேன்.

''காம்ரேட் பார்வதி... உங்களை எப்படியும் அனுப்ப முடியாதில்லையா? அதனால்தான் காம்ரேட் நாரய்யாவையும் அனுப்பப்போறதில்ல!'' சிரித்தபடி சொன்னார் காம்ரேட் சிவராமய்யா.

''ஏன் அப்படி?'' சற்றுக் கோபத்துடனே கேட்டேன்.

''நீங்க நிறைமாசமா இருக்கிங்க இப்பவோ அப்பவோங்கற நிலைமை. நீங்க இப்படி இருக்கறப்ப காம்ரேட் நாரய்யாவை காட்டுக்குள்ள எப்படி அனுப்பறது?''

''அதெல்லாம் முடியாது. அவரையாவது அனுப்பிதான் தீரணும்...''

''சரி...அனுப்பிதான் தீரணும்னு நீங்க பிடிவாதம் செஞ்சா சில கட்சி நிபந்தனைகளுக்கு நீங்க கட்டுப்படணும்...''

www.padippakam.com



''அப்படியே...'' வாக்கு கொடுக்கும் விதமாய் சொன்னேன்.

''கட்சித்தலைமை உங்க அண்ணனுடன் பேசியதில் இந்த நிலைமையில் உங்களை உங்க வீட்ல வச்சுக்க தயங்கறாப்பல தெரிஞ்சுது. நீங்க பெஜவாடா போய் மிஷின் ஆஸ்பத்திரியில் இருந்து பிரசவம் ஆனப்புறம் குழந்தையை யாருக்காவது ஸ்வீகாரம் குடுத்துடுங்க. குழந்தை இல்லாம உங்களைமட்டும் ஏத்துக்கறதா உங்க அண்ணன்க ரெண்டுபேரும் வாக்கு கொடுத்திருக்காங்க. நல்ல இடத்தில் குழந்தையை ஒப்படைத்த பிறகு நீங்க ஏலூர் சென்று உங்க அண்ணன் வீட்ல தங்கிக்கலாம். இதுக்கெல்லாம் நீங்க சம்மதிச்சாதான் காம்ரேட் நாரய்யாவை 'பிண்டிபோலு' காட்டுக்கு அனுப்புவோம். அவருக்கும் உங்களைப் பத்தி கவலையில்லாம இருக்கும். கட்சிக்கும் கடமையை செஞ்ச திருப்தி இருக்கும்...'' பொறுமையாய் விஷயங்களை விவரித்தார் காம்ரேட் சிவராமய்யா. அவர் சொற்கள் அவருக்கே கசந்ததோ என்னவோ என் பக்கம் பாராது முகம் திருப்பிக் கொண்டார்.

உலகம் சூன்யமாகிவிட்டது போல் ஓர் உணர்வு. காலம்கூட நின்றுவிட்டதா? சூறாவளியாய்ப் பொங்கி நெஞ்சச் சுவர்களை மோதிய ஆயிரக்கணக்கான நினைவலைகள். உள்ளம் சோர்ந்து போக உடல் தெப்பமாய் நனைந்துவிட்டது. கண்களைக் கவ்வியிருந்த இருளை விலக்கியபடி இமைகள் திறந்தேன். கவலைப்படர்ந்த முகத்துடன் எல்லோரும் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். காம்ரேட் நாரய்யாவின் தீனமான பார்வை என்னை வலையாய்ச் சுற்றிக்கொள்ள... சுற்றி எத்தனையோ பேர் இருப்பதையும் பொருட்படுத்தாது அவர் தோள் மீது சரிந்தேன்.

ஃ ஃ ஃ

www.padippakam.com



வாழ்க்கையில் இத்தனை திருப்பங்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என அறியாச் சிறுமியாக இருந்தபோது நினைத்துக் கூடப் பார்த்தவளல்ல. அன்று பெண்பார்க்கும் நிகழ்ச்சியின் போது துடுக்காய் கேள்விகள் கேட்க திட்டம் போட்டிருந்தேன். விடை தெரியாத கேள்விகளின் முன் இப்படிப் பதில் சொல்லாது நிற்க நேரிடும் என்று எதிர்பார்க்கவில்லை. கட்டியவரை இழந்தேன்... பிள்ளையை மூன்றாம் மனிதர்களிடம் தாரைவார்த்தேன்... இன்று இந்த புருஷனை யுத்தகளத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்தக் குழந்தையையும் முகம் அறியாத, ஊர் பேர் தெரியாதவர்களிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு விட்டேன். கடைசியில் எனக்கு மிஞ்சியதெல்லாம் என் உயிர், என் கட்சி...

ஏலூர் சென்று அண்ணன் வீட்டில் கால்வைத்த கணமே புரிந்துவிட்டது என்பால் அவர்களுக்கிருந்த கருத்துக்களும், கணிப்புகளும். கீழ்சாதிக்கார கிறிஸ்து வரை மணந்து கொண்டேன் என்று... கம்யூனிஸ்ட் கெரில்லா நான் என்று... அரசாங்கத்திற்கு, மேட்டுக்குடி மக்களுக்கு துரோகம் செய்துவிட்டேன் என்று... கையில் காலணா இல்லாத தரித்திரம் என்று... எந்த நிமிடமும் வந்து ஒரு கம்யூனிஸ்டை வீட்டில் வைத்துக்கொண்டிருப்பதற்காக அவர்களை அரெஸ்ட் செய்யலாம் என்று... இதுபோல் பல காரணங்களால் என்னை இழிவாகப் பார்த்ததுடன் உதாசீனமாய் நடந்து கொண்டார்கள். வீட்டு வாசற்படி தாண்ட விடவில்லை என்னை. நொந்து போய் ஏதாவது பேசினால் என் நிர்க்கதியைச் சுட்டிக்காட்டி எச்சரித்தார்கள் நான் ஒரு புரட்சிக்காரி என்றும் நெற்றியில் பொட்டு, கையில் வளையல் கழுத்தில் குறைந்தபட்சம் மஞ்சள் கோத்த தாலிச்சரடு கூட அணியாத துணிச்சல்காரி என வார்த்தைக்கு வார்த்தை குத்திக் காட்டினார்கள். அண்ணிகள் மட்டும் முன்பிருந்த கரிசனத்துடன் வாஞ்சையுடன் பார்த்துக்கொண்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



கனியக் கனிய பேசி அன்புடன் நடந்துகொண்டார்கள். மாற்றுக்குறையாத அந்தப் பாசம்தான் நடைபிணமாய் இருந்த எனக்கு ஓரளவுக்கு தெம்பூட்டியது.

பத்திரிகைச் செய்திகள் அதிர்ச்சிதரும் விதத்தில் இருந்தன. காம்ரேட் நர்ரா ஆஞ்சனேயலு வீரமரணமடைந்தார். காம்ரேட் சிந்தம்தாசுவையும், காம்ரேட் அனந்துவையும் போலீஸ் ஈவிரக்கமின்றி சுட்டு வீழ்த்தியது. காம்ரேட் கந்திகட்ல நாகபூஷணம் கடைசி மூச்சுள்ளவரை போராடி உயிர் நீத்தார். காம்ரேட் ராம்பாயம்மா லத்திசார்ஜில் மரணமடைந்தார். காம்ரேட் வெங்கம்மாவை மிலிட்டரிக்காரர்கள் மானபங்கம் செய்ய அவமானம் தாங்காது தற்கொலை செய்துகொண்டார். பத்திரிகைகளைக் கையில் எடுக்கும் போதெல்லாம் எங்கே காம்ரேட் நாரய்யா பெயரைக் காணவேண்டி வருமோ என்ற திகில் நெஞ்சை அடைக்கும். 'பார்வதி... தைரியமா இருக்கணும் நீ...'— அவர் குரல் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

மூன்று மாதங்கள் முடிவதற்குள் தெலுங்கானா விவசாயப் போராட்டம் முடிவுற்றது. ஒரு மாதம் சென்றிருக்கும்... அண்ணிகள் எனக்கு எண்ணெய்க்குளியல் செய்வித்து புதுப்புடவை கட்டி நெற்றியில் குங்கும் இட்டு கட்சி அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றார்கள். புதுவேஷ்டி வெற்றிலை பாக்குடன் என்னை காம்ரேட் நாரய்யாவிடம் ஒப்படைத்தார்கள். அண்ணன்கள் வரவில்லை. கட்சி அலுவலகம் இருக்கும் திசைப்பக்கமாய் தலைவைத்துப்படுப்பதுகூடப் பாவம் என்றார்கள்.

அண்ணன்கள் குடும்பத்துடன் தெலுங்கானா சென்றுவிட்டார்கள். நேரு அரசு உதவியுடன் விவசாயக் கூலிகளிடமிருந்து தங்கள் நிலங்களைப் பிடுங்கிக்கொண்டு நிஜாம் ஆட்சி காலம் போன்றே அராஜகம், அட்டூழியம்

www.padippakam.com



என விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்தார்கள். கணவன் செயல்பாடுகளுக்கு எதிர்குரல் எழுப்புவது அதர்மமாகும் என்ற மனப்பான்மையுடன் அத்தனை அக்கிரமங்களையும் சகித்துக் கொண்டு காலம் தள்ளினார்கள் அண்ணிகள்.

பத்து வருடங்களாய் நாங்கள் வரங்கலில் இருக்கிறோம். காமரேட் நாரய்யா பீடி தொழிற்சாலை யூனியன் காரியதரிசியாய் பணிசெய்கிறார். ஒரு பிரைவேட் ஆஸ்பத்திரியில் நர்சாக இருக்கிறேன் நான். அமைதியாய்ச் சென்று கொண்டிருக்கிறது வாழ்க்கை. மறுபடி என் வயிறு திறக்கவில்லை அது ஒன்றுதான் குறை. என் பிள்ளைகள் அடிக்கடி கனவில் வருவார்கள். பெரியவன் இருக்குமிடம் எனக்குத் தெரியும். என்ன பயன்...? அவர்கள் அனுப்பமாட்டார்களே! அவர்கள் பார்வையில் நான் தேசத்துரோகி. சமூகத்தின் விஷக்கிருமி நடத்தை கெட்டவள் குலம் தவறியவள். இப்படியிருக்க என் நிழலேனும் அவர்கள் மீது படவிடுவார்களா? சின்னவனை எங்கென்று தேடுவது? குழந்தையுடன் எந்தப் பெண்ணைப்பார்த்தாலும் அவள் வைத்திருப்பது என் பிள்ளைதானோ என்ற பிரமை. ஆஸ்பத்திரியில் சின்னக் குழந்தைகளைக் கையில் எடுக்கும் போதெல்லாம் என் குழந்தையை எடுப்பது போன்ற மயக்கம். அவன் இப்போது இருபத்திரண்டு வயது வாலிபன் என்ற விஷயமே மறந்து போகும் மயக்கம்.

அவன் இப்போது நக்ஸலைட் ஆகி எந்தக் காட்டில் திரிந்து கொண்டிருக்கிறானோ? எங்கு தலைமறைவாய் வாழ்கிறானோ... பாகிஸ்தான் யுத்தத்தில் மடிந்திருப்பானா?... இல்லை, ராஞ்சியிலோ பிலாயிலோ இஞ்சினியராக இருக்கிறானா? எதிரிலிருக்கும் ரிஜிஸ்டர் ஆபிசில் வேலை செய்கிறானா? எங்கிருக்கிறான் அவன்?

ரைஃபிள் குண்டுகளின் துவர்ப்பு வாசனை நினைவுக்கு வரும்போது விழிகளில் நீர் படர்கிறது.

www.padippakam.com



துப்பாக்கிச் சத்தம் ஞாபகம் வரும்போதெல்லாம் இதயத் துடிப்பு லயம் தவறுகிறது. அந்த வாழ்க்கை... அதன் நினைவுகள்...

கெரில்லா வாழ்க்கை இன்னும் எத்தனை திருப்பங்களை எதிர்கொள்ள வேண்டுமோ?...

'பார்வதி... நீ தைரியமா இருப்பதுடன் கட்சி கௌரவத்தைக் கட்டிக் காக்கணும். உன் வாழ்க்கையின் குறிக்கோளே அதுதான்னு நினைக்கணும். என்ன...?'

(தெலுங்கானாப் போராட்டத்தில் பெண்களின் வீரதீரப் பங்கேற்புக்கு சமர்ப்பணம்)

(23-5-75 'ஆந்திர ஜோதி' வார இதழிலிருந்து)

[போராட்ட நிறுத்தத்திற்குப் பிறகு இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து லட்சுமணராவ் எழுதிய கதை இது. புச்சலபல்லி சுந்தரய்யா எழுதிய 'வீரத்தெலுங்கானாவின் புரட்சிப் போராட்டங்களும் விளைவுகளும்' என்ற நூலில் வரும் ஒரு பெண்ணின் தியாகமயமான வாழ்க்கையைக் குறித்துப் படித்தபின் லட்சுமணராவ் இக்கதையை எழுதினார். அந்த நூலின் சாராம்சம்...

வீர மரணமடைந்த கெரில்லாவின் மனைவி அவள். இப்போது அவள் காம்ரேட் பத்மா. தன் குழந்தையுடன் எங்களுடன் தங்கிக்கொண்டு கட்சி வேலைகளில் ஆர்வமுடன் பங்கேற்றிருக்கிறாள். எங்கள் ரகசிய மையத்தில் உள்ள ஒரு அங்கத்தினரிடம் அவளுக்கு காதல் கனிய... நாங்கள் மனப்பூர்வமாய் அங்கீகரித்து திருமணம் நடத்தி வைத்தோம். சில மாதங்களில் எதிரிகளின் தாக்குதல் தீவிரமடைய...நகர்ப்புறங்களின் ரகசிய மையங்களில்பணி செய்யும் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரைக் காட்டுப் புறங்களுக்கு அனுப்பவேண்டி வந்தது. பத்மா நிறைமாத கர்ப்பிணி. அவளைத் தம்முடன் வைத்துக்

www.padippakam.com



கொண்டு பிரசவம் பார்ப்பது, பிறக்கும் குழந்தையை ஏற்றுக்கொள்வது எல்லாம் தம் கௌரவத்திற்கு இழுக்கான விஷயம் என்று மறுத்துவிட்டார்கள் அவள் அண்ணன்மார்கள். தன் புருசன் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்த அவளுக்கு நானொரு ஆலோசனை தெரிவித்தேன். அது எவ்வளவு வேதனைக்குரிய விஷயம் என்பதை உணர்ந்தும் வேறு வழி தெரியவில்லை.

...'உன் கணவரை காட்டுக்குள் அனுப்ப வேண்டுமென்றால் நீ ஆஸ்பத்திரியில் குழந்தை பெற்று புத்திர பாக்கியம் இல்லாத யாருக்கேனும் பிறந்தவுடனே குழந்தையைக் கொடுத்துவிட்டு உன் அண்ணன் வீட்டுக்குப் போய்விட வேண்டும். இதனால் உன் கணவருக்கும் ஆறுதலாய் இருக்கும். எங்களுக்கும் பாரம் தீர்ந்தாற் போலிருக்கும்...' ...

இந்த விஷப் பரிட்சைக்கு மனப்பூர்வமாய் உடன்பட்டாள். கணவன் போராட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றான். அவள் ஆஸ்பத்திரியில் குழந்தை பெற்று மகப்பேரற்ற யாருக்கோ தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு வீடு சென்றாள்.

இதை ஆதாரமாகக் கொண்டே ஆசிரியர் இக்கதை எழுதியிருக்கிறார் என்பதை வாசகர்கள் எளிதாய் புரிந்துகொள்ள முடியும்.] □

படிப்பகம்

www.padippakam.com

# தெலுங்கானா மக்களின் வாழ்க்கை மற்றும் போராட்டங்களைச் சித்தரிக்கும் கதைகள்

ஆழ்வார்சாமி பட்டி கோட்ட — 'இளமையிலேயே' (மீஜான்—18, பிப்ரவரி 1945)

ஆழ்வார்சாமி பட்டி கோட்ட — 'ரெவின்யூ இன்ஸ்பெக்டர் (ஸவந்தி —மார்ச் 1956)

ஆஞ்ஜனேயலு வேனபள்ளி — 'அவன் பசு' (மீஜான்-2 ஜூன் 1946)

குடும்பராவ் கொடிவடி கண்டி — 'கும்பிடறேன் அடிமை' (அப்யூதயா — மே 1948)

கோதண் ராம சாஸ்திரி ப்ரயாக — 'விழிப்பு' (அப்யூதயா — மே 1948)

கிரண் — 'யல்லமந்தா பைத்தியம்' (அப்யூதயா — மே 1948)

கேஜ் — 'பஸ்மாசுரக்கரம் (விசாலாந்திரா—) ஆகஸ்ட் 1984

கிருஷ்ணாராவ் சி.வி. — 'நோட்டீஸ்' (விசாலாந்திரா — ஜூன் 1948)

www.padippakam.com



கிருஷ்ணாராவ் பாஸ்கரபட்ல — 'மானம் மரியாதை' (மீஜான் — 4, ஜூன் 1944)

தாசரதி — 'ரக்தாஞ்சலி' (அப்யூதயா — ஆகஸ்ட் 1948)

தர்மராஜு — 'ஆட்சேபணை இல்லை' (அப்யூதயா— ஜூலை 1948)

துர்கா பிரசாத்ராவ் பர்சா — 'அசைந்த அஸ்திவாரம்' (அப்யூதயா — ஜூலை 1948)

நவகுமார் — 'உழுபவனுக்கே நிலம்' (அப்யூதயா — ஆகஸ்ட் 1948)

நரசிம்மம் கே. எல். — 'அமர வீரன்' (விசாலாந்திரா— ஆகஸ்ட் 1948)

பிச்சய்யா ஆவுல — 'ஈச்சங்காய் கொடுத்து பனங்காய் பிடுங்கிய ஜமீந்தார்' (மீஜான்—19 மே 1946)

பிச்சய்யா ஆவுல — 'ஊர்வலங்கள்' (மீஜான்—11 ஆகஸ்ட் 1946)

பிச்சய்யா ஆவுல —'தோரணை' (மீஜான்—20 அக்டோபர் 1946)

பிச்சேஸ்வரராவ் அட்லூரி — 'விமுக்தி' (அப்யூதயா — மே 1948)

படிப்பகம்

www.padippakam.com



| | |
|---|---|
| மான்ஸ¨ | — 'பிறப்புரிமை' (அப்பூதயா—மார்ச்-1948) |
| மான்ஸ¨ | — 'கிராமத்து இதயம்' (அப்பூதா — நவம்பர் 1948) |
| மாணிக்யராவ் வெல்தூர்தி | — 'ஏர் மெயில்' (கோல்கொண்டா நவம்பர் 1948) |
| ராம்ஷா | — 'மத்தனய்யா மரணம்' (அப்பூதயா— ஜூலை 1948) |
| ராஜா ரெட்டி | — 'பொன்னான பயிர்' (விசாலாந்திரா—13 ஜூலை 1952) |
| ராமாராவ் கே.வி. | — 'குட்டு வெளிப்பட்டது' (விசாலாந்திரா—13 ஜூலை 1952) |
| ரெட்டி பி.என் | — 'ஜீவாதாரம்' (பிரஜா சக்தி — 15 அக்டோர் 1972) |
| லட்சுமணராவ் உப்பல | — 'கெரில்லா' (ஆந்திரஜ்யோதி — 23 மே 1975) |
| லட்சுமிகாந்த மோகன் | — 'நாம் தெலுங்கர்கள்' (பிரஜாசக்தி—29 டிசம்பர் 1946) |
| லட்சுமிகாந்த மோகன் | — 'மகாசக்தி' (விசாலாந்திரா —நவம்பர் 1948) |

படிப்பகம்

www.padippakam.com



லிங்கமூர்த்தி சிங்கராஜு — 'வெற்றி நமதே' (மீஜான்—13 அக்டோபர் 1946)

லிங்கமூர்த்தி நிடதவோலு — 'நள்ளிரவில் நிஜாம் பற்றி' நவோதயா —15 ஏப்ரல் 1948)

வெங்கடேஸ்வர ராவ் பி — 'சங்கச்சீட்டு' (மீஜான்—12, மே 1946)

வெங்கடேஸ்வர ராவ் பி — ராவூஜி ஜிந்தாபாத்' மீஜான்—19, மே 1946)

வெங்கடேஸ்வர ராவ் பி — 'ரஹிம் பாய்' (மீஜான்—26, மே 1946)

வெங்கடேஸ்வர ராவ் பி — 'துரையின் புண்ணியத்தில் (மீஜான்—9, ஜூன் 1946)

வெங்கடேஸ்வர ராவ் பி — 'அது விளைச்சல் இல்லையா?'' (மீஜான்—9 ஜூலை 1946)

வெங்கடேஸ்வர ராவ் பி — 'திருடர்கள்...திருடர்கள்' (மீஜான்—28, ஜூலை 1946)

வெங்கட்ராமய்யா தும்மல — 'நீங்க ஜெயிப்பீங்க' (அப்பூதயா—ஜனவரி 1948)

வெங்கட்ராமய்யா தும்மல — 'கல்யாணம் செய்தாங்க' (அப்பூதயா—ஏப்ரல் 1948)

வெங்கட்ராவ் எம் — 'ஜீவகாருண்யம்' (விசாலாந்திரா டிசம்பர் 1948)

படிப்பகம்

www.padippakam.com



வெங்கடேஸ்வர்லு என் — 'பூதங்கள்' (விசாலாந்திரா 1 அக்டோபர் 1949)

விஸ்வநாதம் டி.கே. — 'மூன்று துப்பாக்கிகள்' (விசாலாந்திரா—1 அக்டோபர் 1949)

சாரதா — 'புதியசெய்தி' (அப்யூதயா— ஜுலை 1948)

சாரதா — 'கெரில்லா கோவிந்து' (விசாலாந்திரா ஆகஸ்ட் 1948)

சிவசங்கர சாஸ்திரி — 'ஹைதராபாத்' (அப்யூதயா—ஆகஸ்ட் 1948)

சேஷய்யா கொசராஜு — 'எல்லை' (அப்யூதயா —ஆகஸ்ட் 1948)

சேஷய்யா கொசராஜு — 'போலீஸ் ஆட்சி' (பிரஜாசக்தி—ஜுன் 1952)

ஸ்ரீ விபஞ்சி — 'சலோ ஹைதராபாத்' (அப்யூதயா—ஜுலை 1948)

சத்யநாராயணா கொல்லி — 'உழுபவனுக்கே' (விசாலாந்திரா — ஆகஸ்ட் 1948)

சூரி தென்னேடி — 'தொடர்பு இல்லை' (அப்யூதயா—ஏப்ரல் 1948)

சூரி தென்னேடி — 'நிஜாம் ராஜ உறவு' (அப்யூதயா— ஏப்ரல் 1948)

படிப்பகம்

www.padippakam.com



சூர்யம் கிடுதூர் —'பழிக்குப்பழி' (மீஜான்-22 செப்டம்பர் 1946)

ஹனுமந்தராவ் குண்டவரபு — 'என்ன எழுதுவது?' (பிரஜாசக்தி—8 டிசம்பர்...')

ஹனுமந்த ராவ் குண்டவரவு — 'பழி தீர்க்காமல் விடமாட்டார்கள்' (பிரஜாசக்தி—8 டிசம்பர்)

## சிறுகதைத் தொகுப்புகள் :

அயோத்யராம கவி அட்லூரி — தெலுங்கானா தீயில்—காங்கிரஸ் சமிதி 1948

சின வெங்கடராமாராவ், காஞ்சனபள்ளி — நம்மூரில் கூடவா நல்கொண்டா-அரசம் 1948

துர்கா பிரசாத்ராவ் பர்சா — வெற்றி உங்களுடையதே (தெலுகுதோட கிரந்த மண்டலி பெஜவாடா 1946)

வெங்கடேஸ்வரராவ் கங்கினேரி — சிகப்புக்கொடிகள் (3 பாகங்கள்) (வீரமரணம் அடைந்தவர்களின் உண்மைக் கதைகள்)

பல்வேறு படைப்பாளர்களின் சிறுகதைத் தொகுப்பு — அப்யூதயா கதைகள்—பெஜவாடா—?

ராமாராவ் பொட்டலபள்ளி — சிறை— ஹைதராபாத்—1946

□□

படிப்பகம்

www.padippakam.com

# தாமரைச்செல்வி பதிப்பகத்தின் வெளியீடுகள்

1. காடன் மலை — மா. அரங்கநாதன் ரூ. 20-00
2. சாதி பாத்தியம் — கா. ப. அருகன் ரூ. 20-00
3. நோக்காடு —அபிமானி ரூ. 14-00
4. வதைபடும் வாழ்வு
   — விழி. பா. இதயவேந்தன் ரூ. 18-00
5. தலித் இலக்கியத்தின் போக்கும் வரலாறும்
   — அர்ஜுன் டாங்ளே
   — தமிழில் தி. சு. சதாசிவன் ரூ. 12-00
6. சம்புக வம்சம்— நீலமணி கவிதைகள் ரூ. 5-00
7. இன்னொரு சுவடு— நாசர் ,, ரூ. 24-00
8. எரிந்துகொண்டிருக்கும் நேரம்
   — சேரன் ,, ரூ. 10-00
9. தலைமுறைக் கோபம்
   — கண்மணி குணசேகரன் ,, ரூ. 10-00
10. இவர்கள் வாழ்ந்தது — பழமலய் ,, ரூ. 25-00
11. தமிழ் அழகியல் — இந்திரன்
   (கலை பற்றிய கட்டுரைகள்) ரூ. 35-00
12. எரியும் வண்ணங்கள்
   — புகழேந்தியின் ஓவியங்கள் ரூ. 75-00
13. மக்களுக்கான சினிமா — தொகுப்பு ரூ. 50-00
   (பெர்டிணன்ட் சோலானஸ்— கெட்டினோ; கிளாபர் ரோச்சா; ஜுலியோ கார்சியா எஸ்பினோசா; மிகையில் லிட்டின்; இல்மஸ் குனே; ஹெய்லி கரிமா; ஆனந்த பட்டவர்த்தன்)

படிப்பகம்

www.padippakam.com



## குறிப்புகளுக்காக

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

□□

நெஞ்செரிக்கும் இந்தத் துயரக் கதைகளை நீங்கள்
கேட்க வேண்டும்.
அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்ட
சோகத்தை நீங்கள் அறிய வேண்டும்.
தெலுங்கானா......
நீங்கள் கேட்டதுண்டா ?
உலகம் கேட்டது; வியந்தது.
அது —
வரலாற்றின் மறுபெயர் !
வருங்காலத்தின் இருண்ட தாழ்வாரங்களில்
அது எதிரொலிக்கும்; திரும்பத் திரும்ப எதிரொலிக்கும்.
அச்சம்பேட் கிராமத்தை நீங்கள் அறிவீர்களா ?
அந்த தேஷ்முக்குகளும் அவர்களது அடியாட்களும்
என்னென்ன கொடுமைகளைச் செய்தார்கள் !
அவர்களின் ஆதிக்க நுகத்தடிகளும்,
அக்கிரமச் சாட்டைகளும் இந்த ஏழை விவசாயிகளை
எப்படியெல்லாம் வதைத்தன !
துயரப்பட்ட இவர்களுக்கு —
சூரியன் சிவந்த காயமாகத் தெரிந்தது
நிலவு, சீழ் ஒழுகும் புண்ணாகத் தோன்றியது
பழைய தத்துவங்கள் இவர்களை அடிமைத்தனத்தின்
புதை மணலில் மறைத்தன.
இப்போது ? ...
தம்மை மனிதர்கள் என்று உணர்ந்து கொண்டார்கள்
அவர்களின் ஒரே ஆயுதம்
அவர்களின் ஒரே பசிதான்.
ஜாதி இல்லை; நிற பேதமில்லை.
அவர்களின் ஒரே விருப்பம்
''வெற்றி''

(அரிந்திரநாத் சட்டோபாத்தியாயா எழுதிய
'தெலுங்கானா' காவியத்தின் ஒரு பகுதி;
தமிழில்: என் ஆர். தாசன்)

□□